# TAMIL LAAVANIS

## I

# CONTENTS

1. Ciṅgārakkēḷvi lāvaṇi

2. Erindakakṣi lāvaṇi

3. Eriyākkaṭci tattuvalāvaṇi

# எரிந்தகக்ஷி லாவணி

டி. ஆர். பாலகிருஷ்ண
முதலியார்

ரூ. 1-50

உ

பரமசிவம் துணை

# எரிந்தகக்ஷிலாவணி

தென்னாட்டில் தனக்கு நிகரில்லையென பெயர்வகித்த

திருச்சினாப்பள்ளி

**துரைசாமி நாவலரவர்கள்**

சென்னை முத்தியாலுப்பேட்டை பாலசந்தச்சரபக்கவி

**வி. ஏ. தியாகராஜ செட்டியார்**

இவர்கள் பாடியது

பதிப்பாளர்

**T. R. பாலகிருஷ்ண முதலியார்**

அவர்களது

கலைமகள் அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்றது

காபிரைட்] 1968 [ரூ. ௨. 1-50

உ

பரமசிவம் துணை

# எரிந்தகக்ஷி லாவணி

## விநாயகர் துதி வெண்பா

எரிந்தகக்ஷி சிங்கார இசைத்தமிழ் லாவணியை
பரிவுடனே உலகிலிதை பதிப்பிக்க—கரியுரித்த
சிற்பரனின் பாலகனே சித்தி விநாயகனே
அற்புதமாய் வரமெனக் கருள்.

## குரு வணக்கம் விருத்தம்

மறைமலரின் இதழ்விரிய கமுகுநறு மணவாடை
மகரந்த தாதுலாவி
மருகினதி மதுபெருகி வழியகரை கரைபுரள
வருகுமொரு மாஞ்சோலையும்
திரைகடலி லணைவிரிய சிலவோசை திரியுமயில்
திக்கென் றெழுந்துலாவி
சிறியகோ கிலர்புரு பெரியநடனம்செய்யும்
ஜிவ்வென் றெழும்பு மைமுறை
வரை அருகுமறைமொழிய குறைதவிர உரைசெய்யும்
வராகி கேட்டோடிகிள்ளை
சரசரென ராகவழி கிருகிரென பறையடிக்கின்ற
சன்மார்க்க சங்கம் ஓங்கி
தகதகென வளநாடு திரிசைநகர் முரசரை
தமிழில்சொல்லா மதகிரி
கரைமிடருகொண்டசிவன் நெற்றிவிழியால் மதன்
கணைலான கதையைசொல்ல

காலுலவும் புருவநடு நாசினுனி பரவெளி
கலைக்கியான வேதமுடியே
குருமொழியில் உருவான செல்வமே மெஞ்ஞான
கோதண்டமே எடுத்து
கொண்டவிடி சண்டப்ர சண்டதுரை சாமிகவி
கூறிட கிருபையருளே

## சபை வணக்க விருத்தம்

அன்னநடை ரதிமதனர் சரித்திரத்தை
அன்பாக யானெடுத்து அறையவென்று
சொன்னமொழி தவராத ராஜராஜ
சுத்தமுள்ள சபையோர்முன் துணிந்துவந்தேன்
வின்னமதாய் எழுத்தசைசீர் தவறினாலும்
மேன்மையென என்கருத்தை விளங்கமாற்றி
நன்மையென பொருத்தருள வேணுமையா
நால்வேதங் கற்றுணர்ந்த நாவலோரே

## பாட்டு

1 ப்ரஜண்ட மாருத
கோடையிடியென்றொரு சாட்டு
கொடுத்தேனி தோ கேட்டு
பயப்படாதென் பாட்டு இன்று
அலரி ஓடிப்போகாதே உளரிடேப்பைக்குப்பரப்போட்டு

2 கரிஉரித் தவனாலே
காமதகன் பண்டிகை யாச்சு
உலகினிலே யேச்சு
பலநாளாக பேச்சு இந்த
கருத்தையரியாமலே சிறித்தக்கேட்டதா லுமக்காச்சு

3 விரிவாய்சொல்லு வேன் கேளும்
திருநடனம்புரியும் ஜோதி
கற்பூரசுட ராதி
தீபவிளக்கின் நீதி இந்த
மண்டலத்திலுண்டனேவர் தொண்டர்களடைந்தபடிவாது

உத்தார்

சித்திப்ரமாணமாகத் தானே இப்போ
சொல்லுவே னனேகவழி நானே

4 ப்ரசைகளி னுற்பத்தி
பிரம்மனெனவேமுடி சூட்டு
கொடுத்தேனிதோ கேட்டு
பயப்படாதென் பாட்டு இன்று
அலரிஓடிப்போகாதே உலரிடேப்பைக்குப்பரப்போட்டு

5 அத்வீத பரசூரன்
அனங்கன் எரியலையா புலவா
சாஸ்திரங்கொண்டா பலேபா
இதற்கேபதில் சொல்வீவா இந்த
அகிலத்திலவனுலே அழிந்ததெத்தனைக் கோடிப்புலவா

6 முத்திகொடுக்க மதனுலே
மூடியுமாசொல் கேனு
முறைறமையீது காணு
முன்னோர்களின்சொல் வீணு இதை
முழுதும் பிரட்டெனவே மொழியவந்தாயேபயில்வானு

உத்தார்

சுத்திப்பம்மாதேயென்ன சாரம் நல்ல
சுறுதியைப்பாருமிந்த நேரம்

7 பித்தனுலே சித்சுஜனும்
பிடிச்சாய் பலென் றதந்தி மீட்டு
கொடுத்தேனிதோ கேட்டு
பயப்படாதென் பாட்டு இன்று
அலரிஓடிப்போகாதே உளரிடேப்பைக்குப்பரப்போட்டு

சந்த விருத்தம்

அல்லாமல் துஜம்பரக்க அடித்து வுங்கள்
கீர்த்தியெல்லாம் அவனிமீதில்
நில்லாமல் போகயிந்த நிமலன் துரைசாமி
முன்பாக நிலைத்து தாங்கள்
சல்லாப மானமதன் பழைய பாட்டை
சபையில்யெடுத் தோதுவர்க்கு
வெல்லாமல்போகாதென் கைபாணத்தால் விடியுமற்றும்
சரமாறிப் பொழிவேன்மாதோ

பாட்டு

1 பந்தயங்கட்டி என்முன்
படிக்கவந்ததுபோதும் பாராய்
பதுங்காதேநீர் ஜோராய்
படித்துரைசெய் நேராய் எங்கள்
பராபரத்திற்கும் உங்கள் படைமாரனுக்கும் ஒருவாறு

2 உந்தியில் மூலக்கனல்
உதித்து அரங்கத்திலே யேரி
சுபாலத்திலே ஜோரி
காமதளத்தைக் கிரி கீழே
உருகிவடியும்போது உருவழிந்தல்லவாமீரி

3 சிந்தை கலங்காமலே
தெரிசனம் செய்துவரு வீரே
இதற்குபதில் நீரே

எடுத்துரைசெய் வீரே இதை
திவ்யஞானப்ரமத்திலே தெரிந்தவர் ஒத்துக்கொள்வாரே

உத்தார்

சந்தைப்பெருக்கம் உந்தன் கூட்டம் அய்யா
சதாவும் செல்லாது ஆட்ட பாட்டம்

பாட்டு

4 உந்தனால் முடியாது
ஓடிபோய் கொண்டாவுன் குரு நோட்டு
கொடுத்தேனிதோ கேட்டு
பயப்படாதென் பாட்டு இன்று
அலரிஓடிப் போகாதே உளரிடேப்பைக் குப்பரப்போட்டு

5 ஜோடியோடு கூடுதாரு
ஆடுமயில்கிளியோடு ஓடை
சலவைக்கல்லின் மேடை
கஸ்தூரிதென்றல் வாடை அங்கே
துங்கநவரத்தினங்கள் அங்கத்தில்ஜொலிக்குமாதர்வாடை

6 தேடியோடி சித்தரெல்லாம்
தெரிசிக்கும் சீராமலை வாசன்
வடக்குவாசல் நேசன்
ஜெகம்புகழுல் லாசன் அந்த
சிந்தாமணி தன்னிலுயர் சந்நிதியாய் விளங்கும் வாசன்

7 தோடாமெடல் பரிசு
சூடாமணிவிளங்கும் வாக்கு
கவிகள்மிக ஜோக்கு
கவிபாணவை தேக்கு உந்தன்
தொப்பிலை அருத்துவந்த சூரியெந்தன் மடிமீதில்நோக்கு

உத்தார்

ஆட்டிவிட்டபம்பரம்போ லாச்சே உந்தன்
ஆசானெங்கே கொண்டா ஒரு பேச்சே

8 பிடிபிடி துரைசாமி

பின்னல்கொடுத்தார் சாட்டை யின்வேட்டு
கொடுத்தேனிதோ கேட்டு
அலரிஓடிப்போகாதே உளரிடேப்பைக்குப்பரப்போட்டு

## சந்த விருத்தம்

அகண்டமுதல் பரவெளியின் அடங்கிநின்ற மூலக்கனல்
அதினிலொரு சித்துவெளியாம்
அகிலமதிலே துதித்த சன்ற மாய்கையால்
அமைந்ததே ஜீவனென்றீர்
துவண்டயிடை மாய்கையை மாரனென்றீர்
உலகம்தானே படைத்ததுண்டா
இதுசற்குரு பாடமோ கற்பனை யிதாருகாண்
தாமே அமைத்ததுண்டா
கவண்டர் முறிபோல் கட்குடித்தெங்கனெதிர்
கஜகரணம் காட்டாதேஓய்
காடுமேடென்று தெரியாமல் பாடுநீர்
கவைக்குதவாத கவியே
துவண்டு விழுகாதேஓய் சூக்ஷத்தில் உன்னையான் தூக்கி
ஆகாயமதிலே தாக்குவேன் நோக்கு
உன் துணைவரோடு அமர்களத்தில் துரை ராஜன்
தூசிபட எண்ணமாதோ

## பாட்டு

1 பண்டிகைபின்லதெனவே கண்டுரை சபைதனிலே
பாட்டுக்கு பாட்டாகபாடத் தானு
பலேசபாக்ஷ கேனு
கலகம்செய்யத் தானுவேண்டாம்
பாதிமதியைதரித்த ஆதிசிவன் மன்மதனை
பஸ்பமாக சொல்லும் புராணம் வீணு

2. கண்டவர்போல்கத்துவது ஒன்றுக்குகவாத சங்கை
காசினியிலேயெரிக்கும் போது
கருத்தையரி யாது
அருத்தமென்ன சாது அதை
கண்டுரையுர்வண்டவாள தென்றமிழ்சிகாமணியே
காரணமளடுத் தெனக்கு ஓது

3. திண்டாட்டப்படுவீரினி அண்டர் முனிவோர் முதலாய்
சித்தஜன் எரிந்ததாக கூறும்
திகட்டாகவி தேறும்
அலட்டாதேஉட் காறும் நல்ல
தீரவீரசூரரேகேள் பாரதத்திலேயெரிந்த
திவ்யஞான வாக்கியத்தைப்பாரும்

4 சொல்லுவேனின்னமும்கேளும் எல்லோரரியும்புராணம்
சூஷமத்தின்பேச்சதுவே சாவி
சுருதிரோமர் செவி
கருதிப்பாரும் தாவி நல்ல
சோதனைக்கோதி வைத்தாரே வாதியேகேள் சட்டமுனி
சுடுசாம்பல் மாரனெனக்கூவி

5 வெல்லுவீர் சபையிலென்னை வல்லமைபோராதுனக்கு
வேதியர்பஞ்சாங்கமது சாக்ஷி
வேரென்ன உந்தன் பேச்சு
கூறுதேதீட்சை போச்சு மதன்
வெந்துபோனதாகசங்கை இந்தாரும் விடைகொடுத்தேன்
விருப்பமாக நீயும்கேழ்க்கலாச்சு

6 சொல்லுவேன் எரிந்தசங்கை சூரரேவீரே துனக்கு
சொல்லிவா எரியாதநால் தானு
பலேசபாஷ கேளு
கலகம்செய்யத் தானுவேண்டாம்
பாதிமதியைத்தரித்த ஆதிசிவன்மன்மதனை
பஸ்பமாகசொல்லும் புராணம்வீணு

7 எத்தனையோ ஞாயங்களை எடுத்துரைத்தாலுமக்கு
ஏரலையா உன்செவியில் கேளும்
எடுத்துரைப்ப தாலும்
தடுத்திட உன் ஞானும் இனி
ஏறுமாஉன்மாஸ்டர்தனை கூறிவந்தால்யிச்சபையில்
இரண்டிலொன்று அறிந்திடலாம்மேலும்

8 புத்திமானென்றே நினைத்தேன் சித்தஜனப்ரமமென்றால்
பூரத்திக்கி எட்டாதபெரும் பாவம்
புதிதாய்பெருங் கோபம்
அதினுலென்ன சாபம் இதோ
பூட்டுரேன்ஜன்னர்பீரங்கி கேட்டுவா தத்தாத்திரேயர்
போதுமாபோதா தனுமார்பாகம்

9 வித்தசிகாமணியே விரும்பிகேட்டுவாசுகர்
விச்சதர்நாரதருடன் உண்டு
விளம்புவதைக் கண்டு
தளும்பாதே யூய் நின்று இன்னும்
ஏகமாய்சொல்லுவேன்கேளும் பாகமாய்போகயில்லாது
இருந்தாராம்தாரு வாசர் அன்று

10 சித்தஜனப்ரமமென்றீர் இத்தனையில்லோர்க்குமோகம்
செய்யாமல் போனதேன் விடை தானு
பலேசபாஷ் கேனு
கலகம்செய்யத் தானுவேண்டாம்
பாதிமதியைத் தரித்த ஆதிசிவன் மன்மதனை
பஸ்பமாகசொல்லும் புராணம் வீனு

11 சங்கீதராகக்கச்சேரி யெங்கிலுமுழங்குதுபொன்
தங்கிடும் திரிசைடீகர் நாடு
பெரியபஜார் ரோடு
தனிலேஆசான் வீடு கையில்
தங்கமெடல்-தோடாபெற்ற மங்கள்மாய் துரைசாமி
சாற்றின மொழிக்கு ப்திவ்தேடு

## லாவணி

மண்டலமெலா நடுங்க
தொண்டைகிழியக் கத்திடும்
மகாசூர வித்துவானே அய்யா அய்யா
மங்கள மிகுந்தகுண சங்கர நுதல் விழியால்
மன்மதவேள் மடிந்ததும் பொய்யா பொய்யா
கண்டனம் புரிய வந்தீர்
அண்ட சராசர மெலாம்
காமனாலே உற்பத்தியா சொல்லும் சொல்லும்
கற்பனையாய்ப்பேசி இங்கு
அற்பமான மன்மதனை
கடவுளென்றுரைக்காதீர் சொல்லும் சொல்லும்
தெண்டிரைக் கடல் முரசும்
பெண்டுகட் படையுடைய
சித்தஜவேள் இருப்பிடம் எங்கே எங்கே
சித்தஜன் றனைக்குறித்து
எத்தனைபேர் முத்திபெற்றார்
செப்புவீரெனக்கெடுத்து இங்கே இங்கே
வண்டமிழைக் கற்றுணர்ந்த
பண்டிதராய்ப் பாடவந்த
மகாசூர வித்துவானே அய்யா அய்யா

மங்கள மிகுந்தகுண சங்கர நுதல் விழியால்
மன்மதவேள் மடிந்ததும் பொய்யா பொய்யா

மங்கையரைப் பஞ்சணையிற்
சங்கையறைத் தழுவியே
மன்மத கலவி செய்யும் போது போது
மண்டையுருகியே ஓமகுண்டத்தில் நெய்யாக விந்து
வடிந்தபொழுது காமனேது ஏது

அங்கனம் உருவழிய
மங்கையருகிற் படுத்தால்

அப்பொழுதுண்டாகுதோ சொல் மோகம் மோகம்
அப்படியே சொற்பனம்போல் உற்பவித்த ஆசையது
அடங்கியிருப்ப தெந்தப் பாகம் பாகம்

பைங்கரும்பு வில்லுடைய
அங்கஜனை ளரூபியா
பரபிர்ம சொரூபியா கூறும் கூறும்

பருவமதனைப் பலர் உருவிலி யென்று பெயர்
பகர்வதென நன்குணர்ந்து பாரும் பாரும்

வங்கணமாயிப் புவியில்
தங்கமெடல் தோடா பெற்ற
மகாசூர வித்துவானே அய்யா அய்யா

மங்கள மிகுந்தகுண சங்கர நுதல் விழியால்
மன்மதவேள் மடிந்ததும் பொய்யா பொய்யா

## அறுசீர் விருத்தம்

கடவுலகில் மதனெரியு வில்லையெனக் கண்சிவந்து
கருத்து மாறி
படர்சபையில் சுதிகூட்டி பாடவந்த பாவலரே
பகரக் கேட்பீர்

மடல் விரியும் கோதைபடை மாரவேள் பண்டிகையை
மகிதலத்தில்
திடமுறவே நடத்திவரும் மார்க்கமென்ன தெளிவாக
தெரிவிப்பீரே

## ஷ. லாவணி

கத்துகடற் புவனத்தில் சத்திபிறந்தது முன்ளு
காமராஜன் பிறந்தது மூன்ளு பின்ளு

கருதரிக்காது சில
தெரிவையர் மலடாக
காசினியிலிருப்பதேன் மன்ளு மன்ளு
சத்து சித்தானந்த பர
முத்திக்கு வித்தான சிவன்
தவயோக சாதனையை யன்று யன்று

சனகாதி நால்வருக்கும்
மனமகிழ்ந்தே யுரைக்கும்
சாம்பசிவனிடத்திற் சென்று சென்று

சித்தஜன் சமர்புரிய
பற்றியெரிந்த விபரம்
செப்பிடும் புராணங்களே சாட்சி சாட்சி

சிலைமதனெரிந்த தாய்
உலகிற் கொண்டாடுவதைத்
தெரிந்துஞ் செப்பவந்தீ ரத்தாட்சி தாட்சி

மத்தகெஜத் தோடெதிர்த்து
எத்திசையுங் கீர்த்திபெற்ற
மகாசூர வித்துவானே அய்யா அய்யா

மங்கள மிகுந்தகுண சங்கரநுதல் விழியால்
மன்மத வேள்மடிந்ததும் பொய்யா மெய்யா

அம்புவனதிற் சிறந்த
ஜம்புவனங் காவிரிசூழ்
அழகான திரிசிராப் பள்ளி பள்ளி

ஆயகலைகள் பரவுந் தாயுமான ஈசரொடு
அன்னை சுகந்த குந்தள வள்ளி வள்ளி

செப்பொன் மலர்த்தாளிணையை
கும்பிட்டு வணங்கி நித்தம்
திசையெட்டுமே விஜயம் செய்து செய்து

திரைகடர்புனலதை
உறுஞ்சிடு முகிலென
தெள்ளமுதக் கவிமாரி பெய்து பெய்து

வம்பர்கள் கருவறுக்க கம்ப நிகராயுதித்த
மாசில்லா பத்தரை மாற்றுத் தங்கம் தங்கம்

வாயாடிப் புலவர்களை
பாயாக சுருட்டிட உடான்
வாங்குந் துரைசாமிக்கவிச் சிங்கம் சிங்கம்

மன்பொதிகை மலையுற்ற
கும்பமுனிபோல வந்த
மகாசூர வித்துவானே அய்யா அய்யா

மங்கள மிகுந்தகுண சங்கர நுதல்விழியால்
மன்மதவேள் மடிந்ததும் பொய்யா பொய்யா

எண்சீர் விருத்தம்

மங்கை ரதியாளை மணம் புரியும்போது
மருவியநாளோர் திங்கள் மாதர்பூத்த
அங்கஜனர் தன்வயதோ ஈரைந்தாகும்
அமர்ந்தவா ரோக்யபுரம் அவனூராகும்
செங்கண்மால் லட்சுமியும் தாய் தந்தையாம்
தேர்படை கொடிமுரசு இவைகளெல்லாம்

பங்கயனை புரிவுகொடு சங்கதாகும்
பகரக்கேள் திடமிகுந்த பாவல்லோரே.

லாவணி

## வேதவேதாந்த தமிழ் சுடலைவாரி என்றமெட்டு

வீரகண்டாமணி தோடா மெடல் பெற்ற
வித்வானென்று வந்தாரே புலவீரே குந்துவீரே
தாங்கள் வித்தாரமாகவே கேட்ட கேள்விக்கு
விடை யளிப்பேன் சபைநேரே

முடுகு

மிடி தீரவே திரைமேவிய
கட்ன்மீதுர திடமாகவே
விண்ணவர் கூடிப்புமுகங்கடைந்ததின்
மெல்லிடையாள் ரதியென்று வரக்கண்டு உமைநன்று
மிகவேண்டி யன்போடு வளர்த்தெடுத்தாள் சிலை
வேள் மதராஜனுக்கென்று

லாவணி

மேருமலையதை வில்லாய் வளைத்தவர்
மேவும் இமாசலம் நாடி பலர் கூடி உறவாடி
அதிவிற்பனர் மெச்சிடு சிற்பநூற்படி
விவாகம் புரியக் கொண்டாடி

முடுகு

மீனலக்கினம் நாழிகைப்பகல்
ஏழரைக்குள்ளே ஜோதிடர்ப்பலர்

லாவணி

விஞ்சையா பிருவருக்கும் குருவார சுபதினம்
மேலும் பொருத்தம் பார்த்தாரே புலவீரே குந்துவீரே

தாங்கள் வித்தாரமாகவே கேட்ட கேள்விக்கு
விடையளிப்பேன் சபைநேரே
கோதைபட்டை மாரன்வேஷ்டி உருமாலும்
கோடிசெம்பொன் விலைபெறுமே சேலைதருமே மஞ்சள் நீர
இளங் கொம்பனையாள் ரதிமாதுக்குடுத்திடே மே
கூட்டி வந்தார் நல்லநேரமே

முடுகு

கூறும்மனகை ஊர்வசியோடு
தேவதாசிகள் சீர் நலுங்கிட

லாவணி

கோலாகலத்துடன் மேளவாத்தியங்கள்
கோடையிடிபோல் முழங்க இசையோங்க நசைதங்க
ஒரு கோதிலா வேதியர்நான் மறையோர்தக்
குறைவின்றி தானம் வழங்க

ஆதவனுத்யகாலே மன்மதாண்டு ஆடித்
திங்கள் கலியாணமே கனகனமே செய்யுந்தினமே ஒரு
அட்டியில்லாதவர் பொட்டை கழுத்திலே
கட்டி விட்டாரந்தட்சணமே

ஆசி கூறவும் தேவராதியர்
வாசமாமலர் தூவமாமணம்
ஆனபதின்மூன்று நாளில் துவாரகை

அன்பாகச் சென்றனர்பாரே புலவீரே பெரியோரே
தாங்கள் வித்தாரமாகவே கேட்ட கேள்விக்கு
விடையளிப்பேன் சபைநேரே

அறுபதினாயிரம் கோபிகா ஸ்திரீகளை
அந்தராதா கிருஷ்ணன் லீலை பகற்காலை ஒருவேளை

செய்ததாகவே சொல்கிறீர் யாருங்காண் நம்புவார்
ஆகையால் நீட்டாதீர் வாலே
அனகபூஷணன் சனகராதியர்க்
குரிய மோகனமே பகரும் வேளையில்

அங்கமில்லான் தேரசைந்த தெவ்வாறெனை அறிவிப்பேன்
உத்தரமே அயன் வரமே தந்ததிறமே ஆதலால் [நல்ல

அன்னவன் தேர்மட்டும் ஆடியகாரணம்
அறிந்துகேள் வீரதன் சாரமே
சரபபக்ஷியான சங்கரன் காய்ந்ததால்
சமர்புரியுதே அத்வைதம் அதுபேதம் என்றுவாதம்

செய்துச் சந்திக்கு சந்திப்பசய்க் குந்தி குந்தி டேப்பை
சாப்பு கொடாதீர் விரோதம்

சாருமங்கையர் கூருவெட்புனல்
தரை மன்மதன் கோவிலென்றுமே
சாற்ற வந்திரதைக் கேட்குந்த போதனர்

சாபங்கொடுப்பார்கள் பாரே புலவீரே பெரியோரே
தாங்கள் வித்தாரமாகவே கேட்ட கேள்விக்கு
விடையளிப்பேன் சபைநேரே

முத்து வைடூரியம் சுத்திப்பதித்த
முகப்புக் கண்ணாடியின் சேர்வை மணிகோர்வை
ரத்னப்போர்வை யதை

முப்பத்து முக்கோடி தேவரனுதினம்
தப்பாமர் காணுவர் சேவை
முகுந்த னன்பு மிகுந்த தங்கை
சுகந்த குந்தள வல்லி தம்பிரு

முண்டகத்தானை முடிமீது சாற்றி
முழுங்கிடுங் கல்வி ப்ரவாகன் ஞானயோகன்
நல்விவேகன் புகழ்
முந்துக் கரிக்காலச் சோழ நன் நாட்டிலே
முத்தமிழ் பாடும் வைபோகன்
தத்துவ ஞானத் தமிழ்க்கடலைவாரி
சங்கப்ரசங்க முழங்கும் புவியெங்கும் இசைபொங்கும்
துரைசாமிக் கவிராஜ நாவலர் போற்றியே
சாற்று மொழிகள் விலங்கும்
சாலகான் மறை ஓதுமந்தணன்
மாலும் கண்டறியாத நின்மலன்
சச்சிதானந்த சதாசிவமூர்த்தியின்
தண்மையெளிதல்லபாரே புலவீரே பெரியோரே
தாங்கள் வித்தார மாகவே கேட்ட கேள்விக்கு
விடையளிப்பேன் சபைநேரே

சந்த விருத்தம்

அட்டகுலபர்வதத்தை ஆணிவேரோடரப்பிடுங்கிகறமடக்கி
ஆழிஏழுக்கப்பால் விட்டெறிந்து விளையாடும்தீரா
அரியதமிழ்பாடுவதிறமைப்பிரியாதெனைமறித்தீர்
அய்யோபாவம் அழகுபவநேந்திமுனி அறைந்த நன்னூல்
தொட்டதுண்டா உன் குருக்கள் சொன்னதுண்டா
சொல்வீர்சீரின்தொகுபெயதிகை மோனையொடுசூக்ஷம்
காணீர் சொல்வின்முதல்தொனி உதயமானதெங்கேபதி
லளிப்பீர் சொல்லாதால் பெருஞ்சாபம் தொடரும்கேழ்பீர்
வட்டமுறும்வான் வீதிமீதுசித்திரசேனன்
ரதம்மருவஓட்டி வருங்காலம்
காவலரின்மலர்க்கைமீது வாயிலிருந்தெச்சமதைஉமிழ

அதின் வகைதெரிந்து மாயோன் முன்பால்வடித்த
அவன் சக்கரத்தால்மருநாட்குள்ளே
திட்டமுடன் சிரமறுக்கும் விதம்
விடாசேனன் தீரம்வாய்ந்த செம்மலருஜினன்
இடத்தில் அபயம் கூறி
சேர்ந்துபிழைத்தது போலென்குருவிடத்திலபயமிட்டால்
செல்லாதுசெல்லாது தீரன் ஜன்னுபாவைஜெயிக்கபோமோ

## பாட்டு

போதும்போதும்போதும்போதும் உங்கள்
லண்டோராவைபுகழாதே சபைமுன்னேநிருத்து-இப்போ
பேரிடிமுழக்கம்போல வாரிஉன்னை தூக்குவேனே
பேயே உந்தன்வாலை தன்னை அருத்து
வாதுசெய்யவந்தவரே வையகத்தில்நடக்கின்ற
மாரன் பண்டிகையுமா சொல்வகுத்து-அந்த
வள்ளுவர்சொன்னதொரு ஜல்லிபுராண கொள்கைதன்னை
வரையாதே அறைகுவேன் பகுத்து-ஓய்
காதலனைப்பணியாதே வேதியரேயிவ்விடத்தில்
கண்டவர்களுமே உமைசிரிக்க-அந்த
காலனை உதைத்தஈசன் சீலமுடனிவ்விதமாய்
காரணத்தினாலவனை எரிக்க—கேள்
மாதுகள்போலவேதாங்கள் ஓலமிட்டழுவதேனோ
வாத்தியாரைக்கூட்டிவாரும் அடுத்து-இப்போ
பேரிடிமுழக்கம்போல வாரிஉன்னை தூக்குவேனே
பேயேவுந்தன்வாலைதன்னை அறுத்து-அய்யா
அன்றுசொன்ன அத்வீதத்தையின்றுறைகவேணுங்காணும்
ஆசானில்லாநேசனுக யிருந்து—இப்போ
அட்டிசொன்னால்கிட்டிவரும் சட்டமுடன் திட்டமாக
ஆகமக்கோட்டாலிவரும் பறந்து அய்யா

பன்றிஎனும்சூரனவன் நன்றியில்லாத்திறல்
பாணமதைவிட்டவனை உரக்க-அந்த
பத்தலை அச்சகருமே சத்தியுடன்பாதகனை
பத்தல்பத்தலாய்உதிரம் காக்க அன்று
கொன்றுவிட்டபாவனைப்போல் கோடானகோடிபேர்களை
கும்பல்கும்பலாகவெட்டி சாய்க்க-அந்த
கோரமுடன்வீரர்களை தாருமாராய்செய்த அண்ணல்
கோபத்திறல்மாரனைத்தான் எரிக்க-அய்யா
இன்றுமுதல்சொன்னதெல்லாம்பண்டிதரேயின்னமுங்கேள்
இருக்குசாஸ்திரம்கண்டு நிருத்த
போதும்போதும்போதும்போதும் உங்கள்
லண்டோராவைபுகழாதேசபைமுன்னே நிருத்து-இப்போ
பேரிடிமுழக்கம்போல வாரிஉன்னை தூக்குவேனே
பேயேஉந்தன்வாலை தன்னை-அறுத்து

சந்த விருத்தகம்

திருவளரின் நறுமலரின் கமழ் விரிய வரியினளி
திரைகட லாற்று நாற்பத்தி ரெண்டினமும்
துண்டுமிற அறுகுதுளி பெருகிநடிதின்பனையில்வந்து மோதி
முறுகல்பல மாங்கமுகு கதலி அகில் செண்பகமும்
முந்திரிபிலா அசோகு முகி இருளடர்ந்து
செழுஞ்சோலையில் புக்கவரி முகமலர்ந்து
கோகிலம் பெருகவென வாழ்ந்துகிறார் திரிசைநகர்
கிரியிலுறை ப்ரணவ சொரூப வடிவே
பேரின்பசுகவாரி அமுர்தபிளம்பே ஏபேச்சற்ற மூலமுதலை
புருவநடுவிழிகாது மறையாக யெக்காலம் பூவைபடைத்
பொருள் விழிதீர்க்க அனளான மதன்கதை [தேக்கிசன்
புகழ்துரை சாமிக்கவி கூறிடக்கிருபை அருளே.

பாட்டு

ஏறுமாஒய்நூறுநூறு யானைக்கூட்டிகூட்டமாக
என்றுசெய்யும் சிங்கத்தையே அய்யா அய்யா—இப்போ
எட்டடி நிலப்பிரம்பொன் கொட்டமொன்பதும்அடக்க
எடுத்தேன் மணிச்சவுக்கு மெய்யா மெய்யா
மீறுமா அகருதி கிடையாதபோது மோகம்
ஏதுவீண்வெளிச்சம் இங்கே தள்ளு தள்ளு
மேனிசம்மந்தமில்லாமல் யோணிவாய்பிரப்பதெங்கே
வேரேஜீவபேர்க்காரணம் சொல்லு சொல்லு
கூறுன்றுலேசாயுமாசொல் போகமின்றி ஜீவவிர்த்தி
கூட்டுக்கேதினதென் றீறே வாது வாது
குதற்கவாதம்பேசவந்தால் தற்கசாஸ்திரமல்லாமல்
குட்டிப்புலவர்களே என் மீது மீது
ஏருதுகைகட்டிவாயை பொத்திகும்பிடுபோட்டு
எழுந்துபோம்பதில்தேட அய்யா அய்யா
அம்புலியில்ஒன்றுக்கொன்று கூடிவிர்த்தியாகிறதும்
அதுமதன்செயலென் றீரே நீரே
ஆறுலிருக்கட்டும்தாங்கள் நாலாவிதமும்யோசித்து
ஆன்ஸர்சொல்லுவீர் கவிஞ் ஞோரே நீரே
கொம்பிலனிசமிட குளத்தில் ஆமைக்குகெர்பம்
கூடியது என்னஞாயம் சொல்லு சொல்லு
கோமனாங்கிகதையல்ல ஆமத்தாளர்போடாதே நீ
கூடுமானல்பதில்சொல்வி நில்லு நில்லு
வம்புகானிட்டமுட்டையை யெப்போங்கிணக்குமோ அப்போ
மாரியுடலோடுவந்த தேது தேது
மன்மதன்செயலென் றீரே உண்மைதெரியுதாயிப்போ
வாத்தியாரைகேட்டுபதி லோது ஓது

எண்பத்திநான்குலக்ஷத்தில் யோனிவாயில்லாதஜீவன்
எத்தனைநான்சொல்லவேணும் அய்யா அய்யா
கல்லானைகரும்புதின்ற லாச்சியுலகத்திலே
காமனன்றிபோகமுன்பு பாரு பாரு
காரணம்கூறவந்தீரே தீரனென்றீரேநேரே
காட்டுதற்கு மூலாதாரம் தேறு தேறு
நல்லதிருவான்மயிலும் நாட்டியமாடவேவிந்து
நாலுபக்கம்சிந்தினதை யுண்டு யுண்டு
நாவிலத்தில் கெற்பமாகி யேங்காணும்முட்டைப்பொரித்து
நியாயம்சொல்லுவீர் குருவைக் கண்டு கண்டு
கல்லாதபேர்களும்கூட சொல்லுவார்மயில்மூறமை
கதைகேட்டதில்லையாவித் வானே கோனே
காமனைக்கடந்தவர்கள் பூமியிலேயெத்தனையோ
கவிராயர்களேமூனாப் பானே வீனே
எல்லாம்தெரியுமென்றீரே சொல்லுவீர்யிதற்குபதில்
என்னதான்தெரியும்சொல்லும் அய்யா மெய்யா
இப்போதாகிலும்கண்டிரு தப்பிதம்நீர்சொன்னகக்ஷி
யேதுசாஸ்திரம்யிருக்கு இல்லை இல்லை
மைப்படிபடியும்தாயு மானவர்க்கிரிசூழ்வாழும்
மாதா அயிலாண்ட யீஸ்வரி பாதம் பாதம்
மறவாதனுதினமும் துதிசெய்திருக்கைகூப்பி
வணங்கிமுன்பாடுவீர் வேதம் வேதம்
செப்புவேன்கேள் யெங்கள் ஆசான்
சீமான்கள் நாவல்ரு.மதேசிகதுரை ராஜசிங்கம் வாக்கு வாக்கு
ஒருநொடிதனிலுனை பாதாளத்தினிலமுக்கும்
கவியிதுகாணவேநீ நோகது நோக்கு
எப்போதாகிலும் கண்டீரு அப்பனைப்பிள்ளைப்பெற்றது
யேதுசாஸ்திரம்யிருக்கு அய்யா அய்யா

# வி. ஏ. தியாகராஜ செட்டியார்

## அவர்கள் பாடியது

### ஐங்கரன் துதி விருத்தம்

ஓங்கார சுழிமுனையின் ரூபமாகி
ஓமெனும் பிரணவத்தின் பொருளதாகி
ரீங்காரம் புகழ்படைத்த தெய்வமாகி
நித்திய நிஷ்களரூப நிதியுமாகி
பாங்காரும் சித்திபுத்திக் கதிபனாகி
பக்ஷமுள்ள வல்லபைக்கோர் திலகனாகி
சோங்காது மதனெரிந்த கக்ஷிபாட
தும்பிமுக வாரணனே துணைசெய்வாயே

### அறுசீராசிரிய விருத்தம்

ஐந்துகரத் தெந்தையறு முகன்வாணி
ஐயமற வொளிருமர னடிகள்போற்றி
செந்தமிழ் சொன்னகுரு கழல்போற்றி
செழிக்கவைந் தியற்புலவர் தாள்போற்றி
வந்தசபை யோர்பெரி யோரைப்போற்றி
வல்லமத னெரிந்த கதை யோதுதற்கு
சிந்தைமகிழ் சந்தகவி தியாகராஜன்
சிறக்ககலை வாணரடி போற்றினனே.

### லாவணி மெட்டு

ஒருமாங்கனிக்காய் சத்தி சிவனை வலமே வந்த
ஓங்கார ரூபநிதியே
ஓம்கணபதியே
உன்பாதம் கதியே—தியாக
ராசன் சரபக்கவி பாரில் புகழ்பெருக
ஓடிவந் தருள் புரியே (ஒரு)

அருபியாகில் மாரன் அரன் விழியாலேயன் று
அனலாயெரிந்த தாலே
அதையின் நாளே
சபைமுன் ளுலே பல
ஆகம வேதமுறை ஏதும்பிசகிடாமல்
ஓதவருளிக் காலே (ஒரு)

அங்கத்திமிராலிங்கு பங்கமடையவந்தீர்
உங்கள் மதனே நம்பி
உற்றுப்பார் தம்பி
நீட்டாதே கம்பி—சபாஷ்
எங்கள் கவியைகேட்டு மங்கைபோலவேகுந்தி
ஏனழுகிறுய் வெம்பி (ஒரு)

உத்தார்

பூர்வ-கர்மவினைப் பயனுலே பயனுலே-எரியா
கக்ஷியெனவே புவிமேலே-புவிமேலே-பாட
குரும்பர்களொன்று கூடிதிரங்குலேந்திங்குவந்தார்
குஞ்சரகுணநிதியே (ஓம்கணபதியே)

பாட்டு

முன்னேர்கள் நூல்களெல்லாம் மூலாதாரத்துடனே
முக்கியமாக உரைக்க
பலரும் படிக்க
உலகங் களிக்க-இந்த
கண்மூடிக் கவிராயர் கதைகட்டிகொண்டு வந்தார்
கனத்த சபையோர் நகைக்க (ஒரு)

ஆதியில் தக்கனென்றும் நீதியில்லாத மன்னன்
கியாதி பெறவே வினைந்து
அரனைச் சினந்து

மனது துணிந்து-அங்க
வேதன் மாகவன் முதல் தேவர்களையுமங்கு
அழைத்தான் மமதைமிகுந்து (ஒரு)

தக்கன் மகளாம்சத்தி நக்கன்யாகத்தை காண
முக்கண்ணனிடம் கேட்டு
வந்தன ளார்த்து
தந்தையைப் பார்த்து மன
பக்குவப்படவெகு புத்திமதிகள் சொல்ல
பாதகன் கோபம் மிகுத்து

உத்தார்

தக்கன் பரமனை தூஷித் தநிறுலே அதிலே சத்தி
பாவை மறைந்தாள் புவிமேலே புவிமேலே இதில்
பெருமை யறிந்திடாத அறிவிலிகளுக்கு நீ
உருத்தும்படி செய்வாயே ஓம் கணபதியே

பாட்டு

பாரில் சத்திமறைய நாரிபாகன் விழியில்
வீரபத்திரர் பிறந்தார்
தந்தையை பணிந்தார்
சங்கதி யறிந்தார்-வெகு
ஆரவாரத்துடனே யாகசாலையடைந்து
தக்கனை கிழித்தெரிந்தார் (ஒரு)

தக்கனொழிந்த பின்பு தற்பரனை சிவன்
தணிந்தார் கோபத்தின் நிலையே
தகுந்த படியே
யோகத்தின் கலையே புரிய
நக்கனிமயமலைச் சாரலிலேயவர்
நலிந்தார் தேவர்கள் குறையே (ஒரு)

பரமன்நிஷ்டையழிக்க படைமாரன் கணைதூவ
பகவான் விழியை திறந்தார்
மதனை எரிந்தார்
கயிலை யடைந்தார் பின்பு
பருவத ராஜன்மகள் பார்வதியை மணர்ந்து
பக்தர்க்கு முத்தியளித்தார்

உத்தார்

இனிஏய்க்கமுடியாதுன்னுர்பாட்டம் ஆர்பாட்டம் அண்ணே
எழுந்துசொல்லாமல் கம்பிநீட்டும்—செவி
சாய்த்துக் கேட்டு இவநும் தயங்கி விழிக்கமதி
தருவாய் ஓங்கார நிதியே (ஓம்கணபதியே)

பாட்டு தாளம் ஆதி

முச்சுடரானசத்தி மூலாதாரப்பொருளே காப்பு
மகிழ்வுடனே டேப்பு
முழங்கிட மன்னுப்பு தாரும்
அச்சுதன்மைந்தன்-மதன் எரிந்தகதையுரைக்கசாப்பு ஐயா
நன்னூலிலக்கணமும் கைடதத்தையும்கூட்டிநானே
நலமுடனே தானே
நவில்வேன்கவி கோனே
கண்யமுடன்எதுகைமோனையுடனே சொல்லுவேனே-முன்
கங்கைதனையணிந்த சங்கரனின்விழியால்மாரன்[னே
கனலாய்வெந்தான் தீரன்
கரும்புவில்லின் வீரன் அதை
மங்களமாககவி இங்கிர்தமாய்சொன்னேன்சிங்காரன் இங்கே

உத்தார்

பகைவர்எனக்கு பயந்தோடயானும்
வகையாய்டன தருளைநாட ஐயா
தோகைவல்லபைநாதா தொந்திவிஞயகாஉன்காப்பு (மகி)

பாட்டு

இரதிமாரனீசனிட தபத்தையழித்துவரவென்று
இதமுடனே சென்று
எதிர்த்துமங்கே நின்று மதன்
திரமாய்மலர்கணையை சங்கரனின் மீதெரிந்தானன்று-ஐயா

காலனையன்றுதைத்த கங்காதரனவருர் நகைக்க
காமனுடலை தகிக்க
கன்னிகைவந்து பகைக்க மதனை
ஆலகாலத்தையுண்டோன் அரூபியாகஎழுப்பியிருக்கஇந்த

உத்தார்

துஷ்டர்கள் இல்லை யென்கிறுரே. ஒன்றும்
கஷ்டம்வராதெனைக் காண்பாரே நீயும்
பக்ஷமுடன்வருவாய் பாசாங்குசதரனேகாப்பு (மகி)

பாட்டு

சண்டையிடவோர்நீரும் கண்டபடிகவிகளுரைத்தீர்
சபையில்வந்து அடுத்தீர்
சினந்துமனந் துடித்தீர் வீணாய்
தொண்டைவரளநீயும் அண்டப்புளுகையுரைத்தீர்-இங்கே

புளுகினாலேயொழியா புலவாஜெயிக்கமுடியாது
புகன்றேன்கவி தோது
பாடாதேசபை மீது உனை
கலுக்கெனசபையோர்கள் நகைக்கசெய்வேன் தப்பாதுஅந்த

உத்தார்

கடவுள்ஒருவர் பூவிலிருக்க வீணாய்
திடமாய்மதனை சொன்னீர் வெருக்க நல்ல
ஜடைமுடியணிந்திடும் சங்கரனின் சுதனேகாப்பு (மகி)

பாட்டு

காருலகோரேயானும் காமன்கவிபடிப்போனல்ல
கவிவாணனு மல்ல
கருத்தறிந்து சொல்ல வெகு
விரியமாகயிந்ததாரணியில் மகிழ்வுகொள்ள-அந்த
வேந்தன்நாரணர்சுதன் வித்வமோகனரிடசீஷன்
வி. ஏ. தியாகராஜன்
உரைத்தான்கவி நேசன் இந்த
மைந்தனைகார்த்திடுவார் மனதுயிரங்கிசன்—நீங்கள்

உத்தார்

தப்புப்பிழையைபொருத் தருளும் நாதா
இப்போவரமெனக்கு அருளும் நீயும்
கொப்பெனவேவருவாய் அப்பனேகணபதியேகாப்பு (மகி)

பதினன்கு சீராசிரிய விருத்தம்

காரிகையிலக்கண விலக்கியங் கற்றுநாற் கவிபாடும்
கவிஞரை யிகழுங் காலம்
கடன்கொடுத் தோர்வந்து கேட்கில்தடி கொண்டுமிக
கடிந்தடித் தோட்டுங்காலம்
பாரிலுரை பல்வேத புராணவிதி காசமதை
பழித்து பொய் யென்னுங் காலம்
பாரசபை யிற்பேச வகையறி யாதபேர்
புலவரென பகருங் காலம்
கோரிபெய வரிச்சுவடி வாசிக்க வழியற்ற
கயவர்கவி யெழுதுங் காலம்
கோதாக் கல்விமிக போதித்த குருவினை
கொடுமைசெய் தேகுங் காலம்
வாரியிற் றுயிலரிச் சேய்மதன் வெந்தது
உண்மையெனில் வம்பர் பலர்கள்

விரைக்தெடுத் தடித்திடும் அநியாய
விதியிதா மென்றுணர வழுத்தினேனே

### விருத்தம்

புத்தியுள்ள பெரியோரை வணங்க வேண்டும்
புராணவிதி காசமதை யுணரவேண்டும்
நத்தியே நல்குருவை யடுக்க வேண்டும்
நானிலத்தில் நற்புகழை தொடுக்க வேண்டும்
சற்குருவை ஜெயித்துகொடி நாட்டவேண்டும்
சாஸ்திரத்தின் நூலைபடித் துணரவேண்டும்
எத்துடனே ஈசனுட விழியால் மாரன்
எரியவில்லை யெனசொன்னு லறிவாய் மாதோ

## அந்தரங்கபல்டி என்ற மெட்டு

### கண்ணிகள்

கண்டபடியாககவி ஒண்டியேபடித்துயிங்கு
காட்டியே திருப்பவேண்டாம்முண்டா முண்டா-உந்தன்
அண்டப்புளுகதனை கண்டுமேபிரளுவேனே
ஐயாவுந்தன் சாஸ்திரத்தை கொண்டா கொண்டா க

கொக்குக்கு அஞ்சுமோகானும் மிக்கபுகழும்ராஜாளி
கவிராஜசிங்கமேநீர் சொல்லும் சொல்லும்-உங்கள்
உலக்கைபுராணமெல்லாம் துலக்கமாய்பாடவேண்டாம்
ஓடிடாதேடேப்பைபோட்டு நில்லும் நில்லும் க

கட்டுக்கவிகளைப்பாடி குட்டிக்கரணம் போடாதே
கனமாய்சபையில்குந்தி பாடு பாடு-இப்போ
தட்டுக் கெட்டுத்தடுமாறி எட்டிசண்டையிடவேண்டாம்
தீரமாய்ஜெயித்துகொடி போடு போடு க

டைரிதனை கிழிக்க
தயங்காதே என்னைக்கண்டு
தைரியமாக மதன்
சத்தியம்செய்வேனிப்போது

பயிரியைப்போலவந்தேன்
நேசா நேசா-யான்
எரிந்ததுவுண்மையென்று
பேஷா பேஷா க

காமனும்யெரிந்தகதை
கவனமுடனேகேட்டு
சோமனை முடிகரித்த
சதியாய்கலைத்திடவே

நேமமுடனேயுரைப்பேன்
வாரும் வாரும்-அந்த
சாமியின் தபசதனை
பாரும் பாரும் க

இந்திரனுரைமொழியால்
இமைய மலையருகில்
சுந்திரேசனைவரும்
சமனன் சுதனருகில்

நொந்துவாடி அங்கஜனும்
சென்று சென்று-அங்கே
அந்தமாய் தவம்புரிய
நின்று நின்று க

செஞ்சடைவிரித்து தவம்
தரிசனம் தன்னைமதன்
அஞ்சாமல்முல்லைகணையை
ஆரோதிகோபம் -

துஞ்சிடாதிருக்கும் ஈசன்
கண்டு கண்டு-அப்போ
பஞ்சபாணனும்விடவே
கொண்டு கொண்டு க

நெற்றிகண்தனை திறக்க
நிமிஷநாழிகையினில்
பொற்கிளிரதியரிந்து
பரனிடத்தில்வந்து

பற்றியேயெரிந்தான்மதன்
செப்பும் செப்பும்-அதை
உற்றுனேதுயரதிகம்
ஒப்பும் ஒப்பும் க

மகளின் துயரறிந்து
மாறுருபமாய்கொடுத்தார்
வகையாயரிந்திடாமல்
வந்தபடிபுளுகாதே

நகைத்துமதனைவுயிர்
கேளும் கேளும்-சேதி
மிகவும்டேப்பையடித்து
நாளும் நாளும் க

பொய்புளுதசாஸ்திரத்தை வையகமீதிலுரைத்தால்
பாழும் நரகில்விழுவீர் சொன்னேன் சொன்னே-எங்கள்
மெய்யனும்சென்னையில்வாழும் துய்யமோகனரின்சீடன்
மைந்தன் தியாகராஜன்சொன்னேன் அண்ணே அண்ணே க

### விருத்தம்

பங்கமிலா பெரியாத கட்சிசெய்தி
　　பக்ஷமுடன் வீணருக்கு புகன்றதாலே
சங்கையிலா புலவரிவர் ஓடயெண்ணி
　　ஜக்கியே பின்வரங்க காலமாச்சு
பொங்கமுடன் யிவ்வளவு நேரமாக
　　புளுகெல்லாம் புளுகிவிட்டு முழிக்கலாமோ
மங்களமாய் எந்தனிட ஆசானை
　　மோகனரின் கழல்பேணி மொழிவேன்மாதோ

## பக்ஷத்துடனே கேளும் என்ற லாவணி மெட்டு

இன்னமும்கேளுங்காணும் உண்மையைதெரிவிப்பேன்
　　உத்தமனேயிப் பாட்டு
　　ஊக்கமாய் கேட்டு
　　டேப்பைநீ போட்டு-கண்ணீர்சொரிந்து
　　உந்தன்புத்தியை நாட்டு இன்

காமனெரிந்தத்ற்கு தாமதமின்றியிங்கே
　　கொடுத்திடுவே னத்தாக்ஷி
　　இதுவோர் சூக்ஷி
　　கட்டாயம் யோகிசாமிமுருகன்
　　ஜெனித்தகதையை வாசி இன்

மூர்க்கத்தனமாய்நீ வாக்கியம்தவறினல்
　　மொழிவது ஏற்காது
　　உரைப்பாய் தோது
　　உடனே சாது-கருவங்கொண்டால்
உந்தன்ஜெயம் சாயாது இன்

### உத்தார்

சண்டையிடவோவந்தீர் நீரும் உந்தன்
சற்குருவையடுத்து தேரும் ஐயா

ஷை பாட்டு எடுப்பு

முன்பின்னறியாமலே துன்மார்க்கமாகப்பாட
முனைந்துவந்தீரோ நீரே
துள்ளாதீர் பாரே
துருசாய் நேரே-என்னைநீர்கண்டு
ஓடாதீர்புல் விரே இன்

எறியாதகக்ஷியென்று வீரியமாகவந்தீர்
உரையுங்காண்பதில் வாக்கு
செய்யாதே ஜோக்கு
செப்பினேன் போக்கு அறியாமலே
சொல்லவந்தீரோ சாக்கு இன்

டேப்பைகையில்பிடித்து ஏய்க்கவந்தீரோயிங்கே
ராங்குசெய்யாமல் பாடு
தாளத்தை போடு
நலத்தை தேடு அப்பா தம்பி
உந்தன்குருவை நாடு இன்

உத்தார்

வீணைகதுள்ளிவந்த தாலே நீரும்
வெட்கமடைவீர் சொன்னேன் பாலே ஐயா

ஷை பாட்டு எடுப்பு

ஏனேயிப்படியெல்லாம் தானேபுலம்புகின்றீர்
ஏற்காதயிது வாதே
சொன்னேனிப் போதே
வையகம் மீதே-மானமில்லாமல்
படபடப்பாய் பேசாதே இன்

பெரியோர்கள் சாஸ்திரத்தை கிரிகிரித்தனமாக
பழித்துநீபேச லாமா

பாவமும் போமா
பகர்ந்தேன் நேமா-வீரியமெல்லாம்
செல்லாதரிவாய் சீமா இன்
ஓடவேயெத்தனித்து வாடிமுகம்தளர்ந்து
உளரிமுழிப்ப தாலே
சபையின் மேலே
நீட்டாதே வாலேபாடினான்கவி
தியாகருஜனும் கேளே இன்

## விருத்தம்

எரியா கக்ஷியென்று பாடவந்தீர்
எழிலுடைய புலவர்கேள் இன்னும்சொல்வேன்
தெரியாமல் இச்சபையில் வந்துகுந்தி
தைரியமாய் பாடிடவே சக்தியற்று
சரியான புராணமெல்லாம் தள்ளிப்போட்டு
தப்பிதமென்றேசிடவும் தகுமோவையா
அரியாமல் யிருந்திடிலும் நூலைநீரே
அடுத்திடுவீர் உந்தன் குரு அடிமைமாதோ

## மதனெரிந்தானென்பதற்கு நூல்களின் அத்தாக்ஷி

## விருத்தம்

பற்பல புராணங்களை படிக்கவேண்டும்
படித்தவரை அடுத்துசேதி அறியவேண்டும்
விற்பன விவேகிகளை வணங்கவேண்டும்
வில்மாரன் கதைகளை கற்றுணறவேண்டும்
அற்புதமாய் ஆசானை பணியவேண்டும்
அன்னவர்சொல் பொன்மொழியை யுணறவேண்டும்
சொற்பொழியும் புலவர்போல் சபையில்வந்து
சுமைதாங்கி போலமர்ந்து முழிக்கலாமோ

## வட்டமிட்டவுலகில் என்ற மெட்டு

ஆலகாலவிஷம்போல் ஓலமிட்டோடி வந்த
அஞ்சாத சிங்கமே வாரும் வாரும்-உங்கள்
மேள தாளங்களும் பே தாளமாக போகுது
மிரண்டு ஓடாமல்பதில் தாரும் தாரும் [ஆ

தாளம் தம்பூருவீணை மேளம் துந்துபேப்பு
காலந்தவரிடாதிரண்ணே அண்ணே-கேட்கும்
கேள்விகளுக்குபதில் தானளிக்கா விடிலே
கேளிக்கிடமாய்போகும் சொன்னேன் சொன்னேன் [ஆ

நன்னூல் கண்டிகையுரை நாலாவிதபுராணம்
ஞானமுணர்ந்தகவி யோரே நீரே-தாங்கள்
கண்ணுற்று பாருங்காணும் கும்பமுனி ஒன்பதில்
காமனெரிந்தொழிந்த சீரே சீரே [ஆ

தேட்டமுள்ள நைடதம் சிவகீதை ஒளவைகுறல்
ரோமரிஷி ஐந்நூரும் பொய்யா பொய்யா உங்கள்
பாட்டன் பூட்டன் முதலாய் கூட்டிபடித்துவந்த
பாகவதத்தைப்பாரும் ஐயா ஐயா [ஆ]

காகபுசுண்ட நாலும் கைவல்யந்தன்னைப்பாரும்
காமனெரிந்ததற்கத்தாக்ஷி சாக்ஷி-மற்றும்
போர்கர் முப்பதுயென்னும் யோகநாலை நீ கண்டு
யோசித்து பாருமதின் சூக்ஷி சூக்ஷி [ஆ]

அருணஜலப் புராணம் அகஸ்தியர் ஞானம் நூறும்
அரன்மகனை யெரித்தா ரென்று என்று-கேளும்
குருமபரே கூறும்சேதி கொஞ்சமும் அஞ்சிடாமல்
குருட்டு கவிபடித்தீரின்று இன்று [ஆ]

ஞானமதி யுள்ளானும் ஞானகும்மி தனிலும்
நவிலும் மகனூல்தனை பாரு பாரு மற்றும்
ஞானவாசிட்டமுடன் நாட்டமுடன் படித்து
ஞாயமெதுவெனவே தேரு தேரு [ஆ]

காமதகனமென்று கமருதே திவாகரம்
கருத்துயிதற்குயென்ன சொல்லும் சொல்லும்-உங்கள்
மாமதனெரியாமல் மானிலத்திலிருந்தால்
மறைந்து யிருக்குமிடம் விள்ளும் விள்ளும் [ஆ]

தாணிதனிலே சந்தச்சரபக்கவி யுரைக்கும்
தியாகராஜன் செந்தமிழ் கேளும் கேளும் முருகன்
வர்க்கவி காணும்பிது வாராது பங்கவெங்கும்
சோராதுரைத்துயர் மீளும் மீளும்

**மதன்ரதி பிறந்ததும் மணம்புரிந்த**
**விபரத்திற்கும் விடை**

விருத்தம்

அங்கஜன் பிறந்திட்ட நாளையம் உலசிவன்
அவதரித்த விபரஞ் சொல்வேன்
மங்கை ரதி எவ்விதமுதித்தன ளென்பதின்
மார்க்கமதின் மர்மம் சொல்வேன்
இங்கிவர்த மாயவரின் மணமான நாளையும்
இடத்தையும் எடுத்துச் சொல்வேன்
உங்களிட புராணத்தின் ஊழலையும் சொல்வேன்
உட்கார்ந்து கேட்பீர் மாதோ

**நாதந்தி நாதந்தி என்ற மெட்டில் பின்முடுகு**

**கண்ணிகள்**

செப்பிய முன்னோர்கள் ஒப்பரிய நூலை
தப்பிதமென்றுரைத்தீர்-இச்சபையில்

ஒப்பாரி பாடவந்தீர் அன்று
அப்பிரமனுதித்த துப்பில்லாத உங்கள் மதன்
விற்பனமிலாதுசெய்த தப்பிதங்களை யுரைக்க
அப்பப்பா வாய்கூசுதே உங்கள்சேதியை
அண்டமெல்லா மேசுதே [செ]

அன்று முகந்தமால் மைந்தன் வரம் வேண்டி
முன்னவனைத் துதித்தார்-அதற் கிரங்கி
முக்கண்ண னங்குவந்தார்-உங்கள்
மன்மதன் பிறந்துலகில் தன்மையாய் மோகந்தொடுக்க
சின்மயன் வரமருள இன்றுநீர் பிறந்தீரய்யா
கண்டுகொள்வீரண்ணே-அவன்பிறந்த
காலத்தைக் கேட்பீரண்ணே [செ]

திரேதா யுகந்தன்னில் பிரபவாண்டுமாசி
இருபத்தேழாம் தேதியார்-மகர லக்கினம்
குருவார பூர்ப்பத்தியார் பின்பு
கீர்த்திசேர மரருடன் நேர்த்தியா யசுரர்களும்
பார்கடல் தனிலமுகம் ஆரத்திட கடையும்போது
பருவாதிபிறந்தாள்-அம்மங்கையை
பரமபதி வளர்த்தார் [செ]

ஸ்ரீமுக சித்திரை தேதிபதினைறில்
மாதுரதி பிறந்தாள்-பரமனிடம்
மாதவன் வணங்கி சொல்வார்-மகா
சோமனே நகள்ரதியை காமனென் குமரனுக்கு
மாமணம் புரியவைத்து நாம்கண்டுகளிப்போமென
தாமோதர னுரைக்க இச்செய்தியை
தற்பரன் கேட்டுகளிக்க

நல்லதெனஈசன் சொல்லதேவர்களும்
எல்லோரும் கண்காணவே-ஆரோக்கியபுரம்
வெள்ளியங்கிரி தனிலே-மேளும்

சொல்லுவேனே பலவருடம் நல்லசித்திரை யொன்பதில்
செல்வகலியாணம்செய்து ஸ்ரீதன மிகவளித்தார்
பொல்லாதே பாவியாச்சே உங்கள்மதன்
கல்லாதே லோபியாச்சே
தபசிகள் யோகத்தை அப்பலமாயாக்கினான்
விபசாரமே புரிந்தான் - தவமுனிவர்
சாபத்தினு லெரிந்தான் - இந்த
விபரமே யறிந்திடாது அபலைபோல் புலம்பிமதன்
எரியவில்லையென் றுவீணில் செருவங்கொண் டழிந்தவர்கள்
உன்போலவேகருண்டு— தியாகராஜன் தமிழ்
உற்றுப்பாராய் நீகண்டு

## மன்மதனுக்கு ஆயுதங்கள் வந்த விபரம்

### குறவஞ்சி வர்ண மெட்டு

#### கண்ணிகள்

பார்சரபம் பார்சரபம் பார்சரபக்கொடியே இது
யார்வந்தாலும் பயப்படாது கேளாய்தம்பி கவியே (பா)
மாரன் ரதி இருவருக்கும் மணமுடித்தபோது மன
மகிழ்ந்தளித்த ஸ்ரீதனத்தின் விபரங்கேளிப்போது (பா)
சங்கரனார் மருமகருக்கு சந்ரவட்டகுடையும் தந்தார்
சந்தோஷமளிக்கும்தென் றல்தேரும்பெண்கள்படையும் (பா)
மச்சக்கொடி குயிலோசையும் மாதுவுமைதந்தாள் - அரி
மாயனிருள் யானைகடல் மூரசு தானளித்தார் (பா)
அன்னையான லக்ஷிமியாள் ஆரோக்யநகர் தன்னை மன
ஆக்ஷியே புரியசெய்தாள் அங்கஜனை முன்னே (பா)
வஞ்சமின்றி தன்னுடைய நம்பியர்க்காய் வேதன் அன்று
பஞ்சபான மளித்ததாய் பகருதே புராணம் (பா)

நாதனுக்கு தப்பியான நன்மதிப்பை கொண்டு-கேள்
நாமகளும் கிளிவாகனம் தானளித்தாளன்று (பா)
துந்தினவும் டேப்புதம்பூர் காரதர்தந்தாரே வி. ஏ.
தியாகராஜன் செந்தமிழை செவிசாய்த்து கேட்பீரே (பா)

## விருத்தம்

எண்ணுயிரம் பிறவி ஜந்துகட்கும்
ஈவிரக்கத் தோடுதினம் படியளக்கும்
கண்ணை எங்களிட பரமன்தன்னை
கண்டபடி ஏதேதோ பிதற்றலானீர்
மன்னுதி மன்னரெல்லாம் மடிந்தாரண்ணே
மாமதனும் யெரியவில்லை யெனவாதாடி
உன்னுயுள் முடிவதற்கோ இந்தவாது
உத்தமரே கெட்டழிந்து போகலாமோ

## லாவணி மெட்டு

பதினன் குலகத்திற்கும் படியளக்கும் பரம
பதிமுதலா உங்கள் மதன்முதலா பாரில்
மதியற்று ஈசன்மீது மலர்கணை ஏவிமாண்ட
மதன்முதலா எங்கள் பரன்முதலா (ப)
ஆக்க வயனுமரு ள்ளிக்க அரனென்பதை
அரியலையா நீங்கள் தெரியலையா வரம்
போக்க அரியென்பதும் புலவரே உங்களுக்கு
புரியலையா புத்தி வரவில்லையா
காமன்பண்டிகை யென்று கேமமுடனே பாரில்
போற்றுவதேன்—துதி சாற்றுவதேன்-அந்த
பூமாரனுமெரிய வில்லையென்று சபையில்
மாற்றுவதேன்-நீங்கள் தூற்றுவதேன் (ப)

பட்டினத்தார் பாடிய உடற்கூற்றுவண்ணமதை
பார்க்கலையா-பாட-கேழ்க்கலையா நீங்கள்
கூட்டிவந்தஜமா வாட்டமிடுதே முகம்
பார்க்கலையா—வழி-நேர்க்கலையா
இறப்பதும் பிறப்பதும் ஈசன்செயலொழிய
என்செயலா-அது உன் செயலா இதை
உரைத்த முன்னோர்கள் நூலைகுறைத்துபேசுவதுங்கள்
மதன்செயலா-துஷ்டமதன் செயலா (ப)
சந்து சந்தாககுந்தி சிந்துபடித்து வந்தால்
ஜெயித்திடுமா—ஜபம்-பலித்திடுமா-உங்கள்
சிந்தைகெட்டபுராண [illegible]லைபிரித்துப்பார்
கெலித்திடுமா பாரில் ஜொலித்திடுமா ப
சந்தேகமாயிருந்தால் உங்களாசானைக்கண்டு
கேளுமண்ணே உற்று பாருமண்ணே எங்கள்
சந்திரசேகரனை நிந்தனை செய்தால் பாவம்
சாருமண்ணே தயராகுமண்ணே ப
சீராய் சரபக்கொடி ஜோராய் பறக்குதுபார்
தொனித்திடுமே கோபம் தணித்திடுமே அண்ணே
பாராய் முருகனருள் தியாகராஜன் செந்தமிழ்
துணிந்திடுமே பாட இனித்திடுமே ப

## மதன் மோகத்தினுல் அழிந்தவர்களின் விபரம்

### விருத்தம்

அஷ்டமச் சனிபிடித்த உங்கள்மாரன்
அவனிதனில் செய்தகுற்றம் வேணதுண்டு
மட்டுமித மில்லாமல் மாய்கைசெய்வான்
மாதர்களைக் கண்டாலே மோகமெய்வான்

துஷ்டனிவன் விரகத்தில் சிக்கினோர்கள்
துன்பமதையின்னதென கூறப்போமோ
சட்டமுடன் அன்னவனால் கெட்டபேரை
சாக்ஷிருசுவுடனே யான் சொல்வேன் மாதேர்

## லாவணி எடுப்பு சந்தம்

வட்டமிட்டவுல கெட்டுதிக்கும் புகழ்
கொட்டி வருகும் தண்டோரா—உங்கள்
கட்டுக்கதைகளை நெட்டிப்படித்திங்கே
குட்டிக்கரணம் போட்டீரா வ

அண்டமதிலுங்கள் அங்கஜனால்வேண
ஆகமங்கள் அழிந்தாச்சே அந்த
சண்டாளனின் சதி தன்னைநம்பி பல
சரித்திரங்களும் பாழாச்சே வ

ஜானகியின் மோகம் தாளாமல் ராவணன்
சன்யாசி ரூபங்கொண்டானே ராமன்
போனதைக்கண்டு சிறையெடுத்த ராவணன்
பூண்டோடவ னழிந்தானே வ

துரியன் பாஞ்சாலியின் மீது மையல்கொண்டு
சூதாடி ஐவரை ஜெயித்தான்-காம
வெறியினால் பீமனின் தண்டாயுதத்தினால்
பதினெட்டாம் நாள்போரில் மடிந்தான் வ

சைரந்திரிமீது கீசகன் கொண்டதோர்
சையோகக் காதலினாலே அவன்
வைரமானதேகம் மறைந்ததே பூமியில்
மாமதன் கொடுமையாலே வ

இந்திரனென்று அகலிகை மோகத்தால்
ஆயிரம்யோனிக்கண்ணனுன் பின்னும்
சந்திரன் தாரையின் மோகத்திலாழ்ந்தியே
சாபத்தினுல் பின்ன மானுன் (வ)

தம்பிமனைவியை தான்காதலித்ததால்
தாஷ்டீக வாலி மாண்டானே-அன்று
நம்பியே மோகினி தன்னை பத்மாசூரன்
தன்னுலே தானழிந்தானே (வ)

கௌசிகர் யாகம் கெடுக்க ஊர்வசியை
காதலித்திட செய்தானே அங்கே
ரிஷிபிண்டம் கீழ்விழ தபமழிந்தேமுனி
நாணமுறவே செய்தானே (வ)

உங்கள் மாரனுட வண்டவாளஞ்சொல்ல
இந்த பொழுது போதாதே-எங்கள்
சங்கரனுரிடம் அங்கஜனின்கணை
செல்லாதொழிந்தனப்போதே (வ)

செந்தமிழ் செழிக்கும் சீரும்சிரப்புள்ள
சென்னைநகரென்னும் நாடு தன்னில்
மைந்தன் தியாகராஜன் செந்தமிழ் கண்டு
இந்தசபையை விட்டோடு (வ)

## பரமனுல் முத்தியடைந்தவர்களின் விபரம்

### விருத்தம்

பண்டையநாள் புராணங்களை பழித்து பேசும்
பாதகரே உந்தன்செவி மந்தமோதான்
நண்டுகொழுத்தால் வளையி லிருந்திடாது
நரிகொழுத்தால் நாட்டினுள்ளே வந்துபார்க்கும்

அண்டைவீட்டுக் காரிபிள்ளை பெற்றுளென்ருல்
அடுத்தவீட்டுக்காரி யங்கலாய்துக் கொள்வாள்
தன்மையைப்போல் எரியாத கக்ஷியென்று
தைரியமாய் பாடமனந் துணியலாமோ

## அடுக்கு லாவணி

துந்திரு டேப்புகொண்டு செந்தமிழ் பாடவந்தீர்
மந்தமதியால் கிட்டியே
பன்றியின் குட்டியே
என்னை மிரட்டியே—தாங்கள்
எந்த ஆசானிடத்தில் இந்தபோதனைகற்று
வந்தீர் சக்கரை கட்டியே து

எரிந்தமதனைத்தாங்கள் வருந்திடக்கடவுளென்று
எதிர்த்து வாது செய்யாதே
போட்டி போடாதே
வாலை நீட்டாதே-மதனை
பரிந்து பேசினுலினி வருகுமுன் வண்டவாளம்
பயந்து நீயும் ஓடாதே து

மாக்ஷி சேருலகினில் காக்ஷியளிக்கும் சிவன்
மகிமையைசற்று கேளுமே
வினைகள் போகுமே
துயரம் மீளுமே-உந்தன்
தாக்ஷியையொழிந்திட சூக்ஷி இதனையா
தேவனை துதிசெய்யுமே து

## உத்தார்

அரியயன் தேடிக்காணு தேவன் மகா தேவன்—உங்கள்
அஞ்ஞானம்-போக்கிடும் சல்லாபன்-சல்லாபன் அன்று
நரியைப்பரியாக்கிய நாரிபாகனே வைத்தீர்
நியாய மில்லாது கிட்டியே [பன்றியின்]

பார்த்திபனுக்கு அன்று கீர்த்திபெறவே ஒரு
பாசுபாஸ்திர மளித்தார்
பகையை யொழித்தார்
மனம்போல் முடித்தார்—அவன்
பங்காளியை ஜெயித்து மங்காமல் ராஜியத்தை
வாங்கிட அருள் கொடுத்தார் து

அறுபத்து மூன்றுநாயன் மார்களுக்கருள் தந்து
ஆதரித்திட்ட ஈசன்
அருட்பிர காசன்
அம்பிகை நேசன்-அன்றி
சிரித்து திரிபுரத்தை எரித்த காமதகன
சின்மயானந்த ரூபன் து

திருநீலகண்டருக்கு பரதேசிபோலவந்து
தீராகுறையை தவிர்த்தார்
திருவோ டளித்தார்
தீமையை வகுத்தார்—அவர்
தீரா சபதமதை தீர்த்து நீலகண்டர்க்கு
திரமிகும் காக்ஷியளித்தார்

## உத்தார்

வள்ளாளராஜன் பக்தி கண்டு பக்தி கண்டு பரமன்
பிள்ளையாக பிறந்ததுண்டு பிறந்ததுண்டு மனக்
கள்ளமில்லாசிவனை தொல்லுலகில் பரிந்து
கவிபாட வந்தீர் கிட்டியே [பன்றியின்]

நல்லசிறு தொண்டனின் உள்ளமதைய றிய
பிள்ளைக்கறியும் கேட்டு
பக்தியை பார்த்து
மனது சோர்ந்து-முடிவில்
நயந்து அவனை சொர்க்கபதவிக்கழைத்துசென்ற
நந்திநர்பனை போற்று து

பன்றி குட்டிகளுக்கு பால்கொடுத்துவளர்த்த
பரமமெஞ்ஞான மூர்த்தி
பக்தர்கள் கீர்த்தி
பாடிட கோர்த்தி—அன்று
புத்தியுள்ள நாரைக்கு முத்தியளித்தபரம்
பொருளுக் கெங்கிலும்கீர்த்தி து

எத்திசையிலும் புகழும் முத்தமிழ் செழித்திடும்
சித்தர்போற்றிடும் நாடு
சென்னையிற் வீடு
செப்பினேன் தோடு பரி
சுத்தமடைந்திடவே பக்தன் தியாகராஜன் சொல்
தெரிந்து சிவனை பாடு து

வி. ஏ தியாகராஜ செட்டியார் பாடியது முற்றிற்று

அநேக நாடக காவிய நாவல் இயற்றமிழாசிரியன்

# பு. இராஜகோபாலன்

அவர்கள் பாடியது

## விருத்தம்

1 சத்துசித்தாய் சராசரமா யைம்பூதமாகி
சகலஜீவ பகலிரவாம் அருளைப்போற்றி
சத்தியெந்தன் தந்தைதாய் பாதம்போற்றி
நலமுடனே அரிஓமென் றுபதேசித்து
சுத்தமதா யிலக்கண விலக்கிய
சொற்பய னுரைத்தோர் கருத்தைப்போற்றி
புத்திமிகும்பெரியோர்களடியைப்போற்றி
போற்றுவேன் சபையிலினி சாற்றுவேனே

2 என்னிடத்தில் கவிபாட உமக்கிஷ்டமானல்
எழுத்தசை சீர்பொருத்த மிருக்கவேண்டும்
நன்னயமா யடிதுடைகள் செறிக்கவேண்டும்
நாவலரே எழுகமொடு பராசம்வேண்டும்
அன்னித சங்கைகோள் நிந்தையொடு
அறியாத நூல்வழியின் குர்க்கம்கோபம்
பின்னமுற நீக்கியே பாடவேண்டும்
பிழைபடா துடன்பாடோ புகல்வீர்மாதோ

3 கேட்பதற்கு மட்டும்பதில் மொழியவேண்டும்
கேளாத வாதமதை ஓம்தானது
பாட்டுக்கு பாட்டென்றும் பகரொணுது
பாவலரே கருத்துரைகள் பதியவேண்டும்
நாட்டமுறும் சாஸ்திரத்தை காட்டவேண்டும்
நயமாக ஒவ்வொன்ருய் மொழியவேண்டும்
வாட்டமுற்ற கலகமது செய்யொணுது
வல்லமைகள் உண்டெனி லெதிர்ப்பீர் மாதோ

4 மதனெரிய வில்லையெனப் பாடவந்த
மாபுலவா சபையிலொரு சிறியகேள்வி
பதமறிந்து உரையதனைச் சொல்வீராகுல்
பாவலறென் றென்விருதை கொடுத்துப்பின்
இதமுடன் உங்கள்கக்ஷி ஜெயித்ததாக
இன்பமுற தமிழ்மாலை யதனைச்சூட்டி
சதமினியே புகழ்ந்திடலா மில்லாவிட்டால்
ஷாகிருநீர் தோல்வியென சாற்றலாமே

## சுருளி மலைமீது என்ற மெட்டு

இயற்றமிழ் இராஜகோபால் பாட்டு—இதை
இச்சபையி லுச்சிதமாய் கேட்டு
இத்தரையில் வித்தகரே சுத்தமதாய்
சொல்லி விடைநாட்டு—நூல்காட்டு
மாரனுக்கு எத்தனைபேர் தானே—இந்த
மாநிலத்திலுண்டு சொல் சீமானே
மங்களமாய் சங்கையற இங்குள்ளவர்
தாமறிய வவனோ—பதில் காணே
ஒவ்வொரு பெயரிற் குரையாது—அதன்
உண்மையதனை முதலிலோது
உத்தமரே கத்துவதேன் மித்தைமொழியாகும்
இதுசாது—விடுவாது
வல்லவரின் உன்னிதத் தமிழ் வாக்கு—நுசி
வளமையதிற்றேறனமிர்த கேக்கு
வையகத்தோர் அய்யமற செய்புமிது
நாவலரே ஜோக்கு—வாதை நீக்கு

## வேறு மெட்டு

வித்தகனென்று வந்தீரே வீம்புக்கவிபாட—சன்யாஸ
சித்தர் தாமென்று வந்தீரே சிந்துக் கவிபாட

அத்தனெரித்தது மால்மக னென்றெனில் ஆரென நூல்காட்டு
விடைபோட்டு-புகழ்கேட்டு-உளரி வி
உபநூலென்பதின் உரைகளுணர உன்க்கேதுத் திறமே
ஒதிமாமே-பதிபரமே-அரிய வி
சமய மதநூல் சைவமதனை ஷாகிரு நீதேடி
உடனோடி-ஜதைகூடி—ஒளிய வி
தர்க்க அநுப வயுக்தியும் தானுடன் தன்மையறி வீரா
விடை நேரா தரசீரா—எனினி வி
எரியாமன்மதன் எவரின் சுதனென்றெடுத்துரையினியே
நூல்தனியே-இகமுனியே-ஓடாதே வி
மங்களமாகவே உங்களுக்காதாரமாகிலும் நூலுண்டா
இது தண்டா-எடுதுண்டா—மாறியே
இத்தலம்புகழ்ந்து சித்தங்களிப்புற இராஜகோபால் வாக்கு
ருசிகேக்கு-தரும்ஜோக்கு—பலேபா வி

## விருத்தம்

சித்தஜனர் பத்தினது வித்தையென்று
சிறந்தகவி பாடவந்த புலமையோரே
அத்தனையும் பொய்யென்ப தல்லால்வேறு
ஆகாரம் ஒன்றேனும் காணவில்லை
கத்துகிறீர் தட்டுகிறீர் கோஷ்டமாக
காரணமும் காரியமும் விளங்கிடாத
தத்துவத்தை வாரியுங்கள் தலையிற்கட்டி
தானழுகும் வேதாந்த தன்மையாமே

## பாட்டு

வெற்றிவீரப் பட்டமுடன் சித்திரக் கவிபடித்த
வித்வகவிஞரேயிங்கு வாரும் வாரும்

வேளொரிய வில்லையென்று உங்களுக்குச் சொன்ன நூலை
வெட்டவெளி யாய்ச்சபையில் தாரும் தாரும்
கற்றவரே உற்றவழி சற்றும் பிரண்டுப் பேசாது
கக்ஷியதைத் தான்முடிப்பீர் நீரும் நீரும்
காட்டுவீரா வேதம்நாலு சாஸ்திரங்களாறிலேனும்
கண்டிருபத் தெட்டாகமச் சீரும் சீரும்

உத்தார்

மற்றப்புராணங்கள் பதினெட்டிலேனும்
மாறும் உபபுராண மதிலிருந்தாலும்
குற்றமில்லை பாவலரே வாரும் வாரும் (வேளொ)

சித்தர்சொன்ன வாக்கியமும் ஒத்துக்கொள்ள சம்மதம்காண்
செப்பும் இதி காஸமதிற் கண்டு கண்டு
சீர்பெருகும் நன்னகரில் பேர்பெரு மிலக்கியங்கள்
சிறந்திடு மிலக்கண நூல் கொண்டு கொண்டு
தத்துவ வேதாந்தமுடன் அத்துவித மாகிலுமே
தானிருந்தால் போதுமிது விண்டு விண்டு
தாரணி யதனிற்பரி பாஷைகள் பதினெட்டதில்
தங்களுக் குறுதியெது உண்டு உண்டு

உத்தார்

இத்துணை யில்லையெனில் சத்துவ தென்னலாபம்
இச்சபையோ ரெதிரில் லச்சைப் படவோசாபம்
சுத்திமுத்திப் பாராமலே வாரும் வாரும் (வேளொ)

முன்னால்கேட்டகேள் விக்கெல்லாம் நன்னயமாய்நானுரைக்க
மூர்க்கத்தன மாகயின்னம் வாது வாது
முற்றுமறிந் தவர்போலப் . பற்றில்லாத ஞானியென
மொழிகுறீர் போதும் போதும் சாது சாது

கன்னல் வில்லோன் அத்தன் கண்ணால் பின்னமான
காட்டிவந்த சாஸ்திரங்கள் தோது தோது [னென்றுபேசி
கலங்கியே உங்கள்மனம் துலங்கிடா மலேபோச்சோ
கண்டபடி பேசுவதும் நீது நீது

உத்தார்

அன்னீதமான இந்த கக்ஷியை விடுத்து
அவனிதனிலே யெங்கள் ஆசானையடுத்து
சொன்னவிதம் தானுணர்ந்து வாரும் வாரும் வேளே
மாங்கனி குலையிழைந்து பாங்குடன ரஸம்பொழியும்
மன்னர்பதி சென்னைநகர் வாசன் வாசன்
மாமதுரத் தேனொழுகும் பூமணக்கும் காவனம்சூழ்
மங்கள விளங்கும்பர காசன் காசன்
தேங்கனி உடைந் திளநீர் ஓங்கியே பெருகும்மடை
தேசத்தி லனைவருக்கும் நேசன் நேசன்
தெள்ளமிர்தச் சீனியென அள்ளியள்ளித் தமிழதை
திடமா யெனக்களித்த தாஸன் தாஸன்

உத்தார்

பாங்குருனியற் றமிற் பாரினிலோதி
பாவலன் இராஜகோபால் கூறினநீதி
ஏங்கா ணின்னமும் சங்கை வாரும் வாரும்வேளே

விருத்தம்

வேதமதைப் பிரித்துபல காண்டமாக
வியாஸருமே கடவுளரை வேறதாக்கி
பேதகமாய் செய்ததது பொய்யேயானால்
பேசிடும்நம் ஜாதியெலா மொன்றதாமோ
சாதகமாம் கலைஞானத் திறமையாலே
சாதிக்கும் வல்லபமேன் பானுகோபன்

ஆதவனைப் பற்றிவந்து பிணைத்ததுவு
மவனடைந்த வரமெனவே அறிகுவீரே.

## சிவவாக்கியர் பாடல்போல் பாடவும்

கேட்டகேள்விக்கான்ஸரிதோ பாட்டுடன் தருகுறேன்
நீட்டி நூலைக்காட்டி சபையில் சூட்டிஜெயம் பெறுகிறேன்
வருணம் நாலும்பாருமே மறை வகுத்தது மச்சீருமே (கே)
தருணமதனில் அனுலோமர்கள் தானுதிக்கக்கோருமே (கே)
பிரதிலோமர்யோகமே தான் பேசும் நூல்கள்வேகமே
மறதிவேண்டா மந்தராளர் மனதிற்கொண்ட யூகமே (கே)
காராளர்கள்நீதியே பின் காணும் சங்கரஜாதியே
தாராளமாய்ப் பூவுலகில் தமிழுகனை ஓதியே (கே)
கோரிடயிதிகாஸமே பார் கூடினதும் வாசமே
சீறிவந்த ஜாதிபேக சிறப்பிது உல்லாசமே (கே)
அகத்திற்குள்ளே கூடியே நீர் ஆருதாரம் நாடியே
ஜெகத்திலோதும் போது சூான் சூரியனைத்தேடியே (கே)
கட்டினதும் மாயமோ உன் கக்ஷியும் உபாயமோ
எட்டிப்பார்த்து சித்தராேனர் எழுதினது நியாயமோ (கே)
ஒப்பாவிடிற்றள்ளுமே வீண் ஒழுக்கமென்று விள்ளுமே
தப்பாகாது புராணசாரம் தானறிந்துக்கொள்ளுமே (கே)
இராஜகோபால்வாக்கியம் சீர் இயற்றமிழ் சிலாக்கியம்
புராதன நூல் வல்லவர்க்கு புகலவந்த போக்கியம் கே

## விருத்தம்

சிவமதுவும் பவுனத்தி லிருந்தபோது
ஜீவர்கட்கு அசைவேது என்றே கேட்ட
தவமுனியே எந்தநூல் தன்னிலிந்த
தமிழுதனை உண்டுவந் தேப்பமிட்டீர்

கவனம்லை நாம்செய்த பொருளதாகும்
கடிகாரம் ஓடுகின்ற நிலமைபோலே
புவனமதில் ஜீவவகை நடக்குமந்த
புதுமையினை சாவியெனப் புகலலாமே

## பாட்டு

காரமுடன் தாமதத்தை வீரமெனப்பாடினவர் யாருமே
நல்ல கக்ஷியிதுவும் தானுட்காருமே
பாரதனில் முக்குணங்கள் யாரவர்க்கு இல்லையதைக்கூறுமே
நீரும் பாடும் குணம் தான தனைப்பாருமே
சாரமற்ற ஓர்குணத்தை சேரவிட்டிரு குணத்தின் சீருமே
போகும் சங்கதியதற்கு விடைதாருமே

## உத்தார்

சீரற்ற தாது துங்கள் வாக்கு மத
சித்தஜன் செயலெனவே நோக்கு
ஆரண முணர்ந்தவர் போல் வீர

ஆவியதைப்பற்றி நிற்கும் தாவியந்த காயனைப் பேசியே
இங்கே யாரைமிறட்டுரீர் கைவீசியே
பூவில்மணம் உள்ளடங்கி மேவிவந்தகாரணத்தையோசியே
அதை பூர்க்கச்செய்யும் நாதனுண்டு நேசியே

## உத்தார்

கூவியழுதாலென்ன கீர்த்தி பார்
கூறும் மன்மத ஒளி பூர்த்தி
நாவினாலே பாவினமாய் வீர

ஆனைவேறுப்பாகன்வேறு தானையா அங்குசமதாற்றீட்டியே
அதை அடக்கி வருபவன் பார் ஓட்டியே
ஏனையாமா மதம்வேறு காணையா மன்மதன்வேறுகாட்டியே
இனி ஏற்றுவேன் சரபக்கொடி சூட்டியே

## உத்தார்

பூனைபோல் உங்கள் கக்ஷி ஒடுங்கி
பூந்தோட்டப் பார்த்துதே நடுங்கி வழி
மோனையற்ற சோனைக்கவி வீர

முத்தமிழ்க்கடல் மடையைநித்தமும்திறந்தளிக்கும்தாஸனை
தங்க முகர் பெற்ற இயற்றமிழுல்லாசனே
சித்தமதுதான் மகிழும் உத்தமர் தமக்கு விசுவாஸனே
வித்வ ஜெயம் புகழ் இராஜகோபால் நேசனே

## உத்தார்

அத்தன் கண்ணால் மதனை தகிக்க நால்
ஆனவர் மனமதுவும் களிக்க
வித்தகரே நான் கொடுக்க வீர

## விருத்தம்

கற்றதுநீர் உயிர்மெய் ஆய்தமுங்கூட
காசினியில் இருநூற்றிப் பதினாறல்லால்
மற்றதெந்த பாஷையதில் பாடவந்தீர்
மாபுலவா தமிழ்நூல்கள் சங்கையானால்
உற்றதுந்தன் சாஸ்திரந்தா னுறுதியென்று
உரைத்திடினு மதன்வழியே கக்ஷிசெய்து
குற்றமின்றி மதனெரிந்த மார்க்கம்தன்னை
கூறுவேன் ஜெயமதனைக் கோருவேனே

## பாட்டு

அருமறை சாஸ்திர ஆகமென்றெதிர்
அறைந்திட வந்த புலவீரே
அரிச்சுவடி யதில் அடங்கிய பேதகம்
அறிந்துமே தெளிந்தீரா புகல்வீரே

திருமக ளருள்பெற தேசத்தி லனைவரும்
தேடிப் படிப்பதெது சொல்வீரே
திறமுடனே உங்கள் பாட்டன் பூட்டன்களும்
தேர்ந்து வழங்கின நூல் புலவீரே
மருமலர்க் கவியது இயலிசை நாடக
மல்லாம லேதுகாண் பெரியோரே
மார்க்கமறியாதுன் மார்க்கத்தால் பழிக்குறீர்
மதியது பிசகியே கவியோரே
குருபுலரி திவாகரம் நிகண்டக ரர்த்தியும
கூறுவ தென்னவென் றுரைப்பீரே
குற்ற மாகுமா காம தகன மென்ற
குன்ற வில்லிபேர் மறுப்பீரே
உருவிலியென்றே மன்மதன் தன்னை
உகந்திடப் பகர்வதேன் புலவீரே அரி

சித்தஜன் பிறந்தது மூன்று விதமென
சத்திய மாகநீர் நூல்கண்டு
சிறந்த சபைதனில் வருந்த வந்தீரே
சிரிப்பாகுதது யெனக் கின்று
வித்தகா உபதேச காண்ட மதனில்
வேதியன் வரமது தான்கொண்டு
விளங்கியே மாலவர் சித்தத்தி லுதித்த
விபர மூணராம லேன்முரண்டு
கத்துறீர் விஷ்ணு புராண மதனின்
கருத்திது வாமென நான்விண்டு
களருதே துவாபர யுகமது மாற
கண்ணனுக் கவதாரமது ஒன்று

புத்தி யில்லாமலே ருக்மணி வயிற்றில்
பிறந்தது பிசகென நீரின்று
புகலும் மொழிக்குரை பொய்யாகா மூன்றும்
பாகவத நூல் மிகநன்று
அத்தன் எரித்ததாய்ப் பேசிடும் செய்யுள்
அறைகுவேன் பாரினி புலவீரே அரி

## விருத்தம்

தெண்டிறைத் துயின்றநம்பி செம்பொன்னாரமார்புதோய்
வண்டரற்று கோதையவ் வயிற்றுவந்துதித்தனன்
துண்டவெண் பிறைக்கொழுந்து சூடுங்கக்கணெண்ணுதற்
கண்டிறந்த காலையிற் கரிந்திறந்த காமனே

## பாட்டு

ஆறு விடங்களிலே மாரன் யெரிந்ததென்று
அதிசயம் பேசவந்தாய் மலய்தேரு
அங்க தேசம் இமய கிரிக் கைலை
அணங்க நாட்டெல்லை யதுபாரு
கூறும் மேருகிரி யொருக்கை நகரமது
கூடியிருக்குமிது தான்சீரு
குவலய மதிலதை இந்தியா வென்பதும்
கொள்ளலாம் ஜில்லா வெனப்பேரு
தாறு மாறுகத் தவிக்குறீர் அதுவே
தானையா பட்டணம் யெனநேரு
தாங்கள் மொழிந்திட மற்றூர் நகரெனத்
தருகுவார் கண்டதோர் யிடம்கோரு
வேறு படுத்தியும் பேட்டை புரமென
வீதியைச் சுட்டா தவர்யாரு

வேண துண்டையா ஒருபொருள் பலசொல்
வேடிக்கை யினியுன் மனேசேரு
மாறு படுவதும் மண்பொன் உருவதில்
மாநிலம் தனில்காண் புலவீரே — அரி

## விருத்தம்

ஓரிடத்தை வீடென்றும் வீதியென்றும்
ஓதலாம் நாடென்றும் நகரமென்றும்
பாரிதையே பட்டணமும் பேட்டையென்றும்
பகரலாம் புரமென்றும் தேசமென்றும்
கோரிடலாம் மண்ணதனை சட்டியென்றும்
குடமென்றும் சாலென்றும் குடுவை என்றும்
சீரிலகும் கடுக்கனென்றும் காப்புமென்றும்
சிறப்பு பெயர் கொண்டதுவும் பொன்னையா

## லாவணி

பங்கமில்லாமல் தாங்கள் கொண்ட சங்கைக்கு பதில்
பத்தரை மாற்றுத் தங்கம்போல் பாட்டு
பல்லோர் நிறைசபையில் சொல்லிவந்தேனினியே
பதுங்கி ஓடாதே பதில் நூல்காட்டு
சிங்காரமாக உன்னைகேட்ட கேள்விக்கு பதில்
செப்பாவிடிற் டேப்பைக் கீழ் போட்டு
சித்தஜன் பத்தினது உத்தமமொழியென
சிரமதை என்னடியில் உடன் கூட்டு
உங்கள் கக்ஷியை யெங்களாசானெடுத்திந்த
உலகமெங்கிலும் சவால்தான் கேட்டு
உற்றயெதிரிகளில்லை யென்றதன்பின்
உற்பத்திசெய்தாரிதைப் பார்சீட்டு

அங்கம் நடுங்காமற் கேள் அகிலமெல்லாம் புகழும்
அன்பன் இயற்றமிழினை நாட்டு
ஆசையும் நேசமும் வீசும் இராஜகோபால்
அமிர்தக்கவியினிமை ருசிகூட்டு
மங்களஞ்சேர் சபையில் சிங்கமெனவே வந்த
மறைவழியுணரா புலவீரே அரி

## விருத்தம்

தத்துவம்தான் யெத்தனையாம் வகைகளென்று
தடபுடலாய் கேட்கவந்த புலவாநில்லும்
மொத்தமது பதினேழாம் தொகையுமய்யா
மூதறிவோர் எழுதியுள்ள நூலில் கண்டு
சுத்தமாய் ஒவ்வொன்றின் கணக்குடனே
சொல்லுவீர் தனித்தனி தொழிலைவிண்டு
வித்தகரே யின்னுமுன் வினவலுக்கு
விளம்புமிந்த விடையதனில் கவனம் மாதோ

## ஒயிற் கும்மி

நவரஸ கீத அலங்கிர்த மாகவே
நாவலரே யிதை கேட்டபின்பு
நாடியினி தேடியுரை பாடிபுகழ் கோடியென
நன்னயமாகப் பின் விள்ளுவீரா
அறுசுவைதன்னி லுதிரமது மாறி
ஆனது விந்துவாய் தானுமென்று
அறியாமலே விரிவாகவே பெரியோரென சிறியேனெனை
அற்புதமாக வினவ வந்தீர்
சுக்கிலசுரோணிதம் தன்னுடனே கூடி
சுகமாக ஜந்து ஜனிப்பதய்யா
சுருதியது கருதிவரும் இறுதியினை உறுதியுடன்
சூக்ஷமாய்க் கூறுவேன் பாருமினி

ஆதியிலண்டம் தனைப்படைக்கப் பரம்
ஆவென்ற ஒலியில் வேதமாகி
அத்தனிட சித்தமது உத்தமா மித்தரையில்
அனங்கனின் உற்பவம் காமமறியே
மறையவனீஸனிடம் வரம் பெற்றுமே
மாலங்கம் தன்னிற் பிறந்தானென்று
மண்டலத்தில் விண்டாரிதை கண்டாயிலை பண்டேகலை
மாதேவ நூலதி லுள்ளபடி
காரிகை நன்னூல் நிகண்டகராதியும்
கற்றவர் சந்துஷ்டி யுற்றிடவே
காசினியில் வீசிகவி மாசிலாமற் பேசிவரும்
கர்த்தன் தேவியருள் பெற்றவனும்
இயலிசைநாடக பஞ்ச வியல்மொழி
இராஜகோபால் தமிழ் வாக்கியமே
இன்பம்தரும் அன்பன்புகழ் தென்பாய்மகிழ் பண்பாகவே
இத்தல மீதினில் வித்தகரே

## வேறு மெட்டு

சத்தம்பிறக்கு மிடமதனை சாற்றுவேனிப்தாபாருமே
சித்திரம்போற் புத்தியதனில் சிதறிடாமற் கோருமே
வித்தகரேசங்கு நதியில்விளையும் உமிழ்நீர் தன்னிலே
கத்தும்மணி பூரகத்தைக் கண்டுதெளியு முன்னிலே
இத்தரையில் யிவைகளிருக்கும் யிடமறிந்து கூறுவாய்
இயம்பத்தெரியாவிடிலே யிந்தயிடைத்தைவிட்டு பேறுவாய்
எத்திசையும் கீர்த்தியோங்கும் இயற்றமிழ்ல்லாசனும்
எந்தனுக்கு ஓதிவைத்தஸ்ரீஇராஜகோபால் தாசனும்

## விருத்தம்

பிழைபடவே யேட்டில்சில பாட்டெழுதி
புலவரென படித்திடவே வந்தீரின்று

இழைசேர்ந்து நூல்களாம் கலையைப்போலே
இருக்குர்பல சாத்திரங்க ளின்னதென்று
தழைத்திடவே வாசித்துக் கற்றீரில்லை
தகாதமொழி பேசுகிறீ ரிதுவோ ஞாயம்
கழைக்கூத்து கவிராஜ ருங்கள் கக்ஷி
கற்வர்க்கு யெளிதமாம் கவனிப்பீரே

பாட்டு

இத்தலமதிற்புராணம் சுத்தப்பொய்யெனத் தாங்கள்
இயம்பவந்தீரே கருத்து போதும்நிறுத்து சபையில்வெறுத்து
இனியுன்னை யான்கேட்பதற்குரை மறுத்து
பித்தன் தலையிருந்த தாரைக்குறித்தோவென
புகலவந்தீரே பாட்டு சொல்லுவேன் கேட்டு மதியைத்தீட்டு
பாப்ரம்ம சொரூபமதனை நாட்டு
கத்துக்கொடுத்தார்யோகம் சனகாதி நால்வருக்குக்
களருது நூல்பாரு ஏனின்னம்வேறு உண்டெனில்கூறு
கம்பக்கவி காளமேகமுன் நேரு
அத்துவிதக்காவிய மெத்தனை வேதாந்தம்
ஆன்ஸர் நீ கொடுப்பாயா இல்லைவீண்வாயா கல்லாதநேயா
அவையிலாந்தை முழியென விழிப்பாயா

உத்தார்

சத்தம்போடாதே அது தேவி
இந்த—சபையிலுன் கக்ஷியது காலி
வத்தாததமிழ்கடல் சுத்தப்பொய்யெனத்தாங்கள் (இய)

2

மன்மதனென் றொருவன் இல்லையென்றோதிடும்
மார்க்கமெதுசாது உண்டெனில்ஓது தத்துவவாது
மனதிற்கண்ட மாய்கையதுவும்தீது

பின்னப்படுவீரிப்போ பிரளாதிராருதார
பிரிப்பிடமெதுகண்டு பிரித்துவிண்டு செய்குவீர்தொண்டு
பிதற்றவுந்தீர் யோகிபோல் மொழிவிண்டு
நன்னயமாக உங்கள்வீட்டில் மனைவியக்கள்
நாளுமிருக்கப்பேசி கொஞ்சுநீர்யோசி தேடியேகாசி
நவலுகின்றீர் ஞானவானென்ன வீசி
கன்னியுடனணைந்து காதல்தீர்ந்தபோதே
கழண்டுபோகுதேமோகம் இதென்னயோகம்செய்வதுபோ
கருத்திற்கொள்ளும் யெரிந்ததிதுவே யூகம் [கம்

உத்தார்

இன்னும்வேண்டுமோ சாக்ஷி
உனக்கிருக்கும் காமத்தின்காக்ஷி
பன்னிபன்னிப்புராணம்சுத்தப்பொய்யெனத்தாங்கள் இ

3

அடுத்து மற்றுமோர்பெண்ணை அணையுமென்றாலேஐயா
ஆகாதுஉங்களாலே அதன்பின்னாலே வந்துமேமேலே
ஆசையதும் உதிப்பது மெதனாலே
தடுத்துப்பேசாதேகாண் யெரிந்துப்பிழைப்பதற்கு
தரணியிலத்தாக்ஷி கண்டகேருக்ஷி உண்டிந்தக்காக்ஷி
தருமசபையோர்களைக் கேள்சாக்ஷி
படுத்துவீட்டில் நல்லஜாமத்தில் குப்புறப்
பாருங்காண் நூல்தேடி எத்தனைகோடி சித்தஜர்நாடி
பஞ்சபாணக் கணையதைத்தான்சூடி
எடுத்து உண்ணும் அறுசுவையது காமமென்றால்
எய்பவன்யாரய்யாதாயென்னப்பொய்யாதங்கையைத்துய்யா
எழிலாய்ச் சேர்ந்தணையுதா அதுமெய்யா

உத்தார்

கடுத்துவருகுவதேன் கோபம்
அதைக்—கலக்கவிடாதது யார்சாபம்
கொடுத்த நூல்களை சுத்தப்பொய்யெனத்தாங்கள் இய

4

அழகில்மிகுந்த ஒரு அன்னியமாதைக் கண்டால்
க்ஷணமது மீறி நெருங்கக்கோரி நினைவிற்றூறி
அலையவிடும் அதிகாரன் யார்தேறி
வழவழவென யினிவாயதை யிளிக்காதே
வல்லவனென்னும் தீரன் அங்கஜமாரன் பொங்கிடும் வீரன்
வையகத்திலிச்சைக் குடையசூரன்
பழகிட யின்னும் நீங்கள் இயற்றமிழாசிரிய
பலவானடியைத்தேடும் சிரத்தைகூடும் பணிந்துநாடும்
பகுத்தறிவு விளங்கிடவந்துகூடும்
உழவிட்டுத்தமிழ்ப்பயிர் உலகமெங்கும் விளைக்கும்
உத்தமனுன சீலன் இன்னிசைலோலன் இராஜகோபாலன்
உறுதியுரையதில் மிக்கதுரைவேலன்

உத்தார்

கழருமொழியை உட்கொள்ளும் வித்வ
கவியிருணமையினை விள்ளும்
அழலெனச்சாஸ்திரம் சுத்தப்பொய்யெனத்தாங்கள் இ

வேறு மெட்டு

எழுவகையின் தோற்றம்கேட்டுவா
ஈரிரண்டு யோனி இனியமேனி இருக்கப் பார்த்துவா
கத்தாதே எழு

ஊர்வன விலங்குமாம் உத்தமரே பறவைதிறம்
நீர்வாழ் சுராரும் உறம் நீயும் நானும் மனிதவரம் எழு

வித்தண்டர் யோனியிடம் வியர்வையதுவும் திடம்
புக்தியதில் நீயும் மடம் புகலவந்த கேள்வியடம் எழு

எண்பத்து நான்குலக்ஷம் எடுத்துரையும் ஜீவஉச்சம்
கண்பட்ட நூலிற்கொச்சம் கலக்கமேனோ மனத்திலச்சம்

சுயற்றமிழ் பதிலைக்காட்டு சுருதிவழியதனை நாட்டு
இயற்றமிழ் இனியபாட்டு இராஜகோபால் அளித்தசீட்டு எ

பு. இராஜகோபாலன் பாடியது முற்றிற்று.

**எரிந்தகக்ஷி லாவணி முற்றிற்று**


# 33—படங்கள் அடங்கிய

# ஸ்திரீ புருஷ

# ரேகைசாஸ்திரம்

ஒவ்வொருவரும் தாங்களே சுலபமாக பார்த்து பிறர் உதவியின்றி விபரங்களை தெரிந்துக்கொள்ளக் கூடிய நூல்.

விலை ரூபா **2 00** தபால் சிலவு 1-25

---

கிடைக்குமிடம்

**T. R. பாலகிருஷ்ண முதலியார்**

நெ–2, எழுத்துக்காரன் தெரு

காலடிப்பேட்டை, சென்னை-19.

வி. எஸ். பாப்புதாஸ் பாடிய

எரியாதகக்ஷி

# சிங்காரக் கேள்வி



ஏகரக்ஷகன் துணை

எரியாதகக்ஷி

# சிங்காரக்கேள்வி

# லாவணி

தமிழ் நாடெங்கும் புகழ்பெற்ற காமதகன கண்டக்கக்ஷி
கவி கேசரியும் தமிழ் நாடகாசிரிய சிரோன்மணியுமாகிய
தஞ்சை முத்தமிழ் வித்வான்

**வி. எஸ். பாப்புதாஸ் அவர்கள்**

இயற்றியது

பதிப்பாளர்

**T. R. பாலகிருஷ்ண முதலியார்**

அவர்களது

கலைமகள் அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்றது

காபிரைட்] 1968 [ந. பை. 80

கலைமகள் அச்சகம்
காலடிப்பேட்டை - சென்னை-19.



தஞ்சை. முத்தமிழ் வித்வான்

V.S. பாப்புதாஸ் அவர்கள்

தஞ்சை முத்தமிழ் வித்வான்

வி. எஸ். பாப்புதாஸ் அவர்கள் பாடியது

எரியாத கக்ஷி

# சிங்காரக் கேள்வி லாவணி

காப்பு வெண்பா

சருவமத சம்மதனே சத்துசித் தானந்த
உருவமிலா தேஜோ மயனே—திருமறையில்
ஆனந்த நிர்த்தமிடு மாதிமூலப் பொருளே
நானுந்தன் காவலுற நாடு.

பல்லவி

சின்மயானந்தவடிவே சுத்தசைதன்ய
சின்மயானந்தவடிவே

அநுபல்லவி

மன் மதமென்றுசர்வ சம்மதமாய் விளங்கும்
நன் மாமறைக்குமுடிவே சுத்தசைதன்ய சி

சரணங்கள்

1 எள்ளுக்குள் எண்ணெயது போல் நிறந்தரமாய்
எங்கும் நிறைந்து புவி மேல்
உள்ளுக்கும் வெளிக்கும் நின்றுலவும் பரம்பொருளே
தெள்ளு மெய் ஞானமருள்வாய்சுத்தசைதன்ய சி

2 உன்னிலை யறி யாது சிலகுருடர்
உரைக்குறூர் பெரும் வாது
மண்ணில்நீருபியொன்றும் மலர்க்கணைகளுன்டென்றும்
அன்னிதமாகப் பேசுரார் சுத்தசைதன்ய சி

3 நெற்றிவிழியா லுணேயே சிவனெரித்தா
னென்றிடும் பேயர் தணேயே
முற்றிலு மவரெண்ணம் முடிவுபெறுத வண்ணம்
வெற்றியெனக்குத் தருவாய் சுத்தசைதன்ய சி

4 விஞ்சை முத்தமிழ் நேசன் எரியாகக்ஷி
வித்தக கவி ராஜன்
தஞ்சை மேட்டில்வாழ்பாப்பு தாசன் தமிழ்கிரங்கி
செஞ்சொல் நிலேக்கசெய்குவாய் சுத்தசைதன்ய

## விருத்தம்

மூந்தி மூந்தி கணபதியைத் துதித்த தென்று
மூலமதில் பிரணவமா யுதித்த தென்று
தந்தியென்ற யானை முகம் படைத்ததென்று
தன்கரத்தில் ஒற்றைக்கொம் பிருப்பதென்று
தொந்திவயர் ஐந்துகர மானதென்று
துட்டப்பெருச் சாளியின்மீ தமர்ந்ததென்று
சந்திக்குச் சந்தியிவர் அமர்ந்ததென்று
சாஸ்திரத்தின் வழியெடுத்து சாற்றுவீரே

## பாட்டு

கலைமகள் நிறைந்த சபைமீது புலவரே நீங்கள்
கணபதி யெனமுதல் வணங்கக் காரணமேது கலை

1 சிலைமதன் சரிதையைப்பாட
சிவனை யேன் மறந்தீர் கொண்டாட
நிலை பெறபிவ ருதவியைத் தேட
நியாய மேது சொல்வகை யோடே — கலை

2 தந்திமுகமானவா றேது
சாஸ்திரவழி யெடுத்ததை யோது
தொந்திவயர் பெருத்ததின் சூது
சுகமாய் சொல்லு மிச்சபைமீது — கலை

3 அங்குச பாசமவர்க்கேனே
ஆகுவாகனமமர்வானே
செங்கையொரு நான் கிருப்பானே
தெருமுச்சந்தியில் தரிப்பானே — கலை

4 மஞ்சள் சாணி மண்ணுருவாக
வைத்து வணங்குவதேன் ஓகோ
நஞ்சணிந் கோனுக்கு மகனாக
நவிலும் காரணம் சொல்லூக — கலை

5 அப்பமோடவல் பொரிபடைப்பது மேன்
அடிக்கடி தேங்கா யுடைப்பது மேன்
தப்பாமல் கன்னத்தில் புடைப்பது மேன்
தலையில் குட்டி நடிப்பதுமேன் — கலை

6 அக்ஷரமவர்க்கெத்தனையுண்டு
அபிமந்திரமென்ன சொல்விண்டு
பக்ஷமனை வியரெத்தனைபண்டு
பாரில்மண முடித்த யுகங்கண்டு — கலை

7 ஈசன் முதலா இவர் முதலா
எத்தனை யவதாரங் சொல்பதிலா
தாசன் பாப்புமுன் பணிவுதலாய்
சாற்றும் கவியால் ஸ்பெஷலாய் கலை

## சரஸ்வதியை துதித்ததற்கு வினு

### விருத்தம்

காமன் கதை பாடவங் தாரம்பத்தில்
கணபதியை முதன் முதலிற் துதித்துவிட்டு
நாமகளென்ெருரு பெண்ணைத் துதித்ததென்ன
நாவிலவள் குடியிருப்பா ளென்றதென்ன
மாமறையோன் தனக்கவள்தான் மகளாபெண்டா
மருமகளா மாசபையில் வழுத்தவேணும்
பாமரர்க்கும் பண்டிதற்கும் விளங்குமாறு
பகிரங்கமா யதனைப் பகருவீரே

### லாவணி மெட்டு

### பல்லவி

கல்விக்கரசித் தமிழ் செல்வியென் ெருருத்தியை
கைதொழுதீரே யவள் யாரு யாரு
காமன் கதைக் கிவளை நீ முதலிற் பணிந்த
காரணத்தை யெடுத்துக் கூறு கூறு

### கண்ணிகள்

தொல்புவிப்படைத்தமுதல் பிதாபிர்மனுச்சே
தொகுத்த திவளையவன் தானே தானே
சொல்லுங்காண் புதல்வியா அல்லது மனைவியா
சுத்தமறிந்து பதில் கோனே கோனே
2

நல்விதமாயவட்கு போதித்து வைத்த
நாதனூரவர்கென்ன நாமம் நாமம்
நங்கைப்பர்வ மடைந்து மங்களமும் நடந்த
நாள்யுகமறிந்து சொல் நேமம் நேமம்
கல்போல் குந்தி சபையில் காலம்போக்காமலே
கருத்தைக் கண்டுரை சபை நேரு நேரு கா

மறையவன் நாவிலவள் உறைவது நிஜமானால்
மங்கை எப்படி நாவில் நின்றாள் நின்றாள்-பின்பு
மாதவிடாயும் நின்று சாதகமாக அவள்
மக்க ளெத்தனைபேரை யீன்றாள் யீன்றாள்
அறையுங்காணிவள்பெற்ற அருங்குழந்தைகள் பேரை
ஆதாரத்தோடு யிங்கே நன்றாய் நன்றாய்
அதிலேயாண் பெண்ணெத்தனை அசுரர் தேவரெத்தனை
அளிப்பாய் சீக்கிரம் பதில் ஒன்றாய் ஒன்றாய்
கறைகடந்தோரே யிவள் கைகள் நான்கில் தரித்த
கருவிகளென்ன கண்டு தேரு தேரு கா

சத்திய லோகமென்ப தெத்திசை தனிலுண்டு
சாற்றுமது யெத்தனை காதம் காதம்
தாமரையாசனத்தில் நேமமாயிருப்பது
சரஸ்வதியா பிர்மனோ ஓதும ஓதும
பற்றிசுமக்கு மன்னப் பறவை வசிப்பதெங்கே
பகருமதற்குஆயுள் பேதம் பேதம்
பதினென் பாஷையிலிவள் யெதனில் தேர்ச்சியுள்ளவள்
பார்த்துசொல் யெந்தபாஷை வேதம் வேதம்
கத்திக்கத்திப் பலரை யெத்திக்காசு பறிக்கும்
கவிஞர் வந்திரெத்தனை பேரு பேரு கா

கோகிலங்கள் காம்போதி ராகமிசைத்து சுதி
கூட்டியே முழக்கம் பொழி வண்டு வண்டு
கொண்டலாத்தி புல்புல்கள் அண்டையில் நின்றுதாளம்
கூடியேபோடுங் கிண் கிண் என்று என்று
நாகிளங் கிள்ளை மைனு வாகுடனே மிர்தங்கம்
நவிலுந் தகிகிணத்தோம் கொண்டு கொண்டு
நஞ்சை வளங்கள் சூழும் தஞ்சை நகரில் வாழும்
நாவலன் பாப்பு தாசன் கண்டு கண்டு
காகம்போல் கத்துமுங்கள் யூகமறியக்கேட்ட
கவிகளுக் கான்சர் கொல் உஜாரு ஜாரு கா

## காமன் பண்டிகை. வினு

காமன் பண்டிகை யென்று வருடந்தோறுங்
கூா ணு மாசிப்பிறை கண்டவுடனே நீங்கள்
ஆமணக்கு பேய்க்கரும்பு தட்டைக் கொண்டு
அருமையுடன் நட்டுவைக்கோற் பிரியைசுற்றி
பாமரர்கள் ராட்டி யொன்றை தொங்கவிட்டு
பங்குனிமாதப் பருவமட்டு மங்கே
நேமமதாய் கடலைமொச்சை தேங்காயிட்டு
நெறியாகக்கொளுத்தச்சொன்ன புராணங்
[காட்டே

## பூமி மெச்சிடும் என்ற மெட்டு

### கண்ணிகள்

காமன் பண்டிகை யென்ற காமமேது பூர்வ
காலமாய் சொல்லுஞ் சீலமாய் நூலின் மூலமாய் இந்த

காசினிதனிலெந்த ே தேசத்தில் நடந்தது
காட்டுங்காண் கொடி நாட்டுங்காண்
பூமியிற் பொங்கல் தீபாவளிப் பண்டிகை

போலவே இதுவுங்கோலவே உண்டாசாலவே அது
புராணப்படி செய்ய காண நடக்குதெப்
போதுமே இல்லை சூதுமே கா

ஓவிப்பண்டிகையென் றன்னுளில் வடதேசத்தா
ருகந்துமே செய்தார் புகழ்ந்துமேமிகமகிழ்ந்துமேஅதை
யொத்துக்கஞ்சனூர்ப் பஞ்சாங்கத்திலு மிருக்கப்பார்த்
துள்ளமே உண்மை சொல்வோமே இதைப்

போலிப்புலவர் சிலர் காலித்தனமா யிதைப்
புரட்டினர்பொய்யை திரட்டினர் புவியைமிரட்டினர்
போற்றிதஞ்சை கோவிந்த வாத்திக் கவியாலிதை
புகட்டினன் கக்ஷிப் பகட்டினன்

கல்கித் துராவென்று துலுக்கர் மராட்டியர்
கண்டுமே கக்ஷிரெண்டுமே செய்தார் கொண்டுமே அதை
கண்டிருந்தவர் காமன் பண்டிகை யெனச்செய்தார்
கபடமாய் அகட விகடமாய்

பலிக்காதினிமேல் ஜம்பம் அலுக்குக்குலுக்காய்கவி
பாடாதே மூட்டைபோடாதே பாவந்தேடாதே இந்த
பண்டிகைப் பூர்வமென் றெண்டிசையோர் சிறக்கப்
பண்ணுதே பழி நண்ணுதே

கொஞ்சகால மாயிது தஞ்சையி லேற்பட்ட
கோலமே இதன் மூலமே சண்டை ஓலமே மது

குடியர்கள் தலைப்பட்டு படியிற் பாவியர்கள்
கோஷ்டியே தலை நீட்டியே

பஞ்சைப் புலவர் செய்த விஞ்சைப் பண்டிகையிது
பாருமே விட்டுத்தூருமே கரைசேருமே தஞ்சை
பாப்பு தாசன் கேள்விக்கு தாத்பர்யம் சொல்லிப்பின்
பாடுமே வழி தேடுமே

## சபை வணக்க விருத்தம்

நாகமது படமெடுத் தாடக்கண்டு
நாக்குப்பூச் சியுமெழுந்து நடித்தல்போலும்
காகமது குயிலோசை தன்னைக்கேட்டு
கருதியது தானும்நின் றுகத்தல்போலும்
தோகைமயி லாடிடவான் கோழிக்கண்டு
துடிதுடித்து தானும்நின் றாடல்போலும்
லோகமதில் கவிவாணர் முன்னம்யானும்
நுவலுங்கவி பிழைபொறுப்பர் நூல்வல்லோரே.

## இந்தகோபம் செய்தால் என்ற மெட்டு

### பாட்டு

தரணிதனிலே வேத சாஸ்த்ரமுணர்ந்த பெரியோரே
சாற்றும் தமிழ் குற்றம் பொறுப்பீரே

1 அரன் விழியாலே மதனனலாகவில்லை யெனக்
ஆகமங்கள் பொய்யென்று [கண்டு

பொருணலமாய் பதினென் சித்தர்கள் சித்துநூலைக்
புருப்காட்டியே யின்று [கொண்டு
வருடமட்டாக பாட வந்திட்டேன் யானும்
வருங்கவிகளின் பிழை பொருத்திடவேணும்
சிறுவன் வாக்கி லனேகம் சொற்குற்றந் தோணும்
செந்தமி ழுணர்தோர்க்கு வந்தனம் காணும தர

2 பாடும்பாடல்களிலேபதங்கள் ரெட்டித்துவந்தாலும்
பகரும்சொற் புரண்டாலும்
தேடும் எதுகைமோனை சீர்தழை பிசகிபோனாலும்
சிறந்தோர்களே கேளும்
ஆடல்புரியும் அன்னப் பறவை மூன்றலே
அருந்தவைத்தப் பால் நீரை பிரிப்பதுபோலே
நீடுங்கவி குற்றத்தை நீக்கி யிக்காலே
நிலைக்கு மதன் பொருளைத்தருவீர் என்மேலே தர

3 தாளச் சுரங்குறைந்து தவறிப்போனாலும் பொறுப்பீரே
சபைதனி லுள்ளோரே
வேளெரியவேயில்லைவெந்ததுசிவனென்று நேரே
விரித்துரைக்கும் நூல்பாரே
வாலப்பருவமதில் வாசித்துக்கொண்டு
மயிலாடக் கண்டாடும் வான்கோழிபோல் நின்று
பாலன் கைதனில் டேப்பு தந்தனுகொண்டு
பகரும்தமிழ்ப்பாமாலைபால்போலொப்புவீரின்றுதர

4 ஏறுமாறுகக்கவி இசைக்கவந்தவர் பயந்தோட
எங்கும ஜெயக்கொடி போட
சீராருமநாகையில்வாழ் கோவிந்தசாமிதமிழ்பாட
ஜெகத்தோர்கள் கொண்டாட

பாரோர்புகழும் தஞ்சை பதிதனில் வாசன்
பஞ்சபாணன் எரியாகக்ஷி விலாசன்
பேரும் பிரபல்யமும் பெற்ற விஸ்வாசன்
பேசினேன் வி. எஸ். பாப்புதாசஉல்லாசன் தர

## சபை முன்னெச்சரிக்கை

### விருத்தம்

மதனெரிந்தா னெரியவில்லை யென்றஞாய
மட்டிலும்நா மிச்சபையில் பேசவேண்டும்
மிதமிஞ்சி வீண்பாட்டு விருதாப்பாட்டு
விடிகதைபாட்டிதுகளை விட்டொழிக்கவேண்டும்
இதமுடனே கேட்டதற்குத் தக்கவான்சர்
இன்னதென்றுநூல்வழிகண்டிசைக்கவேண்டும்
பதவுரைசீர் தவராமற் பாடவேண்டும்
பகருமிக் கண்டிஷன் வேண்டும் பாவலோர்க்கே

### லாவணி மெட்டு

### பல்லவி

துங்கமதுரைத் தமிழ் சங்கத்தலைவர்கள்போல்
தோன்றிடுஞ் சபையோரே தொழுதேனுங்கள்
துணையடிகளின் சீரே து
தங்கள் குழந்தையைப்போ லிங்கென்னையாதரித்து
தன்னருள் புரிவீரே என்னாலுண்டாகும்
தப்பிதம் பொறுப்பீரே
சங்கரன் நெற்றிகண்ணால் அங்கஜன்வெந்தானென்று
சாற்றவந்திடும் பேரைக் குறித்தொரு
தாக்கிதை சொல்வேன் நேரே

உத்தார்

அங்கமாயவரவர் குந்தி வந்து குந்தி-தங்கள்
ஆசாரக்கடவுளை முந்தி அதை முந்தி
மங்களமாய்த் துதித்து மற்றோரைத் துதிப்பது
மார்க்கமென் றறிவீரே தொழு
எரிந்த கக்ஷிக்கு சிவன் எரியாக்கக்ஷிக்கு மதன்
என்றுமேற்பட்டபோது பலதெய்வத்தை
இவர்க்கும்பிடலாகாது
நிரந்தர வஸ்துசிவ னிருக்கக் கணபதியை
நினைத்துத் தொழுததேது அதனால்வந்து
நேரிடும் வீண்வாது

உத்தார்

தெரிந்திருந்துமிவர்கள் வீம்பாய் வெகுவீம்பாய் கொண்டு
சேவிப்பார் பிள்ளையாரைத் தீம்பாய் அவர் தீம்பாய்
பொருந்தா விவகாரமொன்றிருக்கப்பொருந்தாக்கதை
புழுகினான் போக்குவாரே தொழு

பாட்டு

விருத்தமுடன் பாட்டொன்று கருத்துடன் பாடிவிட்டு
திருத்திடுஞ் சட்டமிருக்க இவர்கள் சும்மா
நீட்டுவார் கதை பெருக்க
ஒருத்தரைப் பாடவிட்டு ஒருத்தர் வாய் மூடவிட்டு
உளறுவார் இவர் குறுக்க அவர்க்கிப்படி
உண்டான மனக்கிறுக்கோ

உத்தார்

பெருத்த சபைக்கீசழகாமா அழ காமா கேள்கள்
பேசாமவுனம் சாதிக்கபோமா அய்யா போமா
அருத்தமில்லாத கவி ஆயிரம் படித்தாலும்
அதுவிழலுக்கு நீரே தொழு
பல்லவியொன்றெடுத்து சில்லரைப்பாடல் சேர்த்து
படிப்பது சிலர் வழக்கம் இப்படி குரு
பண்ணிவைத்தாரோ பழக்கம்
நல்லதுநீ தின்னதென் றுள்ளபடியறியா
நாடுமாறிகள் முழக்கம்-தஞ்சையிலெங்கும்
நடக்குதகேகர் விளக்கம்

உத்தார்

வல்லமை சாதிப்போரை காணேனையா காணேன்; என்முன்
வழிப்பேசும் சமர்த்தரைத் தோணேனையா தோணேன்
சொல்லறி வில்லாரோடு நல்லறிவுள்ளோர் பாடி
சுகமுண்டோ பெரியோரே தொழு

பாட்டு

கக்ஷித் தரப்புகளில் லக்ஷணங்கெட்ட சிலர்
கத்துவார் வந்து குந்தி மதுகுடித்து
கம்மென்ற மணஞ் சிந்தி
விச்சித்ர கவிஞர்போல தக்ஷணம்கோட்டைவைத்து
விரித்துப் பாடுவார் கெந்தி மற்றவர்கூடி
வெளிச்சத்தில் பார்த்து முந்தி

உத்தார்

அட்சரத்திருத்த மில்லாரும் இல்லாரும்-மெத்த
ஆபாசமாகப் படிப்போரும் படிப்போரும்

எச்சரிக்கையாய் நோட்டீஸ் அச்சாபீஸில் பதித்து
எங்கிலுந் திரிவாரே தொழு
காடைக் கவுதாரி மைனு மாடமணிப்புருக்கள்
கலந்திசை ராகம் பாட புல் புல் குருவி
கண்டுகைத் தாளம் போட
ஓடைகள் தோறு மன்னப் பேடைகள் நின்றுலாவி
உன்னித மயிலாடும் காவேரி வளம்
ஓங்குந் தலவிசேடம்

உத்தார்

கோடையிடி நிகர்க்கவி ராஜன் கவி ராஜன் தஞ்சை
குலவு முத்தமிழ் பாப்பு தாசன் பாப்பு தாசன்
ஜாடையாய் சொன்னக்கவி சிலேடையைக் கண்டுணர்ந்து
சந்தோஷ மடைவீரே தொழு

முத்தமிழ் உற்பத்தி வினு

விருத்தம்

பாவணியில் தேர்ச்சிப்பெற்றப் பாவலோரே
பலர்சபையி லெனைஜெயிக்க வந்தீர் நீரே
நாவணியென் றுலகில்மதன் கதைக்கேற்பட்ட
நாமமதின் பதம் பிரித்து நவிலவேணும்
பூவினில்லாவென்பதென்ன அணிதானென்னு
புகலுமது பகுபதமா பகாபதமாமன்னு
மேவியிது தமிழ்மொழியா வடமொழியா கண்டு
விபரமதாய் எனக்கெடுத்து விளம்புவீரே

## ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே என்ற மெட்டு

பல்லவி

முத்தமிழ் கற்றுணர் வித்வான்களே கேள்விக்
குத்தாரங் கண்டு சொல்லுந் தாங்களே — மு

அநுபல்லவி

மூன்றுவகை தமிழென்பது தோன்றச்சொல்லு
[மதுகளெது

சரணங்கள்

சித்தஜன் கதைக்கு — லாவணி யென்று
செப்பிடும் நாமம் — அமைத்ததாரன்று
சுத்தமா யக்ஷர — லக்ஷணங்கண்டு
சுருதிப்படி — உறுதிக்கொள்
இறுதிக்கொடு — சுருதிசொல்லும் — மு

லாவென்ப தென்ன — அணியென்ப தென்ன
லகரவெழுத்து — முதல்வந்த தென்ன
மேவி உயிர்க்கலந் — தாலர்த்த மென்ன
மேலுற்றிடும் — நாலைக்கொடு
கேலிச்செயல் — தோல்விக்கிடம — மு

ஹரிவோமென்றுனக் — காசான் சொன்ன மந்தரம்
அந்தரங்க வெழுத் — தென்ன சொல் தந்தரம்
குறியதற்குள்ள — தேவதையின் னந்தரம்
கூறகர — உகர மொடு
நேர்மகர — மதை வெளியிடு — மு

ஆதிமுதல் தமிழ்க் — கட்சரம்யாது
அகர வகாரத்தின் — அளவறிந்தோது
கோதில்லா உயிர் மெய்யின் — கூட்டுறவேது
ஞரிலெத்தனை — நெடிலெத்தனை
பரிவர்த்தனை — உறை யித்ததி — மு

ஆகமொத்தம் தமிழ்க் — கெத்தனை எழுத்து
அதுகள் பிறப்பிடம் — நமக்குள்ளே வழுத்து

வாகா விலக்கணம் ஐந்தான கருத்து
வலக்கரமா யிலக்கணமும்
இலக்கியமும் துலக்கியே சொல் மு

எழுத்துச் சொல்பொருள் யாப்பணி யென்பதென்ன
இதுகளெவ் வொன்றுக்கும் வ்திமுறை யென்ன
வழுத்துமாண் பெண்ணி நஞ்சமு தென்ன
வரிசையுடன் நிறை சபையில்
சமரசமாய் உரைசெய்திடும் மு

செப்பு மெழுத்தசை சீர்தளை மோனை
செய்யுளடி தொடை யெதுகையுங் காணே
ஒப்பும் யெமகம் பராசம் சொல் கோனே
ஒலித்த வெண்பா விருத்தமுடன்
கலித்துறையும் திருத்தமாய்ச் சொல் மு

வெண்பாவுக் கென்ன விதிகள் வாய்ப்பாடு
விளங்கூவிளந் தேமா புளிமாவுந் தேடு
பண்பாய்க் கனிகாய் நிழல் பூவி னோடு
பாவொரு நான் காவதை நீ
நாவதினு லேவுரை செய் மு

தப்பொடு தந்தனு தாளமுக்கோணம்
தான்கொண்டு வாசிக்க கூறுதாப் புராணம
செப்ப தன் னீள ம்கலம் ப்ரமாணமு
திட்டமாய்த்தோல் கட்டையனைந்
திட்டவகை விட்டு நீ சொல் மு

பஞ்சபாணன் கதைப் பாடும் வல்லோர்க்கு
பழக்கமிது முக்யம் வேண்டுமெல்லோர்க்கு
தஞ்சை பாப்பு தாசன் கேட்ட நல்வாக்கு
தாத்பரியம் யேற்பட சொல
லாப்புலவர் தோற்படைவர் மு

## உலகில் மன்மதன் எத்தனை யென்ற வினு

### விருத்தம்

மால்மகன் மதனென்கு தொருபுராணம்
மலர்வேதன் மகனென்கு தொருபுராணம்
பால்வண்ணன் மகனென்கு தொருபுராணம்
பகர்தர்மன் மகனென்கு தொருபுராணம்
சால்கண்ணன் மகனென்கு தொருபுராணம்
சங்கல்பன் மகனென்கு தொருபுராணம்
வேள்மதனித்தனை பேரை நூல்சொன்னுலே
வெந்தமதன் யெந்மதன் விளம்புவீரே

### பாட்டு

பாண்டியனீன்ற மீனுக்ஷி என்ற மெட்டு

1 இவ்வுலகில் ஈசன் கண்ணுலே எரிந்தவன்
எந்த மதனையா
எவ்வுயிர்க்கும் காரணப்பொருளாய்
இருந்தவன் எந்தமதனையா இவ்

2 மன்மதன்பால் மகனென்றீரே
மால்முதல் பிறந்தவெவ்வாரே
நன்மணம் புரிந்ததார்சீரே லட்சுமிக்கு
நயந்த மதன் யாரே இவ்

3 மாரனும் ரதியும் சிவன்தோளில் வந்ததாய்
வழுத்துதொரு நூலில்
பாரினும் பிர்மனுடகூலில் பயந்ததாய்
பகரு தன்னுளில் இவ்

4 தக்ஷன் மகள் சிரத்தை தனக்கன்று மன்மதன்
ஜனித்ததாய் ஒன்று
மெச்சும் சங்கல்பன் மகனென்று விளம்புதே
வேறோர் நூல்பண்டு இவ்

5 வாசுதேவர்க்குமகனாக மன்மதன்
வந்ததாய் ஓகோ
பேசுதேமான தன்மோக பிள்ளையென
பிரிக்குதன்பாக இவ்

6 பூமனின் பிறப்பையிவ்வாறு புறட்டுதே
புராணம் பலவாறு
நாமெதை நம்புவதுபாரு தக்கனால்
நவிந்தமதன் யாரு இவ்

7 மோகனின் ஜெனன மகற்கோணல் முடிந்து
முற்றிலும் கோணல்
ஆகமக்குப்பைபெரும் ஊழல் அதைநம்பி
அலைவதேன் வீணில் இவ்

8 சத்திக்குஞ்சிவனுக்கும் அண்டாசையோகம்
த்ந்தமதன் ஒன்ரு
நத்தியே பாப்புகாசன் நன்ருய் நவின்றதர்
கான்சர்கீ கொண்டா இவ்

## மன்மதன் வினு

### விருத்தம்

காலமெல்லா மதன் வெந்தான் வெந்தானென்று
கணவனில்லா மங்கைப்போல் கதரலானீர்

சீலமதாய் மதனெந்த யுகம் ஜெனித்தான்
செப்புமவன் தாய் தந்தை பேரும் ஊரும்
நாலுவித யோனியெழு வகைத் தோற்றத்தில்
நாடியவன் ஜெனித்த தெந்த மார்க்கம் சொல்லும்
சாலவுமென் கேள்விக்கு பதிலைச் சொன்னால்
சாண்டோ வென்றுமை யெவருஞ் சாற்றுவாரே

பல்லவி

சாண்டோராமமூர்த்தியைபோல் பாண்டுவாத்தியத்துடனே
சங்கிலியறுத்தவர் நீர் தானோ
சண்டையில் சமுத்ரா சீனோ
சர்க்கசில் பயில் வானோ ஓய்சாண்டோ

சரணங்கள்

மாண்ட மாரன் மனிதனோ வானுலகப் புனிதனோ
வானரனோ ராக்ஷதனோ தானறிந்துரைக்கவேணும்
வாசமெந்த ஊர்பிறந்த தெங்கே
வகுத்துச் சொல்லு மிங்கே
வையாதீர்மன சங்கை ஓய்
தாண்டவம்போடாதேசுத்தசாண்டோ ராமமூர்த்தி
சங்கிலி யறுத்தவர் நீர்தானோ [யைபோல்

தேவரென்பதாரையா திரேகமுண்டோகூறையா
தேசமேதவர்களுட வாசமேது ஆணொடு பெண்
சேர்க்கையுண்டா ஊணுறக்கமுண்டா
செப்பிடும் நாலைக் கொண்டா
ஜெனனமரண முண்டா ஓய்
பாவ புண்யமுண்டாசொல்லும் பட்டம்சுற்றிமெட்ரு
[செங்கும்
பட்டம்பெற்றுவந்தவர் நீ தானோ சா

மாரனுக் கெத்தனைபேர் மலர்கணைகள் தந்ததார்
மையல்தொழில் செய்யயிவர்க் கையோபவர்யார்கொடுத்தார்
மாதுசத்திக் கிவன் முன்னே-பின்னை
மதித்துச் சொல்லு மன்னை அவன்
மார்க்கத் தொழி லென்னை ஓய்
காரணர்க்கும் நான்முகர்க்கும் நக்கன் பார்வதிக்கு மோகம்
கல்கிய திவனை வேறே தானை சா

காமன் கருத்தரிக்குமுன் காதல் தந்ததாரவன்
கடவுள் மூவரு மனித ரென்று சொல்லுங்காலிவர்க்கு
காரணக் கர்த்தா வெவர் சொல்லையா
கருத்துமக் கில்லையா
கதைகளைத் தள்ளையா ஓய்
சாமர்த்தியமாகப்பேசி ஏமாற்றிப்போகவந்த
ஜப்பான் தளக்கர்த்தரும் நீர்தானை சா

மன்மதன் விருத்தாந்த விடைக்கு மறுப்பு

அங்கஜனர் பிறந்ததெங்கே வளர்ந்த தெங்கே
அரசுபுரிந்த நகரமெங்கே வாசமெங்கே
மங்கைபடை வந்த தெங்கே பரித்தேரெங்கே
மலர்பாணம் கருப்புவில் வாய்ந்ததெங்கே
திங்கள் குடை கடல்முரசான தெங்கே
செழுங்குயில்எக்காளம்பாளை ஜெனித்த தெங்கே
பங்கயன் சுதனின் சிம்மாசனமுமெங்கே
பாவை ரதி பிறந்ததெங்கே கூறுவீரே

## லாவணி மெட்டு

### கண்ணிகள்

வடமேருவைச் சுழற்றி இடது கையா லெறிந்த
வஸ்தாது சிங்கக் குட்டியே
மாணிக்கக் கட்டியே
வந்தென்னைக் கிட்டியே அந்தரடித்து
வாங்குறீர் உடான் பல்டியே

உடையில்லாபொம்மைபோலநடைபழகிஎன்முன்னே
ஓட்டாதே வெறும் அவிட்டா
உனது டவுட்டா
ஒடிப்பேன் பவுட்டா எரிந்தகக்ஷி
ஒழியக் கொடுப்பேன் சிமிட்டா

திடமாய் மதன் ஜெனித்த இடமெங்கே யுகமாண்டு
திதி நாள் நக்ஷத்திரம் குறிப்பாய்
தீர்க்காயுள் விரிப்பாய்
செய்தொழில் பிரிப்பாய் கல்விபயின்ற
தேசிகன் பேர் சொல் சிறப்பாய்

### உத்தார்

கடையை என்னிடம் விரிக்காதே ராஜா விரிக்காதே
புராணகதைகொண்டு கயர்திரிக்காதேதிரிக்காதே
மடமை குருசொல் நம்பிக் கடமை கழிக்கவந்த
வஸ்தாது சிங்கக் குட்டியே மா

அங்கஜ ராஜரீகம் ஆரோக்ய புரமென்று
அறைந்தது விண் ணுலகிலா
இம் மண் ணுலகிலா
கீழ் நண் ணுலகிலா அதன் விஸ்தாரம்
அறிந்து சொல்லுங்காண் பதிலா

மங்கையர் படையவர்க் கெங்கிருந் துதித்தது
மதிகுடையிருள் யானையாய்
வந்ததும் யேனையா
மகர மீனையா துவஜமாக
மதித்ததேன்சொல் நீதானையா

செங்கரும்பு வில்லாக ஐங்கணை மலராக
சேர்ந்த தெவ்விதத் தாலே
சீக்கிரம் நூலே
தேடிமுன் ஞலே செப்பா விடிலோ
தீங்குவரும் பின்ஞலே

உத்தார்

பைங்கிளி பரிதென்றல்தேராய் அய்யா தேராய்வரப்
பண்ணிவைத்த தாரதைஜோராய் அதைஜோராய்
மங்களம் பாடியிங்கே எங்களை வெல்லவந்த
வஸ்தாது சிங்கக் குட்டியே பா

பாட்டு

காமப்பதிக்கும் சிவன் நேமம்செய் கயிலைக்கும்
களறு மெத்தனை தூரம்
காட்டும் விஸ் தாரம்
கணக்கா தாரம் கருதிசென்ற
காலத்தைச் சொல்லிந் நேரம்

ஆமாங்காணுங்கள் சிவன் தாமெத்தனை வருடம்
அமர்ந்து புரிந்தார் மவுனம
ஆகாய புவனம்
அனைத்தும் ஜீவனம் எப்படிச்செய்தார்
அறிந்து சொல்லுஜார் கவனம்

வாமபாகத் தமர்ந்த மாமங்கையும சடைமேல்
வைத்த சந்திரன் கங்கை
மான் மழு செங்கை
மற்றது மெங்கே சிவனுடனே
வசித்ததா சொல்லு மங்கே

உத்தார்

பூமன்படை மலைமேல் போச்சா அங்கே போச்சா
சும்மா புலமயினால் பலிக்காதுன் பாச்சாஉந்தன் பாச்
வாய்மதயபேசிவீணாய் தாமதிக்காமல் சொல்லும் [சா
வஸ்தாது சிங்கக் குட்டியே மா

கடல்முர்சானல் மத னுடனது தொடர்ந்துபோய்
கடிந்து பறை முழக்குமா
கால்கொண் டுழக்குமா
கஷ்டம் விளைக்குமா கயிலைவாழும்
கடவுட்கிட ரிழைக்குமா

அடரிருள் யானையானல் குடையான சந்த்ரனைக்கண்
டணுகி நிற்குமா ஓது
ஆகாயி தேது
ஆச்சர்ய சூது அறிவிலுமக்
கார் நிகராவார் சாது

படைமலர் கையில் தாழை மடல்வடி வாளைக்கொண்டு
பரமனை யெதிர்த் தாரா
பார்த் ததிர்த் தாரா
பாய்ந் தடித் தாரா ஜனகாதியர்
பயந்தோடி யொளித்தாரா

உத்தார்

திடமதன் போன தெந்ததிக்கு எந்த திக்கு அது
தெற்காவடக்காசொல்லெனக்குசொல்லெனக்கு
வடவாமுகாக்கினியை கடைவாயி லடக்கிய
வஸ்தாது சிங்கக் குட்டியே மா

சித்தஜன் யேறுந்தேர்தான் எத்தனை உயரங்காண்
செப்பும் அகளம் நீளம்
சித்ரமே ராளம்
செய்து பூ கோளம் வடிவாயது
சிறந்தார் சொல்தாராளம்

விஸ்தாரமா யதற்கு சுற்றளவோ டுருளை
விளங்கச் சொல்தட்டின கணக்கு
விபரம் எனக்கு
விள்ளுங்காண் உனக்கு தெரிந்த நூலை
விரித்து மின்ன மேன் பிணக்கு

நித்தமதை யிழுக்கும் தத்தைகளெத்தனைகாண்
நிறத்தைச் சொல்லுங் கண்டதற்கு
நெறி செல் வதற்கு
நேமித்த தெவர்க்கு சாரத்யம் செய்ய
நிருபன்யார் கூறுமிதற்கு

உத்தார்

உத்தாரமொவ்வொன் றுக்குங்கண்டு நீர்கண்டு அதை
ரூபிக்கவேணும் நூலைக்கொண்டு நூலைக்கொண்டு
மத்தள தாளத்துடன் தத்தி மித்தோ மென்றுநம்
வஸ்தாது சிங்கக் குட்டியே மா

சுஜன சங்கீத சங்க பஜனானந்த முழங்க
சுரத மாதர்கள் நடனம்
சுகிர்த படனம்
சூழுவது தடனும் சோழராஜியம்
ஜொலித்து விளங்குந் திடனும்

கஜரத தாகத புஜபல படையொடு
கலைமகளுறை நகரம்
கனக சிகரம்
காணவும் பகரம் காவேரிவளம்
கதிக்கும் பொன்னாட்டை நிகரும்

உஜித யெரியாக்கக்ஷி விஜய கொடி பறக்கும்
உயர் தஞ்சைபதி வாசன்
உத்தமர் நேசன்
உண்மைவி லாசன் மேட்டுத் தெருவி
லுறை வி எஸ். பாபுதாசன்

உத்தார்

கஜித மதுரகவி வாக்கு கவி வாக்கு கற்
கண்டு போலினித்திடும் ஷோக்கு பல் ஷோக்கு
வகைகவிராஜ ரென் றுதிசையெங்கும் கீர்த்திபெற்ற
வஸ்தாது சிங்கக்குட்டியே மா

**சிவன் வினு விருத்தம்**

காமதேவனை யுங்கள் கயிலைதேவன்
கனல்விழியால் கொண் டெரித்து விட்டதாக

சாமர்த்திய கேஸ் நீங்கள் கொணர்ந்ததற்கு
சரியான மூகாந்திரங்கள் சாற்றவேண்டும்
நேமித்த வாதி பிரதி வாதி தங்கள்
நிலைமையூர் பேர்குல கோத்ரமறியவேண்டும்
ஏமாற்ற மின்றி சிவன் வரலாறெல்லாம்
இச்சபையில் படிப்படியா யியம்புவீரே

பாட்டு

திடும் திடும் திடுமென கடுமுர சடனவை
திடுக்கிட வந்தோரே அந்த
சிவன் விழியாலே மதனனலா யெரிந்தானென்று
திடமுடனுரைத்தீரே

1. வடமேருவில் வசிக்கும் சடைமுடி சிவனுட
வரலாற்றை முன்னாலே இங்கு
வழுத்திட வேணுமவர் அன்னை தந்தையின் பெயர்
வண்மையாய் சபைமேலே
மடமயிலெனு முமையவள் பிறந்தது மெங்கே
மணமுடிந்த தெக்காலே அவர்
மதியொடு கங்கையை சிரமதில் சுமர்ந்ததும்
மறைவழி தன்னாலே
(கவி) இடபாகம் உமையவளுக்களித்த சீரும்
எழில்மறைதேர் நாவலரே எடுத்து கூறும்
இனிமேல் நீரும்கவியைத்தாரும் எழுந்துபோகும்திடும்

2. ஆரவாபரணமொடு காமதில் மழுமானும்
அணிந்திடும் விதமேது அவர்

ஆகமூழுதும் தூளித நிறமாயிருக்கும்
அதிசயம் சொல் சாது
திரமாய் ரிஷபமதில் யேரிய காரணம்
திடமுடனிப்போது இங்கு
செப்பிடவேணுங் கொன்றை வில்வமதுந் தரித்த
செய்கையும் தப்பாது
(கவி) கரமதனில் ஓடும் பிரய்பெடுத்த தென்ன
காசினியில் பேரவர்க் கெத்தனைகாண மன்ன
கருதிமுன்னால் பதிலைசொன்னால் ஜெயிப்பீரென்ன

3. கணபதியொடு அறுமுகவனும் சிவனுக்கு
கருதும் பிள்ளை யென்று மிக
கலையுணர்ந்திடும் தமிழ்ப்புலவரே உலகவர்
களரும் விதத்தை கண்டு
இணையாரும் புவிமிசை சதுமுகன் திருமால்
இருவர்தான் முதலென்று உங்கள்
இதிகாச புராணங்களி லியம்பிடுங்காரணம்
எடுத்துரைப்பீரின்று
(கவி) மணமுலவு கயிலைமலை தன்னிலீசன்
மணமுறக் காரணமேன் காமராஜன்
மறைந்தப்போது விறைந்ததேது வழுத்தும்சாது திடு

4. இவர்க்கு பிறந்த பிள்ளையொருவன்
யானைமுகத்தோடிருக்க காரணமென்னஇன்
ஈராறு கரமும ஓராறுமுகத்துடன் ஒருவன் [னும்
இசைந்த காரணமென்ன
துவாக்கினியிதழ் ரதியிவர்க்கு மகளாய் வந்த
சொந்தம் சொந்தமென்ன இந்த

தோகையையவனுக்கு விவாகம் முடிக்கும்படி
தூண்டிவிட்டகார் மன்றே
கவி தவக்கமின்றி மகன் சொற்ப ஆயுள் கண்டு
தன்மைகளை யேன்கொடுத்தார் சிவனும் பண்டு
தகுதிக்கொண்டுசபையில்விண்டு சாற்றுங்கண்டு திரு

5. ஆயிரத்தெட்டு சிவாலிங்கமாவிடை ரூப
மமைந்த காரணங் காட்டு இன்னும்
அதுகளில் முதலெது கடைசியெது வெனவே
அறிய வெனக்கு காட்டு
காயமெடுத்த சிவன் ஆண் பெண் குறிபோலான
காரணமதை தீட்டு ஒரு
காளை மாடொன்று எந்த வேளையுமவருக்கு
காவலானதை சூட்டு
கவி நாய்வாகனத்திலவர் நயக்கதேனே
நாளும் அவர்ஓடெடுத்து திரிக்கதேனே
நவிலுமையா சபையிலமெய்யாகடத்தைபொய்யா திரு

6. சதுர்மறையுடனுமு சாஸ்திரம் வந்த விதம்
சபையிலறிந்து சொல்லு இந்த
தாரணிதனில் வேதவியாசன் பிறந்தயுகம்
தன்னையெடுத்து புல்லு
பதினென் புராணங்களின் வரவை யறிந்துஇந்த
பலர் சபைதனில் வெல்லுயான்
பகரும் கேழ்விக்கு பதில் பயனுறைபாவிடில்
பரிந்து மனைக்குச் செல்லு
கவி நதிவளஞ்சூழ் நாகைவெளி தன்னில்வாசன்
நாவலன் கோவிந்தசாமி மகிழும் சீஷன்
தஞ்சை நேசன் தமிழ் விலாசன்பாப்புதாசன் திரும்

# எரிந்த இடத்தைப்பற்றிய கேள்வி.

## விருத்தம்

கயிலையிலே சிவனெரித்த காமன் ஒன்று
களருமங்க நாட்டில் வெந்த காமன் ஒன்று
பயிலு மருணையி லெரித்தகாமன் ஒன்று
பகரும் கொறுக்கையி லெரித்தகாமன் ஒன்று
சயிலமெனும் கோளகிரி வெந்தோன் ஒன்று
சாற்றுங் காளத்திதனில் வெந்தோன் ஒன்று
இயல்பாக எரிந்தவிட மின்னதென்று
இச்சபையோரறிய உண்மை யியம்புவீரே

## பல்லவி

எங்கே எங்கே மதனெரிந்த நூல்களை
எடுத்துவா சபைமீது அது
எந்த புராணமது எந்த சாஸ்திரம்
என்றறிய இப்போது

## அநுபல்லவி

கங்கையுஞ் சிரமிருக்க மங்கையும் புரமிருக்க
காமத்தாலேநொந்து முன்னல்யிமத்தாலுழன்றோன்
[கண்ணால் எ

## சரணங்கள்

1. மேருவில்கணை தொடுத்த மாரனையெரித்ததாக
விளம்புதொரு புராணமது மெய்யா இன்னும்
பாருமங்க நாட்டில் மதன்நீறாய்சிவன் கொன்றதாக
பகருதொரு புராணமது மெய்யா

கூறு மருணசலத்தில்கொன்ருனென்றநூல்தான் மெய்யா
குதர்க்கம் செய்யாமல் விடையிதற்கு நீர்சொல்லுமையா
காளத்தியிலீசன்மத வேளைக்கண்ணுலெரித்ததாய்
களருதொரு புராணம் அது நிஜமா அந்த
கோளகிரியில் மதனை காளகண்டன் கொன்றதாக
கூறுதே யொருபுராணம் அதுநிஜமா
மீளவக்கோறுக்கை தன்னில் மாளமதனைக்கொன்றதாய்
விரித்தோர் புராணகவி குறித்துரைக்குதேதிதாய் எ

இந்தவிதமாக மதன் ஐந்தாரிடத்திலெரிந்தால்
எந்த இடமது நிலவரமாகும் உங்கள்
மந்திரத்திலெல்லா மாங்காய் வந்துமேவிழுந்திடாது
வாய்மதம் பேசினுல் பலன் என்னுகும்
சந்தேகமுங்கள் கக்ஷிக்கு சாக்ஷிருசு சரியில்லை
சாமான்யமா யிதற்கொரு தீர்மான முடிவைச்
[சொல்லே எ

அவையில் நான் கேட்டதற்கு ஜவாப்பு சொல்லாவிடி
அன்னைபிதா குருதெய்வமேலாணை இந்த [லுன்
சபையின் மேலாணை யுந்தன் கவியின்மேலாணை வேத
சாஸ்திர புராணங்களின் மேலாணை
நவையாய் நீங்கள்காமண்டி கட்டெரிப்பதின்மேலாணை
நாளும் பாப்பு தாசனிட்டேன் வாழும்மாணையின்
மேலாணை

காம உற்பத்திக்கு வினு

விருத்தம்

காமமது யெரிவதற்கு ரூபமேது
கைகால்மெய் கண்செவிவாய் நாசியேது

ஆமதர்க்கு உற்பத்தி ஸ்தானமேது
    ஐம்பூச மதற்குமுன்னு பின்னூது
நேமமதா யதற்குநிறம் குரியைக்காட்டு
    நிணிலத்தி லதுவசிக்கும் நிலையைக்காட்டு
நாமமதற் கேற்பட்ட நாளைக்காட்டு
    நாவலரே சொல்லிஜெயக் கொடியைநாட்டே

## பாட்டு

ஏழுகடலை கலக்கி முழுகி உடானடித்து
    எழும்பிடும் பயில் வானே
    சபையில் தானே
    உனக்கு நானே-எடுத்துறைக்கும்
    கேள்விக்குறை நீ மானே
புழுகுமுங்களுடைய புராணகுப்பையைவாரி
    போடும் குழியை வெட்டி
    புதையும் கொட்டி
    கரங்கள் தட்டி-நதியில்சென்று
    போடும் முழுக்கை யெட்டி
ஏழுவகை பிறப்புக்கும் யேகமாகிய காமம்
    யீசன் கண்ணிலை லன்று
    எரிந்த தென்று
    பொருந்தா தின்று-அச்சமில்லாமல்
    எடுத்துரைத்தீரே நன்று

### உத்தார்

பொழுது போக்காதீர் புலவீரே புலவீரே-யான்
புகல்வதற் கான்சர் தருவீரே தருவீரே

இழுவழக்கான ஞாயம் பேசவுமக்கதிலே
இடமேதமில்லேகோனே சபையில்தானே ஏழு

காமமென்பது என்ற நேர்மையாய் நமக்குள்ளே
கதித்தெழும்புது நோக்கு
காட்டாதே போக்கு
செல்லாதுன் சாக்கு-களராவிடில்
தப்பை தலையில் தூக்கு

நேமமதாக அந்த காமமிருப்பதென்ன
நிறத்தையறிந்து சொல்லு
செய்யாதே மல்லு
நினைத்து விள்ளு-நிலையாயதன்
அக்ஷரங்களைக் கல்லு

நாமமதற் கெப்படி காமமென் றமைந்தது
நல்லுருவத்தை காட்டு
வீணை பாட்டு
பாடாமல் போட்டு-தெரியாவிடில்
நவிலுன் குருவைக் கேட்டு

உத்தார்

தாமதிக்காமல்சொல்லவேணும் சொல்லவேணும்
தாண்டவம்நட வாதுகாணும் வாதுகாணும்

ஏமாற்றிபோவோமென்ற சாமர்த்தியமெங்களிடம்
இனி நடவாது காணே சபையில்தானே ஏழு

விந்துநாதமிரண்டில் ஆணெது பெண்ணெது
விளம்புமதெங்கே பிறக்கும்

எப்படி இருக்கும்
எவ்விடம் சிறக்கும்-செங்கதிரின்
விபரமென்னமாய் பெருக்கும்

கந்தகமெனும் வாசிக் குதிரைக்கட்டியிருக்கும்
கனமிகும் வாய மெங்கே
சுருதி யிங்கே
கழறும் சங்கை-அதைநடத்தும்
கர்த்தனார் சொல்லு மங்கே

மந்திரகிரிமேரு வெங்கே முழங்கும் சங்கு
மணியொலி காண்ப தெங்கே
மாலய னெங்கே-ருத்திரனெங்கே மகேஸ்வர
னுடன் சதாசிவ னெங்கே

உத்தார்

சந்ததமிட கலையெங்கே கலையெங்கே-அதை
சாந்திரமபின் கலையெங்கே கலையெங்கே
இந்துவுங் கதிரும்நின் றியங்கிடும்-சுழிமுனை
இடமறி கணவானே சபையில்தானே ஏழு

ரகசியமெனும் பிர்ம ரந்தர நிலையது
எந்த இடத்தில் தெரியும்
அதற்கு மறையும்
கதவின் நிறையும்-இயங்குமதின்
அக்ஷரங்களின் முறையும்.

சுகமா யதனைப்பூட்டி திறக்கும் சாவியெது
சொல்லும் அட்சரம் பாரு

தேவதை யாரு
துரியம் கூறு துரியாதித சூக்ஷத்தை கண்டு தேறு
சகலரு மறிபஇக் கேள்விகரு விடைசொல்ல
தங்களுக் கொரு வாரம்
கெடுவு தாரோம்
சொன்னலே தீரம்—சொல்லாவிடிலோ
தக்க தண்டனை நேரும்

## உத்தார்

ஜெகம்புகழ் தஞ்சை நகர்வாசன்-கவி
சிங்கமென்றிடும் பாப்புதாசன் பாப்புதாசன்
இகபரமதிலும் நீ யிதர்க்கு விடையளிகக
யேலாது பயில்வானே (சபையில் தானே) ஏழு

## மதனல்லாது சிவனல் முத்தியில்லை என்பதற்கு விடை

## விருத்தம்

மோக்ஷமது பெறுவதெல்லாம் சிவனலென்றும்
மோகனலெவர்க்குமுத்தி யில்லையென்றும்
தீக்ஷமிக பெற்றவர்போல் ஞாயஞ்சொன்னீர்
திர்க்கமாய்ப்பார் சுருதியுக்தி யனுபோகத்தால்
சூக்ஷமதாய் பார்க்கப்போனல் மிருகண்டேயன்
சுதனலே முத்திபெற்ற கதைதான் சாக்ஷி
மாக்ஷிமைசேர் முனிவர்தேவர் மனிதரெல்லாம்
மைந்தர்களால் முக்திபெற்ற வரிசைக்கேளே

பாட்டு

வஸ்தாதுபோல் முண்டாதட்டிகுஸ்தியந்தர் பஸ்கியுடான்
வாங்கியெங்கே எடுக்குரீர் தண்டா தண்டா
மன்மதன் மாய்கையில்லாமல் நன்மோக்ஷமடைந்தவர்
மானிலத்தில்யெவருண்டுகொண்டா கொண்டா [கள்

விஸ்தாரமாய்க்கேளும் அந்த கங்கைஉமா தேவியாலே
விமலனடைந்தான் பர முத்தி முத்தி
வேதனும்தன் னாவிலொரு மாதினைத் தரித்ததாலே
மேவினான் சிருஷ்டிதொழில் விர்த்தி விர்த்தி
மஸ்துவெரிகொண்டுளரி கத்தாதீர் திருமால்பெண்ணை
மார்பினில் தரித்தடைந்தான் சித்தி சித்தி
மாதுவள்ளி தெய்வானையின் ஆதரவினாலேயந்த
மயில்வேலனுற்றான் ஞான சக்தி சக்தி
வஸ்திரமில்லாத உங்கள் நிருவாணக் கவிகளை
வழுத்தாதீரிங்குதண்டு முண்டா முண்டா மன்

சித்திபுத்தி வல்லமையால் சத்திவிநாயகனுக்கு
ஜெகத்தில் பிரசித்திஉண் டாச்சு ஆச்சு
தேவேந்திரன் இந்திராணியாலே மேவினான் சொர்க்கபதவி
தெரிந்துப்நீ பேசாதே வீண் பேச்சு பேச்சு
அந்திரி முதல் மிர்கண்டரிஷி பிரகஸ்பதிக்கும்
அரிவைமாரில்லாதெங்கே போச்சு போச்சு
ஆகமம்பார்க்காவிட்டாலும்லோகத்தில்நாடகரூபம்
ஆகவே பார்க்கலாம் கண்கள் காக்ஷி காக்ஷி
மத்தியஸ்தம்பேசும்நீரே சத்தியம்பண்ணுமுமக்கு
மனைவியெத்தனை ஒன்று ரெண்டா ரெண்டா மன்

கிருஷ்ணன் கோபிகாஸ்திரிகளை இஷ்டம்பண்ணிசெய்தலீலை
கியாபகமில்லையே உமக் கண்ணே அண்ணே
கீர்த்தியாயவரைநீங்கள்மூர்த்தியென வேகொண்டாடி
கெம்பீரமாய் பூஜிப்பானே முன்னே முன்னே
உஷ்ணங்கொள்ளாதீர் வியாசர் கைம்பெண்கள்தனைபுணர் [ந்து
உண்டாக்கினர் வேதபுராணம் தன்னை தன்னை
ஓகோவொரு பெண்ணைபஞ்ச பாண்டவர்களும் புணர்ந்து
உற்றிடவில்லைபர முத்தி சொன்னேன் சொன்னேன்
வைஷ்ணவகுலதிலக ராமனுஜமோர் பெண்ணுக்காக
வாதனைப்பட்டதும் நினைப்புண்டாஉண்டா மன்

கவுசமெனு முனிவர் தவமதில் சிறந்துமுத்தி
காசினிபிலடைந்ததும் பெண்ணால் பெண்ணால்
கவுசிகனனேககாலம் தவசினிலிருந்தும் அந்த
காமத்தில் சிக்கவில்லையோ அன்னாள் அன்னாள்
புவிதனில் திருவள்ளுவர் இல்லற தர்மத்தினாலே
புனிதமுக்தியடைந்தார் தன்னால் தன்னால்
பூவையரல்லாது முக்தி யாவர்தா னடைந்ததுண்டு
புலம்பாதே தட்டுகெட்டு இன்னாள் இன்னாள்
மவுனசாமிகளே வுங்கள் குருவும் நீங்களும் வந்த
மார்க்கமென்று சொல்விவாரும்துண்டா துண்டாமன்

அறுபத்து மூன்றுநாயன் மார்களு முக்தியடைந்த
ஆகம முணரலையா கண்டு கண்டு
அத்தனைபேரி லெவர்தான் பத்தினிமா ரில்லாமலே
அடைந்தார் முத்தி சொல்நூலைக் கொண்டு கொண்டு
நிருபிப்பேனின்னும் அந்தசுந்தரமூர்த்திக்கு மணம்
நேரிட்டது யெவராலே பண்டு பண்டு

நேரிழைபரவைநாச்சி யாருக்காய் தூதுசென்றது
நீர்துதிக்கும் சிவன்தானே அன்று அன்று
மறுபடியும் புரட்டி புரட்டி என்னிடம் பேச
மானவெட்கம் உனக்கில்லை கண்டாய் கண்டாய்

6. செழிக்கும்நவமணிகள் கொழிக்கும் அலைகடல்சூழ்
திருநாகைநகர்வெளி வாசன் வாசன்
செந்தமிழ்கடலையள்ளி சந்ததமு முண்டுமிழ்ந்த
சிங்கார கோவிந்தசாமி சேஷன் சேஷன்
துளிக்கு மழைமுகில்போல் தொடுக்கும் மதுரகவி
சுந்தர மிகுந்த கவி ராஜன் ராஜன்
தொல்லுகிலுள்ளகவி வல்லவர்கள் யெல்லோர்மெச்சும்
சுயகவி பாடும் பாப்பு தாசன் தாசன்
வழக்கு குருக்கிட்டெதிர் வழக்குரைத்திடவந்த
வம்பர்முன் போடுவேன் வெற்றி ஜெண்டா ஜெண்டா

**மோகமில்லாமல் மூவர் உற்பத்தி யெப்படி என்ற கேள்வி**

**ஆசிரிய விருத்தம்**

ஆதிமுதல் சத்திக்கும் சிவனுக்கும்மோகம்
அளித்திட்ட தெந்தமாரன்
அயனுக்கும் வாணிக்குஞ் சுயமாணகாதல்
அமைத்திட்டதெந்தமாரன்
மாதிருமாலுக்கும் லட்சுமிக்கும் மய்யல்
வகுத்திட்டதெந்தமாரன்
மஞ்சத்தில் கூடியிவர்க்கொஞ்சி விளையாடவே
வைத்திட்டதெந்தமாரன்
மேதினியில் ஆணென்றும் பெண்ணென்று
விதித்திட்டதெந்தமாரன் [யிருவகை

மேன்மையும் தாழ்மையும் பாவமும் புண்யமும்
விளைத்திட்டதெந்தமாரன்
கோதிலாஎண்பத்து நான்குலக்ஷம் ஜீவர்
குறித்திட்டதெந்தமாரன்
கொண்டாடி யண்டர்முதல் மன்றூடும் தெய்வமாய்
கும்பிடும் கடவுளவனே

பாட்டு

செந்தமிழ் உலகினில் என்ற மெட்டு

பைந்தமிழ்க்கடலதில் உந்தியந்தரடித்து
வந்திடும கவிசிங்கமே-இனிமேலுங்கள்
மந்த்ரம் செல்லாது தங்கமே

சுருள்

பரமனும் வரதனும் பிரமனு முதல் முதல்
சிரமுடலெடுத்தது சரமதனலல்லவோ
பாரும் வேதாந்த கருத்தை பரிஷ்காரமாய்
கூறும் மன்மதன் திறத்தை
சத்தியாலேதான் லோக விர்த்தியுண்டானதாக
சாதிக்குதுங்கள் கக்ஷியும் அதனால் சத்தி
ஆதியென்பது நிட்சயம்

சுருள்

சாலவு மகளுக்கு ஸ்தூலமுண்டாகவும்
மேலுமவள் விரகத்தாலன்று நோகவும்
சங்கற்பம் செய்ததாருங்காண் அப்போதுசிவன்
எங்கே உற்பத்தி கூறுங்காண் பை
மோகத்துக்கதிகாரனுகு மதனென்றுச்சே
லோகமவனலல்லவா இதைபார்க்கிலும்
யூகம் வேருண்டோ புலவா

சுருள்

மூந்திகணபதியோ டந்த சிவன்மாலயன்
வந்து குழந்தைகளாய் விந்தைபாலருந்திட
மூர்த்தியாய் நின்றதாருங்காண் அவனையாரும்
பார்த்திட்டதுண்டோ கூறுங்காண் பை

4. பெண்ரூபமுன் னுண்டாகி ஆண்ரூபம்பின் னுண்
டாகி
பிரியமிதற்கார் காரணம் கலந்து பிள்ளை [டாகி
பெருக யார்செய்த பூரணம்

சுருள்

பேசுமிவர்க்குளே பாசமுதித்தது
ஆசைமிகுத்தது யார்செய்த கர்ப்பனை
பிர்மம் மதனு சிவனு உலகோர்ப்பத்தி
கர்மம் உண்டானதெவனால் பை

5. சத்திக்கு முன்னே எந்த வஸ்து தனியாய்நின்று
சங்கரனைப்படைத்தது-தாயைப்புணர
எங்கே மோகம் நடித்தது

சுருள்

சத்துசித்தானவன் சித்தஜனேயலா
நித்தறைமேல் சர்வதத்துவம் யார்க்குண்டு
சந்தேகம் தீரவில்லையா-மதனெரிய
வந்தேக முண்டோ சொல்லையா

6. காமத்தனலை சகிக்காமல் தானே சிவனும்
கங்கை திங்களை சுமந்தான் அக்காமக்கனல்
பொங்கி நெற்றிக்கண் சமைந்தான்

சுருள்

காமத்தால் வெடித்த கண் காமத்தை யெரிக்குமோ
காமமிலாது பெண்ணைவாமத்தில் தரிக்குமோ

கான்ஸல் உன் சக்ஷிவிடுங்காண் பாப்புதாசனுக்கு
கான்ஸர் நூல்வழி கொடுங்கான் 1 பை

## அரூபி மன்மதனை சொரூபியான சிவன் எரிக்கத் தத்துவமுண்டோ வென்ற வினு

### விருத்தம்

சிவனைப்போல் மாரனுக்கு ரூபமில்லை
தேகமொடுமுகம்கைகால் தோற்றமில்லை
புவனமதையாளும் அரசுரிமையில்லை
போர்புரியும் கருவிபூத படையுமில்லை
மவுனமில்லை மலைக்குகையில் வாசமில்லை
மருவலர்கள் பகைமோசநாசமில்லை
தவநிலையில் நடனமிடு மெங்கள்மாரன்
தனையெரிக்க சிவனுக்கு தத்துவமுண்டோ

### பாட்டு

கண்ணுக்குள் மணிபோலும் விண்ணுக்குள் ஒலிபோ
காரணமாயிலங்கும் மதன் அன்று [லும்
கனலா யெரிந்துவிட்டால் கருவேது உருவேது
ககனம் புவனமேதுபார் நன்று
பெண்ணுக்குள் ஆணுமாய் ஆணுக்குள் அலியுமாய்
பெரிதும் சிறிதுமில்லா பெருவெளியே
பேதம்பலவாய் நின்ற வேதத்தனி முதலை
பேரின்பஞான நிலையால் தெளியே

### உத்தார்

மண்ணுக்குள் வித்தாய் நின்ற மணியதுகாண்
தன்னுக்குள் தானாய் நின்ற தனியதுகாண்

கண்ணொளி கதிராகி கதிருக்குள் மதியாகி
காக்ஷியாய் நின்றிலங்கும் மதன் அன்றுகன
2 முன்னாளில் சத்தியென்னும பெண்ணாளை சிருஷ்டி
முக்கண்ணனை மோகிக்க வைத்ததெவன் [த்து
முத்தொழிலுக்கும தானே கர்த்தனாக விருந்து
மூவுலகத்தையும் படைத்ததெவன்
பின்னால் சுடலைதனில் பன்னாள் படுக்கவைத்து
பித்தம் பிடித்து சாக உய்த்ததெவன்
பெண்சாதி பிள்ளைபெற்று சஞ்சாரத்தில் சலித்து
பிச்சையெடுக்கவும் செய்வித்ததெவன்

உத்தார்

இன்றென்றுமென்றும் நீங்களறியலையா
அன்னான் விளையாடலென்று தெரியலையா
கண்ணாலும் கருத்தாலும் எண்ணாலுமடங்காத
கர்த்தனால் நின்றிலங்கும் மதனன்று கன
ஞானம் பதிக்கு மூலஸ்தானக்கடவுளான
நாதனை கற்குச் செய்தார் தவயோகம்
நாடிஜனகாதியர் தேடிசிவனை கேட்ட
நாற்றவப்பொருள் மதன் அறியூகம
கானச்சுடலைதோறும் ஊனப்பிணங்கள் தின்று
களிக்கும் சிவனுக்கேது தெய்வீகம்
காமனுக்கஞ்சி முன்னாள் ஹிமத்திலே ஒளித்த
கள்ளனவனுக்கிதே நிர்வாகம்

உத்தார்

ஈனத்தொழில்படைத்த பீசனையா
யானைத்தோலினைப்போர்த்த நீசனையா

காலை நீ தெறெண்ணி தானலையாமல் சர்வக்
கடவுளாய் நின்றிலங்கும் மதனன்று கன
4. மாயன் தனக்கு மகன் சேயனுகினல் திரு
மாதுக்கு மையல் தந்ததெந்த மதன்
மங்கை வாணிக்குமந்த நங்கைவேணிகளுகந்த
மாப்பிள்ளையுங் கொடுத்ததெந்த மதன்
தாய்முறைசத்தி தன்னை நேயமாய் சிவன்சேர
தத்தளித்திட விட்டதெந்தமதன்
தக்கன் மகள் சத்தியால் மிக்கதேவரசுரர்கள்
தானே செழிக்க விட்டதெந்தமதன்

உத்தார்

ஞாயமா உன்னுதுள்ளே நீ யோசி
தூயவேதாந்த ஞான நூல்வாசி
காயமழியுமுன்னே வாயைப் பேணிக்கொள்ளுன்னை
காலமும் ரக்ஷித்திடும் மதனன்று கன
5. அங்கஜன் செயலின்றி சங்கரன் செயலாலுன்
அன்னை தந்தையருன்னை பெற்றாரா
அய்யா உன் மனைவியை சையோகம் செய்யும்போது
அரஹரவென்றீசன் தந்தாரா
உங்கள் சிவனெத்தனைப் பெண்களைச்சேர்ந்தபோது
உலகில் மன்மதன் செயலற்றாரா
உத்தமி பார்வதியை சித்தஜன் செயலன்றி
உகந்து புணர வித்தை கற்றாரா

உத்தார்

பொங்கிய நங்கைநுதல் நீர் நாமம்
தங்கியது சிவனெற்றியில் நேமம்

கங்கையைச்சடையிலும் மங்கையை இடத்திலும்
கட்டிசுமக்க விட்டமதனன்று கனா

6 செந்தாமறைத்தடமும் சிந்தாமணித்திரளும்
தெருத்தெருவாயிலங்கும் ஜகஜோதி
செஞ்சொல் மொழி மடவாரின் சொல நடனம் பயில்
சிங்காரமணிமாடமர்வீதி
நந்தாமணிவிளக்கும் அந்தணர்கள் முழக்கும்
நாகரீகம் ஜொலிக்கும நகராதி
நஞ்சைவளந்திகழும் தஞ்சைமேட்டில் வசிக்கும்
நாவலனென எங்கும் பிரக்யாதி

உத்தார்

சந்ததமோங்கும் தமிழ்கவி ராஜன்
சுந்தரகுண வி. எஸ். பாப்புதாசன்
கந்தம்கமழும் மதுரக்கவி ஜெயகொடிகொண்டு
காலமும் வெற்றிதருமதனன்று கனா

**தனக்கேற்பட்ட துன்பத்தைதடுக்க வலியற்றசிவன் சர்வவல்லமன்மதனைத் தஹித்தது பொய்யென நிரூபித்தல்**

விருத்தம்

கல்லினடியும் பட்டான் அன்று வேடன்
காலினுதையும் வாங்கி பாண்டுமைந்தன்
வில்லினலடியும் பட்டு பத்மாசூரன்
விரட்டசென்றே வேலியிற்போயொளிந்தான்
[வைகை

எல்லையிற் போய் மண்சுமந்து மடியும் பட்டான்
யிமத்திற்புரண்டும் பிச்சையெடுத்தும் தின்ருன்
தொல்லை முனிசாபத்தால் கலங்கலானன்
சுகமதனை யெரித்ததிவன் சுத்தபொய்யே

பாட்டு

எல்லாமுங்கள் சிவன்செயலல்லாமல்வேறில்லையென்று
எப்படிநீர்சொல்லலாகும் அய்யா அய்யா உங்கள்
ஈசன் மதனைக்கொன்றது வாஸ்தவமானலிதற்கு
என்னவிதாயம் புகல்வீர் மெய்யா மெய்யா
1, நல்லாய்க்கவனிக்கவேண்டும்பொல்லாதமதன்பாணத்தால்
தக்கனுக்கோர் நெற்றிக்கண்ணுண்டாச்சு ஆச்சு
ஞாயப்படியிருக்க நீயேகாம நெருப்பை
நாதன் கண்ணெரிக்க எங்கே போச்சு போச்சு
கல்லாலவிருஷத்தின் கீழ் கடவுள் யாரைக்குறித்து
கடுந்தபம்செய்தார் சொல்லும் பேச்சு பேச்சு
கண்டுஜ்ஞானகாதியர்க்கு பண்டு சிவன் மோனமுற்று
காட்டியதென்ன விடாதே மூச்சு மூச்சு
இல்லாதஞாயத்தைசொன்னல் செல்லாது வெல்லாதுன்கக்ஷி
இன்னமுமநீர்கேட்டுவாருமையா அய்யா [உங்கள்ஈசன்
2, இஷ்டம்போல்வேறுசிவனை சிஷ்டிக்க தக்கனுமெ
ஈசனைதூஷித்து யாகம் செய்ய செய்ய [ண்ணி
இவனை யெரிந்துகொள்ள சிவனுக்கு அப்பொழுது
இல்லையோநெற்றிகண் பாரும் ஐயோ ஐயோ
திஷ்டும்செய்திட்ட அந்தத் துஷ்டனைக்கொல்லஏலா
நின்றுதுடிதுடித்ததும பொய்யோ பொய்யோ [மல்

நீனிலத்தில் எவ்வுயிர்க்கும் தோணு கடவுளிவர்க்கும்
நேரிட்டகஷ்டமிதென்ன நொய்யா நொய்யா
அஷ்டமச்சனிபிடித்து கஷ்டமாய் பிச்சையெடுத்து
ஆடியசிவனுவேறு அய்யா அய்யா அந்த ஈசன்

3.முப்புருதியரைக்கொல்லசப்பரத்தேர்செய்தான்புவி
மூன்றையும் ஒன்ருய் திறட்டி சேர்த்து சேர்த்து
மூண்டகண் சாரதியாக கொண்டல் வண்ணன் வாளி
மூரிவில்வளைத்தான் மலை பேர்த்துபேர்த்து[யாக
செப்புமந்ததேர்நடந்த அப்புறம செல்லாது வைத்த
செயலதுயார் செயல்சொல் ஆர்த்து ஆர்த்து
சிவனுக்குமேலேசிவன் எவனிருந்தாலொருவன்
திட்டமாய்ச்சொல்லுங்காண் கூவிகோர்த்துகோர்த்து
எப்பொருளுமிவனல்லாதில்லை யென்றுசொல்லவந்த
திவனௌங்கள் மதனு அய்யா அய்யாஉங்கள் ஈசன்

4.அத்திரிமகாரிஷியின்பத்தினிமேல்மோகங்கொண்டு
அரன்மாலயனும வேடமாறி மாறி
ஆண்டிகள்போல்சென்று பிச்சைவேண்டிட
அன்னமிடவந்தவளைக் கோரிகோரி[உபசரித்து
சித்திரமாய்பசிநிர்வாணத்துடன்வந்தன்னமிட்டால்
சேர்ந்துநாமம் புசிப்போமென்ருர் மீறி மீறி
சீசீதுஷ்டர்நீங்கள் சிறுகுழந்தையாய் போகவென்று
சினந்துசபித்தாளந்த நாரி நாரி
இத்திரமறிந்தமூவர் பத்தினிமார்வந்து கெஞ்சி
இவர்கள்சாபத்தைதீர்த்தார் அய்யா அய்யாஉங்கள்ஈ

5 தாருகாவனத்து ரிஷிமார்களின் பத்தினிமாரை
தானேகற்பழிக்க எண்ணங் கொண்டு கொண்டு

தந்திரமாய் மாயனையோர் சுந்திரப்பெண் வடிவாக்கி
தத்தவிட்டான் ரிஷிகளை பண்டு பண்டு
மாதவேடங்கொண்டு சிவன் ஆறுபேரை கற்பழிக்க
மைந்தர்கள்பிறந்தார் மூவிரண்டு ரண்டு
மாமுனிவர்கேள்வியுற்று தாமிட்டசாபத்தால் சிவன்
மணியற்று விழுந்ததே துண்டு துண்டு
ஏழுமாருய்பிள்ளைகளை பார்வதியணைத்தகாலே
இணைந்தான் ஆறுமுகவன் அய்யா அய்யா
\ [உங்கள் ௭

பத்மாசூரனுக்குவரம் அத்துமீறிகொடுத்தவன்
பாரினில்துரத்த சிவன் ஓட ஓட
பார்த்திருந்தமாயனவன் ஆத்திரம்திரமோகினி
பாவைரூபம்கொண்டெதிரே நாட நாட
மெத்தமய்யல்கொண்டசூரன் கைத்தலம்சிரசில்பட்டு
வெந்தழியுமார்க்கமவன் தேட தேட
அத்தருணம் சிவனும்தன்பக்கம்நின்றமாயவன்மேல்
விரகம்கொண்டழைத்தானே கூட கூட
இத்தகையால் சிவன்விந்து தத்திவிழுந்ததில்நின்று
யேர்பட்டான் அரிகரனும் அய்யா அய்யா
[உங்கள் ௭

பிருகுமுனியொருநாள் வருவதறியாமல்
பித்தனும் பத்தினியுடன் கொஞ்ச கொஞ்ச
பெருஞ்சினங்கொண்டுநீயும் அருஞ்சங்கைகொண்டே
பிரமாதமாக வசை மிஞ்ச மிஞ்ச [னென்று

அருகிலிருந்தசிவன் கருநெற்றிக்கண் திறந்
ததுபோயவனைப்பணிந் தஞ்ச தஞ்ச
அறிந்து சிவனுமவன் பெருந்தவத்தைமதித்து
ஆச்சர்யப்பட்டுநின்றான் கெஞ்ச கெஞ்ச

இருகத்தழுவகிட்டேவருமவனை நிந்தித்து
யோசிதள்ளிதூஷித்தானே அய்யா அய்யா
[உங்கள் ஈ

இந்திரன் வேண்டுகோளாலே அந்திவண்ணன் தணற்
செரிய அதுகுழந்தையாகி ஆகி [கணை
இருக்கபிரமனெடுத்து உருக்கமாய் சுக்ரனிடம்
யீந்திட அவனதை கொண்டேகி ஏகி
பிந்தியசுராரிடத்தில் தந்திட அவன்வளர்த்து
பெருந்தேவரைசிதைத்தான் துரோகி துரோகி
பின்னுமயன்மாலிந்திரனை சின்னஞ் செய்ததுமல்லாமல்
பித்தனோடும்போர்தொடுத்தான் போகி போகி
இந்தசிவனால்வந்த ஜலந்தரனுக்காற்றாமலே
ஏகிநின்றேவித்து கொன்றானையா அய்யா
[உங்கள் ஈ

மூழுகின்னிமித்தம்உமை அழுக்கில்பிள்ளைபிறத்து
முன்வாசனுக்கவன் காவல் வைக்க வைக்க
முக்கண்ணன்வர இவன் தடுக்க இருவர்க்கும் சண்டை
மூண்டுசிவனையவனும் தைக்க தைக்க
ஒழுக்கமறவேவிசீத்து புழுகதையிடத்தில் தோற்று
ஓடியசிவனை நீங்கள் மெய்க்க மெய்க்க
உத்தமக்கடவுளென்றும சித்தனைகொன்றனென்
ஓதவந்தீர்உண்மைஞானம்பொய்க்கபொய்க்க[றும்
இழுக்கடைந்தோரேஉங்கள்கிழக்கவிகளெப்போதும்
எங்களிடம் நடவாது அய்யா அய்யா உங்கள் ஈ

பிட்டுக்கு மண்ணும்சுமந்து பிரம்படிபட்டுநொந்த
பித்தன்சிவானுசித்த பிர்மம் பிர்மம்
பிர்மத்திற்கு ஆசையேது பாசமேது ரூபமேது
பாவமேது கோபமேது தர்மம் தர்மம்

தட்டுக்கெட்ட புராணங்களின் கட்டுக்கதைகளை நம்பி
தர்க்கம் செய்யவந்த தென்ன வர்மம் வர்மம்
சந்ததம்நாகை கோவிந்தசாமி சீஷன் தஞ்சைபாப்பு
தாசன் வெளியிட்டேனுங்கள் மர்மம் மர்மம்
எட்டுத்திசையிலும் கொடிநட்டு ஜெயம் பெற்றுவந்த
என்னைநீ வெல்லமுடியாதையா அய்யா உங்கள் ஈ

## இத்தனைக்கடவுளரில் யார் முதலென்று

## புராணப் புரட்டை நிரூபித்தல்

### விருத்தம்

சங்கரனை ஆதியென்கு தொருபுராணம்
சத்திதனை ஆதியென்குதொரு புராணம்
ஐங்கரனை ஆதியென்குதொரு புராணம்
ஆறுமுகனை ,ஆதியென்குதொரு புராணம்
பங்கயனை ஆதியென்குதொரு புராணம்
பரந்தாமனை ஆதியென்குதொரு புராணம்
சங்கையிலா புராணத்தை நம்பி நீங்கள்
சர்வவல்ல மதனெறிந்தர்னென் றீர், மாதே

### பாட்டு

### இந்துஸ்தான் மெட்டு

மானிலமதில் உங்கள் புராண புரட்டைக்கேட்டு
வாருமையா பதில் தாருமையா எங்கள்
மதன் முதலா உங்கள் சிவன் முதலாவென்று
வழுத்துமையா பதில் அழுத்துமையா

தோண விநாயக புராணமதில் அந்த
தொந்தி வயற்றோனுதியெனவே முதல்
காணவே அது சொல்லுங்காரணத்தால் ஐங்
கரன் முதலா உமை-கங்காதரன் முதலா மா

நாரத்ய புராணமதில் நாரணனே-ஆதி
நாதனவனால் சிவன் நான் முகனே
பாரதில் ஜெனித்ததாய் கூறுவதிலே லட்சுமி
பதி முதலா உமை-பதிமுதலா மா

மச்ச புராணத்தில் மறையவனால் உங்கள்
மாதுபாகன் வந்ததாய் அறைவதனால்
அச்சமில்லாமல் சொல்லும் நிச்சயமாக மறை
யவன் முதலா-உங்கள் சிவன் முதலா மா

மார்கண்டேயர் புராணம்பார் திறந்து சிவன்
மங்கை காளியின் மகனாய் பிறந்து
ஆர்க்கும் விளங்க வந்ததாய்ச்சொல்வதில் காளி
யவள் முதலா உங்கள் சிவன் முதலா மா

பிர்மபுராணத்தை யெடுத்து நீ பார் சக்தி
பிறந்து மூவரைப் பெற்றாளென்றொருவர்
தர்மநெறிதவறி யுறைப்பதிலே சத்தி
தான் முதலா சடையோன் முதலா மா

லிங்கபுராணம் பிர்மன் மூச்சில் நின்று உங்கள்
நீலகண்டன் வந்ததாய் நிகழ்த்து தின்று
மங்களமாக சபையோர்முன் சொல்லுங்கான் பிர
மன் முதலா பரமன் முதலா

7. பாகவதப் புராணம் பாரு நீமூன் விஷ்ணு
பங்கஜனைப் படைக்க அவனால் சிவன்
வாகுடனே ஜெனித்து வந்தானென்பதில் மணி
வண்ணன் முதலா நெற்றி கண்ணன் முதலா மா

8. பற்பல விதமாக பாரும் புராணம் அந்த
பரமனே ஆதியெனப் பகர்ந்திடக் காணும்
தப்பித மென்றிதனை தள்ளும் பாப்புதாசன் சொல்
மதன் முதலா உங்கள் சிவன் முதலா மா

## சிவன் ஆவிடைலிங்க ரூபமானதைப்பற்றிய வினு

### விருத்தம்

உங்கள் சிவனுக்கு முகம் ஓறைந்தென்றும்
உற்றகர மீறைந்தை யுடையோனென்றும்
திங்கள் கங்கை செஞ்ஜடையில் தரித்தோனென்றும்
தேகமதில்பூணூல் வெண்ணீறணிந்தோனென்றும்
செங்கரத்தில் மான்மழு பிரம்பிருக்குமென்றும்
செப்புமிந்த கோலமெல்லாம் விட்டு விட்டு
லிங்கமுக பரமன்தன்னை தினம் பணிந்து
நீங்கள் தொழும மர்மமென நிதாணிப்பீரே

## தோக்கா தேனேவாலே என்ற மெட்டு

### பல்லவி

உங்கள் சிவனுக்குரூபம் லிங்கமானதென்ன தாபம் உ

அநுபல்லவி

அங்கமும் கைகாலிருக்க ஆனைப்புலித்தோலிருக்க
திங்கள் ஜடைமேலிருக்க தேடி அயன் மாலிருக்க

சரணங்கள்

1. மான்மழுகையிலிருக்க வார்பூநூல் மெய்யிலிருக்க
மந்திரபிரபயிருக்க நந்தி புன் புரமிருக்க
தேன்மொழிதன்னோடிருக்க சேனைப்படை வீடிருக்க
கான்மேல் சுடுகாடிருக்கையில் திருவோடிருக்க உ

2. மாதவயோகமிருக்க மலைகள் பாகமிருக்க
மக்களிரு பேரிருக்க தக்கப்பரி தேரிருக்க
வேதவாக்யஞ்சூழ்ந்திருக்கவிண்ணோர் சிரந்தாழ்ந்திருக்க
பூதபேய்கள் வாழ்ந்திருக்க போகவாரியாழ்ந்திருக்க உ

3. நாரதர் வீணைவாசிக்க நற்பதஞ் சலிபூஜிக்க
நன்மேளதாளம் ஒலிக்க ரம்பையூர்வசி நடிக்க
சாரதாலக்ஷிமிகொண்டாடச்சாமரைகள் கந்தர்வர்போட
சீரானகாளி நின்றாட சித்தர்பக்தர்கள் மன்றாட உ

4. செஞ்சடைபாழினதெங்கேசிறமைந்து போனதெங்கே
சிரித்தமுகந்தானெங்கே திருச்சர்பந்தானெங்கே
வஞ்சியர்சாபம் பட்டதோ மாதரசையால்கெட்டதோ
பஞ்சபாணன் கோள்பட்டதோ பாப்புதாசன்
[சொல் சுட்டதோ உ

## கோமணத்தில் காமனிருப்பதாக சிலப்போலிப் புலவர் பிதற்றியதற்கு விடை

கோமணத்தில் காமனுக்கு ஸ்தானமில்லை
குடியிருப்பு உங்கள் சிவன் உடலுக்குள்ளே

வாமனக்கச்சொல்லி விட்டீர். பின்னுனுங்கள்
வண்டவாளம் வருமென் றெண்ணமல் போனீர்
சாமபேத தான தண்டம் உபாயம் நான்கில்
சாற்றி விட்டேன் மூன்றதனி லொன்றேபாக்கி
தாயதிக்கா தினிமேலென் தண்டம் வந்தால்
சரமாரி பொழியுந் தமிழ் பாலனந்தானே

மஞ்சு நிகர் குந்தள மின்னே என்றமெட்டு

கண்ணிகள்

1 கோமணத்தில் காமனைதயா
கொஞ்சமும் நீங்கள் நெஞ்சஞ்சிடாமல்
கூறவந்தது தகாதையா-எங்கள்
கோமனுகிய மாமதன் எங்கும்
பாமரன் முதல் பூமன் வரையிலும்
யாவர்க்கும் காதலை கொடுப்பான்
நன்மை அளிப்பான் தீமையொழிப்பான்
எண்ணிலா ஜீவ விர்த்தி யளிப்பான் கோ

2 ஆவிடை லிங்க மென்பதுண்டு
ஆயிரத்தெட்டு அகிலத்துள்ளே
ஆனஸ்தல க்ஷேத்திரமுண்டு- ஆனல்
அந்த லிங்கம் நம் பொந்தியுள்ளே
இருந்து தினமும் சந்தர்ப்பங்களை
ஆக்கும் மழிக்கும் தெய்வந்தானையா
அதனை விட்டு நிதமும் வேத
மோதி ஊரை ஏய்க்காதீரையா கோ

3. சிவஸ்தலத்தில் லிங்கமுண்டுகாண்
சிவ பக்தர்க்கு பவமொழிக்க
சித்தத்தின் ரகஸ்யமிது தான்-நம்
கவனத்தில் ஒரு கடவுள் நின்றிட
குவலயத்தில் பல கோயில் தோன்றிட
கோரியே தெய்வத்தைத் துதிக்க
முன்னோர்கள் செய்த நன்மார்க்கமிது
கேள்வியுற்ற தில்லையோ நீதான் கோ

4. மூர்த்தி சிவன் நாமந்தானையா
முழுதுமிது வியாசன் பிறட்டு
மூலதாரத்தைநீர் காணையா-அதை
முனைந்து தினம் தினம் மனதில் பதித்திடில்
இணையிலா மோக்ஷ லாப மீய்ந்திடும்
இதனை விட்டு வீண் பிடிவாதம்
இங்ஙனம் செய்தால் உங்களின் கக்ஷி
ஓங்காது ஒழுங்காய் பாடய்யா கோ

5. கர்மம் கர்மம கர்மச் சண்டாள
கதியளிக்கும் உலகம் பழிக்கும்
நாக்க்குழியில் தள்ளிடவைக்கும்-மநு
தர்ம நூல்படி தனக்குள் நின்றிடும்
மர்ம சிவனை மகிதலந்தனில்
பலவாய் பேர்களமைத்து
பிதற்றிடாதே அர்த்தமிலாத
வாதம் செய்தவமானப்படாதே கோ

6. மாய்கையான உங்கள் சிவனை
மறந்து விட்டு தெரிந்துகெட்டு
மாற்றிச் சொன்னீ ரெங்கள் மதனை-இந்த
மாசபைதனில் நீர் சொன்னது பொய்

நேசமாய் பாப்பு தாசன் சொன்னேன் மெய்
மாரனெ ரிந்த கதைக்கி தொல்லையா
இதனை சொல்ல சற்றுமுனக்கு
மார்க்கம்வேறு தெரியவில்லையா

### எரிந்தகக்ஷிப் பாடிக் கெட்டழிந்தவர்களைப் பற்றிய விருத்தாந்தம்

### விருத்தம்

எரிந்த கக்ஷித் தனைப்படித் திம்மானிலத்தில்
எத்தனையோபேர் குட்டமொடு பலநோய்கொண்டு
விரிந்தரணம் பிளவை கொண்டும் புளுப்புழுத்தும்
வெகுபேர்கள் மாண்டார்கள் உனக்கேன்கேடு
தெரிந்தமட்டும் உனக்கெடுத்துச்சொல்வேன் கேளு
தெம்மாடி குருக்கள் சொல்லை நீ நம்பாதே
முரிந்துவிழும முருங்கைக்கொமபை பிடித்து
முடிவில்படு குழியில் வீழ்ந்து முழிக்கலாமோ

### லாவணி மெட்டு

### பல்லவி

அங்கஜனைப் பழித்தால் உங்கள் குலமுழுதும்
அத்வான மாகும் வாயை மூடு மூடு
ஆணுவத்தாலேக் கெட்டு வீணாயழிய வேண்டாம்
அகத்தையின்றே விடாழித்துப் போடு போடு

### கண்ணிகள்

1. மங்கள மிகுந் தஞ்சை கோவிந்த வாத்தி முதல்
மாரனெரிந்த கக்ஷிப் பாடி பாடி
மங்கையர்கள் பழிக்க லங்கடா சோதாவாகி
மானங்குலைந் தழிந்தான் லாடி லாடி

பங்காய் மன்னார்குடி பஞ்சநாதனென்பவன்
பலநாளு மெரிந்தவா தாடி ஆடி
பகருங் கிடாரங் கொண்டான் பாதையிலடிபட்டு
பத்தாம் நாள் இறந்தானே கேடி கேடி
அங்கத் திமிரால் பேசு முங்கள் குலமுழுதும்
அத்வான மாகும் வாயை மூடு மூடு ஆ
2 திசைபுகழ்காரைநகர்பசுபதி வாத்தியென்போன்
சித்தஜ னெரிந்த தாய் - பேசி பேசி
தெருத்தெருவாயலைந்துப் பிச்சையெடுத்துத்தின்று
செத்தழிந் தானேயந்த தோஷி தோஷி
விசையுடன் சன்னூர்கோவிந்தவாத்தியென்போன்
வேளெரிந்த கவியை வீசி வீசி
விட்டனன் தன்னுயிரைக் குட்டிவியாதிக்கொண்டு
வேண்டாம விட்டுத் துலைக்க யோசி யோசி
அசையாத மன்மதனை வசைபேசு முங்கள் குலம்
அத்வான மாகும் வாயை மூடு மூடு ஆ
3 படிபுகழ் திருவாரூர் வடிவேலென் பேரொருவன்
பஞ்ச பாணன் தூஷனை யாலே யாலே
பரதேசியாய்க்கிளம்பித் திருவோடெடுத்துக்கஷ்டம்
படுகிறானின்னும் புவி மேலே மேலே
கெடிமிகும் சேக்கறை அப்பாசாமி பத்தனும்
கிளம்பி யெனை எதிர்த்த காலே காலே
கீர்த்தி அழிந்தப்போது பார்த்தவர்கள் சிரிக்க
கிடக்குறான் படுக்கையில் மூலே மூலே
அடிக்கடி செத்தகக்ஷி படிக்குமுன் குலகோத்ரம்
அத்வான மாகும் வாயை மூடு மூடு ஆ

4. செந்தமிழ் கவிபடிப்போன் கந்தசாமிதேசிகன்
ஜென்மமெல்லா மெரிந்த சக்ஷி சக்ஷி
ஜெகமதிலேபாடி மனைவியை சீடனுக்கு
தெத்தம்செய்தானே மன மெச்சி மெச்சி
சந்தேகமின்றியவன் சீடன் பக்கிரி மஸ்தான்
சரீர முழுதும புழு வச்சி வச்சி
சந்திக்கரையில் செத்து நொந்து நரிக்கழுகு
சாப்பிட்டதே யவனை பிச்சி பிச்சி
அந்தமில்லாமதனை வெந்தா னென்றால் உன்குலம்
அந்வான. மாகும் வாயை மூடுமூடு ஆ

5. திருச்சிராபுரம் வாழும் துரைசாமி நாவலனும்
செத்தான் பிளவைப்புரப் பட்டு பட்டு
திடமாயிடத் தெருவில் இடபக்கொடியைத் தந்து
சென்றார்கள் சிலர்த்தட்டுக் கெட்டு கெட்டு
வரிசைதவரியவர் சிஷ்ரனேகர் வந்து
வாங்கினர் யென் கவியால் குட்டு குட்டு
வயற்றுப் பிழைப்புக்காக இயற்றிசிலர்ப்பொய்க்கவி
வழுத்துவார் மான வெட்கம் விட்டு விட்டு
அரசர்கள் மெச்சும் தஞ்சை பிரசித்த பாப்புதாசன்
அறைவதைக் கேட்டு வாயை மூடு மூடு ஆ


சிங்காரக்கேள்வி லாவணி முற்றிற்று

---

கலைமகள் அச்சகம், சென்னை-19.

# மாட்டுக்கும் பசுவுக்கும்

## வாகடம்



உழவு தொழிலுக்கும் சவாரி தொழிலுக்கும் உபயோகப் படும் மாடுகளுக்கும் கன்றுகளை ஈன்று பால்கொடுக்கும் பசுக்களுக்கும் ஏற்படக்கூடிய பல பயங்கரமான வியாதிகளையும் அதின் குணபாவங்களையும் அதற்கு மருந்து தயாரித்து ஊட்டும் மார்க்கமும் தெளிவாக வெளியாகியுள்ளது.

விலை ரூபா **3** தபால் செலவு ரூபா 1-50


கிடைக்குமிடம்:

T. R. பாலகிருஷ்ண முதலியார்

நெ-2, எழுத்துக்காரன் தெரு காலடிப்பேட்டை சென்னை-19

திரிகால

# ஹஸ்தரேகைசாஸ்திரம்




விளக்கமான அனேகவிதப் படங்கள் அடங்கிய இச்செந் தமிழ் வசனநூலறிவினால் ஆயுள் விவாக லாபம், குணம், பக்தி, அதிர்ஷ்டம், சந்தானம், அறிவு, சிற்றின்பம், வியாஜ்ஜியம், சக்தி ஐசுவரியம், கண்டம், ஜயம், வியாதி, அபாயம், வஞ்சகம், பேரின்பம், காரியசித்தி, சௌக்கியம், இல்லற சுகம், மரணம் முதலிய விஷயங் களைச் சுலபமாகத் தெரிந்துக்கொள்ளலாம். அன்றியும் இது விதியின் பலனையும், வாழ்க்கையின் இரகசியங் களையும் வெளிப்படுத்துகிற திறவுகோலாக இருக்கிறது உங்கள் கையிலுள்ள பலன்களைச் சுலபமாய் நீங்களே தெரிந்துக்கொள்ளலாம்.

விலை ரூபா 1 50 தபால் சிலவு 1-25

---

கிடைக்குமிடம்: T. R. பாலகிருஷ்ண முதலியார்
நெ-2, எழுத்துக்காரன் தெரு, காலடிப்பேட்டை
சென்னை-19.

# எரியாக்கட்சி
# தத்துவலாவணி



ஷண்முகானந்த புத்தகசாலை,
காபிரைட்] பார்க்டவுன் சென்னை-3. [விலை ரு. 1.

ஏகரக்ஷகன் துணை

# எரியாக்கக்ஷி
# தத்துவலாவணி



இஃது
தமிழ்நாடெங்கும் பிரசித்திப்பெற்ற
தஞ்சை, முத்தமிழ் வித்வான்
V. S. அப்துல்காதிர் சாஹிபு —
என, இயற்பெயருடைய

**பாப்புதாசர்**

அவர்களியற்றியது

கிடைக்குமிடம்:—
**சண்முகானந்த புத்தகசாலை**
பார்க்டவுன், சென்னை—3.

காபிரைட் 1964 விலை ரு 1-25.

# அறிவிப்பு

கனவான்களே,

இப்புத்தகம் அச்சிலிடும்போது நான் சமீபத்திலில்லாததினுல் மாணிட்டரே, மறதியுடையவராதலால் ஏதேனும் சொற்குற்றம் பொருட்குற்றமிருக்கினும் குற்றம் நீக்கி குணத்தை கிரஹிக்கும்படிக் கற்றறி மாந்தர் களிடம் பணிவாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,

V. S. பாப்புதாசன்

தஞ்சை.

# எரியாக்கட்சி

# தத்துவ லாவணி

வெண்பா

சருவமத சம்மதனே சத்துசித் தானந்த
உருவமிலா தேஜோன் மயனே—திருமறையில்
ஆனந்த நர்த்தமிடு ஆதிமூலப்பொருளே
நானுந்தன் காவலுற நாடு.

விருத்தம்

அடிநடுவு முடிவாகி அமலமாகி
அகிலசராசரங்களையும் அமைத்துஞான
வடிவுடைய பொருளாகி வான்பூவாகி
வளர்மதியும் ரவியாகி மன்னுயிர்க்குள்
குடியாகி குணமாகி குணத்திலுள்ளே
குறியாகக் குறியதனுட் குலவாநின்று
கடிமலரின் மணமதுபோ லெங்குந்தானய்
கலந்துநிற்குங் கடவுளவன் காப்பதாமே.

அவையடக்கம்–விருத்தம்

மதமாவினுக் கெதிரே வராகக்கூட்டம்
மமதையுடன் வந்தெதிர்ந்த வாறுபோலும்
மிதமான கேசரிக்குச் சமமதாக
வேங்கையினம் வந்தெதிர்த்த விதத்தைப்போலும்
இதமான கருடனுக்குச் சரிநானென்று
எழுந்தசிறு ஊர்க்குருவி எழுதல் போலும்
பதமாக தமிழுணர்ந்த பாவலோர்முன்
பாலகன்யான் பகர்கவிதை பான்மைத்தோமே.

நுட்பமெனக் கறிவித்த குரு ஸ்தோத்திரம்

நெடுத்தால நீனிலத்தில் என்குரு கோவிந்தசாமி
நிகழ்த்தும் பாட்டை
படித்தாலும் வாய்மணக்கும் தொட்டாலும்
[கைமணக்கும்

பலகா லேட்டில்
தொடுத்தாலும் வாசனையே பரிமளிக்கும் பாலமுதச்
சுவை கலந்து
குடித்தாலு மெய்ஞ்ஞான ஆனந்தப் பரவசமே
குலவுமாதோ.

கக்ஷிகாரருக்கு எச்சரிக்கை விருத்தம்

உம்மையு முங்கள்சிவன் தம்மையுமுவிலகி
லுள்ள வுயிரும் படைத்த
உத்தமக் கடவுள்மதன் செத்தழிந் தானென்று
ஓலமிடும் புராணப்புளுகை
இம்மையில் பாவலர்கள் உண்மையென நம்பியே
எடுத்திடுங் கக்ஷிக்கு நீர்
ஏர் பெறப் பேசிடும் லாயரென்றே வும்மை
இச்சபையில் வைத்திருக்க
நம்மையு மெரியாதகக்ஷிக்கு லாயராய்
நாடி வைத்திட்டபோது
நானுமை கேட்கவும் நீரான்சர் சொல்லவும்
ஞாயமேற்பட்டதாலே
சம்மதமாயிருந்த சட்டத்தை மீறியே
சரியான பதிற் கொடாமல்
சபையில் கடுகது வீண் விவகாரம் பேசுவது
சான்றோர்கட் கழகல்லவே.

சபைவணக்கம்—விருத்தம்

இலக்கணத்தின் கடல்கடந்து இலக்கியத்தின்
[கரையேறி
இயலிசை நாடகமெனு மூன் றியல்புங்கற்று
எழுத்தசைசீர் தளை யடிதொடை மோனைப்
[பராச
மெமகமதுங் குறையாம லெல்லாந் தேறி
கலக்கமறத் தருட்கவிஞர் கம்பர்முதல் புகழேந்திகள்
கவிககாள மேகமென கனப்பேர் வாய்ந்த
கண்ணமிகுங் கவிவாணர் முன்னெனது புன்மொழி

கானமயில் வான்கோழி கதைபோலாகும்
அலக்கணொடு யின்பமுமே பாரனுபவபா கொளுமறி
அடியனென தவலமொழி யதை மன்னித்து [ஞர்
அரியசிறுமழலை மொழியெனக்கருதிசபையின்மிசை
அனுக்ரகமளித்து ஆசீர்வாதம்
வலக்கரமாயெனக்குதவி வருமெதிரிகளை யடகும்
வரமருள கடமையது வல்லோர்க்காகும்
வளமேவு நகர்தஞ்சை வாழ்பாப்பு தாசன்மிக
வாழ்த்தினேன் பணிந்துசிரந் தாழ்த்தினேனே

1. பல்லவி

சபையோரே சகலகலையுணர்ந்த (சபை)

அனுபல்லவி

அவையிலென்பிழை பொருத்தாளுவது மதுகடன் (ச)

சரணங்கள்

புவிதனில் மன்மத னெறியலையென்று
புராணவேத சாஸ்திர ருஜுகண்டு
கவிலவந்தேனென் குருவருள்கொண்டு
கலமதாக நிலமீதாய்ந்த
கலைவலோரென் சொலைக்கொள்வீர்மா (ச)

பாடும்பாடல்களில் பதங்குறைந்தாலும்
பயனிலை எழுவாய் சிதறி வந்தாலும்
தேடுமெதுகை மோனை சீர்சிதைந்தாலும்
சித்தம் நோக்கி குற்றம் நீக்கி
சிறுவன் வாக்கில் குணஞ்சேர் தாக்குமா (ச)

தாளஞ்சுதிலயங்கள் தவறி யோர்வாறு
தானேவரினுமதை சகிப்பவர்யாறு
பாலின் நீரை யன்னம் பகுத்திடுஞ்சீறு
பரிவுகாட்டி அறிவையூட்டி
பகைமையோட்டி கிருபை நாட்டுமா (ச)

கல்வியென்பதொரு கடலுக்கொப்பாகும்
கரைகடைந்தேனெனல் மூடர்தப்பாகும்
வல்லமை பேசிடும் வகை வெறுப்பாகும்
வனவாங்கோழி தின நின்றாடில்
கனமயூர மினம்தாமோ
நாகமாடநாக்குப் பூச்சியுங்கூட
நாடியாடல்போல் நான் கவிபாட
மோகமாய் வந்தயென் முயற்சிமேலாட
முடிக்கக்கோரும் திட்டத்தைத்தாரும்
இடுக்கண்தீரும் கடைக்கண் பாருமா (ச)
நாகைவெளிவாழ்குரு கோவிந்தசீஷன்
நாடெங்கும் ஜெயக்கொடி நாட்டும் விலாசன்
பாகவதர்கள் மெச்சும் தமிழ்கவிராஜன்
பாப்புதாசன் பணுவல்பாஷன்
கேட்போர்க்கின்பம் கிளர்விசேஷன் (ச)

கலைமகள் விணு—விருத்தம்

காமன்கதை பாடவந் தாரம்பத்தில்
கணபதியை முதல் முதலில் துதித்துவிட்டு
நாமகளென் னொருபெண்ணை துதித்தடுதன்று
நாவிலவள் குடியிருப்பாளென்றதென்று
மாமறையோன்றனககவள்தான்மகளாபெண்டா
மருமகளா மாசபையில் வழுத்தவேணும்
பாமரர்க்கும் பண்டிதர்க்கும் விளங்குமாறு
ப்கிரங்கமாயதனைப் பகருவீரே

கண்ணிகள்

2 கல்விக்கரசி யென்றொரு பெண்ணைநாடி
கனசபையில் துதித்தேன் மன்றாடி
செல்வியிவளால் உலகில் முன்னாடி
ஜெனித்தகா தமிழ்மட்டுஞ் சொல்நாடி
தொல்புவியில் திகழும் பலவிதபாஷை

தொகுந்ததிவளாவேறு சொல்ல தன்க்ராசை
நல்லவிதமாகயிவள் பிறந்தநின் கேர்சை
நாயகன் யாரிவர்க்கு நவிலுங்காண்
கலைகற்பித்த தேசிகனிவட்காரு
கமலாசனத் தமர்ந்து யெவ்வாறு
நிலைபெற்றிவள் வசிப்பது எவ்வூரு
நீள்கரம்நான் கமைந்தோன்சீரு
தலைவனான பிர்ம தேவனுக்கிவளும்
தாரமாப்புதல்வியா தான் கண்டு நவிலும்
மலையாதே இவள் திருமணம் நாள்புகலும்
மகிழ்ந்து இருந்தபெரியோர்கள் பெயரைசொல்(க)
சத்தியலோகமென்ப தெங்குண்டு
சார்ந்து இருப்போர்பெயர் சொல்வீண்டு
உத்தமமாயவர்கள் செய்தொழில்கண்டு
உரைக்கமுடியாதானல்உடனேசெய்தொண்டு(க)
நத்திமே நான்முகனுக்கிவள்பெண்டா
நான்முகனுக்கு மருமகளானதுண்டா
சித்திரைகையில்வீணை யிருப்பதேன் துண்டா
சீருடனதைச்செய்த தாலரயா (க)
வேதன்நாவிலிவள் குடியென்பதாலே
வேதன் தனக்குமுந்தி யாகுவாள்மேலே
ஓதவே மனைவியாய் உளராதே கேளே
உரைக்கலைமகள் தெய்வமாபெனும் நூலோ க)
ஆதிமுதல்கண பதியை நீர்த்துதித்து
அப்புறம் சரஸ்வதிதனை நீரும்மதித்து
ஜோதிக்கடவுள் சிவனென்றீரேகுதித்து
சொல்லுங் கடவுளெனக் கெத்தனை
முத்திதரும் கல்விக்கு முதல்தெய்வமகிமை
மொய்வரே சரஸ்வதி பெற்றதும் புதுமை
முத்தேவர்கள் முத்திக்கு முதல்வராம் பெருமை
மோசமானதோ மொழியுந்தன் திறமை (க)
கத்தி கத்தி வீண்காலம் போக்கதீர்
கையிருப்பதைக்கொண்டு யென்னையேய்க்காதீர்

தத்திக்குத்திதலை கீழேசாய்காதீர்
சபையில்வந்து முதன் முதலில்
கோகிலமுங் கிள்ளை மைனு புல்புல்
கூடிபாடும் ராகங்களென்ன ஜில்ஜில்
வாகுடன் தஞ்சை முத்தமிழ் சொல் சொல்
வல்லவன்பாப்புதாசன் கேள்விக்கு நல்நல்
ஆகமப்படிக்கண்டு அறைந்திடும்பதிலே
அறையர்விடிலோ பங்கம் வரும் சபையதிலே
ஓகோ வுன் கல்வித்திறம் விளங்கிடுமிதிலே
உஷார் உஷார் கடார்தார் நீர் (௩)

## விநாயகர் விஞ

### விருத்தம்

சங்கமதில் கவிபாடி மெடல்பெற்ற நீர்போல்
சபையில் நீர்வந்து குந்தி
தடபுடலாய் டேப்பையுந் தட்டியே துக்கனு
தன்னையுஞ் சுதிமீட்டினீர்
அங்கஜன் கதைபாட உங்கள் சிவனைவிட்டு
ஐங்கரனை யேனோ தொழுதீர்
ஐங்கரன் கடவுளா சங்கரன் கடவுளா
யார்முதற்கடவுள் சொல்வீர்
மங்களகணபதி கடவுளென்றால் சிவன்
மால்பிரம்மன் கடவுளாமா
மறைமுதல் சாஸ்திரம் புராணுதிகள் தொழும்
மௌனப்பொருளது கூறுமே
சிங்கமதை யெதிர்கண்ட துங்கமதயானைபோல்
சிந்தைநொந் தலரிடாமல்
சீக்கிரம் யானுமைக் கேட்கின்ற கேள்விக்கு
செப்புவீர் பதிலைமாதோ

3 பாட்டு

வேதன் மாலுங்காணுத நாதன் சிவனிருக்க
வெட்கக்கேடாக யானைமுகத்தோனை—நீங்கள்

நூக்கியமாய் முதல்முதல் பணிவானே சொல்லும்
வேதவிதிதப்படி—கடவுளிரண்டா
பாதகமிதைவிட—வேறெதுமுண்டா
விந்தையாய்த் தோணுதுங்கள் விவகாரம்-பெற்ற
தந்தைபேர் மாற்றுமுங்கள் சமாச்சாரம் (வே)

விருத்தம்

எப்பொருட்கு மாதிமுதன் மீசனென்றும்
ஏகாந்த பரபிரம்மம் சிவனே யென்றும்
செப்பவந்த வுங்கட்கறிக் கவலை நீக்கி
சீர்குலைந்த யானைமுகன் உடைந்த கொம்பன்
தொப்பையவர் சப்பைககால் குழிந்த கண்ணன்
தொல்லுலகில் தாய்போல் பெண்கேட்ட
லம்பன்
இப்படி யுள்ளவனை நீங்கள் ஆரம்பத்தில்
ஏற்றித்தொழுங்காரணத்தை இயம்புவீரே

பாட்டு

சத்திசிவன்முதலா அத்திமுகன்முதலா
சாற்றுங்காண்மூன்றிலது முதற்கடவுள்-கண்டு
கிதற்றுங்காண் பண்டிதரே யிச்சபையில் ஐயா
சருவபரம்பொருள்—உருவுருகொண்டு
வருகயிவர்க்குமே—லொருவர்யாருண்டு
சாலவே யந்தபிர்மம் தான் வேறையா—ஆதி
மூலமாய் நின்றபிர்மம் அதுயாரையா

விருத்தம்.

முந்திமுந்திக் கணபதியைத் துதித்ததென்ன
நீலமதில் பிரணவமா யுதித்ததென்ன
தந்தியென்ற யானைமுகம் படைத்ததென்ன
தன்கரத்தில் ஒற்றை கொம்புருப்பதென்ன
தொந்தியவர் ஐந்துகரமானதென்ன
துட்டப்பெருச்சாளியின் மீதமர்ந்ததென்ன

சந்திக்குச் சக்தியிவ ரமர்ந்ததென்று
சாஸ்திரத்தின் வழியெடுத்து சாற்றுவீரே

பாட்டு

நிர்மலயானசுத்த பிர்மமாய் கையிற்சிக்கி
நிற்குமோ மிருகம் போ லுருமாறி—வயர்
புக்குமோ அன்னைகர்ப்பக் கருவூரி—பலர்
நிந்தைக்கிடமாய்—வந்துபிறந்து
தந்தைதாய் நாத—விந்திற்கலந்து
நேர்மையாய் தூமை துடக்கது ருந்தி—அன்னை
மார்முலைபாலும் குடிக்குமோ பொருந்தி (வே)

விருத்தம்

சத்திதான் முதல்முதல் புத்தியில் நினைந்திட
தான் வந்தவன் வேறையா
சங்கரன் சுக்கிலம் பொங்கியதில் தோன்றிய
நந்தி முகவன் வேறையா
சித்ரமண் டத்தினில் சிவனுமை கூடியே
ஜெனித்தகணபதிவேறையா
தேவிதன்னழுக்கைத் திரட்டியுருவாக்கிய
செல்வக்கணபதி வேறையா
மூத்தேவர் கங்கை தொந்திக்குள் விடுமே
முழிக்க வைத்தோன் வேறையா
மூலாதாரத்தில் நாலிதழ் கமலத்தில்
முழக்கமிடுபவன் வேறையா
அத்தன் வகுத்திட்ட தேரை தடுத்திட்ட
யானை முருகன் வேறையா
அனுசூயாதேவிமூவர்கிட்ட சாபத்தை
அன்றுமீட்டவன் வேறையா
இத்தனை கணபதியில் யார்முந்தி யார்பிந்தி
ஈசனுக் கிவன் முந்தியா
இதனைநீயுரைத்திடில் மதனை சிவன் கொன்றகதை
எல்லாமே விளங்கிடுமே

பாட்டு

கன்மசரீரசிவன் பிர்மமா அல்லாதிங்க
கணபதியென்ற யானைமுகன் பிரமமா-கொஞ்சம்
உணர்வுடன் நூல்வழியாய்சொல்கிரமமாய்நீங்கள்
கண்டுயிரண்டையு—மொன்றென சொன்னால்
ஒன்றுயானைமுகங் கொண்டதேனன்று
காளைவாகனத்தி லொன்றேறுவானே—பெருச்
சாளி வானத்திலொன்றேறுவானே வே

விருத்தம்

கஜமுகனே சுத்த பிர்மமென்று சொன்னால்
கடவுள் சிவனென்று சொல்லமார்க்கமில்லை
வசமுடன் சிவன் சுத்த பிர்மமென்றால்
மதகஜனை துதிக்க ஞாயமில்லை
நிஜமாக சிவன்கடவு ளல்லவென்று
நீங்களே ஒப்புக்கொண்டு விட்டதாலே
உசிதமத னெரிந்தகக்ஷி ரத்தாய்ப் பாச்சு
உண்மையெரியாத கக்ஷி ஜெயமாய்ப்போச்சு

பாட்டு

ஓம்பிரணவப் பொருள் சாம்பசிவனு அல்ல
உங்கள் யானைமுகனு வோதையா—அந்த
சங்கரன் பிர்மமென்றதேதையா—நீர்
ஓதிடவந்த—வேதமுகந்த
நாதனுஞ்சிதனு—யானைமுகவனு
உண்மையாய் நீர் துதிக்க பொருள்யாரு—அது
மண்மிசை யுருப்பெற்ற—தெவ்வாறு வே

விருத்தம்

காமனையெரித்தசிவனொருவனே பிரமமென
காலமும் ஓலமிட்டு
காட்டில்வாழ் மிருகமுக கணபதியை முதன்முதல்
கடவுளென அடிபணிந்தீர்

பூமனுந்திருமாலுந் தேடியே காணாத
பூரணக்கடவுள் சிவனே
புதிதாக நீரின்று துதிசெய்து வந்திட்ட
புறவாயால் கார்க்குங்கண்ணே
ஓமெனும் பிரணவ மூர்த்தியாய் நின்றுலகை
யுற்பவித் தோனீசனே
உள்ளபடி சொல்லிவா தொல்லுல கமைத்தவன்
உண்மைக்கே கணேசன் தானே
சாமமுதல் நால்வேதம் சாஸ்திரப் புராணங்கள்
சாதிப்ப தெந்தக்கடவுள்
சங்கரன் கடவுளா ஐங்கரன் கடவுளா
சதுர்முகன் மால் கடவுளா

## பாட்டு

நெற்றிக்கண் சந்திரபிறை அத்திமுகனுக்குண்டா
நீள் சடைகங்கையவர் கேனில்லை—கையில்
வாள்சூலத்துடன் மழுமானில்லை—இன்னும்
நேரிழையாளொரு—பாகமேனில்லை
கோரிய பெண்கள்வி—வாகமேனில்லை
லகண்டமு மவர்க்கில்லாததேன்—அவஸ்
தூலத்தில் சர்பங்களுஞ் செல்லாததேன்

## விருத்தம்

அன்னைதந்தை போல்பிள்ளை பிறந்திடாமல்
யானைமுகம் சிவன்பிள்ளைக் கானதென்னே
பின்னேயொரு பிள்ளைகக்கு முகமோராறும்
பிண்டமொன்று யேற்பட்டப்பேதமென்னே
தென்னைமரம் நட்டால் பனைமாமுண்டாமோ
தேசமதில்விதையென்றிட்டால் சுரையொன்
[றுமோ
சன்ன செய் தேவர்க்கு மிருக சேர்க்கையுண்டா
சந்தேகம் விளங்க இதைச்சாற்றுவாயே

பாட்டு

மானைசுமந்த மெருமானுக்கிவன் ஜெனித்தால்
மைந்தனும் தந்தையைப்போலில்லாது—பெற்று
வந்ததேன் யானைமுகம் நீயோது—அந்த
மங்கைபார்வதி தன் கருகர்ப்பம்
தங்கியே கஜமுகம் வந்ததோ கூறும்
மர்மத்தை வெளியிட கூடாதா—இம்மனும்
வாமத்தை சாதிபபலுங்கள் சூதா (வ)

விருத்தம்

அப்பளம் பொரிதோசை அவல்கடலை மோதகம்
ஐங்கரர்க் கேற்பட்டதேன்.
ஆங்காரம் கொண்டுபல தேங்காயுடைந்பதேன்
அருகு மஞ்சள் வைப்பதேன்
மூப்பழம் வைத்துப்படைப்பதேன்
மூன்றுதரம் வலம்வருவதேன்
முக்கியஸ் தலமின்றி திக்கற்றவர்போலே
மூச்சசந்திகளில் வந்ததேன்
ஒப்பி வருடந்தோறும் இவரைக்களிமண்ணினல்
உருசெய்து பலிசெய்வதேன்
ஒருகாசு அறுகுபுல்லதைவாங்கி சாற்றியே
உலகோர்கள் துதிசெய்வதேன்
தொப்பைவயிற் சப்பாணியாய் கருங்கள் ளுருவாகி
தூங்குவது யெவர் சாபமோ
சுத்தபிரமத்திற்கு யித்தனை கஷ்டங்கள்
தோன்றுமோ சொல்லுவீரே

பாட்டு

அங்குசபாசங்கையில் தங்கியிருப்பதென்ன
யாரதைக் கொண்டது சொம்லுமையா—அவர்
போதின் சவிஸ்தாராம் விளஞமையா—கையில்
ஆய்த மெடுத்தது—யாரினைக்குத்த
வாய்தனில் வந்ததை—உளராதே மெதத

ஐயையா பாசக்கயர் யாரைக்கட்ட—அவரோர்
கையிலே வைத்திருப்பதென்னமுட்ட வே

விருத்தம்

கணபதிதான சத்திக்கெப்போ தந்தையானன்
கணபதிதான் சத்திக்கெப்போ மைந்தனானன்
கணபதிதான் சத்திக்கெப்போ கணவனானன்
கணபதிதான் மூவர்க்கெப்போ கடவுளானன்
கணபதிதாய்போலெப்போபெண்ணைக்கேட்டான்
கணபதிதானெப்போயானை முகம்படைத்தான்
கணபதியே சுத்தபர பிர்மமானல்
கடவுளென்றபட்டமுங்கள்சிவனுக்குண்டோ

பாட்டு

எந்தெந்தயுகங்களில் எந்தெந்த காலங்களில்
எந்தெந்தரூபத்துடனிவன் பிறந்தான்—இவன்
எந்தெந்த சூரர்களை வதைபுரிந்தான்—ஐயா

இத்தனைவகையில்—பெற்ற தாய்தந்தை
அத்தனஅல்லது—மற்றவரா சொல்

ஏகமாய் சாஸ்திரப்படி விடைகாட்டு—உந்தன்
யூகமாயுளர்வதை நிற்பாட்டு நிற்பாட்டு வே
ஓங்காரமே யானைமுகத் தோற்றமென்ன

உற்பெது வந்த தென்றீர்
உண்மையாய் வாலொன்று காலுகா லுற்றிடில்
ஓடும் யானைக்குட்டிபோல்

ரீங்காரமி மந்த மிருகத்தின் ரூபமாய்
நிற்குமோ கடவுள் தன்மை

நீங்களாய்ச் சொன்னுதா பாங்கான உங்கள்குரு
நீட்டிய நெடுங்கம்பியா
சாங்கோப சரங்கமாய் தாங்கள் சொல்வது போல

சாஸ்திர பேதமுண்டோ
சங்கதி பூஜ்யமா உங்கள்பொய் வியாஜ்யமா

தானுமிதில் சுயராஜுயமா
ஏன் காண பிதற்றுரீர் கணபதிக்கான் சர்தா
ஏலாத புலவர் ரா
எரிர்தகக்ஷியில் மெத்த சிறந்த வித்வானென்று

ஏகாந்தம் பாடுறீரே
சக்திசிவன் மூந்தியா சிவக்கிவன் மூந்தியா
சதுர்முகன் திருமாலுக்கிவன் மூந்தியா—அந்த
கதிர்வேலன் துர்க்கை காளிக்கிவன் மூந்தியா—குட்டி
சாத்தான் கருப்பணை—னுக்கிவன் மூந்தியா
சப்பாணிமப்பனுக்கிவன் மூந்தியா—துஷ்ட
நற்பாவாடையானுக்கிவன் மூந்தியா வே

## விருத்தம்

ஐங்கரனே சிவனமூவர் அம்சமென்றால்
அன்னையே பார்வதிமுறைதான் என்னவாச்சு
பங்கை சரஸ்வதியின் முறையும் போச்சு
மாலய மிவனுக்குள் ளொடக்கமாச்சு
சவாரிசெயுங் காளைகருடனும் பொய்யாச்சு
செங்கையில் மான்மழுவொடு சங்கு சக்ரம்
சிவமதமும் விஷ்ணுமத மற்றுப்போச்சு

## பாட்டு

இன்னுமிதையல்லாது அன்னப்பறவைமீது
இருப்பது அதுவெந்தக் கடவுளையா—கருடன்
பறப்பதைத் தூக்கியெந்தக் கடவுளையா—அண்ணே
இத்தனைக் கடவுளில்—உத்தமதாரு
உத்தமரே ஆக—பொத்தம நீகூறு
இதையல்லாதின்னமுண்டாசொல்லுஞ் சொச்சம்—
உங்கள்
கதையெல்லாம் பார்க்கப்போனல் வீண்வெளிச்சம்

விருத்தம்

கணபதியே பிர்மனென்றுங் கடவுளென்றும்
 கதறிவிட்டீர் சிவன் கடவுளல்ல வென்றும்
உணர்வுடையோரேயினிமேல் உமக்கெமக்கும்
 ஒழிந்துபோச்சு மதனெரிந்தானென்றகதை
இணையில்லா மன்மதனை சிவனெரிக்க
 ஏலாதென் றனைவோர்க்கும் விளங்கிப்போச்சு
சுனையிலா யெரிந்தகதை தோற்றதென்று
 சுதேசமித்திரன் பேப்பரிலும் அவுட்செய்வேனே

பாட்டு

கல்கி புல்புல் மைனா பல்டியுடானடிக்க
காடை கவ்தாரிகளுந் தான்பாட—அன்ன
பேடைமாமயில்களும் டான்சாட—தேன்
காவேரி நீர்வளஞ்—சூழ்திரு தஞ்சை
பாவலன் பாப்பு—தாசன்சொல் விஞ்சை
கண்டிஷன் கேள்விக்கென்ன பதிலான்சர்-கண்டுவே
வின் டிடாதுன்னைவிடேன் ஐப்டோன்கர்

காமன் பண்டிகை வினா

விருத்தம்

வியாசரின் கட்டுக் கதை வேதமா சாஸ்திரமா
 விளம்பிடும் இதிகாசமா
வேடிக்கைப் புராணமா விவகார ஞானமா
 விகடநூல் கலைக்யானமா
நாசமானன் மதனென் றிந்தப் பண்டிகை
 நடத்த நூல் புராதீனமா
நக்கன் முதற்கடவுளா அக்கொட்டை தட்டையும்
 ராட்டிமதனின் ஜடலமா
பேசும்நாம் பதுவைக்கோ லாரத்தங் குலாலதா
 பெரும்போஸ்துகருமாதியா

பிச்சையெடுக்கு மிதோர் கக்ஷியா மதுபானம்
பேரின்பக் கொண்டாட்டமா
தேசபதி யில்லாத திருவிழா வுங்கட்கு
ஜெனித்திட்ட தேந்த மார்க்கம்
ஜென் மாந்தரத்தில் நீங்கள் செய்த வினைப்பன்
செத்தாலுமுனை விடாதே

பல்லவி

பண்டிகைக் கொண்டாட்டமேதுகாண் உங்களு நீகிந்த
பண்டிகைக் கொண்டாட்ட மேதுகான் (பண்)

அநுபல்லவி

மண்டி மதுவைக்குடித்துசண்டிவழக்காடச் செய் த[ப

சரணம்

காமனின் பண்டிகையென்ற நாமம்நம்நாட்டினிலேது
காசியிலுற் பவித்த தேசங்காட்டுங்காண் இன்னும்
நேயமாய் ஒலிப்பண்டிகை நீண்டநாள் வடதேசத்தில்
நிலைபெறநடத்திய தென நாட்டுங்காண்
பாமபரேயிதை சஞ்சனூர் பஞ்சாங்கத்தில் பார்கலாம்
கோமபளி களிதைசெய்த கோலத்தையுங் கண்ணேக்
[கலாம்

விருத்தம்

பாவணியில் தேர்ச்சிப்பெற்றப் பாவலோரே
பலர் சபையிலெலனை ஜெயிக்க வந்தீர் நீரே
லாவணி யென்றுலகில் தன் கதைக்கேற்பட்ட
நாமமதின் பதம் பிரித்து நவிலவேணும்
பூவினில் லாவென் பதென்ன அணிகாதென்ன
புகலுமது பதபதமா பகாபதமா மன்ன
மேவியிது தமிழ் மொழியா வட மொழியா நீகண்;
விபரமதாயென நீகெடுத்து விளப்புவீரே

பாட்டு

காலித்தன மாகயிதைப் போலி புல்லர் இளம்பி
கண்டபடி பொய்யும் புரட்டையும் புகுகி—மெத்த
கந்தாலோகமாய்ச்செய்ய வந்தார் செந்தமிழைக்கற்று
கவிலாவணிகளை ஜோடித்தார மெழுகி
ஓலி பண்டிகையைகாமன் பண்டிகையெனவேமாற்றி
மேலுங்கக்ஷிரெண்டாக்கினர் கலக்கிது ராவைப்போல்
சாற்றி [ப]

விருத்தம்

காமன் பண்டிகையென்று வருடந்தோறும்
காணுகாசிப்பிறை கண்டவுடனே நீங்கள்
ஆமணக்குப் பேய்கரும்பு தண்டைகொண்டு
அருமையுடன் நட்டு வைக்கோற் பிரியைச்சுற்றி
பாமரர்கள் மாட்டியொன்றைத் தொங்கவிட்டு
பங்குனிமாதப் பருவமட்டு மங்கே
நேமமதாய் கடலைமொச்சை தேங்காயிட்டு
நெறியாக கொளுத்தச் சொன்ன நூலைகாட்டே

பாட்டு

கண்ட கண்ட விடங்களில் தண்டு செய்தக் கொட்டை
(தட்டை
கட்டுவைக்கோற்புரியெறுமுட்டையும் நட்டுபல த்
காரமாய் மாசிப்பிறையில் ஆரம்பித்துப் பங்குனியில்
காணும் பர்வகாலமட்டும் நீங்கள் கும்பிட்டு
சுண்டல்மொச்சை யவல்பொரி கொண்டு படைக்க
நூலுண்டா
உண்டென்று சொல்விடத்தாங்கள் கண்ட புராணத்
தைக் கொண்டாழி

விருத்தம்

பொங்கலென்றும் சங்கராந்திவாணி பூஜை
பிள்ளையார் சதுரத்தில் ராத்ரியென்றும்

துங்கயேகா தசிதீபா வளிக்கொண்டாட்டம்
தொல்லுலகில் நடத்தப் புராண மிருப்பதென்ன
உங்களுக்குக் காமன் பண்டிகை நடந்த
உரைக்கு தெந்தப் புராணத்தையெடுத்துக்காட்டு
சங்கதி யிது பவான்றிலுங்கள் வண்டவாளம்
சவிஸ்தாரமாய் சபையில் விளங்கிப்போமே

பாட்டு

பொங்கல் சங்கராந்திவாணி பூஜைப் பிள்ளையார்
சதுர்த்தி

புகல் யேகாதசி தீபாவளிப்பண்டிகை இது
பூர்வமாய் புராணப்படி யாருமே நடத்துவது
போலிதற்கு நூலிருந்தால் காட்டுங்காண வகை!
எங்கேயெங்கே யெடுயெடு எந்தப்புராணமெந்த
சாஸ்திரம்
சங்கதி பூஜிம்மானல்லெங்களுக்குசெய்யுந் தோத்ரம்

விருத்தம்

எந்திக்கை நோக்கிசிவன் தவம்புரிந்தான்
எண்வித யோகத்திலெந்த் யோகஞ் செய்தான்
வந்தஜன காதியர்க ளெங்கமர்ந்தார்
மாரனெந்த திக்கில் நின்று கணை தொடுத்தான்
வெந்தமதனேடு கொட்டைத் தட்டைராட்டி
விரிதுவரை மலார்வைக்கோற் புரியங்குண்டா
அந்த நாள் பகலிரலா வருஷமாதம்
அந்தி சந்தி நாழிகைதா னென்ன சொல்லே

பாட்டு

கந்தவேளை சிதன் கண்ணுலந்த நாளெரித்தபோது
கயிலையைச்சுற்றிக் கொட்டைக்காடிருந்தகா—பலர்
காணவேதுவரைமலார் நாணலும் வைக்கோற் புரியும்

காணம் மரட்டுச்சாணிமயிறேடி ந்ருததா
ஏர்தவழிம தன்வர நந்திக்கீசன் ஆர்டாசெய்தான்
அந்தாதி பதறேடு வந்தாளா கண்டு சொல்மெய்
[தான் (ப)

விருத்தம்

காமனுடல் கொட்டையென்றும் மெனும்புகாணல்
கருதும் வைக்கோல் புரிதாம்பு வயறுராட்டி
ஆமெனநீர் விடை கொடுத்த நூலைக்காட்டு
ஆண்பிள்ளை சிங்கமெனக் கொடியைநாட்டு
சோமனனி 'சிவன்பெண்ணைக் கொடுத்தாற்கு
சுட்டெரிக் கொட்டைக்கா மாரனுக்கா
நீமனம்போ லுள்ளவதெல்லாம் விடையாகாது
நெறுயற்ற வுன் கலியை நெருப்பில் போட

பாட்டு

காமனுக்குக் கொட்டைத் தட்டை மாமிஷநாம் பெறும்
[பாய்
கண்மூடித்தனமாய்ச் சொன்னனுண்மையாகுமா-
[அந்த
காமனிக்குப்பெண்கொடுத்த மாமன்சிவனுக்குமட்டும்
கல்லாயிரும்மா சரீரங் சொல்லும் யூகமாய்
நான்முகன் அன்னல்மதனை ஆமணக்கால்படைத்தான
சோமசிவனிதையறியாமல்பெண்ணைக்கொடுத்தான

விருத்தம்)

சிவனுக்கரோர் பெண்டாட்டி தானிருக்க
சிரசிலோர் வைப்பாட்டி சுமந்ததென்ன
இவனுக்கோர் பிள்ளையில்லை யென்றபோது
இரதிதேவி யாளைவுமை யீன்றதேது
நவின்ரதி மதனுக்கும் பொருத்தம் பார்த்து
நடந்தமணம் கொட்டைத்தட்டை நாணலுக்கா

தவநிலையில் சிவனெரித்த போது வெந்து
சாம்பலான பொருளது நீ சாற்றுவாயே

பாட்டு

மாரனுச்சிவன்பெண்ணைக் கோரிமனஞ்செய்தபோது
மாப்பிள்ளை யானேன் மதனை கொட்டைக்தட்டையாம்
மஞ்சத்திற்படுத்துரதி கொஞ்சிக்கட்டிமுத்தமிட்டு
மாரோடணைத்தது பாழுமெற முட்டையா
நீரலிங்கதிவனுடன்பார்வதியும் பெண்ணைக்கொண்டு
தாரைவார்த்துச் செய்த. சடங்காருக் கென்று சொல்
லுங்கண்டி (ப)

விருத்தம்

ஐங்கணையில் மதனெந்தக் கணையை விட்டான்
அது சிவன் மேல் பெந்தயிடம் பட்டதையா
சங்கரனு கண்திறந்த நேரமென்ன
ஜனகாதி நால்வரிதைக் கண்ட துண்டா
மங்கைபடை கடல் மூரசெக்காளந்தென்றல்
மணித்தேர் வாகனங்கிள்ளை யிதுகளெல்லாம்
தங்கமதனை சூழ்ந்து நின்றதுண்டா
தொடர்ந்துவந்த தேவர்களின் தொகையைகூறே

பாட்டு

கயிலையில் சிவன்தவம் பயிலும் போதிலெதிர்த்து
கணைதொடுத்தது மந்த காட்டு காணலா அந்த
காலத்தில் கண்ணைத்திறந்து நீலகண்டன் சுடடெரித்த
காமனே யென்று சொன்ன துன்பாட்டுக் கோணலா
குயில் மொழிமாதுரதி கொன்றசேதிக் கேள்விப்பட்டு
மயில் போல் கொட்டைக்குத்தானு மாரடித்தழுத
தொட்டு (ப)

விருத்தம்

சத்திபாகம் சிவபாக மெனுமிரண்டில்

சங்கரனார் மதனைக் கொன்ற தெங்கபாகம்
நந்திமதன் சத்திசாபத்தால் மாண்டனு
செத்தமதனை உடனே எழுப்பினரா
சிவனுமையை மணந்தபின எழுப்பினரா
இத்தரையில் மன்மதனை அருபியாள்
எழுப்பியதின் காரணத்தை இயம்புவீரே

பாட்டு

ஒப் பாரி கனல்தில்லானு டப்பான் லாவணியடிக்க
ஓகோ வுங்கள் புராணகவி ஓசையிட்டதா ஒரு
ஏட்டைத்தப் பெடுத்துத் தட்டிநீட்டத்துந்தனுவைமீட்டி
ஓலமிட்டா தாடேவுங்கள் மூளை கெட்டாத
அப்பாலொரு மேடைகட்டி ஆவிடையும்லிங்கம்வைத்து
தப்பாமல் நீர்முட்டிக் கொள்ள செப்பும் நாலைக்
கொண்டாஒத்து

விருத்தம்

காலுரைத்தப் பண்டிகையின் கேள்விகட்டு
நாவலோ பதில் சொல்லா கெழக்கூடாது
மானமுற்ற மாசபையுள் ளார் கள்மெச்ச
மகனெரிந்த கதைதனிலே நாட்டவேணுமய
ஈனருக்குப்பெரியோர்சொல் லேர்க்கா தென்ற
இவ்வுயிக பழமொழிபோலிருந்திடாதீர்
வானர்க்குப் பூமாலை சூட்டிவிட்டால்
வையகத்திலதனருமை மதித்திடாதே

பாட்டு

வாளைமீன் விரலுந்துள்ளி பானைவாய்க்கமுகை தள்ளி
வானிலேறி அந்தர் வுடான் தானடிக்குதே இன்னும்
வாகிளங் கோகிலம்போடதோகைமா மயில்களாட
வர்ண வர்ண புல் புல் மைனாவும் நடிக்குதே

மாழைபாட கூடம் சூழ்ந்தஞ்சை பாபுதாசன்
மாசபையிற் கேட்டகேள்விக்கான் சர் சொல்லுங்கள்
[கண்டிஷன் ப)

விருத்தம்

மதனுக்கு ராஜாங்கம் ஆரோக்கிய புரமென்று
மமைந்தது யெந்ததேசம்
ம்றமது கயிலைக்கு மூற்றமதசெல்லைக்கும்
அதுக்கு மெத்தனை காதமோ
வதனமதி சதியுடன் நிபந்தென்றல் தேரேறி
வரவதற் குருவ முண்டோ
வார்கடல் முரசாகி சீர்மதனுடனேகி
வையக மெலாஞ்சுற்றுமோ
இதமாய் வசந்தநாள் சாரத்யஞ் செய்யுமோ
இளங்கிள்ளை குதிரையாமோ
எக்காள மாங்குயி லூதுமோ யிரவில் வரு
மிருள்யானைப்படையாகுமோ
நீடுவில் கரும்பாமோ வாருமலர்க்கணையாமோ
நிதானித்துச் சொல்லும் புலவா

லாவணிமெட்டு
கண்ணிகள்

வடமேயிவை புரட்சி இடதுகையா லெறிந்தப் புலவா
வஸ்தாதுசிங்க | மலலாவ
வந்திடுந்தமிழ் வல்லவா யங்கள்
மஸ்துவெறிக்கொண்டி அந்தர் பஸ்கி யுடானடித்தீரே
பலேனா)
உடையில்லா மங்கை போலே நடைபழக்க வந்த வீண்
அவுட்டா

ஓங்காதுசுதத டவுட்டா
ஒடிப்பேனுந்தன் பாவுட்டா எந்த

உலகி வெரிந்தகக்ஷி தலை தூக்காது கொடுப்பேன்
(சிமிட்டா
திடமாய் மதன் ஜெனித்த இடமெங்கே யுகமாண்டு
(குறிப்பாய்

தீர்க்காயுளை விரிப்பாய்—எந்த
செய்புக் தொழிலைப் பிரிப்பாய—எந்த
தேசிகரிடமவன் வாசித்தான் கலைகளையுரைப்பாய்

உத்தார் { கடையைய யென்னிடம் விரிக்காதே—கட்டு
கனதயென்னுங் கயர் திரிக்காதே

மடமை குருசொஸ்நம்பி கடமை கழிக்கவந்தப் புலவா
அங்க ஜன் ராஜரீக தங்க ஆரோக்ய புரமெதிலே
அமைந்துல கதிலே
அண்டத்திலா சொல் பதிலே அதன்
அளவுநீள விஸ்தாரமகலஞ் சொல்லுங்காண் சுற்றுமதி
மங்கை படைவவனுக் கெங்கிருந்து வந்தது சேனையா

மருவுமிருள் யானையாய்
மகரக்கொடி தானையா இன்னும்

மதிகுடைகடல் முரசதிர்ந்து வருமென்றது வீணையா
செங்கரும் புவில்லாக ஐங்கணைமலராக மேலே

சேர்ந்த தெவ்விதத் தாலே
சீக்கிரம்கொ நாலே

செழுங்குயில் சின்னறக்காள முழங்குமோபடையின்
முன்னாலே

உததார் { பைங்கிளி யரிதென்றல் தேராய் கொண்டு
பரகுமோ ஆகாயத்தில் ஜோராய

மங்களம் பாடியிங்கே நேமஞ்செய்த மலைக்குந்தாரம்

கண்டு சொல்சவிஸ் தாரம்
கணக்குடன தாரம் அவன

கருதிசென்றகாலத்தை உருதியாய்ச் சொல்லுநூலின்
[சாரம்
ஆமாங்காணுங்கள் சிவன் தானெனத்தனை வருஷம்
[யோகம்

புரிந்தார் பிரத்தி யேகம்
அகிலமூன்று லோகம் அப்போ

அசைவிலாதிருந்ததா நிகழ்ந்ததா அறிந்துசொல்லூகம்
வாமபாகத்தமர்ந்த மாமங்கை யுஞ்சைச்சடையில் கங்கை

மதிமான்மழு செங்கை
வசித்ததெபபோ தெங்கே காளை

யாடுபூதமடையுங் காவலுற்றிருந்ததா அங்கே

உத்தார் {பூமன் படைமலைமேல் போச்சு
புலம்பினல் பலிக்காதுன் பாச்சா

வாய்மதம்பேசிவீணாய்தாமதிக்கர்மல்சொல்லும்புலவா
கடன் முய்சானல் மதர்ஜடமது தூர்ந்து சென்றிடுமா

கார்குயில்கன் றிடுமா
காளமூதிகின் றிடுமா சர்வ

கடவுள் சிவனிருக்கும் கயிலையிலேற மூடன்றிடுமா
அடரிருள்யானையானல் குடையான சந்தரனெதிர்
(வருமா

அரிவைபடை யுருமா
அமர்புரியப் பெறுமா ஐயா

அடைவுடன் மகரமீன்கொடியாகப் பறந்துமேலுருமா
மடல்தாழைவடிவாளாய்கூடல் சரியாய்ப் பிளந்து
(வெட்டுமா

மலர்பாணம்போ மெட்டுமா
வண்டுகள் தூது வொட்டுமா சொல்லும்

வளைக்ககருப்பு வில்லால்சளைக்காதுமலரைத்திரட்டுமா

உத்தார் {படைமதன் போனதெந்தத்திக்கு அதை
பகர்தெற்கு வடக்கா எனக்கு

வடவைக்கணலைற்றிப கடைவாயிலடக்கியபுலவா வஸ்
சித்தஜனே ரேருந்தேர் எததனை சொல்லுயரம் நீளம்

செய்ததெவர் தாராளம்
சித்ரவேலை யோராளம் அதன்

சிகரங்கலசந்தட்டு சகடைகளெத்தனை சொல்நாளும்
விஸ்தார மாயதற்கு சுற்றளவான தென்ன கணக்கு

விபரங்கொண்டு யெனக்கு
விள்ளுதெரிந்தா லுனக்கு அதை

வேகமாக நடத்துஞ் சாரதியார்சொல்வேண்டாம்
(பிணக்கு

நித்தமதையிழுக்குந் தல்லதகளென்னுங் ஙிளியதற்கு
நேர்ந்த தெத்தனை வொதுக்கு

நேமித்தாரதை மெதற்கு ஒரு
நிமிடத்திற்கு மெத்தனை மைல் செல்லுஞ் சொல்லும்
(விடைமதற்கு

உத்தார் {உத்தரமொவ்வொன்றுக்குங்கண்டு
ரூபிக்கவேணும் நூலைக்கொண்டு (பதில்

மத்தாளத்தாளத்துடன் தத்திமித்தோம் போடாதே
புலவா [வ)

சுஜன சங்கீர் தங்கபஜனமிர்த மாதர்கள் நடனம்
சதிலயத்தில் படனம்

ஜொலித்திடுவ தடனும் வளம்

சூழுங்காவேரிநதி சோழநகர் விளங்குத்திடனும்
கஜரததுரக புஜபலசேனை திகழ்நகரம்

காணுங்கனக சிகரம்
கன்னியமெங்கும பகரம் இன்னும்
கண்ணாயிரம் படைத்த விண்ணவர் கோன்பதிமை
(நிகரும்
உசிதமெரியாக்கக்ஷி விஜயக்கொடி சேர்தஞ்
சைவாசன்
உத்தமர் புகழ் தேசன்
உண்மைசொல்விசு வாசன் எங்கும்
ஒப்பில்லா தங்கமெடல் நற்பரி சோங்கும்-பாப்பு
[தாசன்
உத்தார் கசிதமதுாகவி வாக்கு—கற்
கண்டு ஹல்வா ஜிலேபிகேக்கு
லசைகவிரகமரென்று சிசைபெட்டுங் கீர்த்திப்பெற்ற
புலவா [வ

விருத்தம்

மால்மகன் மதனென்கு தொருபுராணம்
மலர்வேதன் மகனென்கு தொருபுராணம்
பால்வண்ணன் மகனென்கு தொருபுராணம்
பகர்தர்மன் மகனென்கு தொருபுராணம்
சால்கண்ணன் மகனென்கு தொருபுராணம்
சங்கல்பன் மகனென்கு தொருபுராணம்
வேல் மனிதனை பேரை நூல் சொன்னாலே
வெந்தமத னெந்தமதன் விளம்புவீரே

பல்லவி

வெந்தமதனெந்த மதன்காண்—சிவன் கண்ணாலே
வெந்வமனெந்த மதன் காண் வெ

(அநுபல்லவி)

மூர்த்தி மூர்த்தியெனக்கந்த சந்தேகம் விளங்கச் சொல்லும் (பல்)

சரணங்கள்

கந்தபுராணத்தில் சொல்லி வந்தபடி மாமனுக்கு
மைந்தனாய் பிறந்திட்டானே அந்தமதனை இன்னு
மந்ரம் மனுக்கோர்மதன் வந்ததாய்சைவப்புராணம்
செந்தமிழ்ப் பாட்டுப்பாடாதே அந்தமதனை
பைந்தொடி சிரத்தைதரு மன்தனக்கும் மந்தமதன்
சொந்தமாய் விஷ்ணும் புராணஞ் சொல்லு
மதன் தானை (வெ]
சிவன் தோளிலொருமதன்புவனத்தில்வந்தானென்று
செப்பு தோதிசாஸ்திர மந்தமதனை—ஐயா
கவனமாய்கேள் சங்கர்ப்பனவன்மகன் மதனென்று
காட்டு தேபாகவத்திலந்த மதனை
யவுனமானதனுககு மகனந்தகாம னென்று
களினபிரபோதய நூல்சொல்லு தேமந்தமகனை
பேசு மந்தது வாரகை வாசுதேவனுக்கோர் மதன்
பிறந்ததாய் பாரதம் பாரந்தமதனை சம்ப
ராசுன் யெடுத்துவந்து நேசமாய் ரதிபாலூட்டி
நாயகனுயாய்க் கொண்டாளே அந்தமகனை
ஈசனைகுறித்துரதி ஆசை கொண்ட போதும்
பாசமாய்மோகம் கொடுத்துக் கிலசந்த விர்த்த
மதனை
பாற்கடலில் பள்ளிக்கொண்டு தூக்கம்புரியும் விஷ்ணுக்கு
பாவைமைசுமத்தினனே யததமதனை —கமல
பூவில்குள் வாழும் பிரம்மனுட நாக்கிலொருபெண்ணை
[வைத்து

பூஜிக்கப் பாசந் தந்தானே அந்தமதனை
ஊக்கமா யென்பத்துநான் கென்றேர்க்கும் ஜீவான்
மாக்களுக்கும்
பாக்கியம் கொடுத்துநாளுங் காற்குமந்த மனமதனை
இத்தனைபேர் மன்மதனில்செத்தவனொருவனனல்
மற்றமதனை சொன்னநூல் சுத்தமா பொய்யா—
[இன்னும்
பத்துப்பனிரெண்டிடத்தில் பித்தனலேசெத்ததேவன்
பரிக்குள் எலிமைப்போலே மாட்டினீரையா
நத்திகஙிணற்வெட்ட பூதம் சுற்றிப்புறப்பட்டது
போல்
உற்றதுங்கள புாடுவீணுய் கத்தித்திரியாதீர் முன்னல்
கேழ்வரகில் நெய்யுண்டென்றல் யாவர்தான்
உருதிகொள்வார்
கேட்பவர்க்குஞ் சொல்பவர்க்கும் ஞானமேதையா—
எந்தன்
கேள்விக்கு விடைகொடுக்க நாளொரு நூருகினும்
கீரத்தியாய் விடை கொடுக்கப் புராணமேதையா
தாழ்வில்லாமல் பாப்புதாசன் தமன்விட்டக்கவிச்சரத்
தடுத்துக்கொள்ளாமற் போனதெடுத்துவிடும்[தை
சிரத்தை—வெ

விருத்தம்

காலமெல்லா மதன் வெந்தான் வெந்தானென்று
கணவனில்லா விதவைபோல் கதரலானீர்
சீலமதாய் மதனெந்த யுகம் ஜனித்தான்
செப்புமவன் தாய் தந்தைப் பேருமுரும்
நாலுவித யோனி யேழு வகைத்தோற்றத்தில்
நாடியவன் ஜெனித்ததெந்த யோனிசொல்லும்
சாலவுமென் கேள்விக்கு பதிலைசொன்னல்
சாண்டா வென்றுமையெவருஞ் சாற்றுவாரே

பாட்டு

சாண்டோராம மூர்த்தியைப் போல்பாண்டுவாத்தியத்
தடனே

சங்கிலியறுத்தவர் நீர் தானே
சண்டையில்சம்ஷூ தீனே
சர்க்கஸில் பயில் வானே—ஓய் சா

சரணங்கள்

மாண்டமாறன் மனிதனை வானுலகப்புனிதனை
வானரனாக்ஷதனை தானறிந்துரைக்கவேணும்

வாசமெத்தலூர் பிறந்த தெங்கே
வகுத்துச் சொல்லு மிங்கே
வையாதீர் மன சங்கை ஓய்
தாண்டவம் போடாதீர்சுத்த சாண்டோ ராமமூர்த்தி
(மைப்பேர்ய்
சங்கிலி யறுத்தவர்நீர் தானே (சண்
தேடவொன்பதாரையாதிரேக . மூண்டோக் கூரையா
தேசமேதவர்களுட வாசமேது ஆணோடு பெண்
சேர்க்கை யுண்டாலூனுரக்க முண்டா
செப்பிடும் நாலைக நொண்டா

ஜனன மரண முண்டா
பாவ புண்ணிய முண்டா சொல்லும்
பட்டாசுற்றி மெட்ருனெங்கும்
பட்டம் பெற்றுவந்த நீர் தானே (சண்
மாரனுககெத்தனைபேர் மலர்கனைகள் தந்ததார்
மையல்தொழில் செய்யவிவர்க் கைபோபவர் யார்
கொடுத்தார்

மாதுசத்திக்கிவன் முன்னே பின்னே
மதித்துச்சொல்லு மன்னே அவன்
மார்க்கந்தொழி லென்னே

நாரணர்க்கும் நான்முகர்க்கும் நக்கன் பார்வதிக்கு
,மோகம்
நல்கியதிவராவேரே தானு—சண் :
காமன்கருத்தரிக்குமுன் காதல்தந்ததாரவன்
கடவுள் மூவருமனிதரென்று சொல்லுங்காலிவர்க்கு
காரணக்கர்த்தாயெவர் சொல்லையா
கருத்துமக் கில்லையா
கதைகளைத் தள்ளையா—ஒய்

சாமார்த்தியமாகப்பேசி ஜேமாற்றிபோகுமந்த
ஜப்பான் தளக்கர்த்தரும்நீர் தானு—சண்
நாலுவகையோனியில் வெளுதித்த யோனிசொல்
காளுந்தேவர் மக்கள்மூத லெழுவகைத் தோற்றமதில்
நாட்டுந் ஈதவர்க்கென்னரூபம் காட்டு
நார்க்கு பேதம் நாட்டு
நடத்தை வித்யாசம் கூட்டு ஒய்
ஞாலமதில் காலமெல்லாம் தாலியறுத்தப் பட்டபெண்
போல்
ஓலமிட்டழுவதேனே வீணு—சண்
மனிதரைப்போல் தேவர்க்கு மதபேதஞ்சொல்
யாவர்க்கும்
மானிலத்தில் ஜாதிபேதந் தானிருப்பது போலங்கும்
வைஷ்ணவர் சைவம் பௌத்த மார்க்கம்
மகிமை முஸ்லிம் மார்க்கம்
மலிந்த கிருஸ்து மார்க்கம் கொண்டு
வாழுகுலக்கென்ன பேரு ஆளுஞ்சக்ரவர்த்தியாரு
வழியதற்கும்போக ஏராராப் ளானு சண்
திருப்பாற்கடலமுதுண்ட தேவர்கட்கு சாவுண்டோ
தேரில் மாரனுஞ் சிரஞ்சீவிபட்டம் பெற்றனுச்சே

செத்தழிந்தானென்றது வீண் பொய்யே
சிவன் மாண்டது மெய்யே
தெரிந்துவாது செய்யே—எந்த

தேசம்புகழ் தஞ்சைபாப்பு தாசன் கேள்விக்காண்சர் சொல்லு

ஜெயிக்க வழிப்பாருங்கவி வாணு—சண்

விருத்தம்

காமமது பெரிவதற்கு ரூபமேது
கைகால் மெய் கண் செவி வாய் நாசி யேது
ஆமதற்கு உற்பத்தி ஸ்தானமேது
ஐம்பூதமதற்கு முன்னு பின்னுமேவாக
நேமமதாயதற்குயிர்க் குறியைக்காட்டு
நீனிலத்திலிதுவசிக்கும் நிலேயைகாட்டு
நாமமதற் கேற்பட்ட நாளைக்காட்டு
நாவலரே சொல்லி ஜெயக்கொடியை நாட்டே

கண்ணிகள்

எழுகடலைக் கலக்கி முழுகியுடானடித்து
எழும்பிடும்பயில் வரேனே
சபையிலே தானே
உனக்கு நானே எடுத்துரைக்கும்
கேள்விக்குறை சீமானே
புளுகு மூங்களுடையப் புராணக்குப்பையைவாரி
போடுங்குழியை வெட்டி
புதையுங் கொட்டி
கரங்கள் தட்டி—நதியில் சென்ற
போடு முழுங்கை வெட்டி
எழுவகைப்பிறப்புக்கு யேசமாகிய காமம்

ஈசன் கண்ணினு லன்று
எரித்த தென்று
போருந்தா தின்று—அச்சமில்லாமலே
எடுத்துரைத்தீரே நன்று

உத்தார் { பொழுதுபோககாதீர்புலவீரேபுலவீரேமா
புகல்வதற்கான்சா தருவீரேதருவீரே [ன்

இழுவழுக்கான ஞானம் பேசுவுமக்கு இங்கே
இடமேதுமில்லை கோனே (சபை
காமமென்பதுவென்ன நேர்மையாய் நமக்குள்ளே
கதித்தெழும்புது நோக்கு
காட்டாதே போக்கு
செல்லாதுன் சாக்கு களரர்விடில்
தப்பைத்தலையிற் தூக்கு
நேமமதாக அந்த காமமிருப்பதென்ன
நிறத்தையறிந்து சொல்லு
செய்யாதே மல்லு
நினைத்து விள்ளு நிலையாயன்
அக்ஷரங்களைச் கல்லு
நாமமதற்கெப்படி காமமென்றமைந்தது
நல்லுருவத்தைக் காட்டு
வீணைப் பாட்டு
பாடாமல் போட்டு தெரியாவிடில்
நவிலுன் குருவைக்கேட்டு

உத்தார் தாமதிக்காமல்சொல்லவேணும் சொல்லவே
தாண்டவம் நடவாது காணும்வாது (ணும்
காணும்

ஏமாற்றிப்போவோமென்ற சாமர்த்தியமெங்களிடம்
இனிநடவாது கோனே

விந்து நாத மிரண்டில் ஆணெது பெண்ணெது
விளம்புமதெங்கே பிறக்கும்
எப்படி இருக்கும்
எவ்விடஞ் சிறக்கும்—செங்குந்தியின்
விபர மேன்மையாய் பெருக்கும்
கந்தக மெனும்வாசிக் குதிரை கட்டியிருக்கும்
கனமிகும்லாய மெங்கே
கருதி யிங்கே
களருஞ் சங்கை— அதை நடத்தும்
கர்த்தனார் சொல்லுமங்கே—மயேஸ்வர
னுடன்சதா சிவனெங்கே

உத்தார { சந்ததயிடகலை யெங்கேகலைஎங்கே அதை
சார்ந்திடும்பிங்கலை யெங்கேகளையெங்கே }

இந்துவுங்கதிரு நின்றிலங்கிடுஞ் சுழிமுனை
இடமறி கனவானே சபை
ரகஸியமென்னும் பிர்ம ரந்திரநிலைய
எந்தயிடத்தில் தெரியும்
அதற்கு மறையும்
கதவின் நிறையும் இயங்கு மதின்
அக்ஷரங்களின் மூறையும்
சுகமாயதனைப்பூட்டி திறக்கும் சாவியெது
சொலலுமக்ஷரம் பாரு
தேவதை யாரு
துரிமங் கூறு துரியாதே
சூக்ஷத்தைக்கண்டு தேறு
சகலருமறியயிக் கேள்விக்கு விடைசொல்ல
தங்களுக்கொரு வாரம்
கெடுவு தாரோம்

சொன்னாலே                தீரம் சொல்லாவிடிலோ
தக்க தண்டனை நேரும்
உத்தார்   ஜெகம்புகழ் தஞ்சை நகர்வாசன் நகர்
வாசன்—கவி
சிங்கமென்றிடும் பாப்புதாசன்பாப்பு
தாசன்
இங்பரமதிலு நீயிதற்கு விடையளிக்க
ஏலாதுபயில்        வானே                சபை

விருத்தம்

குப்பையும் கூளமுங் குன்றுபோலுயரினும்
கோபுரமதாகி விடுமோ
கோவேறு கழுதைகள் தாவிப் பாய்ந்தாலுமது
குதிரைகளாகி விடுமோ
தப்போடு தம்பட்டந் தாரைகளூதினும்
தவில் மேளம் போலாகுமோ
தாசிகள் வேசிகள் நேசமெலாம் வீட்டில்
தாலி கட்டினவளாவளோ
இப்புவியிலாண்டிகள் வயறு பிழைக்கச் செய்த
இதிகாசம் ஞானமாமோ
ஏறுக்குமாறுகக் கூறும் புராணங்கள்
எரிந்தயிடம் ருஜூகாட்டுமோ
செப்பிடும் பொய்சாக்ஷிக் கற்பனைக்கேஸுகள்
செஷன் கோர்ட்டில் ஜெயமடையுமோ
செல்லாத காசுலக மெல்லாமூடாடினும்
செல்லாது வல்லோர்களே

[கண்ணிகள்)

மலரதிலுற்ற மணம் போலே அதில்
நிறமது பெற்ற குணம் போலே நவ

மணிகளில் மொய்த்தவணம்போலே கதிர்மதிபோலே
மதுவிலுதிக்க ரஸம் போலே பல
கனிகள்தரும்பி ரசம் போலே பெண்கள்
மையலில்தரும்ச ரசம் போலே வருமதனுக்கும்
உலகிலுருக் கொடு முன்னாலே சிவ
னுடனெதிர்த் தவன் கண்ணாலே தன்
னுடலழிவுற்ற தன் பின்னாலே அருவுருவாகி
ஒருவர் தமக்கு மேல் தோணுமல் தன்
மனைவிரதிக் கெழில் நாணுமல் தொழி
லுறுவதாய் செப்பு நீர் காணுமல் மறையுணராமல்
இலகெறும்புக்கடை முதல் ஜீவன் உயிர்
தனையும் படைத்தரு ளுந் தேவன் —ஒரு
இணைதுணையற்றப் பொருள் யாவன் எனவறிவீரே
இதபரத்திற்கொரு சித்தானன்—நமக்
கிரணமளித்திடும் வஸ்தானன்—உயர்
இதமுறமுக்திக்கோர் வித் தானன் பலர்க்கிறை
மானன்

புலவர் புழுக்களை நம்பாதே—வீண்
புரட்டினில் சிக்கியே வெம் பாதே
பொதிகைரத்தைவி ரும் பாதே—வாழ்புவிமீதே
புகல்வது பொக்கிஷ மெய்ஞ் ஞானம்—அதில்
புகுந்து நீ விட்டொழி அஞ்ஞானம்—உனக்கு
புகன்றேன் பாப்புதாசன்சன்மானம்—அறிகுவீரே

விருத்தம்

ஆதிமுதல் சத்திக்குஞ் சிவனுக்கு மோக
மளித்திட்ட தெந்த மாரன்
அயனுக்கும் வாணிக்குஞ் சுயமான காதல்
அமைத்திட்ட தெந்தமாரன்
மாதிரு மாலுவரும் லக்ஷ்மிக்குமையல்
வருத்திட்டதெந்த மாரன்

மஞ்சத்தில் கூடியிவர்க் கொஞ்சி விளையாடவே
வைத்திட்ட தெந்த மாரன்
மேதினியிலாணென்றும் பெண்ணென்றும் மிருவகை
விதித்திட்டதெந்தமாரன்
மேன்மையுந்தாழ்மையும் பாவமும் புண்யமும்
விளைத்திட்ட தெந்த மாரன்
கோதிலாவெண் பத்து நான்கு லக்ஷம் ஜீவர்
குறித்திட்ட தெந்த மாரன்
கொண்டாடி யண்டர்மூநல் மன்ருந்தெய்வமாய்
கும்பிடுங் கடவுளவனே

பாட்டு

பைந்தமிழ் கடலதி லுந்தியந்தாடித்து
வந்திடுங்கவிசிங்கமே—இனிமேலுங்கள்
மந்திரஞ் செல்லாது தங்கமே
பரமனும் வரதனும் பிரமனு முதல்முதல்
சிரமுடலெடுத்தது —சரமதனுல்லவோ
பாரும் வேதாந்தக்கருத்தை பகிஷ்காரமாய்க
கூறுமன் மதன் திறத்தை
சத்தியாலே தான்லோக விர்த்தியுண்டானதாக
சாதிக்குதுங்கள் கக்ஷியும் அதனுல் சத்தி
ஆதியென்பது நிட்சயம்
சாலவுமவளு குஸ் துாலமுண்டாகவும்

மேலுமவள் விரகத் தாலன்று நோகவும்
சங்கற்பஞ் செய்த தாருங்காண் அப்போது சிவன்
எங்கே உற்பத்தி கூறுங்காண் பை
மோகத்துக்கதிகார னுருமதனென்ருக்சே
லோகமவனுல்லவா இதைப்பார்க்கிலும்
யூகம்வேறுண்டா புலவா
முந்திக்கணபதியோ டந்தசிவன் மாலயன்
வந்து குழந்தைகளாய் விந்தை பாலருந்திட

மூர்த்தியாய் நின்ற தாருங்காண் அவனைமாரும்
பார்த்திட்டதுண்டோ கூறுங்காண்
பெண்ரூபமுன்னுண்டாகி ஆண்ரூபம் பின்னுண்டாகி
பிரியயிருற்கார் காரணம்—கலந்துப்பிள்ளை
பெருகயார்செய்த பூரணம்
பேசுமிவர்குளே—பாசமுதித்தது
ஆசைமிகுந்தது—யார்செய்த கற்பனை
பிர்மதனை சிவனை உலகோர்பத்தி
கர்மமுண்டான தேவனைல் ஐை
சத்திக்கு முன்னேயந்தவஸ்துத்தனியாய் நின்று
சங்கரனைப் படைத்தது சக்தியைச்சேர
எங்கே யோகம் நடித்தது
சத்துசித்தானவன் சித்தஜனேயலா
இத்தரைமேல் சர்வ தத்துவம் யார்க்குண்டு
சந்தேகந்திர வில்லையா மதனெரிய
வுந்தேகமுண்டா சொல்லையா ஐை
காமத் தணலைசகிக் காமல் தானே சிவனும்
கங்கை திங்களை சுமந்தான் அக்காமககனல்
பொங்கி நெற்றிக்கண் சமைந்தான்
காமத்தால் வெடித்தக்கண் காமத்தை யெரிக்குமோ
காமமிலாவு பெண்ணை வாமத்தில் தரிக்குமோ
கான்ஸல்வுன்கஷ்டிவிடுங்காண் பாப்புதாசனுக
கான்சர்நூல்வழி கொடுங்காண்

விருத்தம்

மோகத்துக் கதிகாரன் மாரனென்றால் சிவன்
மூவர்க்குமவனே கடவுள்
மூலமுடி வானவன் கோலம்பலவானவன்
முத்திதரு மூர்த்தியுமவன்

ஏகத்வ பிர்மமவன் யெங்கு மூறை மர்மமவன்
இறப்பொடுப் பிறப்பற்றவன்
இணை துணையில்லாதவன் குணங்குறி கொள்ளாதவன்
இரவு பகலற்றோனவன்
யோகத்தில் சிவனுக்குதித்திட்டப் பொருளவன்
உறையும் ஜனகாதியர்கரு
உணர்வித்த மந்த்ரமவன் சிவனார்க்கு முருகனும்
உரைத்திட்ட பொருளுமவனே
லோகத்தி லவனல்லால் தெய்வம் வேறில்லையென
நுவலுதே ஞான நூல்கள்
நுணணறிவிலாது மண்கல்லை டொமெனினும்
ரோஷங்கெட்டம்புலவரே

லாவணி மெட்டு

கண்ணிகள்

கண்ணுக்குள் மணிபோலும் விண்ணுக்குள்ளொளி போலும்
காரணமாயிலங்கு மதனன்று
கனலாயெரிந்துவிட்டால் கருவேதுவுருவேது
ககனபுவனமேது பார்கன்று
பெண்ணுக்குள்ளாணுமாய் ஆணுக்குள்ளலியுமாய்
பெரிதும் சிறிது மில்லா பரவெளியே
பேதம் பலவாய் நின்ற வேகத்தனி முதலை
பேரின்பஞான நிலைபால் தெளியே

உத்தார் மண்ணுக்குள்வித்தாய்நின்றமணியதுகாண்
தன்னுக்குள் தானாய் நின்ற தனியதுகாண்

கண்ணொளிக்கதிராகி கதிருக்குள் மதியாகி
காக்ஷிபாம் நின்றுலங்கு மதனன்று கன
மூன்னாளில் சததியென்னும் பெண்ணைசிருஷ்டித்து
முக்கண்ணனை மோகிக்க வைத்ததேவன்

முத்தொழிலுக்குத்தானே கர்த்தனாகயிருந்து
மூவுலகத்தையும் படைத்ததெவன்
பின்னால் சுடலைதனில் பன்னாள் படுக்கவைத்து
பித்தம் பிடித்து போகவுய்த்ததெவன்
பெண்சாதிப் பிள்ளைப்பெற்று சம்சாரத்தில் சலித்து
பிச்சை யெடுக்கவும் செய்வித்ததேவன்

உத்தார் இன்னானென்றின்னும் நீங்களறியலையா
அன்னாள் விளையாட்டென்று தெரியலையா

கண்ணாலுங் கருத்தாலு மெண்ணாலு மடங்காத
கர்த்தனாய் நின்றிலங்கு மதனன்று
ஞானபதிக்கு மூலஸ் தானக்கடவுளான
நாதனெதற்குச் செய்தார் தவயோகம்
நாடி ஜனகாதியர் தேடி சிவனைகேட்ட
நற்றவப்பொருள் மதனறியூகம்
கானச்சுடலைதோறு மூனப்பிணங்கள் தின்று
களிக்குஞ் சிவனிக்கேது தெய்வீகம்
காமனுக்கஞ்சி முன்னாள் யிமத்திலே யொளிந்த
கைலைவாசனுக் கிர்வாகம்

உத்தார் மானைக்கரம் பிடித்த யீசனையா — அவன்
யானைத்தோலதைப் பார்த்தவேடனையா

கானலையாநீரென்றெண்ணி தானலையாமல்சர்வக்
கடவுளாய் நின்றிலங்கு மதனன்று
மாயன் தனக்குமதன் சேயனாகினால் திரு
மாலுக்குமையல் தந்த தெந்த மகன்
மங்கை வாணிக்குமந்த நங்கைவேணிக்குகந்த
மாப்பிள்ளையுங் கொடுத்த தெந்தமதன்
தாயானசத்திதன்னை நேயமாய் சிவன்சேர்
தத்தளித்திட விட்ட தெந்தமதன்

தக்கன் மதன் சதியால் மிக்கதேவா சுரர்கள்
தானே செழிக்கவிட்ட தெந்தமதன்

உத்தார் { ஞாயகாயுள்ளுக்குள்ளே நீ யோகி
தூயவேதாந்த ஞாயநூல்வாசி }

காயமழியு முன்னே ஸாயைப்பேணிக் கொள்ளுன்னை
காலமும் ரக்ஷிக்கிடுமதனன்று
அங்கஜன் செயலின்றி சங்கரன் செயலானுன
அன்னை தந்தையருன்னைப் பெற்றாரா
அய்யா அருப்புவியோர் சைவயோகஞ் செய்யும்போது
அரஹராவென்றேயாரும் துதிப்பாரா
உங்கள் சிவபக்தர்கள் பெண்களைச்சேர்ந்தபோது
உலகில் மன்மதன் செயலற்றாரா
உத்தமபெண்டுகளை சித்தஜன் செயலன்றி
உலகில் திருமணங்கள் செய்வாரா

(உத்தார்)

பொங்குமணல் விழிமேல் நீர்நாடம்
தங்குமோ சிவனெற்றியில் க்ஷேமம்
கங்கையை ஜடையிலும் மங்கையை இடையிலும்
கட்டி சுமக்கவிட்ட மதனன்று (கன)
செந்தாமரைத்தடமும் சிந்தாமணுதிரளும்
தெருதெருவாயிலங்கும் னகஜோதி
செஞ்சொல் மொழிமடவா ரின்சொல் நடனம் பயில்
சிங்காரமணிமாட மமர்வீதி
நந்தா மணிவிளக்கும் அந்தணர்கள் முழக்கும்
நாசரீகம் ஜொலிக்கும் நகராதி
நஞ்சை வளர்ந்திகழுஞ் தஞ்சை மேட்டில் வசிக்கும்
நாவலனெனவெங்கும் ப்ரக்யாதி

[உத்தார்]

சந்ததமோங்கும் தமிழ்கவிராஜன்
சுந்தரகுண வி எஸ் பாப்புதாசன்

கந்தங் கமழ்மதுரகவிஜெயக்கொடி கொண்டு
காலமும் வெற்றி தருமதனன்று (கன)

விருத்தம்

பதினெண் புராணத்தில் மதன் வெந்த வோரிடம்
பகிஷ்கார மாய்க் கூறுதா
பலமதன் பலசிவன் பலயிடம் பலபக்கம்
பகருமொழி நிறை வேறுதா
விதிநிலை தவறியேவெறி கொண்டவன்போல்
விருதாவி லுளருவதினல்
விளையாட்டுப்பிள்ளைகள் விவகாரம் பேசிடும்
வேடிக்கைப்போல் தோணுதே
எதிர்நின்று யின்னதுமெய் இன்னது பொய்யெனச்
சொல்
இன்னமும் வலிமை யுண்டா
எட்டாத கொம்புத்தேன் கிட்டாதென்றெண்ணியும்
கொட்டாவி விடப்போகுமா
மதிகொண்டிடாதெந்தன் கேள்விக்குபதில் தந்து
மகிழ் கொண்டுமனை சென்றிடும
மதமிஞ்சிப் பேசினல்சதிவந்து நேரிடும்
மரியாதைக் கழகல்லவே

கணணிகள்

சின்மயபரபிர்ம மன்மதசொரூபத்தை
சினந்தெரித்த தெந்தசிவனையா—சத்தி
மூனம் பெற்றெடுத்த சிவனெவனையா—உங்கள்
சேதியெல்லா—மாதியந்த
மோதிடக்கேள் —சாதியாதே நீ
தேவி சத்திப்பாலுண்ட தெந்த சிவன் தானை
மேவி மணர்ந்து நின்ற தெந்தசிவன்

வக்ரத்துண்ட கணேசன் அக்காலத்திலுதித்த
வருத்துவிட்ட தெந்தசிவனையா—வயற்றில்
புகுத்து விட்ட தெந்த சிவனையா—பின்னும்
வாகாய் மூவரோ டேகி தொந்திக்குள்
சோகமுற்றபூ—சாகசஞ் செய்தது
வருந்தி முத்தொழில் பெற்றதெந்தசிவன் மதனை
எரித்தானென்று நீ சொன்ன தெந்தசிவன் [சி
ஊழிகாலத்திலந்த காளிகாதேவி தோன்றி
உற்பத்திசெய்த தெந்தசிவனையா—தொழில்
கற்பித்துவிட்ட தெந்த சிவனைய—மதி
யாசனைகெட்ட பாசத்தால் தட்ட
மோசமாம் பாட்டை சாஸ்வீதத்துடன்
உளர நீரும் வந்தது யெந்த சிவன் மதன்
தளர கொலைபுரிந்த தெந்த சிவன் சி
துரைப்பாண்டியனுக்கு சுதனாய் சிவன் ஜெனித்து
மானிலம் ஆண்டதெந்த சிவனையா—மங்கை
மீனாளை மணஞ்செய்த தாரையா இன்னம்
மாறுபாடாய் நக்கீரனிடம் வாது
கூறிப்பொய்யுரை பாரோர் நகைத்திட
மனிதனாகவேவந்த தெந்தசிவன் நீங்கள்
தனிமுதற் பொருளென்ற தெந்தசிவன்
வல்லாள ராஜனுக்கு பிள்ளையாய்ப் பிறந்தமே
வடிவெடுத்தது யெந்தசிவனையா பலர்
குடி புகுந்தது எந்த சிவனையா
பட்டிலாப்புகழ்—பட்டினத்தாரும்
சிஷ்டராகியே—சட்டியேந்தியே
முற்றும் பிச்சையெடுத்த தெந்தசிவன் திரு
வொற்றியூர் லிங்கமான தெந்தசிவன் [சி
கயிலையில் தவஞ்செய்து செயலற்றிருந்ததெவன்
கனகோளகியுற்ற வெதனையா—அங்க

வனத்தில் யோகித்த தெந்தசிவனையா—இன்னும்
கருணைகாளத்தி அருணை கொறுக்கையில்
மருவித்வஞ்செய்து—உருவில்மாரனை

கனலாகவெரித்தது யெந்தசிவன்—குடலில்
தனலாகியெரித்து யெந்தசிவன்
இத்தனைபேர்சிவனில் சித்தஜனையெரித்த
சுத்தசிவனுமெந்த சிவனையா—நூல்கள
வித்யசமாயுரைத்த தேனையா நாளும்
எஞ்சிடாப்புகழ்—தஞ்சை முத்தமிழ்
செஞ்சொல் பாப்புதாசன் சொலகேள்விக்கு
எடுத்துபதில் சொல்லெழுந்தோடாதே—இதோ
விடுத்தேன் சத்தியம் வீண்வாயாடாதே

விருத்தம்

கண்ணலடு புல்கையதனை மின்னுமுகி லெனமயில்
கலபம விரித்தாடவும்
கார்ககாலம் வந்தணுகி விட்டதென கோகிலம்
காம்போதி சுரம்பாடவும்
கிண்ணரப் பக்ஷிகள் மென்னரம் பிசையொத்து
கெம்பீர சுதி கூட்டவும்
கிஞ்சுரங்கள் கூடி கெஞ்சுறு மிர்தங்க
கெத்துத்தாளம் போடவும்
அன்னமுலவுஞ் சோலை மன்னுங்காவேரிசூழ்
அணிமாடகூடமேவும்
அற்புத தஞ்சை நகர் விற்பனக்கவிராஜா
ணும் பாப்புதாசன் முன்னே
சொன்னயம் பொருணயம் சுதிலயமறியாத
சுத்த மடமைப்புலவரை
சும்மாவிடாமலே கும்மாக்கொடுத்துகவி
சூடிட் டனுப்புவேனே

சன்னிகள்

தாம்ததிங்கிணத் தோ மென்றாடுந்
தாண்டவப் புலவா ராமமூர்த்தி
சாண்டோ நீ பலவா சும்மா நீ
தாண்டாதே பலபா ஒரு
சாண்பிள்ளையாய் நான் பிறந்தாலும்
ஆண்பிள்ளை பலவா எப்போதும்
வீமனுக் கழுவா ஏன்வந்தீர்
தான்பெரும் மிழவா (தாம்)
வான்புவனமெல்லாம் படைத்தவன்
சாம்பசிவ னென்றீர அவனல்
நம்பிறந்தோ மென்றீர் பாழும்பறப்
பாம்புபோ லுழன்றீர் அவன்
மானிடரைப்போல் யோனியிற் பிறப்
பானென்றுஞ் சொன்னீர பிறந்திறப்
பானென்றுஞ் சொன்னீர கொலைசிறப்
பானென்றுஞ் சொன்னீர் [தாம்]
நீங்களிப்போதும் பரங்காய சொன்னது
ஓங்காரப் பொருளா நமைவிட்டு
நீங்காதப் பொருளா சுடலையிற்
தூங்காதப் பொருளா கல்ல்
நீதந்தவரிப் பூதப் படையில்
நின்றிடும் பொருளா பன்றிக்கறி
தின்றிடும் பொருளா மாட்டிலேறி
சென்றிடும் பொருளா (தாம்)

சாங்கோ பாங்கமாய் தாங்கள் சொன்னது
சன்மார்க்க தெய்வமா—உங்களது
நன் மார்க்க சைவமா—இதென்ன
தெம்மாடித்தனமா பெரும்

சந்தோஷத்துடன் வந்து பாரினில்
சம்சாரம் செபமா பதிலதை
சாற்றுவீர் திறமா
கல் மண் செம்பு பல்லுருவமும்
கடவுளாகுமா கண்ணுல்கண்
டிடவும் போகுமா நமக்கது
திடமுமாகுமா அதை
கையெடுத்துக்கும்பிட் டால்நா
மூயய வந்திடுமா வரத்தை
கையில் தந்திடுமா மோக்ஷத்தில்
ஐயோ மூந்திடுமா தாம்
கொல்மூனி காட்டேரி பேச்சி
கோமாரிக் காளி நரபலிக்
கேமாந்த மூளி பகவதி
சாமுண்டி நீலி இன்னும்
குட்டி சாத்தான் மட்டிக் காத்தான்
தொட்டியத் தானும் பாவாடை
கட்டிமுத்தானும் வைத்துக்கும்
பிட்டசேன் காணும்
அசலானவழிக கண்டறியா
கசுமாலப் பேயே சிவனை
விசுவாசித் தாயே இதுதான்
உஜிதமென் றுயே அந்த
யானைமுகனை ஆறு முகனை
பேணி நின்றுயே கிருஷ்ணனை
ஒணிநின்றுயே ராமனை
வீணில் கொண் டாயே
காமமென்பது நான் மறையுங்கா
ணுமுதற்கட வுள் மூவர்க்கு
மேன்மை தந்தபொருள் உன்னுள்ளே
மதித்துகொள் அந்த

காலி புலவர்போலிக்கதையை
வேலிக்கம்புரந் தன் சித்தர்கள்
நூலின்வழியே நில் ஞானத்தை
கோலியே மனதில் — தாம

தாமரைத் தடமே மிகுந் திருந்
தஞ்சையில் வாசன் மூத்தமிழ்
செஞ்சொல் உலாசன் எவர்க்கு
மஞ்டா சிநேசன் உயர்

தங்கமெடல் பெற்றோங்கும் கெடி
முழங்கு விசேஷன் மெட்டுத்தெரு
தங்கும விலாசன் புகழ்பொங்
கும் பாப்புதாசன் — தாம்

விருத்தம்

வந்து வந்து காலமெல்லாம் வரிசைகாட்டி
மதன்வெந்த தற்குத்தக்க ருஜூ கொடாமல்
நொந்துநொந்து மெல்ல முழங்கவுமெலாமல்
ரோஷத்தால் மீசை துடி துடிக்கலானீர்
வெந்தழிந்த மதனுக்கத்தாக்ஷியாக
மேவியாணும் பெண்ணும் லீலை செய்யும்போது
விந்து வந்து வெந்திரங்குதென்று சொல்லி
வீண்விவகாரத்தைக் கொண்டு வெளிபட்டீரே

லாவணி மெட்டு

ஆயிரத் தெட்டடிபாயும் வேங்கையை சுழற்றிகட
வாயில்போட்டு பானம் பண்ணும் சிங்கம் சிங்கம்
அற்பமதியாலே கேட்டத் தப்பிதக் கேள்விக்குத்தக்க
ஆன்சர் சொல்லும் பர்ப்புதாசன் தங்கம் தங்கம்

சரணங்கள்

ஷாயிரா நீ சொன்னரெத்தம் தூயவெள்ளையாகமாறி
சமையுமோவிந்துருவங் கொண்டு கொண்டு
சாஸ்திரம்படித்தவுங்கள வாத்தியாரின் வண்டவாளம்
சவிஸ்தாரமாய் விளங்கு தின்று இன்று
தாயிடத்து இத்தரெத்தம் தந்தையின் விந்தோடுகூடி
தான் கலக்கும் வெளளைசிவப்பாக ஆக
தணல்பட்டது எரிந்தால் புணர்ச்சத்தழிந்து விர்த்தி
தடைபட்டுப்போகும் வெளி யாக ஆக
ஆயினுந் திருவள்ளுவ நாயனர் நான வெட்டியுன்
ஆசானுமறியர்ரந்த ரங்கம் ரங்கம்
விந்துமூளையிலிருந்து வெந்து ரெத்தமாய் முறிந்து
வெண்மையாகு தென்றப்புல வீரே தேரே
வெந்து போனரெத்தமது எந்த விதம் வெண்மை
யாகும்
விளங்க யெனக்குச் சொல்லும் நீரே நீரே
இந்த விதம் நீங்கள் சொல்ல வந்திடிலந்தமன்மதன்
இவ் வுலகில் ஜெனிக்கும்முன் பாரே பாரே
இன்பமுடன் சதியோடு கூடி லீலைசெய்யும் போது
எந்தமதன் வெந்தழிந்தான் கூறே கூறே
அந்த அகார உகார மந்திரமே விந்துநாதம்
அதுவே நீ யெ த்திட்ட அங்கம் அங்கம்
வாசி நிலையாலே கேடுந் தேசிகனு மீசனுக்கும்
மதன்வாதைவிட்டதுண்டா சொல்லும்சொல்லும்
யாதொருத்தி மெய்யில் சிரமீதொருத்திமையல் கொள்
யாளெரிந்த தெப்படிப் புல்லும் புல்லும் [ள
ஈசராதி மூவர்தேவர் பூசுராதியாவர்கட்கும்
இச்சையற்றால்யாது முக்தி விள்ளும் விள்ளும்
என்காணும் பித்தம் பிடித்து வீண்காலத்தை கழிக்
(குறீர்
இன்னு முன் குருவைகேட்டுக் கொள்ளும் கொள்ளும்

ஆசையில்லாவிட்டாலிந்த மாசபையில் நீயும்வந்து
அமர்ந்து யார்கொடுத்த தங்கம் தங்கம் (அற்
வெள்ளை லும்புத் துண்டமென்றும் விட்டமென்றும்
விரிக்கவந்தீரேக்கடை வீணாய் வீணாய் [சட்டமென்றும்
வெளெரிந்ததற்கிதை மேற்கோளாகக் காட்டவந்
வேகாதுங்கள் கைவரிசை பாணு பாணு [திரோ
பள்ளமும் படுகுழியும் விள்ளையாருமக் கேட்டது
பஞ்சபாணன் கதைக்கிதுத் தூணு தூணு
பாரில் கடவுளொன்றனை ஊருக்குழந்தையுஞ் சொல்
பாதகருமக்கு தெய்வ மூணு மூணு [லும்
அல்லல் பண்ணியெங்களிடங் கல்லல் பண்ணிப்
போவீராணுல்
அடைவீர் சபையில் மானபங்கம் பங்கம் (அந்]
இந்திரலோக மளாவி சந்தன மரங்கள் தாவி
ஏழிசை வண்டுகள் சுரம் பாடும் பாடும்
ஏற்பெற மேனகை ரமபைஊர்வசிதிலோதமைபோல்
இளங்குயில் பாடமயிலாடும் ஆடும்
காந்தக் சந்திரக் கல்மீது குந்திலககாமைணு புல் புல்
தத்திமித்தோம் என்றுத்தாளம் போடும் போடும்
தஞ்சை மேட்டுத் தெருவில்வாழ் பஞ்சலக்ஷணமுத்
தாசன் பாப்பு சொல்லைக்கேட்டுஓடும்ஓடும் [தமிழ்
அந்தருடான் பஸ்கியெல்லா மிங்கயிடத்தில் செல்லாது
அழைக்கு தேவுமை ஸ்ரீரங்கம் ரங்கம்

விருத்தம்

படமகுட முடியில் நடமிடு செடிய கடலுலகில்
படருமடர் தடவரைகளும்
பரவிஇகழ் பரதமகள் புருவநுதல் திலதமென
படிவமுறு வடிவமுடனே
தடமகுட முடியரசர் திடமுடனே யடிதொழுது
தருகுந் திறை பெருகு சோழன்

தனிகவிகை நனிபெருகி இனமணிகள் தினமெறியும்
சலதியென வருங் காவேரி
கடமைகொடு மடைநிறைய படையுழவர் புடை மருவி
கடைமகளிர் நடவு நடவே
கதிர்செந்நெல் நிதியென்ன போதிமன்னுபதிதஞ்சை
கவி பாப்பு தாச னெதிரே
ஜடை மகுட முடிபரமன் வடமலையிற் கடவுள் மதன்
ஜடமழிவு படக்கொன்றதாய்
தடதடனெ கவிபொழியு மடமைப்புலவரை சபையில்
தலைகவிழ கணை பொழிவேனே

விருத்தம்

கலைமகட னுருமருவிக்கன மிசை வெண்முகில் பரவி
கணங்களெனத் திரண்டு நறுங்கடல் நீர் மாந்தி
கதிரவனின் கொதிப்படக்கிகடியவிட மெனப்பரந்து
கனல் விழியைக் கொடு நோக்கிக் கடிந்து [சீறி
மலையரசன் புயந்தழுவி மணிகளி பல வெகுமதிகள்
மகிழ்ச்சியொடு பெருகுவிலை மகளிர் போலும்
மதன் பகழி யெனப் பொழியு மழைத்துளிகள் மிகப்
மருதமுதல் பாலைநில மாக்கள் சாடி [பெருகி
அலைகளகர மெனவீசி ஆடையென நுரைப்போர்த்து
அரற்கூந்த லென மகளி ரழகுவாய்ந்து
அணிகுலவுங் காவேரி பணிகொள்திரு தஞ்சைபதி
அமர்கவிஞன் பாப்புதாசன் அறிஞன் முன்னே
சிலைமதனை சிவனெரித் திட்டதாய் கவிகோர்த்து
செப்பவரு மற்பமட சிந்தையோரை
ஜெயமடைய ஜெய பரி ஜெயவிருது கொடியுடன்
ஜெய சிங்கம் வந்தேன் ஜெயசபையில் மாதோ

விருத்தம்

என்னைநீர் கேட்கவும் நான்பதில் சொல்லவும்
எனக்கு பண்டிகையுமில்லை

இத்தலை யத்தலை புரட்டும் புராணங்கள்
எங்கட்குச் சொந்தமில்லை
அன்னதை மறந்து நீர் என்னிட மடிக்கடி
அனுவஸ்யக் கேள்வி கேட்டீர்
அடுத்தொன்றைக்கேட்டால் தடுத்ததை மாற்றிவீண்
ஆபாசமாய் பாடுநீர்
நன்னயமாய்த் தமிழ் தன்னையுங் கறைகொண்ட
நாவலருமக்கு அழகோ
காடோடிகவி கொண்டு ஓடோடித் திரிகின்ற
நாண மில்லாத புலவா
சொன்னதைச் சொல்லுங் கிளிப்பிள்ளை யென்றபேர்
சுத்தமா யுமக்கே தகும்
சொர்ப்பனத் திலுமென்னை இப்புவியில் நீர்வெல்ல
சூரத்வமில்லை பாரே

## பாட்டு

சத்துசித் தானந்த மதன்
செத்தழிந்தானென்று சொன்னவீணரே
வெறுந் தாண்டவம் போடாதே மதியீனரே
சுத்தநாதம் விந்து வேரு
சுக்கிலஸ்ரோணிதம் யேரு சொல்லுமே—பரஞ்
சோதியிற் கலந்ததெனப் புல்லுமே

## உத்தார்

பித்தம் விந்து நாதம் ரெண்டும் கூடியே—முன்னே
பிறந்தது யார் செயல் சொல்ருடியே
செத்து சாம்பலான சிவன்
சித்தஜனைக்கொல்லுவானோ வீணரே
மங்கையர்களுககு காமம்
எங்குதிக்கு தென்று என்னைக்கேட்டீரே அதன்
மர்மம் சொன்னால் நீயறியமாட்டீரே
பொங்கும் மாதா காமத்திற்கு

தங்குமாண் புருஷர்களே காரணம் பார்வை
புகும்வழி மனமடைட சம்பூரணம்
திங்கள் தோறு மாதவிடாய்
அங்கத்தில கழிந்தால் தேகஞ்சுத்தமே அது
சேர்ந்திடில் கற்பமதிற் கனர்த்தமே

உத்தார

கொங்கையில் ரத்தமூறிந்து பாலகாய நீங்கள்
குழந்தையிற் குடித்த தென்னமேலதாய்
சங்கையிலை றி ஜீவோற்பத்தி
சிந்தாமணி நூலைப்பாரும் வீணரே (வெறுந்)
தந்தைவிந்தும் தாயின் நாத
மூந்திரண்டு கருக்குழி தங்கியே ஆண் பெண்
காணுதிக்கும் கற்பத்தில் விளங்கியே
விந்தது மிகுந்திடில் ஆண்
அந்தநாத மிகுந்தால் பெண்ணாகுமே உயிர்
மெய்யுடன் ஜீவன் கலந்துப்போகுமே
பந்தயம் பேசியது போல்
துந்தனு டேப்பையுந் தந்து ஓடுங்காண் அன்றிப்
பதுங்கினுல் வரும் பெரும் கேடுகாண்

உத்தார

சந்தேகமிருக்தால் குருவை கூட்டிவா புராண
சாஸ்திரத்தின் மூலம் ருஜு காட்டிவா
இந்திரியம் விந்தென வறிந்திடாத
மந்த புத்தியீனரே மெறுந்
அஞ்சலி செய்கு விரும்மை
ஆண்டுகாக்கும் எங்கள் தெய்வமாரனே—ஜெக
நாதனென்றறிந்திடாதே சோரனே
ரஞ்சிதமணி மாட கூடம்
கொஞ்சிடும் சீர்தஞ்சை சமஸ்தானமே —இந்த

நானிலத்தில் மாக்ஷபெற்ற ஸ்தானமே
பஞ்சைகள் போடுங் கொடியைப்
பிஞ்சிட அறுத்த கவிராஜனும் பகதூர்
சிங்கமென்ற வி. எஸ். பாப்புதாசனும

உத்தார்

கொஞ்சமல்ல உன்னைப்போல் கோடிபேர் வந்து
குந்தி குந்தி தோற்றெழுந்து ஓடினார்
தஞ்சமென்று என்குருதான்
அஞ்சலி செய்தோடும் சுத்த வீணரே வெறும்

விருத்தம்

ஜீவனோடு சரீரம் பெற்று நித்தப்பூவில்
செய்கின்ற பாவபுண்யம் செய்தபின்பு
மேவுமிரு வர்ககுபாத்ய மென்றபோது
மெய்யழிந்து மண்ணோடு மண்ணாய்ப்போமே
தாவுமந்த ஜீவனுக்கோ உருவமில்லை
தான் வெட்ட வெளியோடு கலந்துபோச்சே
பாவமெங்கே புண்யமெங்கே மோக்ஷமெங்கே
பாழும் யெமதண்டனைதா னெதற்குக் கூறே

பாட்டு

சித்தஜன் கதையிருக்க தத்துவத்தைப் பற்றிகேட்க
செப்பிவிட்டவுன் குருவைக் கொண்டா கொண்டா
செண்டுபோல் பந்தாடிவுனைக கொண்டு யெமலோகத
திலே
சேர்த்துந்தன் கொடியறுப்பேன் ரெண்டா ரெண்டா
முத்தைப்போல் திரண்டிருண்டு சுத்தநாத விந்திரண்டு
முழங்கும் கருங்குழியல் பாரு பாரு
ஓமாகமே பிர்மசொரூபமாகவேயிருந்து பிண்டம்
முடிகருஞ்சட்டிப்பானைபோல் தேரு தேரு
செத்தபினபு ஜீவனுஞ்சென்றொத்தாகாய திறங்
[கொண்டு

சென்று மாய்கையிலடங்கு தையா அய்யா
சிங்கை செய்யுடற் குள்ளுயிர் வந்திடும் தேவழியே
சிவப்பு கருப்பு மல்ல மெய்யா மெய்யா
சித்திரமாயன்னை யுன்னைப்பெற்ற போதேதொப்புள்
கொடி
சென்று சுவாசத்தில் நிற்குந்துண்டா துண்டா (செ)
மனிதவுற்பத்திக்குமூன தனித்தனி நாதவிந்து
மாய்கையிற் கலந்து நிற்கு தண்ணே அண்ணே
மாலய ன்சிவன்றன்னுயுள் காலயுத்தில் முடிவு
மடடுமென்றுன் மனத்தினி லெண்ணே எண்ணே
புனிதரேவர் ஜனன மனிதோற்சத்திக்கு முன்
பூவைசசத்தி மூவர்கட்கு முன்னே முன்னே
புத்தமிர்த பாலையூட்டி முத்தங் கொடுத்த தென்றறி
பூட்டகய் வெளியிடாதே சொன்னேன் சொன்னேன்
சினேகித ரேயவரவா ஆயுள் முடிந்தப் பிறகு
செய்தபுண்ய பர்வமிச்சங் கண்டாய் கண்டாய் [செ
எலும்பு தசைநரம்பின்பலங் கணங்கென்னைக் கேட்
எடுத்துரைக்கிறேனொரு வாறு வாறு [டீர்
எண்ணிபார் எலும்பு பலம் முன்னூற்றறுபது தசை
ஏகமொத்தம் பலமறு நூறு நூறு
புலம் பாதே நரம்பதின் பலம் நாலுயிரைக் கொண்டு
போகவொரு நமனில்லைத் தேறு தேறு
புண்ணிய பாவமிரண்டு மண்ணிலே முடி வடையும்
பூர்வஞானிகளைக் கேட்டுப் பாரு பாரு
சிலம் பங்கற்றவரே கேள் மலமூன்றதை யொழிக்கும்
சித்தமே காரணமறி நன்றாய் நன்றாய்
புலியும் பசுவுமொரு துறையில் ஜலமருந்தி
புனத்திலுறங்குஞ்சோழ ராஜயம் ராஜ்யம்
பூமகள் மாமகள் கலை நாமகள் தாமிங்குவர
புரிவார்த்தினமுங் கோர்ட்டில் வியாஜ்யம் வியாஜயம்

கலியுக தர்மமோக்ஷ கற்பக நாடிது வென்று
கணலகோருஞ் சொல்வர் சாக்ஷயம் சாக்ஷயம்
காவேரி வளம் சூழ் தஞ்சை பாவலன பாப்புதாசனை
கவியால் வெல்லும் புலவர் பூஜ்யம் பூஜயம்
சிலைமதன் வெந்த கக்ஷி புலவர் கருவறுக்க
சிங்கமிதோ காட்டி விட்டேன் ஜெண்டா ஜெண்டா
செ

விருத்தம

ஆலயங்கள் மாரனுக்கே னில்லையென்றும்
அரனுக்கா யிரத்தெட்டுஸ் தலமுண்டென்றும்
சாலநீ கேட்டதற்கு பதிலைக்கேளும்
தவசித்தர் பதினெண்மர் சமாதி கொண்டு
மூளமிடு ஸ்தலத்தை யெல்லாஞ் சிவன் பேரிட்டு
மோங்குதையா ஆவிடைலிங்கம் ஸ்தாபித்து
மூலமக னென்றிருக்க மதம்பிடித்து
மொழியாதே வோருன்றை முதயல்லோரே

பாட்டு

சிவனுக்காலயமேது சித்தர் களடக்கமல்லாது
கவனமாய் கேளுங்காண்சாது கண்டபடிவுளரலா
காது சி
காசியில் திருநந்திதேவர் கனமிகும் பழனியிலே
போகர்
பேசுமெட்டிக்குடியில்வால்மீகர் பெருஞ்சேது பதஞ்
சலியோகர்
தில்லையில்திருமூலரடக்கம்திருப்பதி கொங்கணரடக்கம்
வல்லபொய்யூர் கோரக்கரடக்கம் மதுரையில் சுந்தர
ரடக்கம் சி
திருப்பரங்குன்றில் மச்சமுனி ஸ்ரீரங்கம் தன்னில்
சட்டமுனி

அருட்பெறுங்குடந்தை கும்பமுனி ஆருரில் பார்
கமலமுனி [சி]
அருணையி லிடைக்காடராட்டம் அரிவேளுர்தன் றந்திரி
நாட்டம்
பரன்கோவில் போதகுரு கோட்டம் பாம்பாட்டிகடை
யூரில் ஸ்ரேஷ்டம் சி
மாயூரந்தனில்குதம்பைசித்தர் வாழழகர்மலையில்
ராமபத்தர்
தூபகுணமுடையபரிசுத்தர் துலங்கிநின்றூர்பதினெண்
சித்தர்
ஆயிரத்தெட்டு சிவஸ்தலம் ஆனதிதைக்கொண்டு
பிரபலம்
சாயுமோ உந்தனின் சுமநலம் சாற்றும் சங்கரன்
கோவில குளம் சி
அந்தகர் ஆண்டிகள் பிழைக்க அமைத்தார் சிவன்
கோயில் சிறக்க
இந்துமதமெங்கும தழைக்க எற்றூர்லிங்க மாவிடை
கிலைக்க சி
தஞ்சைப்பழிமேட்டில் வாசன் தண்டமிழ்கலைவல்லோர்
நேசன்
விஞ்சை வி எஸ் பாப்புதாசன் விணடேன் கேள்விக்
கான்ஸர் கண்டசன்

விருத்தம்

கருணைமுகில் பெருகிதமிழ் மழைபொழியுந் திருநாகை
கனமிகு மென்குரு தீரனும்
கவிராஜர் புவிராஜர் தவராஜா சபைமெச்சும்
கல்வியதி லதி சூரனும்
பெருமை மிகுமன்மத னெரியாத கக்ஷிமைப்
பேசியிவ்வுலகமெல்லாம்

பெரியோர்கள் முன்னின்று மதனெரியவிலையென்று
பிரித்துசெய் நூல்கள் காட்டி
அருமையோடு சடகக்கண சிம்பமுகம் வைத்த
அபரஞ்சித் தோடா வுடன்
ஆனதோர் வாசிவா னுபதேசி யெனும்பெயரு
மழகாக வாங்கி வைத்து
பெருமைசேர் தஞ்சை நகரென்னும் புதாரினில்
போய் படுத்துறங்கு மென்னை
புதிதாக வந்து நீ யக்காட்டைக்கலைத்தாலிக்
புலிகண்டு உன்னை விடுமோ

விருத்தம்

முக்கனிக ளுற்றெடுத்துப் பொழிரசமும் சுரும்பிணங்
[கள
முளரிவாய் மடுதனுமிழ் மூதிய தேனும்
மூலமாதா மெய்க்களப சந்தனங் குங்கு மமும்
முடிவேந்த ரிளமகளிர் முயங்கும் நீரும்
சர்க்கரையின் சாரமுந் தொக்குபனை தேன்கமுகு
தனில் வழிந் தொழுகி வழியோடு பாகும்
தரளமணி புரளும் வயல் கனிலோடி சினைகூடி
தகதகென நெற்கதிர் தாழ்ந்துசாய
சொர்க்ககர் வளமு மிகன் பக்கமதிலணு காத
சோழமக ராஜனின் சுபாக்ஷியோங்கும்
கருதி திகழ் தஞ்சைநகர் கருதிவளர் முத்தமிழ்
சுகுணகவி ராஜன்பாப்பு தாசன் முன்னே
தர்க்கமியவந்திடும் புலவோர்கள் வாயதனை
தருமெனது சேள்விமால் தையல் போட்டு
தக்கசபை யோரறிய சக்கருட்டான் வாங்கி
தாங்குவே னெரிந்தகக்ஷி தலைமேல் மாதே

கர்மத்தொழிலைபுரியும் பிர்மா விஷ்ணு ருமதிரனை
கடவுளென்பதாவுங்கள் ஞானம் ஞானம்
காமபரபிர்மத்திற்கு நாமமேதுருபமேது
கற்றவர்க்கிதென்ன மதிஈனம் ஈனம்
பிர்மத்திற்குப் பெண்டுபிள்ளை ஜென்மத்தின் சரீரத்
தொல்லை
பேசுதற்குமேது வாசஸ் தானம் தானம்
பெரு மூருஞ் சீருஞ் செல்வந்தேருங்கொடிகுடைபட
பெற்றதேது ஏதுதவ மோனம் மோனம்
வர்மங்கொடுமை வியாகூலங் தர்மங்கருணை தயாளம்
வம்புதும்பு ஜம்படம்ப மானம் மானம்
மாடகூட மரண்பனைபீடம் ஆடல்பாடல்மேள
வாத்தியங்களேது பிரதானம் தானம்
கருவிகரணாதி யோடுப் பொறிப் புலனுடையோர்களை
கடவுளென்பதாவுங்கள் ஞானம் ஞானம்

விருத்தம்

தன்னையொரு வர்க்கோரி தவஞ்செய்வ ததுபோக
தான்முந்தி தவஞ்செய்ததேன்
சர்வகுந் தானுமிருக்கையில் பிள்ளையிடம்
தாழ்ந்து மந்த்ரங் கற்றதேன்
அன்னையு தந்தையு மனைவர்க்குந் தானுகி
மவரொருவர் கருவுற்றதேன்
அயன் மாலுந்தேடியே காணுத முடிதனில்
அங்கிருவர் குடியுற்றதேன்
முன்னையு பின்னையு மூர்த்தியாய் நின்றவர்
முனிவர் சாபம் பெற்றதேன்
மூலமுடி வற்றபொருள் மாதர் சாபம் பெற்று,

மூலையிலுண்டிட்ட தேன்
பொன்னையும் பொருளையும் வேண்டாததெய்வம்பலர்
பூஜைக்குடன் பட்டதேன்
பூவினில் வாழ் புலவர் புகழ்ந்திடப் பொருத்தமாய்
புகலுவீர் பதிலைமாதோ

பாட்டு

அகமும் புறமும் அடிநடுவு முடிவுமாகி
அணுவுககணவானதே பிர்மம் பிர்மம்
அத்துவித தத்துவத்தில் சத்து சித்தானந்தமாகி
ஆடி விளையாடி நிற்கும் மர்மம மர்மம்
இகமும் பரமுந்தனக் கிணை யொருவமின்றி
இலங்கி நடத்துந்தொழில் கர்மம் கர்மம்
எள்ளுக்குள் எண்ணையைப் போலே உள்ளுக்கும்
வெளிக்குமின்று
ஈசன் மூவரைப்படைத்த தர்மம் தர்மம்
ககனுயர் மலைகளின் குகையில் வசிப்பவரை
கடவுளென்பதடுவுங்கள் ஞானம் ஞானம்

விருத்தம்

பாணசுரன் றணக்குங்கள் சிவன் வரந்தந்து
படைவீரனாக நிற்க
பாரிலனி ருத்ரனால் சூரனுங் கிருஷ்ணனும்
பலமான யுத்தஞ் செய்து
வீணாக சூரன்படை பின்வாங்கியோடிட
வேருண்டுங்கள் சிவனோடிட
கோணாமல் வந்துசிவன் கிருஷ்ணன் காலில் வீழ்ந்து
கும்பிட்ட சுரனையு மீட்டான்
கோபாலன் பின்னுமச்சூரன் மகளை சிறை
கொண்டு தன்னூர்க்கேகினான்
காணாதக்கண்குருடர் யானையைப்பார்த்திட்ட
கதையாச்சு துங்கள் ஞாயம்

கவிமரசர் பெருகித்திகழ் கனச்சபையில் கவிபாடி
கண்யமாம் கருத்தைக்கூறே

பாட்டு

மார்க்கண்டனுக் கீரெட்டாயுள் தீர்க்கமாயளித்துமாறி
மறலியைக் கொன்றவனு மெய்யன் மெய்யன்
மாமன்யாகத்தையழித்து கோமுனிவோரை வதைத்து
மனைவிக்கழுகவனு துய்மன் துய்யன்
பாற்கடற்கடைந்தமுதம் மெற்கவே தேவர்களித்து
பாரபக்ஷஞ்செயதவனு அய்யன் அய்யன்
பாருமந்தநாளில் ஒரு சூரனைடெதிர்த்து தோற்று
பதறிமுழித்தவனு சைவன் சைவன்
கார்க்கவழிக்கரக்ஷிக்க கடமைத்தவறு வோரை
கடவுளென்பதாவுங்கள் ஞானம் ஞானம்

பாட்டு

மிட்டன்சைக்கிள் மோட்டாரெல்லாம்ரோட்டிலெங்குய்
[நாட்டியஞ் செம்
பிரபலமிக்க நான்கு வீதி வீதி
பெரிய பெரிய ஜமீன்துரைமார் பங்களாவெங்கும்
பிரகாசந்தரும் ஜக ஜோதி ஜோதி
க்ரோடன்ஸுகள் நந்தவனத் தோட்டங்கள் தோறும்
ஜொலிக்கும்
கோனகர் தஞ்சை தான் பிரக்யாதி யாதி
கோட்டைவெளிகீழவாசல் மேட்டுத்தெருவில்வசிக்கும்
கோமான் வி எஸ் பாப்புதாசன் நீதி நீதி
காடடவந்த கைவரிசை யாட்டம் பலிக்காது இவன்
கடவுளென்பதாவுங்கள் ஞானம் ஞானம்

விருத்தம்

ராவணன் மகனந்த ராமன்மீதில் விட்ட
நாகபாசத்தைப் போலே

நானுமை யொரு கேள்வி ப்ரசத்தினுல் கட்டி
கடுசபையில் விட்டு விட்டால்
கேவலமுனனுடைய பவர்களும் போய்விடும்
கீலகம் வந்துகேரும்
கெம்பீரமான யிக்கச்சேரிப் பாழடையும்
செடி பெற்ற சபையுங் கலையும்
தேவைசெய் வோர்கட்கு த்ரவியமும் நஷ்டப்படும்
திட்டியமை பவர் தூற்றுவார்
செத்தவுங்களின் கக்ஷியித்தோடு ரத்தாகும்
தீரருமை யாரு மதியார்
நாவலரே யித்தனைக் கஷ்டத்தை யெண்ணியே
நடை யினுமை விட்டுவாரேன்
நானென்ற வீணகம் பாவத்தை நீக்கியே
ஞானமாய்ப் பாடுவீரே

பல்லவி

மாய்கையாயிருந்த பிர்மம் அக்கினியிற்சூடு போல
மாறியதில் நின்றுவேறு பட்டுபட்டு
மாயாசத்திகளாய்த்தோன்றி தீயோடைத்து பூதமாக
மருவி நின்றதே வொன்றைத் தொட்டு தொட்டு
ஆகாயமக்கியி காற்று மண் தண்ணீரெனப்பிரிந்து
அஞ்சுபஞ்சவர்ணக்கலர் விட்டு விட்டு
அத்தவிதம் துவிதமாய் சத்துசித்தானந் தமயம்
ஆகி நின்றதற்கில்லை மட்டும் மட்டும்
மாகாந்தகாரத்தில் நீக்கியே காந்தமயமாய் சிவன்
மூவரையுமாட்டி வைக்கு தைய்யா அய்யா
தேஜோமயமான வொன்றில் ராஜசந்தாமசம்
சாந்தம்
திரிகுணங்களாய்த் தோன்றி முன்னே முன்னே
சிவன் பிர்ம் விஷ்ணு வென்று புவனமதினுதித்து
செய்யும் முத்தொழிலைப்பெற்று ரண்ணே அண்ணே

மோசனை வெறென்னமலர் வாசனை நிறமுமொன்ருய்
ஒத்திருக்குந்தன்மையை சற்றுன்னே உன்னே
உன்னைப்போலு மென்னைப்போலு மன்னிய சிவன்
செயலால்

ஒன்றுமே நடைபெருத சொன்னேன் சொன்
னேன்

மோசமில்லா ஞானகுரு தேசிசனுக்கிது சிவன்
மூவரை மாட்டி வைக்குதைய்யா அய்யா (மோ)
முப்பொருளென்பது நமதப்பனுடி ஆசை யென்று
மொழியுதே ஞானக்குற வஞ்சி வஞ்சி அந்த
மூதுரை போல ன் பெண்ணுக்குள்ளே திருநடஞ்
செய்யும்

மூலமதவஸ்தைத்துதி யஞ்சி அஞ்சி
அப்பணி சடையோனுககும் சந்திக்குமிடையில்நின்று
ஆடுவோனின்னு னென்றறிக் கொஞ்சி கொஞ்சி
அவ்விதமே ஜீவனுள்ள யெவ்வுயிர்மரும் மதன்செய
லாகு மென்றறிவாய்த்தவ மிஞ்சி மிஞ்சி
முப்புவன மும்படைத்து சிற்பாடிவாய் சிவன்
மூவரையு மாட்டிவைக்குதையா அயயா
அவனன்றி போரணுவு மசையாதென வேக்கலை
யான்றவருரைத்தமொழி சத்யம் சத்யம்
ஆதியுமனுதியான ஜோதிமதநாதலிங்கின்
ஆட்டாமதல்லால் வேறில்லையா நித்யம் நித்யம்
தவலை நிலை மணிமந்த்ர மவுனதி நிஷ்டையெல்லாம்
சாருமந்த மெய்ப் பொருட்க சுத்யம் கத்யம்
மவுனப்பொருளாய் ஞான சுவர்ன பதியாய்சிவன்
மூவரை மாட்டி வைக்கு தய்யா அய்யா
தந்தை தாய் தங்கை தமக்கை சொந்த பந்தணிய
மென்று

தாரமென்றும் மானிடரில் பேதம் பேதம்
தான் வசத்தது களில் தானிருந்து நிர்த்தஞ் செய்த
தானலாதிருப்பதேத் தீதம் தீதம்

சந்தைக்கூட்டம் போலயிங்க சரீரவாழ்க்கையை நம்பி
சன்மார்க்கத்தைவிட்டுப் பிடி வாதம் வாதம்
சண்டிவழக்காட வந்தபண்டிதருங்களுக்கின்னும்
சாற்றவதொன்றில்லைபிர மாதம மாதம்
முந்திப் பிந்தி அந்தி சந்தி சிந்திவந்திருந்தி சிவன்
மூவரையுமாட்டி வைக்குதைய்யா அய்யா
வாழை மா பலாக்கனி செந்தாழையும் நற்றேன்
சொரிந்து
வாரிவழியோடும் சோழ நாடு நாடு
வர்ண வர்ணக்குயில் பாட வுன்னத மயில்களாட
வளமோங்கும் காவேரிக்கே தீருநாடு
மாழைமணி மாடகூட மூழிகால முஞ்சிறக்கும்
மால்சிவாஜிவா பேராசு நீடு நீடு
மஞ்சுத வழுங்கிடவை தஞ்சைமேட்டினில் வாசிக்கும்
மன்னன் பாப்புதாசன் சொல்லை நாடு நாடு
மூளைகெட்டப்புலவர்கள் பாழ் நகரில் வீழ்வர்சிவன்
மூவரையு மாட்டிவைக குதைய்யா அய்யா மோ

## விருத்தம்

யானைதானொரு கோடி தானெதிரே வந்தாலும்
ஆண் சிங்கந் தானஞ்சுமோ
ஆதிசேடன் வந்தபோதிலுங் கருடனது
ஆக்ரமங் குன்றி விடுமோ
வானேறிக் கொக்குகளின் சேனைபறந்தாலும்
வரும் ராஜாளியை வெல்லுமோ
மாடப்புறாக் கூட்டங் கூடித் திரண்டாலும்
வல்ல பைரியைக் கொல்லுமோ
பூனைமேல் போராடக் கூனெலிகள் வந்தாலும்
புறங்காட்டி சென்றுடுமோ
புள்ளிமான்கள் கூடித்கள்ளிபே எதிராகாலும்
புலிகள் கண்டஞ்சி விடுமோ
மெத்தவுஞ் செத்தக்கவிக கெங்களுயர்கவி
வெற்றி யடையாதோ புலவா

விருத்தம்

மறையவன் முதல்தோன்றி சிவின்தோளில் வந்தாய்
மச்சப் புராணங் கூறுதே
மாதுசக்தி முதல்தோன்றி மூவரைப் பெற்றதாய்
பிர்ம புராணஞ் சொல்லுதே
நரைகொள் நாரணன் தோளில் சிவன்மூவர் வந்தாய்
நாரத்யப் புராணம நாட்டுதே
நக்கன் மால் மூவரைக்காளி படைததாய்
நவிலுதே மார்க்கண்டேயம்
உறைசக்தி யால்சிவன் சிவனல் மாயனுற்றதாய்
லிங்கந் புராணஞ் சொல்லுதே
ஓகோகோ சர்வமும் விஷ்ணுமயமாகவே
உரைக்குதே பாகவதமும்
அறையுங்கரி மூகனலே அயன்மாலுண்டானதாய்
அளக்குதே பார்க்கவ புராணம
அந்ததுர்க்கையின் முட்டையால் மூவர்வந்ததாய்
அடைக்குதே வண்ய புராணம்
கறைகடந்தா றுமுகன் ஆதிமுதற்கடவுளென
கதறுதே கந்த புராணம்
கண்டபடி தண்டுமுண்டாய்க் கூறும் புராணங்கள்
கட்டுக்கதையெனத் தள்ளுமே

பல்லவி

தாரணியிலுங்கள் சிவன் காரணக்கடவுளென்று
தாண்டியே குதிக்கும் புலவீரே பாரே
தட்டுக்கெட்டுளரும் பதினெட்டுப் புராணங்கள் சுத்த
கட்டுக்கதை விட்டுத் தள்ளுவீரே நீரே

சரணங்கள்

பாரதனைச் சொல்வேன் முதல் நாரத்யபுராணமதில்
பகருதே விஷ்ணுமுத லென்று என்று
பக்குவதாகவுங்கள் நக்கனுமவன் வலது
பக்கத்தில் ஜெனித்துவந்தா னென்று என்று

கூறுதின்னும் விநாயகப் புராணமதில் மூவர்களை
குஞ்சரமுகன்படைத்தானென்று என்று:
கொற்றவன் வயற்றிலந்த அத்தனயன்மால்புகுந்து
குறிதப்பிகினார்லைத்தா ரென்றுஎன்று
தாறுமாறுமாகப் பலவாறுளரும பாடல்கொண்டு
தர்க்கமாடவந்தப் புலவீரேநீரே. - தட்டு

விருத்தம்

தஞ்சையிலே யொருவன் கொலையுண்டகேஸை
சாக்ஷிகளை யழைத்து ஜட்ஜிகேட்கும்போது
கஞ்சனூரில் கொன்றானென்று தொன்றுஞ்சாக்ஷி
காசியிலே கொன்றுனென்குதிரண்டாஞ்சாக்ஷி
செஞ்சியிலே கொன்றானென்குது மூன்றும்சாக்ஷி
சேலத்திலே கொன்றானென்குது காலாம்சாக்ஷி
எஞ்சிய சாக்ஷிகளும் பலவாறுரைத்தால்
எப்படித்தான் ஜட்ஜு தீர்மானிப்பார் சொல்லே

பாட்டு

மச்சப்புராணத்துடைய லட்சணமறியாமலே
மர்மமாகப்பாடவந்த தென்னஎன்ன
மறையோன் முதலுண்டாகி பரமனைப்பெற்றதாக
மாலாகச்சொல்குத்திலேமன்னே—மன்னே (வாரேன்
பக்ஷமாய்பிர்மபுராண லக்ஷணத்தைதச்சொலவி
பண்புடன் சபையில்கேளு மண்ணே அண்ணே
பாவைசத்தி ஜெனித்தந்தமூவரையுண்டாக்கிப் பின்பு
பதியாய்க் கொண்டாளென்குதே முன்னேமுன்னே
தக்ஷணமென்னுடன்வந்து கக்ஷிபேசவுங்களுக்கு
தத்துவமேதுங்காண்புல வீரேநீரே தப்

விருத்தம்

கட்டுக்கதை கவிகளெல்லாங் கவைக்காகாது
கத்துகின்ற காட்டுக்கத்து சபைக்கேறாது

தட்டுகின்ற தப்படிதான் தப்பாகப்போச்சு
தாளமெக் காளம்வே தாளமாச்சு
நட்டுவர்க்கு நொட் ப்-மூக் கிடவந்தீரோ
நாட்டுக்கவி யென்னிடத்தில் நக்காதையா
தொட்டுநெல் குத்தலாம் ஸ்ரீரங்கம்போனுல்
தோணுமிந்த தஞ்சைநகரிடங்கொடாதே

பாட்டு

மார்க்கண்டேயப்புராணத்தின் போக்கதனைச்
[சொல்லிவாரேன்
மாசபையில்கேட்டுவாரு மையா அய்யா
மங்கைகாளியாலேவுங்கள் சங்கரன் ஜெனித்ததாக
மர்மமில்லா துறைகுது மெய்யா—மெய்யா
ஏர்க்கவேலிங்கப்புராண வாக்கியத்தின் சாக்ஷியதை
எடுத்துரைத்திடக்கேளுந் துய்யா துய்யா
ஏகமாயசக்திஜெனித்து மோகத்தாலன்றுசிவனை
இயற்றிசேர்ந்தாளென்பது பொய்யாபொய்யா
தாக்கலறியாமலுங்கள் வாக்கில்வந்ததையுளறி
தப்படித்துப்பாடும்புலவீரேநீரே தட்

விருத்தம்

காகமொரு கரித்துண்டைக் கவ்விக்கொண்டு
கருதியொரு மரத்தில்குந்த நரியும்பார்த்து
யூகமதா யதையேமாற்றிப் பரிக்கவெண்ணி
உற்றசினே கிதனேயுன் குரலைகேட்க
தாகமதாய் யோடிவந்தேன் தயைசெய்யென்க
தன்வாயத் திறக்கக்கரி தரையில்வீழ்க
வேகமதாய் நரியதனைக் கவ்விச்சென்ற
விதம்போலநீ ரெனையேமாற்ற வெளிப்பட்டீரோ

பாட்டு

பாகவதப்புராணஞ் சர்வலோகமும் விஷ்ணுமயமாய்
பகருதேயென்னவொரு நாயம்ஞாயம்

பாரதத்தில் கிருஷ்ணனையே காரணக்கடவுளென்று
பகட்டுததில் பார்த்திரு மாயம் மாயம்
ஓகோபின்னும்பாருமந்த வராகப்புராணமதின்
ஒழுக்கத்தைச் சொல்லக்கேளவீ தாயம்தாயம்
உத்தமமாதர்களாலே மூத்தேவர் ஜெனித்ததாக
உரைக்குகிறங்கவுங்கள் சாயம்சாயம்
தாகவிடாய்க் கொண்டுமது சாகரகதிலமர்ந்து
தர்க்கமாடவந்தப்புல வீரேநீரே தட்

விருத்தம்

கற்றுழை மடலைதையோர் கப்பலாக்கி
கனிந்தநறு வளிப்பறித்தை பாரமேற்றி
விஸ்தாரவிளக் கெண்ணெக் கடலிற்கொண்டு
விட்டாப்போ லாச்சுதுங்கள் கவிகளெல்லாம்
குற்றுலம் பார்க்குதுங்கள் குரலினைை
கும்பகோணம் போகுதுங்கள் பேப்பின்சத்தம்
கைத்தாளங் கொடுக்கின்ற ஆந்தனேவா
காரைக்கால் மூலைநோக்க கதறுதையா

பாட்டு

சத்தியமாம்பீஜம்சத்திமயம் சிவாசிவ
சக்திமயம்விஷ்ணு வென்றோர் நூலேநூலே
சாதிக்குதே கந்தப்புராணம் வாதிக்குதே சுப்ரமண் [யன்
சாக்ஷாதிக்கடவுளென்று மேலே மேலே
இந்தியாதிப்புராணங்களின் வித்தியாசமிருக்கையில்
ஈசனைக்கடவுளென்ற தாலே கேளே
ஏர்க்குமோவுங்களின்பேச்சு யோக்கியதை விளங்கிப் [போச்சு
இனிமேல்கீட்டாதேவுந்தன் வாலோலே
தத்திக்குதித்த லுமுங்கள்கத்தரிக்காய்ப்பாடலெல்லாம்
தலைபெடுக்காதப்புல வீரே தேரே தட்

விருத்தம்

என்னுடைய கேள்வியொன்றுக் கான்சர்சொல்ல
எழுஜென்மமதைநீ யெடுத் தெடுத்து
உன்னுடைய குருவுநீயு மூகித்திட்டாலும்
ஒருபோதும் பகிர்க்கூற வொன்றுமையா
முன்னமொரு மரத்திற்கொம்புத்தேனைக்கண்டு
மூடவனிச்சைப் பட்டக்தை யுமக்கேயாகும்
மன்னுமுயர் கருடனுக்கு சமதையாக
மதிகெட்டு வூர்க்குருவி பறந்தார்போலாம்

பாட்டு

பதினெட்டுப்புராணமென்று விதித்திட்ட நூலைத் [தள்ளி
பதினென்சித்தர்கள் நூலைத் தேடு தேடு
பாருமின்னும் ஞானவெட்டி கூறுஞ்சிவ வாக்யந்தத்வ
பாட்டுலறிவிளக்கம் நாடுநாடு
துதிமிகுந்தென்காவேரி நதிசெழிந்தோங்குந்தஞ்சை
தொன்னகா மேட்டுத்தெருக்கே தீடு ஈடு
தூயகவி ராஜசிங்கம் வி. எஸ் பாப்பு தாசன்தொழும்
சுத்தமத பிரமத்தைக்கொண் டாடு ஆடு
தகியினுனக்கிதுபோல் நிதியினிமேல் கிட்டாது
தண்டமிழ் பண்டிதப்புல வீரே தேரே தட்

விருத்தம்

கயிலைமலை மீதிலே சிவன்மதனைக்கொன்றதாய்
கந்தப் புராணங் கூறுதே
கனகோள கிரிதனில் காமனைக்கொன்றதாய்
கஜமுகப் புராணஞ் சொல்லுதே
பயிலங்க நாட்டிலே பரமன்மதனைக்கொன்றதாய்
பார்ராமா யணங் கூறுதே
பகரு மருணைஜலத்தில் சிவன் கொன்றதாம்
பாரருணை நூல் சாற்றுதே

மூவலுங் கொறுக்கையில் மோகனைக்கொன்றதாய்
    மூழங்கியோர் புராணஞ்சொல்லுதே
மூர்த்தி சிவனெங்களை மாண்டமதனெத்தனை
    மூழிக்காமல் சொல்லும் புலவா
செயல்கெட்டுப்பாடலதில் தாறுமாறு யுளரிடில்
    செத்தயிடஞ் சுத்தப் படுயா
திருத்கமா யோரிடங் குறித்துச்சொல் லாவிடில்
    ஜெயவிரு தடிப்பேன் மாதோ

பல்லவி

எதிலே மதனெரிந்தான்காட்டு—இதற்குத்தக்க
பதிலே யில்லாததென்ன பாட்டு எ

மகுடங்கள்

இச்சபையிற்பல சர்ச்சனர் மெச்சிட
    நிட்சய மற்றவுன் கக்ஷி நிலைத்திட எ
எத்தனைமன்மத னெத்தனை சங்கரன்
    எத்தனையிடமவன் பற்றி யெரிந்தது எ
ஏழெட்டிடமதி லொருமதனெரிதர
    கேள்விப்படுபவர் மனநிலைதெளிதர எ
எதுக்கித்தனை வாது செய்குறீர்
    சூதுப்புகல்வது சாதுக்கழகல்ல எ

சரணங்கள்

முதலாய்ஜனகாதியர்க் காக—கயிலையில்சிவன்
இதமாய் தவம்புரிந்த தாக—தேவர்களஞ்சி
அதைநான்முகன் பால்சொன்ன தாக—அவனுஞ்
    [சென்று
மதனைக்கொண்டேவிவிட்ட தாக—பூங்கணைகொண்டு
முக்கண்ணமீதுவி—டுக்கசிவனுன்
தற்கண்ணால் மாண்டதாய்-கனைக்குதே காந்தமும் எ

விருத்தம்

விட்டவெம்பகழிமைந்தும் வியத்தருவி மலன்மீது
பட்டலும்சிறிதேவேளைப் பார்த்தனன் பார்த்தலோடு
கட்டழற் பொதிந்தநெற்றிக் கண்ணது கடிதேகாமற
சுட்டது கயிலைமுற்றும் சூழ்புகை பரவிற்றன்றே
ஆலயஞ்சிலைவேளாக மழற்பட்சுயிலையின்கண்
எலவெம்புகையுந்தீயு மெழுதருமியற்கைகாடின்
வாலயன் முதலோர்யாரும் மதித்துழிவிரைந்துபாலின்
வேலையுண்டுவுதிய விடமெழுந்தனையதம்மா

பாட்டு

தாடகை தன்னைக்கொல்லவேண்டி— கௌசிகன் [கங்கை
நாடன் தசரதனைத் தூண்டி—ராமனைப்பெற்று
கூட வழைத்துவனந் தாண்டி—அங்கநாட்டின்வி
சேஷம்யாதெனக் கேட்கவூன்றி—இதே வனத்தில்
தங்கிசிவன் தவம—இந்தச்செய் தங்கஜன்
அங்கமழிந்ததாய்—பொங்குதே ராமநூல் எ

விருத்தம்

திங்கள்மேவுஞ் சடைத்தேவன்மேல் மாரவேள்
இங்கு நின்றெய்யவும் எரிதரும் நுதல்விழி
பொங்கும் கோபஞ்சுட பூளைவீயன்னதன்
அங்கம்வெந்தன்று தொட்ட னங்கனே யாயினன்
வாரணத்துரிவையான் பதனைச்சினவுநாள்
ஈரமற்றங்கமிங்கு குழலாவிவணெலாம்
ஆரணத்துறையுளாயங்க நாடிதவுமக்
காரணக்குறியுடைக் காமனச்சிரமமே
பற்றவாவேரொடும் பசைபறப்பிறவிபோய்
முற்றவாஉணர்வுமேன் முடுகிஞறறிவுசென்
றற்றவானவனிருந்திபோது செய்தனனெனின்
கொற்றவாமறவதோ பற்றிதன் தூய்மையே

பாட்டு

வேதன்முதலாய்தேவர்க் கூடி—கயிலைமலை
மீதந்தசிவனையுந் தேடி—உமையைக் கண்டு
நாதனெங்கென்று கேட்க நாடி—ஜனகர்க்காக
போதந்தரு நிமிக்தங் கூடி—கோளகிரியில்
விமலனுமானென—கமலனுல் மாரனிங்
கிமைதனில் யாண்டதாய்—குமுறு தேவிநாயகம் ள

விருத்தம்

குன்றிடையுயர்ந்தகோள கிரியிடைக்குறுகிநாங்க
ளன்றிடை நெறிகட் சூழ்ந்தே யைங்கணை மதனைமேவி
நின்றனடவனும் நேர்ந்து நிகழ்தரவிருதவாரு
மொன்றிய வசந்தனெனியுருப்பொருமடுப்பச்சார்ந்தான்
ஏற்றியசுரும்பு நாண்விலிடம் பிடித்தப்போரைந்து
தூற்றினனிறையும் வில்லை தூற்றிநம் நுதற்கட்டியால்
நீற்றினன்மதவேள்வெந்து நெருப்பது பரப்பநோக்கி
கோற்றொடிஉமையாள்சென்றுகுளிர்மொழிபணிந்து
[சொல்வாள்

பாட்டு

கொறுக்கையில் கொன்றதாயோர்புராணம்—இன்ன
[முமந்த
திருக்காளத்தி யென்குதோர் புராணம்—அருணை
[யென்று
குறுக்கேமுறிக்குதொருபுராணம்—ஓரிடங்கண்டு
நறுக்காகவொன்றுஞ்சொல்லக்காணேய்-எரிந்தயிடம்
குறித்துவொருவழி—விரித்துப்புகலுதா
வெறுத்துசபையுளோர்—சிரிக்கநேர்ந்ததே ள

விருத்தம்

பூமன் சிரங்கண்டி யந்தகன் கோவில்புரமதுகை
மாமன் பறியல் ஜலந்தரன் விற்குடி மாவழூர்

காமன் கொறுக்கை நமன் கடையூரிந்த காசினியில்
தேமன்னுங்கொன்றை திங்கள் சூடியசிவன்சேவகமே

விருத்தம்

ஒருகரும்பு ருவச்சாப மொடியினுமூலக மீன்ருள்
இருகரும்புருவச்சாப மூளவெனுமெழுச்சியாலே
பொருகணைத்தொடுத்தான் சென்று புரஞ்சுடுகணை
[யினுனும்
ஒருகணைவிடுத்தான் மாரனுடலெல்லாம் கொளுத்திற்
[றன்றே

பாட்டு

ஆமாம் மக்காந்தப்புராண மெய்யா—அல்லது கம்ப
ராமாயணக்கதையுண் மையா—இல்லரை புராணம்
தீர்மானிக்குமிடந்தான் பொய்யா—இனிமேலென்னை
ஏமாற்றவும்மாலாகா தையா—இக்கனை நூலில்
ஐயமில்லாது ச ல்—பொய்யெதுமெய்யெது
பய்யசொல்லாதுங்கள்—கைவரிசையது ஏ
மச்சப்புராணத்தைமுதற் கொண்டா—மதன்வெந்த
[தாய்
நிட்சயக்கூர்மபுராண முண்டா—வராகம்வாம
னச்சருக்கத்தைபெடுத்துண்டா-பிர்மாண்டமார்க்கண்
டச்சரிதங்கொடு அர்ஜுண்டா—சைவப்புராணம்
மங்களந்தங்கும்—லிங்கப்புராணமும்
துங்கபவுடிகமும்—பங்கமிலாமலே
நாரதம்மவண்ணமகா ரூடம்-பாகவதநூல்
சாரத்தில் சொல்லுதாவி சேடம்-பிர்மம்பதுமத்
தாரதம்மியங் கண்டுரை பாடம்-பிர்மகைவர்த்தம்
கோராக்னேயங் கொடுசந்தோடம்-இப்பதினேழும்
நாடியெடுத்துவா-பாடிபடித்துவா
தேடிப்பிடித்துவா-ஓடியடுத்துள

சாமமுதலாய் நான்குவேதம்-சர்ஸ்திரமாறும்
காமன்வெந்தனென்குதாபோதம்-உபநிடத
நாமமறிந்து சொல்பிரமாதம்—சூத்ரஸ்லோக
தீமானங் கூறிச்செய்விவாதம்—அதிலேவுங்கள்
சண்டிவழக்கையும்—பண்டவளத்தையும்
பண்டுவிளக்கிடும்—கொண்டுவா தக்ஷணம்
வெளிப்பாளத்தின் ரகைகேட்டால் வெற்றியுடன்
களிப்பாக்கினிக்குமென்றீர்போட்டால் தருசுக்காமல்
செழிப்போங்குஞ்சென்னை ஹைகோர்ட்டால்—எரிந்த [கக்ஷி
ஒழித்தேன்ஞான நூல்கொண்டு பாட்டால்இன்னமும் [நீங்கள்

வெட்கமிலாமலி—தற்குபதிற்கொடு
தர்க்கம் வீணுகவ—ளாப்பதைவிட்டிடு எ

வண்டுகள்சப்தசுரங் கூடும்—குயில்களதை
கண்டுகாம்போதிராகம் பாடும்—செவிக்கானந்தம்
கொண்டு மயில்கள் நடமாடும்—காவேரிநதி
தொண்டுசெய்துவளங்கள் நீடும்—தஞ்சைமம்பதி
வாசன் வி. எஸ். பாப்பு-தாசன் சொல்லிகேள்விகண்
டீஷன் யிதற்கொரு-பாஷன் பதிற்கொடு எ

## விருத்தம்

மன்னென்றால் அரசனென்றர்த்தமாகும்
மதமென்றால் சத்யசன் மார்க்கமாகும்
பொன்னென்றால் நகைகள்பல பேரறைப்போல்
புவனமீ ரேழுக்கு மவனேதெய்வம
என்னென்று லெண்பத்து நான்குலக்ஷம்
எறும்பாதியானைகடைக் கிச்சைதந்து
முன்னின்று தாரமுத் தொழில்நடத்தி
மூத்திதரு மெங்கள்மத மூர்த்திதானே

விருத்தம்

மோகமே மதபிர்மத்தி னியற்கையாகும்
மோகமே மூவர்கட்கு முதன்மையாகும்
லோகமே யதனுடைய மாயகையாகும்
நுலவுப ஜீ வான்மகோடிக் கவனேதெய்வம்
தேகமே யெடுத்தோரெல்லாந் தெய்வமாகரர்
தேவர்சித்தர் முனிவரெல்லாம் ஜெனித்துமாள்
[வார்
ஆகம நூல்களெல்லாம் அறிந்தோர் கட்கு
அகம்குளிரும் அறிஞரே நீரறிவீர்மாதோ.

(ஹிந்துஸ்தான் கஜல்—மெட்டு)

(இராகம்) பியாகு—(தாளம்) ரூபகம்

சரணம் பல்லவிகள்

பரபிர்ம மதனைக்கொண் டிதைதிவ்வுலகம்
படித்தோர்நி றைசபையில் பகராதேகலகம்
பிரமாதி மூவருக்கு மவனொரு திலகம்
பெருந்தவத்துடையோராக்கு கரதலாமலகம்
துரியம்துரியாதீத மதிலவனாட்டம்
சுக்கிலம் சுரோணிதம் ரெண்டு மவனிருநாட்டம்
அரியசுழிமுனையிபிடிப்பான் கொண்டாட்டம்
அந்தரங்க மறியார்க்கென்றுந் திண்டாட்டம் ப
அகர உகர மகரமே மூலஸ்தானம்
ஆராதாரமுடியில் நடிப்பான் ப்ரதரனம்
நகரமுதல் யகர மவன் சொல்ப்ரமாணம்
நடத்துந்தோழியொன்றே நயந்கேள்ஞானம் ப
பஞ்சபூதமேபஞ்ச மலர்க்கணைபேதம்
பகருங்கடல்மூரசோ சங்கொரிகளிதம்
துஞ்சுந்தென்றல் தேர்வாசி சுழுனும் பிரமாதம்
சுவர்க்க மத்யபாதாள மவன்கேசபாதம ப

கருவிகரணுதிகள் கன்னியர் படையாம்
கரும்புவில்லென்றது கன்னியர் படையாம்
கரும்புவில்லென்றது புருவத்தின்னிடையாம்
மருவுமிடைபிங்கலை வளர்சந்த்ரன் குடையாம்
மகிழ்தனக்குறைத்ததுயமன்மதன் விடையாம் ப
சிவனுலும் வேகாண வேறெவராலுஞ் சாகாகன்
சித்தாதிமுனிவர்கள் மனதைவிட்டேகான்
மவுனத் தவகிலைவிட் டவன்வெளியாகான்
மறைநான்கின் முடிவாலு மட்டிடப்போகான் ப
சுவைத்தரசனுக்காயிரங் கண்ணைக்கொடுத்தான்
சுரர்கட்கு மிருகத்தின் சொரூபத்தைவிடுத்தான்
புவனமாந்தர்கட்கின்பப் புணர்ச்சிக்குள் நடித்
[தான்
புரிசடைசிவனுக்கோர் நுதற்கண்ணாய் வெடித்
[தான் ப
சத்திபதி சங்காரத் தொழில்செய்யவிடுத்தான்
சதுர்முகனுக்குஞ்சிருஷ்டித்தொழிலையுஞ்சமைத்தான்
வெற்றிமாயனுக்கந்த விதரணையளித்தான்
விண்மண்கதிர் மதிபோல் விளக்கமுற்றருளித்தான் ப
பூவோடுமணநிறம் போற் கலந்திருப்பான்
புனிதப்பாலொடுதயிர் மோர்நெய்யாய்ப் பிரிப்பான்
மாவும்பணிகாரமா யுணவுக்குஞ்சிறப்பான்
மரங்கீர் வனம்விலங்கு பறவையாய்ப் பறப்பான் ப
பாசபந்தத்தைக்காட்டிப் பரமென்றுந்தனித்தான்
பாவம்புண்ணியப்பகை யுறவென்றுந் தொனித்தான்
தாசன்பாப்புக்குயவன் தமிழுக்குமினித்தான்
சாதுசன்மார்க்கஞான சங்கத்தில் ஜெனித்தான் ப

## விருத்தம்

மன்மதனை பிர்மமென்று பணிந்தற்கு
மரர்க்கவென்ன வென்று யெனை மறுத்துக்கேட்டீர்

கன்மவுட லெடுத்துசிவன் மோகினிப்பெண்
சட்டழகிற் கிடுபட்டு கருத்துமாறி
தன்மகன்கால் பணிந்துமந்த்ரங் கற்றதாலும்
ஜனசருக்குக் காட்டியசின் முத்திரையாலும்
சின்மயசை தன்யமகன் பிர்மமென்றே
செப்புதற்கு ஞானநூல் சாக்ஷிபாரே

கணணிகள்

ஏக சச்சிதானந்த மோகபிர்மம் சிவனல்
எரியாதநூல் காட்டி—ஜெயிப்பேனுன்னை
என்சிங்கக்கொடிநாட்டி
தேக மடுத்தோர்சொல்லும் லோகரக்ஷகனை
சின்மயவைஸ்ரிதயெரிக்க முடிந்திடாது
செல்லாதுன் சக்ஷிசிறக்க
ஆகமவேதப்புராணஸ் லோகமுழுதுங் கற்றோர்
அகமதிற் கொள்ளாரிதையே—எரிந்தசதை
அலரக்காசுக் குதவதையே
லோகம் புகழ்மெய்ஞ்ஞான பாக கலம்பகத்தின்
நூல்கொண்டு முதன்முதலாய்—உனககு சாக்ஷி
ருஜுப்படுத்தக் கேளபதிலாய்

உத்தார்

ஓகோ நீபொய்யென்றிதை மறுக்க—உனக்
குண்டோ திறமைசொல்லும் பெருக்க
ஏகபரமானந்த யோகபிர்மம்சிவனல்
எரியாதநூல் காட்டி ஜெமி

வெண்பா

அங்கமதிலுன்னுக்குள் அங்கஜவேள்தானிருக்க
இங்கவனும் வெந்தானென் பதுபொய்—பங்கமுற

இறப்பும் பிறப்பும் இருவினையும் கொண்டசிவன்
சிறப்போடிரு பெண் சுமந்ததேன்

பாட்டு

கண்பார்க்கக் கொக்கோகத்தில் அனுபாய் மாரனே
[முதற்
கடவுளெனவே க்ருதி – கொக்கோகமுனி
கருத்தைப்பாருங்கா ணுருதி
பண்பாய் சொரூபசார வெண்பாவெனும் ஞான
[நூல்
பக்ருதேமத்ஞதி—கடவுளென்று
பகிஷ்காரமாக ஓதி
நண்பர்ய்நீ அவ்வைசொன்ன தென்பான கவிதையைப்
[பார்
நான்முகன் சிவன்திருமால்—மூவர் மனித
நரஜென்மமென்கு துணர்வால்
மண்பால் வரதுங்கண்தன் பெண்பால் போதிக்கப்
[பெற்ற
மவ்னமந்த்ரோப தேசம்—வாசித்துப்பாரு
மதபிர்மத்தின் விசேஷம்

உத்தார்

உன்போந்தையாலே வுளராதே—பித்த
உபரியால்மனந் தளராதே
எண்பிப்பேனுனக்கின்னம் தின்பரப் பொருள்
[மதன்
எரியாதநூல் காட்டி (ஜெயி)
கன்னலன்றி வேம்புநகர் காமதுரோகி யர்போல்
பின்னையொரு தெய்வத்தை பேசோமே—என்னளும்
சாற்றுவோம் காமகலை சாதிப்போமே சரணம்
போற்றுவோம் காமனை யெப்போதும்

விருத்தம்

மூவகைக்கடவுள்தேவர் முத்தொழிலவர்க்கு மூன்றும்
ஆவதுபடைப்பேயன்றி அப்படைப் புதிக்கப் [பண்ணும்
தேவனே தொழில்மூன்றிற்கும் ஆதிபாய்சிப்நத் [துள்ளே
பாவருமயமாய்த்தோன்றும் கடவுளைப்பணிதல் [செய்வாம்

வெண்பா

ஐங்கணையும் பூவாம் அறுகாவளி நாணும்
மென்கரும்பாம்வில்லனங்கன் வீரனாம் — வன்காத
லேற்றவனும் எல்லாம்பொய் இப்படியே பாழுலகத்
தோற்றமெல்லாம் மெய்தானசொல்

வெண்பா

மாலுமனிதன் மலரோனுந் தான் மனிதன்
ஆலமுண்ட கண்டனவன் மனிதன் — சீலமுடன்
முற்றுமுணர்ந்த மூகிர்ந்த பெரியோர்கள்
கற்றுமறிந்தா ரில்லைகாண்

விருத்தம்

ஆக்கையென்னும் புழுக்கூரம்பை அணைந்தணையா [பொருளை
அருள்வெளியே பராபரத்துக கப்புரமா மறிவை
நீக்கமற மயிர்முனைக்கும் இடனற எங்கெங்கும்
நிறைந்துநின்ற முழுமுதலை நினைவிலெழுஞ்சுடரை
பாக்கியங்கள் செய்தனந்தம் தவக்குறைகள் முடித்து
பழவடியார் தமக்குதவும் பசுந்துணர்கற் பகத்தை
வாக்குமன விகர்ப்பத்தா லளவுபடாதொன்றை
மாசற்ற வெறுவெளியை மனவெளியில் அடைப் [பாம்

பாட்டு

உங்கள் மெய்குருவான சங்கராச்சாரியாரின்
உடலறி விளக்கத்திலே—மதபிர்மத்தின்
உண்மை விளக்குததிலே
துங்கசெந்தமிழ் கவிப் பட்டிணத்தாருமன்று
தொகுத்தப்பாடலின் றிரட்டில்-மதனைப்பற்றி
சொன்னதைப்பாரும் புரட்டி
சங்கமெச்சிடுஞ்சிவ வாக்கியர் ஞானநூலில்
சாற்றிய செய்யுள்பாரு—சிவனும்மதன்
தனலானது பொய் தேரு
மங்களபிரபோதய சந்தரோதய நூலதில்
வழுத்தும் செய்யுளைக் குறியே-மன்மதனுட
வல்லமை கண்டு தெரியே

உத்தார்

எங்களிடத்திலினிமேலே-சற்று
ஓர்க்காதுங்களின் ஜம்பம் கேளே
எங்கெங்கிலும் நிறைந்த அங்கஜன் சிவன்கண்ணால்
எரியாதநூல் காட்டி ஜெயி

(சங்கராச்சாரியார் உடலறிவிளக்கம்)

விருத்தம்

பொன்னுலகின் மறுப்படைக்க நினைக்கவிடமவிடம்
புரந்தரன்மா லுக்கிரனும் அரனும்தேட
மின்னுமுகி லிரவிமதி யிமையோர் தேட
விண்ணுலகில் தேவாமுனிவோர்கள்தேட
பன்னுமறை நான்கும் சாஸ்திரமோராறும்
பன்னிரண்டு சமர்த்தப்பல் லோர்கள்தேட
இன்னுமொரு வருமிவிடம் கண்டோரல்ல
எப்பிரா னிருக்குமிடம் யானுமறியேனே

விருத்தம்

பெண்ணுமல்ல ஆணுமல்ல அலியுமல்ல
பெரிதல்ல சிறிதல்ல பிறிதுமல்ல;
மண்ணுமல்ல அங்கியல்ல வாயுமல்ல
மதியல்ல கதிரல்ல வெளியுமல்ல
நண்ணுமல்ல தீதுமல்ல நடுவுமல்ல
நாதமல்ல வேதமல்ல பூதமல்ல
எண்ணுமல்ல எழுத்துமல்ல ஏதுமல்ல
எம்பிரானிருக்குமிடம் யானுமறியேனே

செய்யுள்

ஓங்காரமான வரிசையில் நின்றொரு வித்துவந்து
பாங்காய் முளைத்தது பாரறியா பதினாலுலகம்
நீங்காமல் நீங்கி நிறைந்து நிறைபுருவாய்
ஆங்காரமானபேர்க் கெட்டாக்கனியென்ற
[மைந்தனுவே

சிட்டா

சோதியாகி யாகிநின்ற சுத்தரூப வித்துவும்
போதியாத போதகத்தை யோது நின்ற பூரணம்
வீதியாக ஓடிவந்து விண்ணைக் கண்டிணருபோய்
ஆதிநாத நாதனென் றனந்தகாலமுள்ளதே
விருத்தம்
ஒத்தேரு ரூபமில்லா பிரமமொன்றே யாமற்றுருவமு
[ளார
எத்தேவராயினும் மதன் விடுபூங்கணைக்கிலக்காகி
மத்தேரி உடைதயிர்போல் மனமுழன்று செயல்
[மறந்து மட்வாராசை
பித்தேரியித முறைக்கும் பேதையினும் பேதையருய்
[யின்செல்வார்

விருத்தம்

அலையேறும் வாருதிசூழும் புவியிலெல்லை வெல்வாரா
[ரோ செந்தீ
உலையேறுமெழுகெனமுத்தேவரும் பூங்கணைக்காற்று
[தருகிவெள்ளி
மலையே றுவொருவர் கடலேறினுவொருவர் மறைந்து
[விண்ணின்
தலையேறினுவொருவராயினும் போயின்னு மங்கு
[தவிர்ந்தார் கொல்லோ

பாட்டு

(4) பக்குவமாக சுப்ரமண்யருரைத்த ஞான
பாடலுனக்கு யெடுத்து—மதபிர்மத்தின்
பண்மைச் சொல்லுவேன் விடுத்து
தக்கபடி அகத்ய மாமுனி சொன்ன ஞானம்
தன்னில சிலதையுனக்கு-விளங்கச்சொல்வேன்
தாழந்துகேள் வேண்டாம் பிணக்கு
திக்கோர் கொண்டாடுவேத முக்கிய ஞான லட்டி
திருவள்ளுவர் நூல் சாக்ஷி—கொடுந்துணது
திமிரடக்குவேன் ருக்ஷி
கைக்கண்ட ஞான மின்னும் காட்டவென்றாலனேகம்
கணக்கிலங்கிடாது—எழுதவென்றால்
காகிதமுங் கிட்டாது

உத்தார்

பொய் குரு சொற்களை நம்பாதே—நம்பி
புண்ணுகி நகிரல வெம்பாதே
எக்காலும் நம்மை ரக்ஷிதாளுமதன் சிவனுல்
எரியாத நூல் காட்டி ஜெயசி

விருத்தம்

சீரான உலகத்தோர் மயங்கவேதான்
செப்பிவிட்டார் வேதமென்றும்புராணமென்றும்
நேராகக் கட்டிவைத்தார் பலநூலெல்லாம்
நினைவதனான் மயங்கிப்பலர் நிஜமென்றெண்ணி
பாருக வாராத பொய்கள் சொன்னார்
மனம்போல வேதவியாசன் தானப்பா
வீராக திரிமூர்த்தி உத்தாரத்தால்
விதவிதமாய் சாஸ்திரத்தை விதித்திட்டாரே

விருத்தம்

பாடினார் திரிமூர்த்தி தெய்வமென்றும்
பரிவாக மோக்ஷமது தருவாரென்றும்
நாடியேயவர் தமையும் பூசித்தாக்கால்
நன்மையிகத்தில் செல்வ மீயா ரென்றும்
ஜோடினையா மதற்கெல்லாம் உத்தாரங்கள்
சுந்திரம்போல் தானிருத்தி மாயம் செய்து
வாடாமல் வாழ்வீரென்று சொல்லி
மதிமயக்கம் செய்துவிட்ட் வரிசைகேளே

விருத்தம்

கேளடா மூவருட வரிசை சொல்வேன்
கெடியான சிவனுக்கோ ஜாலவித்தை
நாளடா லக்ஷமது பாடமாகும்
நாரணாக்கோ வினைதவித்தை லக்ஷம்பாடம்
நீளடா பிர்மனுக்கு அதர்வணத்தில்
நிச்சயமாய் சொல்லுகிறேன் லக்ஷம்பாடம்
வாளடா இந்தவித்தை யாலே மல்லோ
வையகத்தின் மாந்தர்களை மயக்கினாரே

## விருத்தம்

வையகத்தோர் தனைமயக்கி கெடுத்திட்டார்கள்
வண்மையுள்ள காத்தாவை தோணாட்டாமல்
மெய்யோக லீலையிலே தானுழன்றார்
தன்மையிலே சிவனுக்கோ தேவி யைந்து
மையலகொளும் விஷ்ணுவுக்கோ தேவியெட்டு
மலரதில வாழ் பிர்மனுக்கோ தேவி மூன்று
ஐயய்யா பெண்ணாசை யாலேயல்லா
அழிந்தார்கள் மூவருமே அறிவாய்க்கே

## விருத்தம்

மூவர்களும் தெய்வமென்றால் நோக்காதே
மூடமதி தரித்திரத்தின் கொடுமையேது
ஆவதோர் காலமெல்லாம் உணர்ந்தாலுந்தான்
அவராலே யில்லையடா நாய் தான் தீர்க்க
சாவதுடன் நோய்மிகுதி யவர்கட்குண்டு
சண்டாள ரவர்களுடை பேச்சையப்பா
நாவதிலே சொல்வோர்க்கு நினைப்போர்க்கெல்லாம்
நரகமல்லால் சுவர்க்கமில்லை நம்புவாயே

## விருத்தம்

காணப்பா மூவருடத் தந்திரத்தை
கருணையுடன் சொல்லுகிறேன் காணு காணு
ஆணவத்தா லிவர்களுமே யுலகந்தன்னை
அப்பனே மயக்கியவர் வலைக்குள்ளாகி
தானுவாம் பராபரத்தை நினைக்கொடாமல்
தாங்களே தெய்வமென்று விநோதஞ் செய்வார்
வீணான பூசையிலே மனமுழன்று
வெம்பியே மாந்தர்களும் மாண்டார் பாரே

விருத்தம்

தேடுவாய் புலத்தியனே தேடு தேடு
 தீநகரைத் தேடாதே தெளிவாய்ச்சொன்னேன்
பாடுவாய் வேதங்கட்டு புராணங்கட்டு
 பாரதமுங் கட்டப் பா பரிகாசந்தான்
நாடுவாய் பலபேர்கள் பிழைக்கச் செய்த
 நவக்ரஹம் கட்டப்பா நம்பவேண்டாம்
ஓ வாயற்றான் கண்டு பூசை செய்து
 உத்தமனே கண்ணீரால் கழுவுவாயே

விருத்தம்

தயங்காமல் வயர்பிழைக்க இந்த ஞானம்
 சார்பாக பாராட்டும் ஞானம்வேறு
மயங்குதற்கு ஞானம் பார் முன்னோர் கூடி
 மானிலத்தில் கதைப்புராண காவ்யமென்று
இயங்குகிற சந்தினில் புகுந்தார்ப்போல
 இசைத்திட்டார் சாஸ்திரங்கள் ஆறென்றேதான்
வயங்கியிதன் பயன் பெறவே வியாசன்றானும்
வழுத்தினார் சிவனுடைய உத்காரத்தால்

விருத்தம்

உத்தாரத்தா லிப்படி புராணங் கட்டி
 உலகத்தில் பாரதப்போர் கதையுண்டாகி
கர்த்தாவைக்காணவே தானொட்டாமல்
 கபடநாடகமாக பாகஞ்செய்து
சத்தாகும்வழியாக சேர்ந்தோர் களெல்லாம்
 சதியுடனே வெகுதீர்க்கம் பொருள்போல் பாடி
பத்தாக சைவர்க்குப் புராணஞ்செய்து
 பலவிதமாய் சாஸ்திரத்தைப் பாடினாரே

விருத்தம்

பாடியதோர் வகையதை நீசொல்லக்கேளு
பாடகரே புராணங்களின் சேதியப்பா
நீடியாதோர் ராவணனென்றான் பிறக்கவென்றும்
நிலையான ராமன் கைவெல்லுமென்றும்
ஆடியதோர் ராஜரென்றும் முனிவரென்று
அருள் பெற்ற தேவரென்றும் அசுரரென்றும்
வாடியதோர் வானரர்கள் மனிதரென்றும்
வரைந்திட்டார மனம் போன படிக்குத்தானே

விருத்தம்

கழிந்திடுவாய் பாவத்தாலென்றுஞ்சொல்லி
கட்டிவைத்தார் நால்வேதம் ஆறுசாஸ்திரம்
அழிந்திடவே சொன்னதெல்லால வேறொன்றில்லை
அதர்மமென்றும் தர்மமென்றும் மிரண்டுண்டாக்கி
ஒழிந்திடவே சொன்னார் மறுபிறப்புண்டென்றும்
உத்தமனாய் பிறப்பா யென்றுலகத்தோர்கள்
தெளிந்திடவே குருக்களென்றும் சீடரென்றும்
ஜீவனத்துக கல்லோ செய்து வைத்து பாரே

விருத்தம்

தானென்ற பெரியோர்கள் களுலகத்துள்ளே
தானான் பூரணத்தை யறிந்த பின்பு
தேனென்ற அமுதமதை பானம் செய்து
தெவிட்டாத மவுனநிலை யோகஞ் செயவார்
ஊனென்ற உடலை நம்பியிருந்தபோக்கு
ஒரு நான்குவேதம் ஆறு சாஸ்திரமென்றும்
நானென்றும் நீயென்றும் பலஜாதியாக
காட்டினார் உலகத்தோர் பிழைக்கத்தானே

விருத்தம்

பிழைப்பதற்கு நூல் பலவும் சொல்லாவிட்டால்
பிரணத்தை அறியாம லிறப்பா ரென்பார்
உழைப்பதற்கு நூல்கட்டிபோடா விட்டால்
உலகத்தோர் புத்திகெட்டுத்திரிவாரென்பார்
குழைப்பதற்கு சொல்வதல்லால் கதிவேறில்லை
குவலயத்தேமர் களுக்கு பெரும் அஞ் ஞானத்தை.
விளைப்பதற்கு வேண்டிய சூக்ஷி செய்து
விதவிதமாய் வீண்கதையை விளக்கினரே

விருத்தம்

அண்ட பிண்டம் கலந்து நின்ற ஜோதி தானும்
அவனிதனி லுடைந்தகல் லதிலுண்டோமோ
எண்டிசையும் எவ்வுயிருமான நாதன்
ஈனமாங் கல்லுசெம்பா யிருக்குமோதான்
உண்டு செய்த நாலுவேதம் ஆறு சாஸ்திரம்
உரைத்திட்ட உண்மையதை உணர்த்திடாமல்
மண்டலத்தைப் பலகதையால் கெடுத்துப்போட்டார்
மானிலத்தோரிதனாலே மடிந்தார் கோடி

விருத்தம்

மூன்மலமெலா மொழியலவணம் போச்சு
மூனதசட மாதிதமூந் தங்கமாச்சு
தன்மயமா யெடுத்தவிதஞ் சரிதானச்சு
தந்தையில்லா தன்மயமெப்படி யுண்டாச்சு
உன்மயந்தா னுனக்கு தந்தை யுருதானச்சு
உப்பு மந்தப் படி விதங்காண யோகி யாச்சு
மன்மதன் காணீ சனுட மவுனமாச்சு
மயமான நித்திரையை மாற்றினரோ

விருத்தம்

அளவற்ற பெரும்பாழின் வெளியிலேதான்
ஆதியு மனதியும் மருபமாகி

அளவற்ற பேரொளியா யனேகங்கோடி
ஆணுமல்ல பெண்ணுமல்ல அலியுமல்ல
விளைவற்று நின்றதல்ல விளையாதல்ல
வித்தாகி நாதாந்த ஞானரூபக்
களைவற்று இலங்கும் பிரகாசமான
கதிர் மதியி லொருபுறமாய் மலராய்ப்பூத்தே

விருத்தம்

கண்ணுருவாய்க்கண்டதல்ல காணுதல்ல
கருத்தாலுமதித்தல்ல கருதாதல்ல
எண்ணுருவாய் நின்றதல்ல இல்லாதல்லா
எழுதி முடிந்தறிந்ததல்ல அறியாதல்ல
வுண்ணுருவு மானதல்ல ஆகாதல்ல
வேதமறைமொழிவதல்ல மொழியாதல்ல
நண்ணுதலில் நின்றதல்ல நில்லாதல்ல
நயம் பெறவஞ் சுயம்பெறும்பிரகாசமாண்டே

விருத்தம்

மந்திரத்தால் கற்றதல்ல கற்காதல்ல
வாசித்து அறிந்ததல்ல அறியாதல்ல
தந்திரத்தா லெடுத்ததல்ல எடுக்காததல்ல
க்ஷணத்துக்கு இருப்பதல்ல தனதேயல்ல
சுந்தரமாம் ரூபமல்ல அரூபமல்ல
சொல்லாத வடிவல்ல சோதிரூபம்
அந்தரமாய் நிராதார வெளியிலேதான்
அடியிலொரு கொடிமுடியாய் தழைத்ததாண்டே

விருத்தம்

சத்தேழு புவிதனிலே பிறந்து யானஞ்
ஜாதிகுல மானவகை சார்பாய்ச் சொன்னேன்
சித்தமுள்ள நாதாக்க ளறிந்துகொள்வார்
தீங்கான மாந்தரிதை யறியமாட்டார்

கற்றவரைப்பழிப்பவர் களுலகமாண்பர்
கற்றரியா மடையர் சொல் லுங்கவியைப்பாடி
வித்தையிலு மலங்காரக்கவிதா னென்பர்
வீணர்கள் தான் வீண் புளுகு விளம்புவாரே

பாட்டு

தஞ்சைநந்நிலவள மோங்கும் தென்னிந்தியாவில்
ராஜாதி ராஜர் போற்றும்— சோழநந்நாட்டில்
நாகரீகங் கொண்டேற்றும்
மஞ்சடை மணிமாட கூடவி சேடமுறும்
மன்னன் சிவாஜி நீதி—அரசுபுரி
மனைமேடை ஜெகஜோதி
பஞ்ச விலக்கணமும் பஞ்சகாவியங்களும்
பாண்டித்ய கவிராஜன்—தற்புகழ்பேசும்
பாவலர்பணி போஜன்
தஞ்சை மேட்டுலமமுறும் சங்கீதசாஹித்யம்
தங்கும் முத்தமிழ் நேசன்—எரியாகக்ஷி
தங்கமெட லுல்லாசன்

உத்தார்

ரஞ்சித வி எஸ் பாப்பு தாசன்—சொன்ன
ஞானவிடையிது கண்டேசன்
எஞ்சலிலாத மதன் நஞ்சுண்ட சிவன்கண்ணல்
எரியாத நூல் காட்டி ஜெயி

விருத்தம்

ராமாயணப்பிரசங்கக் கதையைக் கேட்க
நாடியொரு மூடன் வெகு நாளாசித்து
தாமாக சென்றொரு நாள் வீற்றிருந்து
தன்னையறியாமல் தூங்கி விழுந்தானங்கு
கோமாளி யொருவனவன் மீது சாய்ந்து
கொண்டுகதை முடிந்து யனைக் கனைவோர் செல்ல

ஏமாந்தோன் தேவிகதை விசேடங்கேட்க
இதுவுமொரு ஆள்சுமைதா னிருந்ததென்றான்
அதுபோல நானுமக்குச் சொன்னதெல்லாம்
ஆள்சுமந்த மூடன்கதை யாகிப்போச்சு
மதுபான வெறியாலோ தூக்கத்தாலே
மறப்பாலோ பாட்டுக்கை யிருப்பில்லாத
மெதுவாலோ படிப்பில்லா வெட்கத்தாலோ
வேள்மதனைத் தூறுசொன்ன வினையினாலோ
ஏதுகாரணத் தாலோபதில் சொல்லாமல்
இருக்கின்றீர் சுமைதாங்கி போலும் நீரே

பாட்டு

மதனை யெரிக்க சிவனால் முடியுமா—கோழி கூவாமல்
வைரவன்கத்திப் பொழுதுவிடியுமா—கெட்ட
மலத்தை தலையில்—தரித்த ராஸ்கள்
நிலத்தில் கண்டை—பழித்த கதைபோல்
மாதர் மையலை மனதில் கொண்டநீர்—மதன் [வெந்ததாய்
மழுப்புவதேன் மாசபையினில் கூர்— ம
ஐம்புலகளை யொடுக்கித்தவத்திலே—இருப்பவர்க்கு
அங்கஜன்கணைப் படுமெவ்விதத்திலே—நீர்
யாரிடத்தினில்—காதுகுத்துநீா
மாரடித்துவீ—ணலேகத்துநீர்
ஆண்சரிதற்குச் சொல்லமுடியுமா—இனியார் [வந்தாலும்
டோன்கேர்யென்னை வெல்ல முடியுமா— ம
பற்றறுத்தவ ரல்லவோயோகி—சம்சார வாழ்க்கை
படைத்தசிவனே ஞானதியாகி—இவன்
பாசபந்தத்—திலே சிதைந்தவன்
பூஜைக்குந்த—நேசனே அவன்

பப்பரமதனிடத்தி லாடுமா—அவனாலேசிவன்
துன்பமடைந்த நூல்லாய் மூடுமா ம
காமன்கணையைத் தடுக்காதயிவரா-ஜனகாதி
[யற்கு

கடுந்தவநிலைப் போதித்தார் பவரா-சர்ப்பம்
கடித்த விஷயத்தைத் தடுத்துக்கொள்ளாமல்
அடித்ததைக்கொன்று மடிந்தால் தீருமா
கண்டறியாதோன் பெண்டுபடைத்தாப்போல்
[கவிஞரே நீ

தண்டுமுண்டாய் பேசுறீர் சபையில்
பஞ்சபாணனுக் கஞ்சியேதானே சிவனுமோடி
பதுங்கினன் சுடுகாட்டில் சீமானே பெற்ற
பாலனும் வடிவேலனிடத்தில்
காலில் விழுந்து—மூலமந்திரம்
படித்தவன் பரபிர்மமாவானு—அவனாலே ஆவி
துடித்தெங்கள் சர்வேசன் சாவானு
நினைக்கக்கேடு தனக்கென்றென்னுமல் தாரு
[காவனத்தில்

நிமல சிவனும் போனன் தோணுமல் அவர்
நேம நிஷ்டையில் தாமிருந்தது
மாமதனுக்கென் நேமதியாமல்

நீட்டவந்தீர் கவியொரு முழமே ஞானவெட்டி நூல்
பூட்டக மறியாமல் நீங்களுமே
காமம் வடவை கனலையுஞ்சுடுமே சிவனார்
[நெற்றி

கண்வெடித்ததுங் காமத்தின் கொடுமை கேளும்
விசுவாசத்துடன் ரிஷபத்திலேறி
ரிஷிமாதர்களால் விசனமும் மீறி
காலஞ்சென்றதுங் காமத்தால் தானே நானுனக்கு
[சொன்ன

நூலதும் பிசகாது சீமானே ம

ஸ்தலங்கள் சிவனுக்கிலங்கி வாழுநா பதி
[னெட்டு சித்தர்
தங்கள் மகிமையெங்குஞ் சூழ்ந்தா ஐயா
தகையாயுங்களின் சிவஸ்தலங்களில்
ரகஸியமென்ற சமாதியுண்டுமே
தாங்களதனை அறியவில்லையா சிவனுக்கங்கே
ஓங்குதோ மகுத்வஞ் சொல்லையா ம
சித்தர்களடக்கத்தினுல் தானே மகிமையுண்
[டாச்சு
சிவனுக்கேது ஆட்டஞ்சீமானே ஐயா
திட்டமாய்பதி னெட்டு சித்தர்கள்
சட்டமாயடங் கிட்டதாலே
சிறந்ததுபார் ஸ்தலங்கள் மேன்மேலே அன்னுளில்
[சிலர்
பொருந்தப் புளுகி வைத்தார் பொய்நூலே ம
தமிழென்றுலினிமை யெனப் பொருந்தும்—எந்தப்
[பாஷைக்கு
தாமைப்போல விளங்காதே சிறந்தும்—தன்
ஜாதி விடுத்து—நீதி கெடுத்துக்
யாதிதவரி—டாதிரிதைப்போல்
தங்கத்திலிதுத் தனித்தங்கமாகும்—தமிழ்தானே
[மதுரை
சங்கத்தினுக்கு மடிப்படையாகும்
அறிவீர் பல்மொழி தமிழிற்கலந்த தால்—ஆபாச
[மேவி
அதற்குப் பெருமைக் குலைந்தது பெரும் பால்—
[கேள்
ஆகமங்களும்—சாஸ்திரங்களும்
லோகமெங்கும் பொய்—மாகமங்குதே
ஆதலாலுங்கள் வாதமும் பொய்யே—உனது குரு
அறைந்த தெரிந்த கதையதும் பொய்யே

நாலடியார்க்குறளும் நந்நீதி—அவ்வையாருரைத்த
ஞான நூல்கள் ஜொலிக்குதே ஜோதி—அது
நால் வகைப்புரு—ஷர்த்த சூக்ஷத்
தால் விளங்குதன்—மார்த்தமோக்ஷ
நல்வழியேவும் நாட்டத்தையளிக்கும்-வேதஸ-லோகம்
கல்லோடு செம்பைக் கடவுளாய்க் கொழிக்கும் ம
யாகத்தில் நரமிருகப்பலி கொளும்—கொடிய துரோகி
யாக்கியேப்பவ நரகவழி தள்ளும்—இது
யாசகருக்கும்—போஜனபிரிய
வேஷகருககும்த் வேஷகருக்கும்
யாத்திரைச் செய்வோர் பிழைக்கவும்—உபயோகப்
[படும்
பாத்திரப் பிச்சை வயிறு வளர்க்கவும் ம
பிராமணர்கள் பிரமன் முகத்திலும்—க்ஷத்திரியர்
[தோளில்
வைசியர்த் தொடையினிடத்திலும்—இன்னும்
பேதைசூத்திரர்—வேதனுடைய
பாதமதிலு—மேதோன்றிய தாய்
பேசியுலகை நாசபடுத்தினர்—நீனிலத்திலுள்ளோர்
நேசித்தறிந்துத் வேஷப்படுத்தினர் ம
பறையர்கட்கு சாம்பவனென்று பேர்—பாரில்
[கிடைத்த
பட்டப் பரமன் நாமமல்லவோ பார்-அவர்
பாவி கனென்றும்-கோவில் குளத்தில்
மேள விடாம-லே விலக்கியே
பாய்போல வரைச் சுருட்டி விரட்டுறார்-பெருங்குழி
[யிற்றள்ளி
நாய் போல வரை மிரட்டி யுருட்டுறார்
சகல சிருஷ்டிகளுக்குங் காரணக்—கடவுளா னா
சைதன்ய ஜெகஜோதி பூரணம்—அதன்

தன்னுமயின்னதென்—றுண்மைமறியா
புன்மதிகொண்ட—நீர் மூடர்களே
சருவசம்மத சன்மார்க்க நிலையை—கடை பிடித்து
பருவமதிபோல் வாழ்வீர மண்ணிலேயே— ம
உலகிலுண்மை மார்க்க மென்பதிலே—எல்லாந் தெய்
[வமாய்
உகந்து பூஜிக்க ஞாயமேததிலே—தெய்வம்
ஒன்றெனநிலை—கொண்டுணர்ந்தவர்
கண்டபொருட்கு—தொண்டுசெய்வரோ
உறுதியில்லாத மூடர்கொள்கையிதே—கற்றோர் மற்
[றோரும்
உணர்ந்து செய்வார் பிடிவாத மென்பதை ம
சன்மார்க்கமென்றுரைப்பது யாது—உயர்வு தாழ்
[வென்ற
ஜாதிபேதமே இடையாது—நல்ல
சமத்வஞ்சகோ—தரத்வமோர்மை
மைத்திடும் போஜ—ஜாதி விவாகம்
சகலமுங் கூடியதே சன்மார்க்கம்—பல ஜாதி மத
சம்பிரதாய மதுவேதுன்மார்க்கம் ம
ஆதலாலாண்பெண்ணிரு ஜாதி—ஆகுமல்லாது
ஆண்டவன் படைத்தது ஒரே ஜாதி—அது
அழிந்து வேறோ—டொழிந்து போக
விழைந்து கடவுள்—புரிவானுக
அறிந்திதை நடப்பவர்களே ஞானி—அனைத்துஞ்
[சமத்துவ
மாக வோர் மித்தவர்களே மானி ம
கடவுள் கட்டளையென்பதேவேதம்-யுகம் புரண்டிட்
[டாலும்
காணுததிலோர்மாறன பேதம்—இதை
கடந்திடாமலே—நடந்திடுமவர்
கொடுங்களவுபொய்—இடும்பு சூது
கட்குடிதனிலீடு படுவாரே—கொடிய நரக

கனலில் வீழ்கப்பாடு படுவாரே
சகலபாவங்களை விட்டறுத்துமே—பர்சுத்தமான
சாதுக்களிலுறை தூதென்றிருத்தமே—இன்னும்
சாலவே யவர் மூலமாய் வேத
நூலையளித்தான் மூலக்கடவுள்
சத்தியந்தவராதிருப்போரே—சன்மார்க்க பர
மூக்தியேனுமெய் வீட்டை வாரே ம
வளர்பிறை போல் வளர்ந்து நமக்கெல்லாம்—
[ஜோதிப்ரகாச
மலிந்து ஜொலிக்க செய்தோரவர்களாய்—பொருள்
வழங்கித் தன்மதம்—விளங்கச் செய்திடும்
மழுங்கற்களைப்போல்—உழன்றிடாமலே
வண்ணங் கருப்பர் வெள்ளைய ரென்றே—வித்தியாச
[மின்றி
வகுத்தாரரசர் பிரஜைக்கு மொன்றே
கண்மூடித்தனயாக சுயநலம்—கருதியே செய்த
கட்டுக்கதையை நம்பினலவலம்—அவர்
காரியமெலா மாறியே மலே
யேறிவிட்டது நேரிலே கண்ணால்
கண்டதெல்லாம் தெய்வமாய் நம்பி கலங்கா
[மலுண்மை
கொண்டுய்குவீரோர் தெய்வத்தை விரும்பி
தங்கசிகரமணி மாடகூடம் தங்கும் நான்கு வீதி
தானதருமம் நடக்கு மன்றூடம் திரு
தஞ்சைமுத்தமிழ் கொஞ்சும் வித்தகன்
செஞ்சொல் பாப்பு தாசன் றமிழால்
தானுரைத்ததே ஞானமென்றறிவீரே—வீண்
[கதையை நம்பி
தாண்டும் புலவர் வெட்கங்கெடுவாரே— ம

## எரியாதகக்ஷி மந்தல் சிறப்பு

### விருத்தம்

எரியாத கக்ஷிக்கொடிப் பறக்கும் பந்தல்.
இந்திரவி மானம் போல் சிறக்கும் பந்தல்
சரியான சிற்பிகள் கொண்டமைக்கும் பந்தல்
சந்தர சூர்ய மண்டலம்போல் ஜொலிக்கும்
[பந்தல்)
பரியாதை யுள்ளவர்க ளமரும் பந்தல்
மகுடமணி முடிவேந்தர் மதிக்கும் பந்தல்
தெரியாத வர்க்கு ஞான முதிக்கும் பந்தல்
தேன் பொழியும் பந்தலதின் சிறப்பைக்கேளே

(பூங்கா விநோதமே—என்ற மெட்டு)

### பல்லவி

பந்தல் சிங் காரமே
பார்க்கக் கண்கள் வேண்டும் பாரமே—(ப)
மகுடங்கள்
பத்திக்கொண் டெத்திக்கும் பரவிய—(ப)
பைம்பொன் செம்பொன் மரகதஸ்
தம்பம் முன்பின் மருவிய—(ப)
பண்ண வரும் விண்ண வரும் பரவிட
மண்ணவரும் கண்ணிமையா தரவிய—(ப )
பளீர் பளீரென ஒளிதரு மழகிய
கலீர் கலீரென கிளிமொழி பழகிய—(ப)
பணி லத்தகடுறை அணி நித்தில நவ
மணி வைத்திலகிய கணிதத்துடனமர்—(ப
பான மதிக் கதிர் வான்மிசைப் பல
தான் மிகுத்தொளிர் மேன்மை பெற்றிடும்—(ப)

அநுபல்லவி

இந்திர லோக மிதற்
கெப்பவு மொப்புவமைபடாவற்புத—ப

சுருள் சரணங்கள்

இமயமலையை போலே இன்ப மிகும் பல கம்பம்
[கிருத்தி
இடைக்கிடை உத்திரங்கள் இட்டநேரர் விட்டமும்
[சட்டமிருத்தி
அமையச் சரங்களெங்கும் மற்புதசிற்ப நூல் பொற்
[பதித் திருத்தி
அடுக்காகவே முன்பின் ஆடக மாடக பாடகம்
[பொருத்தி
இச்சக மெச்சிட கச்சித உச்சிதமாகவே—வர்ண
பொற் சரிகைச் செறியச் சுடர் மிச்சமாய்ப் போகவே
[வர்ண
பக்ஷிகள் பக்ஷம் விருக்ஷமதிற் செழித்தேகவே—புவி
அர்ச்சனர் சிற் சபை சொற் சுவை லெக்சரு மீகவே
இன் சொலி ரஞ்சித கெஞ்சின் களாட
ஹிந்துஸ்தான் டோமரியுங் கஜல் பாட
கொஞ்சும் தபேலா ஹார்மோனயமுங் கூட
கும் கும் கும் மென தாளங்கள் போட—இப் பங்
சந்ததம் வீணை பிடில் தங்குமிர்தங்க சாரங்கமு
[முழங்க
தாளத்தவுல் மோர்ஜல தரங்கமுங் கும் கும் கும்
[மென்றெங்கும் விளங்க
விந்தைசேர் புல்லாங்குழல் விஞ்சை யிரஞ்சிதத்தின்
[சுரம் பொங்க
வித்துவான்களின் கோஷம் விண்டல மண்டலங்
[கொண்டு முழங்க
மேனகை ரம்பையர் தானெனு மாதர்களாடவும்—
[பல

ஞான நூல் சங்க வித்வான்களுமே சுதி கூடவும்—
[வெட்கம்
நாண மிலாதத் திராணியெலாம் வெண்டோடவும் பல
நன்பரு மின்புற சிம்ம ஜெயகோடி யாடவும்
நாடெங்கினும் நல் விசேஷங்கண்டிட
சுந்தாமணி தீபமுந்தான் மண்டிட
ஆடம்பர வானங்கள் கொண்டிட
அமபருமும் பருமிம் பருங்கொண்டிட இப் பங்
கபோகபா யெட்டுத் திக்கினு மிகக ஜொலிக்குதே
[தீபம்
இங்க்லாண்ட் பாரீஸ் ஜெர்மணி யிங்கிதற்கங்கமுங்
[குதே ரூபம்
வாகுடன் தங்க முருக்கி வார்த்தது போல் தனித்
[தோற சுபாவம்
வர்ணிக்கசேடன் றனுலும் வல்லமையில்லை யென்
[றென்றாரவர் பாபம்
எங்குமலங்கிர்தக் தங்கமயங்கொளத்தோணுதே—பல
இன்ப மிகும் ரஸ குண்டுகள் தங்கியேப் பூணுதே—
[சுற்றி
தெங்கு பனங்குலையுங் கமுகின்குலை காணுதே—
[பலா
செஞ்சுளையின் கனியின்சர மிஞ்சிட நாணுதே
ஈரேழுலகிலும் சீரிது போலே
ஏதினிமேல் கிடையாதினிமேலே
பேரோங்கிடும் பரிபூரண வேலை
பிளானிது போலவே காணேன் கண்ணாலே இப் பங்
மல்லிகை முல்லை ரோஜா மந்தாரை சுந்திர நந்தியா
[வட்டை
மாமனோரஞ்சித மகிழ்பல சன்பகம் சம்பங்கிதோட்டே
அல்லி தாமரை நீலோர் பல மரங்களுமணங்குலவிட்
[கிட்டே

ஐரோப்பா க்ரோட்ன்ஸுகள் அந்த மிருந்திடும்
[விந்தைபார் கிட்டே
மரகத விகஜித மடமயில் நட மிடுமாக்ஷியே—தமிழ்
மதுரித சுதிலய குயிலிசை பயலுங்கண்காக்ஷியே—
[யார்க்குய்
பரகதிதருமத னெரியாத கக்ஷியின் குக்ஷியே—
[வேஷாக்
பல்பலே பேஷன தொல்புவியொர் சொல்லும்
[நீக்ஷியே

மஞ்சுவளந்திகழ் தஞ்சையில் வாசன்
மங்களம் பொங்கி யிலங்கும் விலாசன்
தஞ்சை விளங்கிடு மூத்தமிழ் நேசன்
சாற்றினுள் கீர்த்தி வி. எஸ். ப்பாப்புதாசன்—இப்
பங்

(ஆண், பெண், மாளிகை, சோலை, தேசம்)

இவைகளின் சிங்காரம்

விருத்தம்

ககனமதின் மழைமுகிலை கண்டுகளிகொண்டவன்
கனநடனம் புரியு மயிலோ
கனிகள்சொரி தருவின்மிசை மதுரமொழு கிசை
[பொழியும்
காமன் மகிழுஞ் செங்குயிலோ
நகைதருமென் மொழிபயலுங் கிள்ளையோ அலதுலக
நார் மகிழுஞ் பஞ்ச வனமோ
நவமணிக் கும்பமோ மரகஸ் தம்பமோ
நளன் றூது விட்டவனமோ
புகழ்பெருகு மிந்த்ரன் மருவுமூந்த் ராணியோ
பூங்கணை மாரன் ரதியோ
புள்ளிமயிலோன் மருவும் வள்ளிதெய் வானையோ
பூமகள கலைவாணியோ
தகதகென வருஞ்சூர்ய னுதயமோ மதியமோர்
தார் குழலி யார்கொ லறியேன்

தனிநிலையி லெனது மனம் வினையமது புரியுமிவன்
  தனையனைய தருண மிதுவே

கலித்துறை

வானோங் கிநிற்கும் மதியமோ முகநுதல்
  வான்பிறையோ
மீனோவிருவிழி மேகமோ கூந்தல்
  விளம்புமொழி
தேனோ செவிகள் திகழ்வள்ளையோ செவ்விதழ்ப்
  பவளந்
தானோ நகைகள் தாளங் கொலோ விந்தத்
  தையலுக்கே
தென்னங் குரும்பையோ தேங்குடமோசீர்
  திரண்ட கொங்கை
மின்னன்றுசிறுத்த விடைதுடி மேவல்குல்
  சீரரவப்
பென்னம் படமோ வரமுமை துடையிரண்டும்
  பொற்றம்பமோ
அன்னம் பழித்த நந்நடையாளை யாரென்
  றறிகிலேனே
மாசற்ற மேல்விதழ் வாயைத்திறந்தொரு
  வாசகந்தான
பேசத் தடையுனக் கேற்பட்டதென்னடி
  பெண் மயிலே
தேசத் தையோர் குடையாள்மன்னன் மேற்கொஞ்சம்
  சித்தம் வைத்தான்
நேசத் தைத்தந்திடில் நீயேயென் குலமணி
  நிச்சயமே

(ஜெகன் மோகன் சொருபமாது....என்ற மெட்டு)

பல்லவி

மனமோகன விச்சித்திரமாது—இந்த
மதிதலகத்திலிவளை நிகர்த்தமடவேரது— ம

அநுபல்லவி

தினந் தினமு மதன் தெரிசிக்கும் நாரி
தெய்வ ரம்பையர் கண்டு திகைக்கு மொய்யாரி
கனமுங் குணமு மிகப படைத்த கெம்பீரி
கதிர் குலத்திலுருவா யுதித்துவந்த சிங்காரி ம

சரணங்கள்

வதனம் பூரணச் சந்திர விம்பம்—ஸ்தனங்கள்
[ரெண்டு
மணி மேருவின் சிகர கும்பம்—செவ்வியத்துடை
மதனின் மாளிகையுற்ற கம்பம்—மேனி நிறைய
மணக்கும் பரிமளக்க தம்பம்—வேலைப்பழித்து
மண்டலத்திற் சிறந்த கெண்டை யொத்த
செவ்வரி விழியாள்—மலரணிந்து
வண்டுகளி சைதருங் கொண்டல் நிகருங்
குழ லொளியாள்—திலதநுதல்
பண்டுமதன் கரத்திற் கொண்ட செஞ்சிலை
யெனும் விழியால்—இதழ் பவளத்
துண்டெனா வமைந்திடுங்கற் கண்ட நிகர்
மதுர மொழியாள்—திரண்டு வரும்
மைக்குல முகைறக்க கன முற்றெருளிர் மீனற்
[கொடிபோ
லிடை யாள்—இருகரத்திற்
தக்க நவ ரத்னவளை மிக்க வொளிர்ப் பொற் ஜரிகை
யுடை யாள்—தண்டை சதங்கை
நற்கழலி விட்டவை யொலிக்கவே நடக்கு மன்ன
நடையாள்—நிகரிலாத
சொர்க்கப் புவனத்திடை வசிப்பவர் திகைக்கு மழ
குடையாள்—எதிரில் நின்று
மருவில்லாது பரிமளவகை மிஞ்சி
மதனின் வாதைதனைல் மயங்கிடும் வஞ்சி
பருவ வயதில் தாசன் பாப்புடன் கொஞ்சி
பலவித வகை லீலை தருமப ரஞ்சி ம

(இராகம்) ஓரடிமோகனம்—(தாளம்) ஆதி

பல்லவி

பூரணச்சந்திர பிம்பம் போல—என்முன்னிற்கும்
பூங்கொடி யிவ ளாரோ— பூ

அநுபல்லவி

தாரணி தனிலிவள் தன்னழகை வர்ணிக்க
தகுதியுடையோரெவர் தனியிவ்வுலகின் மிக்க

சரணங்கள்

சங்கையு மிங்கித முங்குணமும் பெறையும்
பணியும் புகழுந் தகையும் கன
தளுக்கும் நடை பளுக்கும் முக மூனுக்கு முலை இவள்
தனக்கு நிகரிந்தத் தரைக்கு ளெவரெடுத்துரைக்க
[வல்லவர்

சாந்தமு முகக் காந்தியு மிக
வாய்ந்திட புவி வேந்தர் புதல்வியோ
தாமரை மீதுறை மாமடமாதிவள் தானோ-அலாதுயர்
பூமகளோவென தானவர்களும் வானவர்களுங்
[கண்டு

தயங்கித் தயங்கி மயங்கி விழுந்து
தணிந்து மணந்து அணிந்து எழுந்து
தாபந்தந்த வதிரூப பைங்கொடியை
தானடைந்தால் பரஞான மேவுமெனும்— பூ
வானோர் மதிக்கும் ரம்பை தானோ— அல்லது ரதி
மானோ லக்ஷ்மி யெனுந்தேனோ—விழியிவட்கு
மீனோ தனிந்து நிற்ப தேனோ—இவளை விட்டு
நானோ போகவுந் துணிவேனோ—எனக்கிசைந்த
பூவை இதழ் பவளக்
கோவை கனியோ செம்பொற்
பாவை இவட்குத் தினம்

தேவர் முனிவர்களு மாவலுடனே நின்று
சேவை புரிந்திடில் பாவ மகன் றிடும்
கற்பகத் தறுங் காரணிமோ—இவள்
விற்பனக் கலை யாரணியோ—அதி
யற்புதத் துயர் பூரணியோ—புவி
யிற்பலர் தொழும் நாரணியோ—செழும்
கஞ்சமலர் வதனங் கொஞ்சிடும் குயிலிசை
ரஞ்சித குண முள வஞ்சியிவளைக் கண்டு
தஞ்சமென் றிருபத மஞ்சலி செய்தவர்கள்
நெஞ்ச மதனிலுரு சஞ்சல மகன்றிடும்
கன தனமிசை நவமணிமரகதவடங்
கதிர் மதி போல்
தக தக வென வொளிர் தர
காலா கால மறிந்து பாலன் பாப்பு—தாசனை
லீலா விநோதமதில் சாலோக பதந்தரும் ம

(வாய்ந்த மயிலோ குயிலோ—என்ற மெட்டு)

பல்லவி

சித்திரக் குயிலோ மயிலோர் மதிமுக
சித்தினி யிவளாரோ— சி

அநுபல்லவி

முத்திரை மேவுந்தனக் குடங்களசைய
பத்தரை மாற்றுப் பொன்னைப் பழித்த மேனி
[யைப் படைத்த சி

சரணங்கள்

மைக்குழல் தனக்கு நிகரக்கருமுகிற் குலமு
மொக்கு மென்றுரைக்கவழி யுண்டோ—இரு
சொக்கு விழி கட்கிணை சொலற்கெதிருவக்குவது
நற்கயலோடக்குவளை யுண்டோ—திகழ்
பற்குவமை முத்துகள மணிக்குலமைதிற்கருது
செக்கரிதழ் நற்பவளத் துண்டோ—இரு

பொற்குட மதற் குச மதைப்படு கொங்கைக்கு நிகர்
தக்கதிது வற்பமலர்ச் செண்டோ—மொழி
சர்க்கரையோ வல்லது கற்கண்டோ—இவள்
சொர்க்கலோகத்திற் பிறந்த பெண்டோ—நமன்
கைக் கொள்ள வனுப் பியவா ரண்டோ—
[படுந்
துக்க மறிந்தீசனு மெனக்களித்த பிரசண்டோ— சி
அன்னமது பின்னடைய நன்னடைகண் மன்னவருங்
கன்னியிவட் சென்னகரோ வாசம்—துடி
சின்னமுற மின்னலகும் பின்ன முறத் துன்னு மிடை
உன்னத மூற் றென்லபிர காசம்—எழிற்
கன்னற்சிலை மன்னனுறை வன்னர்கொலுவென்ன
[வொளி
பன்னகப்பை யன்னதேவுத் தேசம்—துடைக்
கென்னயிணை பன்னவது பொன்னரம்பை மின்கைத்
[தூண்
இன்னமு மிதற்குளவில்லை யாசம்—இந்த
கன்னியின் முகமென்ன விலாசம்—இவள்
தன்னுடன் செய்யலாஞ்சாவ காசம்—முடி
சென்னியிற் புனைந்தமர் வாசம்—உயர்
விண்ணிலும் வீசுமே நான் செய் புண்ணியமிதேகை
[லாசம . சி
முண்டகத்தில் வாழு மயன் உண்டு செய்யும் போதி
[வளை
கண்டிருக்தும் சும்மா விடுத் தானோ—அந்த
கொண்டால் வண்ணன் மாதிவளைக் கண்சவுடன்
[நாண முற்று
பண்டுப்பாற் கடலிற்படுத் தானோ—இந்த
பெண்டவளுக் காக நீல கண்டனுமையைப் பிரிந்து
அன்று தவஞ்செய்யத் தொடுத் தானோ—மதன்
மண்டலத்திலிவளுக்குத் தொண்டு செய்யவேணு
[மென்று

தென்றலேறி ஓட்ட மெடுத் தானோ—இவள்
ஒண்டியாக யிங்கு நிற்பதேனோ—யான்
கொண்ட காதலைத் தணிக்கத்தானோ—சற்று
அண்டையிற் போய் நிற்கப் பெறுவேனோ—
[செழும்
தண்டமிழால் பாப்பு தாசனின்று வரவழைத்தானோ

(சிங்கத்திற்கு பங்கு மேதையா—என்ற மெட்டு)

பல்லவி

விண்ணுலகப் பெண்ணரசியோ—ஆஹா இவள்
விண்ணுலகப் பெண்ரசியோ—இங்க
மண்ணுலகிற் காணயானென் புண்ணியம்
[செய்தேனோயிவள்

அநுபல்லவி

கண்ணுதல் சிவனுமேக வண்ணனுங் கமலத்துறை
ண்ணவு மெதிரேக்கண்டால் பண்ணுவர் சரணமி
[வள் வி

வாணியு மலர்ப் பூங்குழல் வேணிபுந்திரு மகளிக்
ராணி யுமிவளை வெல்லத் ராணி புண்டுமோ—அந்த
வாணகரம்மையூர் வசி மேனகைத்திலோர்த் தமையும்
ஷிகானி வட்டெகதி ராய்ச் சொல்லப் பாணி புண்டுமா
நாணியிவளுக் கவர்கள் பேணித் தொண்டு செய்வ
[சென்றால்
சேணிமன் மண்ணில் வாழும் ஜீவபிராணி கட்கெவ்வி
[தமிவள்

கந்துலுங் கரிபசிறமைந்து லுமிவளுடைய
பைந்துறற் தெதிரே நின்று மந்த தல்லவா—
[இரு
கண்களுந்த வேணுஞ் சேலுமிங்கினை நாமல்லவென்று
கங்கை வீரர் செங்கையிற் பதுங்கு தல்லளா

திங்களுங் கதிருமிந்த மங்கையின் முகத்திற் கஞ்சி
அங்கமுங் குறைந்து தினம் பங்க மடையுதேயிவன்
[வி
வள்ளையுமி வட்செவிகட் குள்ளடங்கி விட்டோ
[மென்று
பள்ளமும் பநிகுழியில் வாசம் பண்ணுதே—தங்க
வன்னச் செமிழ் நாசிக்கஞ்சி யென்னசெய்வோ
[மென்று கெஞ்சி
கன்னியிவள் காலவிழ வுத்தேசம் பண்ணுதே
கிள்ளையு மிவளுடைமப் பிள்ளை மொழிக்றிப் பழகி
கொள்ளை கொண்டுப் போவதற்குத் துள்ளி வட்டம்
[போடுதிவள்
கும்பமுங் குரும்பை மொருப் பம்பரமும் தம்பியிரு
கொம்பு மிவள் கொங்கைக் கஞ்சி வெம்பி நிற்குதே—
]வமா
கோலத்தைக் கண்டா லிலையுமா லுக்குச் சமனமாகி
யோகமிட்டுப் பாற்கடலை நம்பி நிற்குதே
கொம்பனையாள் சிற்றிடைக்கு உம்பரின் மின் னெளிக்
[குதே
பம்புமிவளல்குலை சர்ப்பம் படங் கண்டேங்குதிவள்த
வ
துடைக்கும்மரம்பைத் தோற்று நடைக்கு மன்னங்கள்
[கார்த்து
கிடைக்குமோ வென்றுக் குட்டிக்கர்ணம் போடுதே
—இவள்
ஸோபிதத்தை பாப்பு தாசன் நானினு லெடுத்துரைக்க
சொல்லிச் சொல்லித் தாளத் ததிங்கிண் ணம்
[போடுதே
உடற்கே தேவர் மூவரு மடைக்கல மாவரென்றால்
கடைக்கண்ணோக்கி யெனக் கோர் விடைதருவாளே
[யிவள் வ

# 106

(கோபம் விருத்தென்ன வலைத்திராய்-என்ற மெட்டு)

பல்லவி

பால சூரியன் போலவந்த சௌ
பாக்கியவதி யாரடியெவ்வூரடி— ச

அநுபல்லவி

சோலையிடத்தனின் றேலமுழங்கிடுஞ்
சுந்திரஞ்சேர் குயிலோ—மடமயிலோ
என்ன வொயிலோ—தெய்வச் செயலோ ப

சரணங்கள்

உம்பருலகத்து ரம்பையோ மேனகை
ஊர்வசி நீ தானோ-திலோர்த்தமை
என்பவளோ சுகா ரம்பையோ பேரின்ப
மிபற்றும் ரதி மானே
அம்புவியோர் தினங்கும் பிடு மன்னே
இலக்ஷ்மி பார்வதியோ-அருந்ததியோ
சரஸ்வதியோ—சந்திரமதியோ— பா
மேகத்தினும் நூறு பாகங்கருத்து
விளங்குதேவுன் கொண்டை—கயலின
மோகத்துடன் கண்டு சோகப்படுதே
மூகத்தின் விழி ரெண்டே
வாகுற்ற நின் செவி வளையோ நாசி
வழுத்து மெள்ளின் மலரோ—முகம் அலரோ
ரோஜாககலரோ—சொல்வாளுளரோ பா
தேவாதி கண்மெச்சுப ஜீவாமிர்தமோ செந்
தேனோ கனி ரஸமோ—மொழி பற்கள்
மூவா வொளிப் பிரகாச வைரமோ
முத்தென்பது நிஜமோ—அடி
பாவாயுந்தன் மணித் தொண்டை சங்கென்று
பகரவோ அத்தாக்ஷி—பலர் சாக்ஷி
என்ன காக்ஷி—கமலாக்ஷி பா

சென்டோ ஜப்பான் சண்டை குண்டோ மலையோ
தெங்கா யிள நீர்க் குலையோ—வாலி பார்க்கை
கொண்டாடும் பந்தோக் கொழிஞ்சிப் பழமோ
கூறுதற்கிணை யிலையோ
கண்டோராசை தீரக் கொண்டு வந்துக்களி
யாற்றிடும் பாற்குடமோ மதனிடமோ
கொங்கை தடமோ—சொல்லத்திடமோ பா
துன்னுமுன் சிற்றிடை மின்னற் கொடியோ
துடியோ வயிரூசியோ—துடைரெண்டும்
பன் அமரம்பை யா வன்னப்பொற் கம்பமோ
பகுத்துச் சொல்லற் பாலோ
முன்ன மூவர் தொழும் சன்னதமோ அல்குல்
முக்கோணச் சக்கரமே—அஷ்டாக்ஷரமோ
ஞானபுரமோ—தெய்வ வரமோ பா
தேசமதில்மகா ராஜனுனைக் காணத்
தேடி செய்த நலமோ—என்மேல் வைத்த
பாசத்தினல் பாப்பு தாசன்றமிழ் பாடி
பண்ணும் பூஜா பலமோ
மோசஞ்செய்யாம லென்நேசம் பாராட்டியே
மூத்த மொன்றுக் கொடடி—உள்ளே நடடி
வந்து விடடி—அணைந்திடடி பா

காம சுந்தராங்கி உனது என்ற மெட்டு

பல்லவி

மோகச்சந்த்ர ஜோதி வதனு
மோடியேனிது முறையாலெனை மருவ வருவாய்

சரணங்கள்

முகமலர்ந்தேன் உனைநினைந்தேன்
அகமெலிந்தேன் உனைநினைந்தேன் மோ
முத்தத்தைத் தாக்கட்டி
மணைத்துத்தற் போதெனைச்சேர் மோ
முனைந்து மதன் சினந்து கணை

புனைந்தெய்குருன் அனந்த விதம் மோ
முகை நிகர் முலை இகம் புரியுதே
நகையிதழ் கொடு சுக மகிழ்வொடு மோ

அநுபல்லவி

சோக சிந்தை மாலே பாவி
நன் புற்றலை—குறேன் நாதா
அன் புற்றெனை—யாளொணுதா— மோ

சரணங்கள்

பாழுந்தென்றல் புலிபோற் பாய்ந்து
படருதே சந்த்ரன் அனலாய்க் காய்ந்து
சூழுங்குயில் சத்தத் தாலுடல் சோர்ந்து
சொக்கி மனம்—வெட்கிமுனம்
திக்கற்றிதோ—நிற்கலானேன்— மோ

கொக்கோ நூலைப் பார்த்தவிலை
கொஞ்சி யென்னேடு மஞ்சத்தின்மேலே
வெட்க மற்றோட மதன்பின்னலே
வேடிக்கையாய்க் கூடி சுகம்
நீடிக் களித்—தாடிவோம் மோ

காதற்கிசைந்த காமதுரையே
கன்னியுமக்கென் செய்தேன் குறையே
பேதை கெஞ்சினேன் பன்முறையே
பிடிவாதமேன்—அடியாளினி
மடிவேனரை—நொடி போதினில்
காமனைவென்றக் கலவிக்காரா
கட்டழகிற் சிறந்த மாரா
தாம தஞ்செய் யாதே தீரா
தஞ்சை பாப்பு தாசன் சொல்லை
கொஞ்சங்கேள் நீ குறைவொன்றில்லை மோ

(சொனைட்டிருமொன்றுக் கட்டி என்ற மெட்டு)

பல்லவி

சித்திரமாளிகைக கட்டித்தாரேன் - உனக்கிசைந்த
சித்திரமாளிகைக் கட்டித்தாரேன்— அதிதீர
சிங்கார கெம்பீர ஒய்யாரமதாய் சி

அநுபல்லவி

எத்திசை களிலு மிதற் குவமானம்
இல்லையென்றிந்திர் பதிக்குச் சமானம்
ரத்தினப் பீட மமைத்துப்ர தானம்
ரெடி ரெடி யென்றெவருமதிக்கு நிதானமாய் சி

சரணங்கள்

நாற்புறம் பளிங்குஸ் தம்பம் நாட்டி—வைரத்தினல்
ஏற்படுமுத்திரங்களைப் பூட்டி—உயர்ந்த தங்க
வார்ப்பிட மானசாரங்கள் மாட்டி—பவுன்களாலே
பார்ப்பவர் பிரமிக்க மேலே சூட்டி—முகப்பில் நவ
ரத்தினங்களால் நவீன வேலை—அமைத்து பல
சித்ரப் புட்பச் செடிகள் போலே—சிறந்த [ஆணி
முத்திலமைத்துப் பல காலே—ஜொலிக்க முன் [பின்
வைத்தினி தமைத் துயர் மூன்ருலே—நிலையில் மிசை
நன்கு விளங்கிடப் பொன் கிலிட்டிங்கித மாகப் [—பூசிக்கதவில்
மின்குலம் வந்து இலங்கிய தன்மையை தாகக்— [கண்ணடிகளால்
எங்குமேத் தங்கியலங்கிர் தஞ்செய்தேகபோக மாக [நடுவில்
பங்கய மொன்றுமர் தங்கமதாலதி யூகம தாய்ப் [பதித்து
நாற்காலி மேஜைகள்திவோக்காக நான்கு புறமும் [போட்டு தந்தத்தால் செய்த

டக்கான ரவுண்டேபின் ஸோபாக்களுடன் கட்டில்
[கோட்டு—ஷர்ட்டுகள் மாட்ட
மேற்கனக் கொக்கி களுடன் தூக்கியே குளோப்பர்
[வாச் ஷெட்டு—நற்கியாஸ் லைட்டு
பார்க்கப் பளீரென்ன வொளி தாக்கிடும் லஸ்தர்
[களும் நோட்டு—புக்ஸுகள் பார்க்க
நாகரீக சின்ன லாண்டின்கள் தாவ
ரத்தின சிங்காதனம் நடுவினில் மேவ
ஏ மாகசகி மார்கள் குலாவ
இருபுரங்களிலும் வெண்சாமரமது நீவ சி
சுவரெங்குஞ் சுற்றி ரவிவர்மா—படங்கள் கட்டி
பவருளளக்ளாக்கு மிட்டு பர்மா—தட்டுகள் வைக்க
நவமுற லண்டன் விஸ்வ கர்மா—அமைத்த பீரோ
தவராமல் விழுகிடுஞ் சுர்மா—உடனே நல்ல
சொகு சாய்ப் பார்க்க நிலைகண்ணாடி—பஞ்சரத்
[துடன்
வகைக்குக்கிளிகள் பல ஜோடி—உல்லாச முற
பகுத்து ஸீடிகளுடன் மாடி பணிப்பெண்களை
தொகுத்து வைப்பேனுனக்குக் கோடி—அத்தர்
[புனுகு
சுந்தர மேனித்திமிர்ந்திடப்பிள்ளை கஸ்தூரி
[ஜவ்வாது பன்னீர்
கந்த முலாவிய சந்தனமும் பெருவாரி மல்லிகை
[முல்லை
கொந்தலர் சண்பகம் நந்தியாவட்டமும் வார்
[சீவி முடிக்க
சந்ததம் தோழிமார் வந்திட செய்குவேன் கோரி
[விதவிதமாய்
சுத்தநெய் விட்டுச் சமைத்தக் கிச்சடிப்பச்சடி
[பிரியாணி—புலாவுடனே
மெத்தவுங்குர்மாப் பற்பல வஸ்துகள் கலக்தக்
[கோளாச்சினி—மிட்டாய் பூவந்தி

புத்தமு தொழுது பர்பபி லட்டுகளுடன் ஹல்வா
ஜெர்மெனி—தேசத்திலுள்ள
உத்தமர் வருத்தி விற்கு முக்கனிகளுடன் ஹிந்துஸ்
தானி—வெற்றிலைக்கிளிளி
தோலகையே யின்னு முனக்கேற்ற சாமான்கள்
தொகுத்திடுவேன்பல அற்புத ஸீன்கள்
பாகமாக யெடுத்திடச் செய்வேனற் பிளான்கள்
பாடுவேன் பாப்புதாசன் பதமிந்துஸ்தான்
களினல் ஒ

காக்ஷிகண் காக்ஷியே—என்றமெட்டு

பல்லவி

சோலை சிங் காரமே
சொல்லத் தகாத ஒய்யாரமே சோ

மகுடங்கள்

சுந்தரமிருந்திடும் விந்தை பொருந்திய சோ
சுதிலவே விதியொடு கதிரொளி யதி தரும் சோ
அங்கம் தங்கும் பரிபள
மெயகும் பொங்கு மழகிய சோ
தொல்லுலகோ ரெல்லவரும் சுகமுறை
அல்லுபகல் புல்லுமெழில் மிக தரும் சோ
சூழப்பற்பல ஏழிசைச் சு நம்பி
யாழிசைத்திட மாழை யுற்றிடும் சோ

அநுபல்லவி

காலையுமோ மாலையு மோக
லீலைக்கேற்ற உற்சாக சோ

சரணங்கள்

மல்லிகையு முல்லை ரோஜா மகிழும சோகமே
மந்தாரை சம்பங்கி மனோரஞ்சித மனேக

சொல்டைங்கா சண்பகம் சூழ்ந்திடுமமோகமே
சூரியகாந்தி சிவந்தி விட்சியும் பாரேகமே
மாதளைக் கிச்சலி கொய்யா நாரத்தை—மெத்த
காதலாரஞ்சி கமலா சாரத்தை—நல்ல
பாதிரிக் கொழுஞ்சிபின் விஸ்தாரத்தை—நான்
ஏதெனச்சொல் வேனித கெம்பீரத்தை
மாவொடுப் பலா தென்னை
வாழைகமுகுப் புன்னை
நாவல் முந்திரிக்கொன்னை
நாகரீகம்பார்முன்னே—மலர் சோ
மானின மரையினங்கள் வளங்கொண்டுலாவுதே
மந்தியுங்குரங்கும் பலமரங்களிற்றாவுதே
துர்நிற முயலினங்கள் துள்ளி துள்ளி வாவுதே
சுகந்த புனுகுப்பூனைகள் சூழுகின்றுமேவுதே
மையிலினங்கள் கூடிவிளையாடுதே—பக
ஒய்யாரமாய்க்கன்றுகளைத்தேடுதே—துஷ்ட
வெய்யநாய் நரிகள் விரண்டோடுதே—குதிரை
வையாளிகள் போட்டு சுழன்றாடுதே
மட்டிலா மிருகக்கூட்டம்
மானே பாரிங்கே தேஷ்டம்
எட்டிநின்றுவை நோட்டம்
எங்குமில்லாதஸ்ரேஷ்டம்—மலர் சோ
கொக்குடன் வாக்காகவும் புல்புல் கொண்டலாத்திக் காடையும்
கோகிலங்களுமயிலும் கூடியன்னப் பேடையும்
பக்குவமாய்லககா பசுங்கிள்ளை செய்யும் ஜாடையும்
பச்சைபுறு மணிப்புறுப் பகர்ந்திடும்ஸ் லேடையும
கும்பல் கும்பலாக மைனாக் கூட்டமும்—எங்கும்
பம்பலிட்டி நின்றிடு பார் பாட்டமும்—பெருஞ்
செம்பருந்து பைரிகள் லூசாட்டமும்—வெகு
டம்பமாகச் செய்திடும் போராட்டமும்
குலவுந் தென்றல் வாடை

குளிர்ந்திடும் நீரோடை
பலபக்கம் பொன்மேடை
பாம்புதாசன் சொற்பாடை—ஒக்கும் சோ

ஆலோலமென்று கூவினல் என்ற மெட்டு

பல்லவி

மேலோங்கு மித்யா தேசமே மேதினிக்கெல்லாம்
மேலோங்கு மித்யா தேசமே

அநுபல்லவி

சாலோக மென்று பெரும்பாலோர் மதித்துதித்த
சங்கை நிறைந்த—மாதவர் மூவர் தலமே
மங்களம் தங்கிய—மாக்ஷிநந்திலமே மே

சரணங்கள்

பொம்பாய் கல்க்கத்தா பீகாரும் சிந்துடன் பஞ்சாப்
பேரார் ஒரிசா மூதூரும்
சம்பூர்ண போபால் காஷ்மீரும் ஹைதராபாத்
மைசூர்
தக்கபரோடா ராம்பூரும்
பிரபல மருவிய அழகிய சென்னையும்
பெருமை ரங்கூனோடு புகழசாம் தன்னையும்
பிரிட்டிஷார் தலைநகரெனத்திகழும்
சிருட்டி நகர் டில்லி யென விண்ணோர் மகிழும்
பிரமைகொண்ட திருவனந்தபுரமே
புதுக்கோட்டை ஆள்வார் கொச்சியும் ஸ்ரீராதநாத
புரமென்றுலகோர் மெச்சியும்
உதிக்குங் காசி உயாச்சியும் ராமேசுவரத்தின்
ஓர் மகத்துவ நிகட்சியும்
புனித அஜ்மீர் ஷரீப் நாகூர் ஷரீபும்
பிரக்யாதி கங்கை நதி கோதவரி
சிறக்கும் யமுனை அமிராவதி காவேரி

பொதியும் நஞ்சைபுணரும் புஞ்சை முதலாய்
நிதி கொள் விஞ்சை நிலவிகொஞ்சி மெழிலாய்
மே

பலதானிய வினங்களுந் திங்களி வர்க்கம்
பார செந்நெல் களங்களும்
நல் தங்கம் விளை தளங்களும் வெள்ளிபொன் செம்பு
நாகம் விளை சுரங்கங்களும்
பக்தி தரும் முஸ்லீம் ஹிந்து கிருஸ்தரும்
பகரும் புத்தருடன் ஜைன மதஸ்தரும்
பழக்கம் தெலுங்கொடு தமிழ் ஹிந்துஸ்தானும்
விளக்க சமஸ்கிருத கன்னடங்களுடனும்
பரிவு தங்கும் பகைமை மங்கும் பதியாம்
நெரிவிளங்கு நிதிகள் பொங்குமித்தியாம்
மே

முத்தமிழ் சங்கபீடமும் சங்கீதங்களில்
முனனேற்றத்தின் விசேடமும்
சித்திரமாகக்கூடமும் தேவேந்த்ரபதி
திகைக்கும் கண்டாமன் ரூடமும்
முறையாய ஜப்பான் ஜெர்மனி இங்லீஷும்
நிறைய மெரிக்கர் நிகழ்த்திடும் பிரான்ஸும்
மூழங்காப்ரிக்கா துலங்காஸ்ட்ரேலியர்
நலங்கொள்ளெகிப்தியர் நவில் ஹிப்ரோனியர்
முயனுஞ்சீனர் மொழி மற்றோனோர் பிழைக்க
பயிலுந் தஞ்சை பாப்பு தாசன் சொற்றழைக்க மே

பாட்டு

ஜயவீர கண்டாமணி கனமெடல் தோடா பெற்ற
செந்தமிழ்ப்புலவோரா—உட்காரும்சீர
உன்னையான் ஜோரா—கேழ்க்கு சில
கேள்விக்குவிடை யூரா
தயருவைத்துயேயுன்னை கேழ்க்கும் கேள்விகளுக்கு
தாங்கள்

தருந்தஜவாப்பைத்தேடி—சொல்லுவாய் நாடி
சபையிலோடி—போகாமலே.
தந்தால் எனக்குஜோடி
பமமில்லாது பத்து பேர்க்கெதிர் வந்தபாம்பு
பதுங்கினல்விடுவாரா—அய்யா நீர்பாரா
சபையில்ஜோரா—பகராவிடில்
பகர்வேன் ஜெயத்தாண்டோரா—கேள்

உத்தார்

சுயகவியெல்லாம்யானுமறிவேன்—எங்கும்
சூரத்தன்மையதனைத் தெரிவேன்—எங்கும்
ஜயம்பெறப்பாடிபாடி கனமெடல் தோடாபெற்ற
செந்தமிழ் புலவோரா
சித்தஜன் எரிந்ததைப் பேசுவோம் பின்னல் மதன்
ஜெனனத்தை மூதல்காட்டு—இருந்தால் பாட்டு
சொல்வீயே நாட்டு—இல்லாவிடில்
சோகம்கொள்வதேன் சூட்டு
சுத்தமாய்த்திறக்கும் சாவியென்னும் கவியால்
சொல்வாய்க்காமன் பிறந்த—இடத்தை மூந்த
யுகமும் எந்த—வருடம் மாதம்
சொல்லும்தேதியோடத்த—ஐயா

உத்தார்

சத்தியமாய் லக்கணம் ஓது—அதைச்
சார்ந்த நட்சத்திரமும் யாது—ஐயா
மெத்தப் படித்தவரே மெடல் தேடாதரித்திட்ட
மேட்டிமைப்புலவோரா உட்
பிறந்தான் மதனென்பதும் எரிந்தெழுந்தான் னென்பதும்
பிதற்றிட ஓர் நூல்கொண்டா—வேதத்திலுண்டா
இருந்தால் நன்றாக—எடுத்துக்காட்டிப்
பேசிப்போடுங்காண் ஜண்டா
பறந்தாலும் புறாவைப்போல் பாய்ந்து பிடிக்கும்பைரி

பயில்வானென்றறியென்னை—உனக்கு முன்னே
தெரியச்சொன்னேன்—பத்திரம் உஷார்
பகர்வாய்பதிலை அண்ணே

உத்தார

சிறந்த எவ்வாத மதில் நின்று
செய்புவீர் பதில் மொழியின்று—வெகு
உரமுடன்பாடிப்பாடி மணிமெடல் தோடாபெற்ற
உட்
உத்தமப்புலவோரா
கன்னல் முதிர்ந்து வெடித்தொழுகிய தீம்புனல்
கழனிமடையுடைக்கும்—விரால் கண்டைக்கும்
திவலைபுடைக்கும்—கயல்களெல்லாம்
காக்ஷிசேர் உடானடிக்கும்
மன்னன் சோழநாட்டியால்வளம்பெருகிய தஞ்சை
மகிமை தங்கிய நாடு—என்றுசான் வீடு
மகிழ்ந்துதேடு—பாப்புதாசனில்
மலர்பதத்தைக்கொண்டாடு

உத்தார்

உன்னதமான அவர்வாக்கு அதை
உற்றுகேட்டாலே ஞானபோக்கு—ஐயா
சின்னபபடாதீர் சொன்னே சிங்கமுகத்தோடா
பெற்ற
உட்
செந்தமிழ் புலவோரா

வாழிவிருத்தம்

எப்பொருட்கு மிறைவன் வாழி இணையிலா வேதம்
வாழி
ஒப்பிலாசன் மார்க்கத்தின் உண்மை கண்டுணர்ந்
தோர் வாழி
விற்பன்னக்கலை வல்லோர்கள் மெய்ஞ்ஞான வான்
கள் வாழி
இப்புவிமாசர் வாழி இதைப்படித்திட்டோர் வாழி

சுபம்

ஸ்ரீனிவாச அச்சகம், சூளை, சென்னை-7

# சதிபதிகளின் மர்மம் (அல்லது)

# மாளிரகசிய சாஸ்திரம்

இதில் வசந்தனுக்கும் சுலோசனைவுக்குப் வினாவிடை தர்க்கங்களாகவே பெண்களைச் சந்தோஷிக்கச் செய்யும் விதமும், சிசு உற்பத்தி நேர்மையும் சிசுவை கவனிக்கவேண்டிய ஏற்பாடும் உண்மையான ஜாதி பேதங்களும் அவைகளின் லட்சணங்களும் ஆண் பெண் இருவர்களும் இன்புற்றிருக்கும் விதங்களும் இன்ன ஸ்திரீயை இன்னவர் விவாகம் செய்யக்கூடும் என்றவிதமும் போகஞ்செய்ய வேண்டிய காலும் நாழிகையும் இன்னவிதமாக சுகிக்க வேண்டிய கிரமமும் ஆண பெண்மலடு விவரங்களும் ருது காலங்களும், அவைகளின் பல பலன்களும் மாதம் ஸ்ரீகளுக்கு அமிர்தநிலை எந்தக் காலங்களில் எவ்விதத்தில்இருக்கும் என்பதையும் அதை எவ்விதமாய் நிலைபெயர்க்க வேண்டு மென்பதையும் பிரஸ்பதி பகவான் தேவேந்திரனுக்கு அருளிச் செய்த உலோகாயுத சம்மந்தமான விஷயங்களும் அமைந்துள்ளது. இன்னும் அகால சேர்க்கையால் வரும் கெடுதியும் இதைப் போன்ற அரிய பெரிய மர்மங்கள் நமது நூலில் இனிய செந்தமிழ் நடையில் பிரசுரித்திருக்கின்றன கண்களை கவரும் அழகிய சித்திரப் படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அழகிய முகப்புடன் கூடியது.

**இதன் விலை 3-50**

---

சண்முகானந்த புத்தகசாலை, பார்க்டவுன் சென்னை-3